ABRIDGMENT

OF

Buttalorathy

THE NANNUL;

WITH

THE ORIGINAL TEXT,

EXPLANATIONS, EXAMPLES AND NOTES.

G. P. SAVUNDRANAYAGAM PILLAI,

VERNACULAR TRAINING MASTER, GOVERNMENT NORMAL SCHOOL, MADRAS;
FORMERLY HEAD MASTER, NORMAL SCHOOL CHEYUR, KOAMBUTUR

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

MADRAS.

PRINTED AT THE PRESS OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE, CHURCH STREET, VEPERY.

1861.

நன்னூற் சுருக்கம்:

உரை பாடம்.

முன்பு கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த சேலூர் நார்ம
ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஆயும்

இப்போது

சென்னபட்டணத்துக் கவர்ண்மெண்ற் நார்மல் ஸ்கூலில்
சுதேச பாஷாபோதனை முறைபயிற்றும்
உபாத்தியாயரும் ஆகிய

க. பே. சவுந்தரநாயகபிள்ளை

அவர்களால்

நன்னூலில்

சிறுவர்களுக்குப் பயன்படும்படி

எடுத்த இன்றி அமையாச்சூத்திரங்களும்,
அவற்றிற்குச்செய்தவெள்ளுரையும்.

இஃது

சென்னபட்டணம்

கிறிஸ்துமார்க்க அறிவை விருத்திசெய்யுஞ் சங்கத்தாருடைய
அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது.

௲௮௱௬௧௵.

ADVERTISEMENT.

The Nannúl being too large a work to be gone through in even two or three years by a class which has other subjects besides Tamil to read, I have invariably found it necessary, in teaching the book, to select for study the most important sútrams only.

This selection has been gradually enlarged, with the view of enabling students to acquire a knowledge of as many as possible of the most necessary and useful sútrams, without, at the same time, suffering materially from ignorance of those not brought before them. It is now given to the public in the shape of an Abridgment, with Explanations, Examples and Notes:—I may add that to bring the subject within the comprehension of all has been the object steadily kept in view throughout.

G. P. S.

Govt. Normal School,
Madras, *June*, 1861.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

CONTENTS.

இயல் அடக்கம்.

	பக்கம்
I-வது : எழுத்ததிகாரம்.	
1-வது : எழுத்தியல்,	1
2-வது : பதவியல்,	14
3-வது : உயிரீற்றுப்புணரியல்,	22
4-வது : மெய்யீற்றுப்புணரியல்,	34
5-வது : உருபுபுணரியல்,	40
II-வது : சொல்லதிகாரம்.	
1-வது : பெயரியல்,	46
2-வது : வினையியல்,	67
3-வது : இடையியல்,	80
4-வது : உரியியல்,	85
5-வது : பொதுவியல்,	86

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

சிறப்புப்பாயிரம்.

சென்னபட்டணத்துக்

கவர்ண்மெண்ற் நார்மல் ஸ்கூலில்

தமிழ்ப்பண்டிதராகிய

கா. இராசகோபாலபிள்ளை

அவர்கள் பாடிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

பொன்மலி குவட்டுப் பொதியிலி னமர்ந்து
கொன்மலி பதினெண் கூற்று மொழிகளுள்
தனதெனப் பகர்ந்த தண்டமிழ்க் கடறரு
துன்னிய சீர்த்திசேர் தொன்மைமா தவத்தோன்
இருளற வுணர்த்திய வியன்முழு துணர்ந்த
இருமூன் றிரட்டி யிரும்புல வோர்களில்
தலைமை நனிபெறூஉம் புலமை யவனியம்
பொல்காப் புகழ்புனை தொல்காப் பியவழி
யாப்புறு நன்னூற் காப்பிய மாண்பொருள்
சிறூஉ ருளங்கொளப் பெருமொன லாயதால்
தொகுத்துச் சூத்திரம் வகுத்தவற் றுட்பொருள்
தெற்றெனக் காட்டொடு தெரித்துச் சுருக்கெனுங்
கற்றனர் பன்முறை கழறின ராக
இஃறா லொக்கும தென்றா லுளதென
நூலொக்க நன்னூற் சுருக்கமொன் றியற்றினை

கமஞ்சூற் சங்கங் கடிநறுஞ் செங்கேழ்
இமஞ்சால் கமல மிவர்ந்தீன் றாளம்
வெண்ணிலா வெறித்தல் வியன்பொலி கற்பக
டுண்ணிலா வளனிதி னூங்கில தெனவசி
கொள்வது நிகர்க்குங் குண்டுநீர் மடுக்களும்
தெள்விளித் திவவியாழ்த் திறத்துறை வளாகயில்
ஆங்கு மடநலா ரமிர்தகு குதலைக்
கேங்குபு மாழ்கி யெரிபுகல் கடுப்பச்
சந்தக் கருங்குயி ருவின் றுறைதரு
செந்தளிர் கஞலிய தேமாப் பொதும்பரும்
இருசுடர்க் குடைந்தவல் லிருள்பல வுருககொளீஇ
உருகுகா தலியரா யுலக்குதல் சிவணச்
சாராப் பொதுளிய தண்வாரிய தேமலர்
காராக் கறிக்குங் கண்ணகன் பழனமும்
இன்னன பிறவு மன்னிவாள செல்வம்
சுற்றுமெண் ணான்கு தொகைவிர் யாலயப்
பற்றுடைத் தாகிப் பரன்சுத ஞவியாம்
மும்மையு மொருமையா முழுமுத லருணிறை
செம்மைவே தாகமஞ் செப்புறா கடைப்பிடி
தத்தக வொழுகா வகம்புற மொருப்படும்
வித்தகர் வதிய விளங்கியாழ்ப் பாணத்
தொன்னகர் வண்ணையி னண்ணரிய செல்வன்
கண்ணெனப் படுவன கற்றொருங் கறிந்த
அண்ண லளவைநூ லறிஞ னடாநெறி
தபுதயா சீலனுங் கபிரியேன் மன்னன்
செய்தவப் பயனெலாஞ் சிறந்தமா னிடனு
வெய்திய வென்றுல கேத்துபுத் திரமணி
நவந்தரு மங்கிலோ நலங்கிளர் கல்விதேர்
சவுந்தர நாயகத் தமிழ்ப்பா வலனே.

ம.ள.ள. ஸ்ரீ. கா. பச்சையப்பமுதலியாரது

சென்னைக்கல்விச்சாலையில்

தமிழ்த்தலைமைப் புலமைநடாத்தும் வித்வான்

ஆ. சுப்பராயபிள்ளை

அவர்கள் செய்த

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காவலர் நறுந்தேன் றெவிட்டிவண் சுரும்பர்
காமரு முரலும்யாழ்ப் பாணப்
பூவலர் வண்ணைச் சவுந்தர நாய
கப்பெரும் புலவனெம் புனிதன்
நாவலர் பூவா நாவல ரோத்த
நயமுணர் சிறுவர்க டெளியத்
தூவலர் நன்னூற் சுருக்கமென் றொருநூ
றொருத்துநன் கச்சியற் றினனால்.

கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த

சேயூர் நார்மல் ஸ்கூல்

தலைமை உபாத்தியாயர் ஆகிய

சி. வேலுப்பிள்ளை

அவர்கள் பாடிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருவருள் சிறக்குமெய்த் தெய்வநன் னூலின்
பொருள்தக வாய்ந்து பொறையுட னோர்ந்து
பாலகர் பருகிப் பயன்பெற வெண்ணி
ஞாலம் புகழ்மெய்ஞ் ஞானச் செயுள்சமைத்

தாயின பின்ன ரருந்தமிழக் கடவுட்
போயின ரெவரும் புகழ்க்கலை ஞன்னைத்
தானே முதலாய்த் தனிநா வாயே
மான நூலை மலைவற வகுக்கவும்
அலகில் விதியுள் அங்கிலோ பாடை
இலகி நசைதரு மிகலில் கணிதமாம்
அங்கம் வீச மருர்திரி கோணம்
பொங்கு குகோளம் பொருவில் ககோளம்
அஃகி மனத்தை அகற்று நூலாம்
வெஃகிக் கற்க விருப்பு மிகத்தருஞ்
சலமொளி காற்று சகமூலாம் பொருளின்
பலவா றுய்விரி பன்னரு நூற்பொரு
ளாயதரு தருமநை யாயிக மானத
மேயவிஞ் சைகள்மலி யிரசா யனமாம்
பலகலை வித்தை பயிலுமா ணுக்கர்
சிலகா லத்திற் செழுந்தமி ழிலக்கணம்
வழுவற வோதநேர் வழிமுன் னிலையாற்
பழுதற வொன்று பயந்திட வெண்ணியும்
எண்மைய பொருளைத் திண்மைய மொழியா
நுண்ணிய விதிகெழீஇ நுயலிற் புகழ்மிக
வோங்கிப் பெருகுமென் றுன்னிய மூதோர்
தாங்கிய வழிபெருந் தவறென் றெண்ணியே
யிலக்கிய மாந்திட் டிலக்கண மீந்த
நலத்தரு கலைப்பல வைந்திநன் னூலின்
மாக்கல மூர்வழி மலைசுழி புரையுநற்
றாக்கனி செறியுமுற் றரைமுட் போலு
மரும்விதி யனைத்து மாய்ந்தவை களைந்து
தரும்வழி யதனூற் றகைத்தொட ராருமலுஞ்
சுருங்கிய வாற்றுற் சுதமயக் கிலாமலும்
பெரும்பய னுடாப் பெட்புறப் பொழிப்புரை
கலமலி சீர்சால் நன்னூற் சுருக்கமென்

சிறப்புப்பாயிரம்.

நலமலி பெயர்புனைந் தச்சியற் றினனூல்
பன்னரு முறையாற் பயின்று நிரம்பிய
தன்னகத் துயர்சிந் தனமா மறிவினாற்
றன்னகத் துறுசிந் தாப்பி வீட்டலா
லென்னரு சசியொளி இகல்நிறை அறிஞன்
மன்னிய நுனித்துணர் வகைமையிற் குசைநுனி
துன்னிய வச்சிரத் துகளறு கூர்மைய
னெண்ணில் வனங்களு மியல்புட னமைந்து
மண்ணி லுதித்தநன் மதியெனத் தோன்றி
யிலகொளி மல்கிடு மிலங்கைத் தீவிற்
பலவளம் பெற்றுமெய்ப் பயன்பிறர்க் காகக்
கலையுணர் வளித்தசற் கபிரியே லிறைபர
னிலைவழி மருவி நினைந்தூ யகத்தின்
நவந்தவ ருமற் றந்தநன் மதலையாஞ்
சவுந்தர நாயகத் தமிழ்நூல் வலனே.

சென்னபட்டணத்து
மதிறஸ்ஸா-இ-ஆசம் என்னும் பாடசாலையில்
உதவி உபாத்தியாயர் ஆகிய
கோயம்புத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த
நல்லூர் சு. சிதம்பரமுதலியா[ர்]
பாடிய
நிலைமண்டிலவாசிரியப்பா.

சகம்புடை வளைகட லகங்கையின் முகந்தற
நுகர்ந்துவி ணிகந்ததென் னகந்தனை யுகந்துவாழ்
பெருந்தவப் புயறா வருந்தமிழ்ப் பரவையி
னரும்பொருட் டுறைசெலப் பொருந்திய மரக்கல

சிறப்புப்பாயிரம்.

த்தரு மிலக்கண மனைத்துநீண் முதல்வழி
த்துறு சார்பெனத் தனித்தனி வகைதொகை
ழுக்கிசைந் திருப்பினு மிழுக்கலி லிலக்கிய
த்திறத் தினர்க்கல தெழுத்துமோர் வரிதெனுங்
த்தையுற் றெண்ணிலர் தணத்தலி னெவருமோர்ந்
னர்ச்சிபெற் றிடத்தொகுத் திணக்கியோர் நூற்குறை
ளிப்படை பெறவருத் தளிப்பது நலனென
த்தம திசைபரி மளித்திடப் புவிமிசை
ன்னூ லெனத்திக ழெந்நூ லினுமிக
னூல் வழங்கலி னந்நூ லினுட்பல
க்கணத் தவிர்மதி கடுத்திரு வழக்கினு
த்தருத் திரம்பல வெடுத்தகங் கையினுளா
கமா மெனப்பொரு ளிலகவோ துநர்மருள்
லகவீ தமைந்ததென் றுலகமுள் ளுவப்புறச்
நக்கநன் னூற்பெய ரிருத்தியவ் வாறனை
தரித்துதா ரணங்களும் பொருத்தியச் சியற்றினர்
தாட்டலர்ந் தண்டலை மாட்டளி றுதைந்திசை
ட்டியாழ்ப் பாணநன் னாட்டில்வண் ணையம்பதி
றுவிய கபிரியேல் வலம்புரி யுதவுமெய்
ருவளர் புகழொளி பெருகுதண் ணித்திலஞ்
சந்தமிழ்க் கலையெலாஞ் சேர்ந்தபூ ரணமதி
ந்துமாங் கிலப்பெருஞ் சிந்துவுக் கோர்புணை
சன்னையிற் போதனைத் திறங்கிளர் சாலையின்
ன்னுதுண் டுதல்பெரு மாமணித் தீவிகை
ாமெனக் கற்றநுண் ணறிவினர் தமதுசெந்
ாமதித் தெடுத்தசொன் னன்னலத் தோடியர்
வர்ந்தசீர் படைத்தநன் னெறிவழு வாவியற்
வுந்தா நாயகத் தகைமைநா வலரோ.

ABRIDGMENT

OF

THE NANNÛL.

நன்னூற் சுருக்கம்.

எழுத்ததிகாரம்.—ORTHOGRAPHY

I-வது : எழுத்தியல்.—OF LETTERS.

1. *எழுத்திலக்கணத்தின் பிரிவு.*—DIVISIONS OF ORTHOGRAPHY.

எண்பெயர் முறைபிறப் புருவம் மாத்திரை
முதல்ஈ றிடைநிலை போலி என்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.

[எழு. சூ. 2.

[*மேற்கூறியபன்னிரண்டு பகுதிகளையும் உடையது அவ்வெழுத்திலக்கணம்.*]

எண்.

2. *எழுத்து இப்படிப்பட்டதென்பதும் அதன்வகையும்.*

DEFINITION AND DISTRIBUTION OF LETTERS.

மொழிமுதற் காரணம் ஆம்அணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனஇரு வகைத்தே.

[எழு. சூ. 3.

[மொழிக்கு முதற்காரணமாகிய, அணுக்கூட்டத்தால் ஆன ஒலியே எழுத்து; அது முதலெழுத்து, சார்பெழுத்து, என இரண்டுவகைப்படும்.]

3. முதலெழுத்தின்விரி.—KINDS OF PRIMARY LETTERS.

உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே.

[எழு.சூ.4]

[உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் ஆகியமுப்பது எழுத்துகளும் முதல் எழுத்தெனப்படும்.]

4. சார்பெழுத்தின்வகை.—KINDS OF SECONDARY LETTERS.

உயிர்மெய் ஆய்தம் உயிரள வொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும். [எழு.சூ.5]

[உயிர்மெய் முதலிய மேற்கூறியபத்தும் சார்பெழுத்தாம்.]

பெயர்.

5. பெயரின் பொதுஇலக்கணம்.—DEFINITION OF NOUN.

இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

[எழு.சூ.7]

[இடுகுறிப்பெயரும், காரணப்பெயரும் ஆகிய இரண்டும் பலபொருளுக்கும் பொதுப்பெயராகியும் ஒருபொருளுக்குச் சிறப்புப்பெயராகியும் வருவனவாம்.]

(உ-ம்.) மரம்................ [இடுகுறிப் பொதுப்பெயர்.]
பனை.................. [இடுகுறிச் சிறப்புப்பெயர்.]
அணி=ஆபரணம்... [காரணப் பொதுப்பெயர்.]
முடி.................... [காரணச் சிறப்புப்பெயர்.]
அந்தணன்........... [காரண இடுகுறிப்பெயர்.]

6. உயிர் மெய் ஆகிய இவற்றின்பெயர்.—VOWELS AND CONSONANTS.

அம்முதல் ஈரா றுயிர் கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர். [எழு.சூ.8.

[அ முதலாகிய பன்னிரண்டையும் உயிர் என்றும், க முத லாகிய பதினெட்டையும் மெய்யென்றும் அறிவுடையோர் சொன்னார்.]

7. குற்றெழுத்து.—SHORT VOWELS.

அவற்றுள், அ இ உ எ ஒக்குறில் ஐந்தே. [எழு.சூ.9.

[உயிர், மெய் என்றவற்றுள் மேற்கூறிய ஐந்தும் குற்றெழுத்தாம்.]

8. நெட்டெழுத்து.—LONG VOWELS.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். [எழு.சூ.10.]

[ஆ முதலிய ஏழும்நெட்டெழுத்தாம்.]

9. சுட்டெழுத்து.—DEMONSTRATIVE LETTERS.

அ இ உம்முதல் தனிவரின் சுட்டே. [எழு.சூ.11.

[அ, இ, உ என்கிறமூன்றும் சொல்லுக்குமுதலில் புறத்தும், அகத்தும், சுட்டுப்பொருளைக் குறிக்கவந்தால் சுட்டெழுத்தாம்.]

(உ-ம்.) அவ்வணி, இவ்வணி, உவ்வணி...... [புறத்துவந்தன.]
" அவன், இவன், உவன்.......... [அகத்துவந்தன.]

* அவன் என்பதில் இருக்கிற அ, மலையன் என்பதிலுள்ள மலை யாகிய பகுதிபோல, வேறுநின்று சுட்டுப்பொருளைத் தருகின் றதாதலால் "தனிவரின்" என்றார்: இதுவிளைவுக்கும்பொருந்தும்.

10. வினா எழுத்து.—INTERROGATIVE LETTERS.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினாவா கும்மே. [எழு.சூ.12.]

[எ, யா ஆகிய இரண்டும் மொழிக்குமுதலிலும்; ஆ, ஓ, ஆகிய இரண்டும் மொழிக்கு இறுதியிலும்; ஏ இருவழியிலும் தனித்தனி வினாப்பொருளைக்காட்டவந்தால் வினா எழுத்தாம்.]

☞ இவையும் புறத்தும் அகத்தும்வரும்.

(உ-ம்.) எம்மனிதன்? யாங்ஙனம்? } முதலில் புறத்துவந்தன.
எவன்? யாவன்? } முதலில் அகத்துவந்தன.
கொற்றனா? கொற்றனோ?...[ஈற்றில் புறத்துவந்தன.]
ஏவன்? கொற்றனே?..........[அகத்தும் புறத்தும்வந்தது.]

11. வல்லினம்.—HARD CONSONANTS OR PECTORALS.

வல்லினம் க ச ட த ப ற என ஆறே. [எழு.சூ.13.

[இவ்வாறும் வல்லினமாம்.]

12. மெல்லினம்.—SOFT CONSONANTS OR NASALS.

மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே. [எழு.சூ.14.]

[இவ்வாறும் மெல்லினமாம்.]

13. இடையினம்.—MEDIAL CONSONANTS OR GUTTURALS.

இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே. [எழு.சூ.15.

[இவ்வாறும் இடையினமாம்.]

14. இனஎழுத்து.—KINDRED LETTERS.

ஐ ஔ இஉச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரினம் ஆய்வரல் முறையே.

[எழு.சூ.16

[இனம் இல்லாத ஐ, ஔ என்பவை ஈ, ஊ க்களுக்கு இ
மாகிய இ உ க்களைத் தமக்கினமாகப்பொருந்த முதலெழு
துகள் இரண்டிரண்டு ஓரினமாய்வருதல் முறைஆதலால்
வை இன எழுத்தெனப்படும்.]

(உ-ம்.) அ, ஆ ; இ, ஈ ; உ, ஊ ; எ ஏ ; ஐ, இ ; ஒ, ஓ ; ஔ, உ
க, ங ; ச, ஞ ; ட, ண ; த, ந ; ப, ம ; ற, ன.
ய, ர ; ல, வ ; ழ, ள ; [இவ்வாறும் ஓரினம்ஆம்.]

15. உயிர்மெய் வரும் விதம்.—VOWEL CONSONANTS.

புள்ளிவிட் டவ்வொடு முன்உரு ஆகியும்
ஏனை உயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாய்அதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய

[எழு.சூ.34.

[மெய்புள்ளியைவிட்டு, உயிராகிய அகரத்தோடுகூடுங்கா
த்தில் முன்னின்ற உருவே உருவமாகியும்,அகரம் அல்லாதம
றை உயிர்களோடுகூடும்போது உருவம்வேறுபட்டும், உயிரி
மாத்திரையே தனக்குமாத்திரையாகக்கொண்டு, உயிரின்வ
வடிவைநீக்கி, உயிர், மெய் ஆகிய இரண்டிடத்தும் பிறந்த "உ
யிர்மெய்" என்னும்பெயருடன், ஒலித்தலில்ஒற்று முன்னாயு
உயிர்பின்னாயும் உயிர்மெய்வரும்.]

(உ-ம்.) க்+அ=க ; க்+ஆ=கா ; க்+இ=கி ; க்+ஈ=கீ

16. முற்றாய்தம் வரும்விதம்.—WHEN PERFECT AIDAMS OCCUR.

குறியதன் *முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

[எழு.சூ.35.]

[புள்ளிவடிவையுடையதாகிய ஆய்தம் குற்றெழுத்தின்பின்ன உயிரோடுகூடிய வல்லெழுத்தின்மேலதாய்வரும்.]

(உ-ம்.) எஃகு,கஃசு,இருபஃது ..[வல்லினத்தின்மேல்வந்தது.]
அஃகடிய ....[புணர்ச்சிவிகாரத்தால் வந்தது.]
அஃகான் ....[செய்யுள்விகாரத்தால்வந்தது.]

முற்றாய்தத்தின் தொகை எட்டு.

---

17. உயிரளபெடை.—VOWEL PROLONGATION.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

[எழு.சூ.36]

[பாட்டில் ஓசைகுறைந்தால், மொழிமுதலில், நடுவில், இறுதியில்நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையில்மிகுந்து ஒலிக்கும்; அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு அவற்றின்பின் அவற்றிற்கினமாகிய குற்றெழுத்துகள் வரிவடிவில் அறிகுறியாய்வரும்.]

(உ-ம்.) (1.) "ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆ அது மென்னு மவர்." [குறள். 66. 3.]
[மொழிமுதலில் அளபெடுத்தன.]

---

* இதில் "முன்" என்றது இடமுன்; உரையில் "பின்" என்றது காலப்பின்; இதுவேவழக்கத்தில் வழங்குவது; ஆதலால் பின்வரும் சூத்திரங்களிலும் "முன்" என்றதற்குப் "பின்" என்று அர்த்தம் சொல்லப்படும்.

(2.) "கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார்."
[நாலடி. 26. 5.]

[மொழிஇடையில் அளபெடுத்தது.]

(3) "பொருள்மேற்
படாஅ விடுபாக் கறிந்து." [நாலடி. 26.5.]

[மொழிக்கடையில் அளபெடுத்தது.]

ஔ மொழிக்கு நடுவிலும் இறுதியிலும் வராது; வரும் அளபெடை பதினொன்பது.

மேலும், இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என இரண்டுண்டு.

(உ-ம்.)

(1.) "கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங் குற்றம் தமதே." [நீதிநெறி. 25.]

[இன்னிசையாக அளபெடுத்தது]

(2.) "எழுறப் புனல்படீஇ வித்தொடின்பொருள் தாமுற வழங்கி." [இராமாயணம். 1. 6. 111.]

[சொல்லிசையாக அளபெடுத்தது.]

ஆக உயிர் அளபெடை இருபத்தொன்று.

---

18. ஒற்றளபெடை—CONSONANT PROLONGATION.

ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாம் குறில் இணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே. [எழு.சூ.37.]

[பாட்டில் ஓசை குறைந்தால், குறில் இணைக்கீழும், குறிற்கீழும், மொழிக்கு நடுவிலும், இறுதியிலும் நிற்கும் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ ஆகிய இவ்வெழுத்துகள் தம் மாத்திரையில் மிகுந்தொலிக்கும்; அவ்வளபெடையை அறியும்படி அவற்றின்பின் அவ்வெழுத்துகளே வரிவடிவில் அறிகுறியாய் வரும்.]

(உ-ம்.) (1.) "கலங்ங்கு நெஞ்சமிலை காண்!"

[குறிலிணைக்கீழ மொழிக்கிடையில் அளபெடுத்தது.]

(2.) "எங்ங் கிறைவ னுளனென்பாய்!"
[குறிற்கீழ் மொழிக்கிடையில் அளபெடுத்தது.]
(3.) "மடங்ங் கலந்த மனனே!"
[குறில் இணைக்கீழ்மொழி இறுதியில் அளபெடுத்தது.]
(4.) "நங்ங் களங் கறுப்பா நாம்."
[குறிற்கீழ் மொழி இறுதியில் அளபெடுத்தது.]
(5) "எஃஃகி லங்கிய கையராய்."
[ஆய்தம் அளபெடுத்தது.]
ஆய்தம் மொழிஇறுதியில் வராது; ஆதலால் ஒற்றளபெடை[1]

---

19. குற்றியல் உகரம்.—SHORTENED உ.

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலி இடை
தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.
[எழு. சூ. 39.]

[தனிநெடில் எழுடனே ஆய்தம் ஒன்றும், உயிர் பதினொன்றும்,* வன்கணமும், மென்கணமும், இடையெழுத்து ஐந்தும்† ஆகிய முப்பத்தாறு எழுத்துகளுள் ஒன்று அயலாய்த்தொடர அதன்பின் வல்லெழுத்துகளுள் ஒன்றைஊர்ந்த உ குறுகும்; தனிநெடில் ஒழிந்தவற்றிற்குமேலே வேறெழுத்துகள்தொடரவும்பெறும்.]

(உ-ம்.) நாகு, கஃசு, குருகு, நத்து, கொம்பு, தெள்கு.

[இடைத்தொடரில் குற்றியல் உ ஐந்து; மற்றைத்தொடர்களில் தொகைமுப்பது; ஆகவே, குற்றியல் உ முப்பத்தைந்து; ஆயினும்பொதுவில் முப்பத்தாறென்னப்பட்டது.‡]

---

* உயிருள் மொழியின் நடுவிலும் இறுதியிலும் வராத ஔ ஒழியவே, பதினொன்றும்.

† இடை எழுத்துகளுள் வல்லெழுத்துகளோடு வராத வகரம் ஒழிய, வருவன ஐந்தாம்.

‡ நெடிலில் ஔ தொடர்ந்தகுற்றியல் உ இல்லை.

20. குற்றியல் இகரம்.—SHORTENED இ.

யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய.

[எழு.சூ.38.]

[யகரத்தைமுதலிலே உடையசொல்வரக்குற்றியல் உ திரி ந்த இகரமும், அசைச்சொல்லாகிய "மியா" என்பதில்உள்ள இகரமும்குறியவை.]

(உ-ம்.) (1.) "வேண்டுதல்வேண்டாமை இலானடிசேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல." [குறள். 1. 4.]

(2.) கேண்மியா.

[குற்றியல் உகரம் முப்பத்தாறினோடும் ஆகும் குற்றியலிகரம் முப்பத்தாறு, இவற்றோடு "மியா" விலுள்ள குற்றியலிகரமுஞ் சேர்ந்துகுற்றியலிகரத்தின்தொகை முப்பத்தேழு ஆகின்றது.]

---

21. ஐ, ஔ இவைகளின்குறுக்கம்—SHORTENED ஐ AND ஔ.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்றாகும். [எழு.சூ.40.]

[ஐ தன்னைச்சுட்டித்தன்பெயர்சொல்லுமிடத்தில் ஒழியமற றைச் சொல்லின் முதல், இடை, கடை ஆகியமூன்றிடத்தி லும், தன்மாத்திரையிற்குறுகும்; ஔ சொல்லுக்குமுதலில் அப்படியேகுறுகும்.]

(உ-ம்.) (1.) ஐயம், (2.) நனைவு, (3.) மலை; ஔவியம்.

---

22. மகரகுறுக்கம்—SHORTENED ம்.

ணனமுன் னும்ம் வஃகான் மிசையுமக் குறுகும்.

[எழு.சூ.41]

[ண், ன் இவைகளின்பின்னும் வவ்வின்முன்னும் வரும்மவ் வானது தன்மாத்திரையிற் குறுகும்.]

(உ-ம்.) மருண்ம், போன்ம், நிலம்வலிது.

23. ஆய்தக்குறுக்கம்—SHORTENED AIDAM.

லளவீற் றியைபினாம் ஆய்தம் அஃகும்.

எழு.சூ.42.]

[ல, ள ஆகிய எழுத்துகளினுடைய ஈற்றுப்புணர்ச்சியினால் ஆகும் ஆய்தம்தன்மாத்திரையிற்குறுகும்.]

(உ-ம்). அஃறிணை, முஃடீது.

மாத்திரை

24. எழுத்துகளின் மாத்திரை.—QUANTITY.

மூன்றுயிர் அளபிரண் டாம்நெடில் ஒன்றே
குறிலோ டைஔக் குறுக்கம் ஒற்றள
பரையொற் றிஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.

[எழு.சூ.41]

[ஒலிக்கும் அளவு உயிர் அளபெடைக்கு மூன்றாகும்; நெடிலுக்கு இரண்டாகும்; குற்றெழுத்து, ஐயின்குறுக்கம், ஔவின் குறுக்கம், ஒற்றளபெடை ஆகிய இவற்றிற்குத் தனித்தனி ஒன்றாகும்; மெய்யெழுத்திற்கும், குறுகிய இகரத்திற்கும், உகரத்திற்கும், ஆய்தத்திற்கும் தனித்தனி அரைமாத்திரையும்; மவ்வின் குறுக்கத்துக்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும் தனித்தனி கால்மாத்திரையும் ஆகும்.]

---

25. மாத்திரை இன்னதென்பது.—DEFINITION OF QUANTITY.

இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

[எழு.சூ.45.

[மனிதரிடத்தில் இயற்கையாய் உண்டாகின்றகண் இமைப் பொழுதும் கைந்நொடிப்பொழுதுமே மாத்திரையின் அளவாம்.]

முதல், ஈறு, இடை நிலை.

26. மொழிக்கு முதலில்வரும் எழுத்துகள்.—INITIAL LETTERS.

பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞங வீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.
[எழு.சூ.47.]

[பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், முதலாகிய பத்து உயிர் ஏறியமெய் எழுத்துகளும்சொல்லுக்கு முதலில்வரும்.]

(உ-ம்.) (1.) அணி, ஆணி, இலை, ஈடு, உளி, ஊன், எறி, ஏறு, ஐப்பசி, ஒலி, ஓடு, ஔவியம்.

[மொழிக்குமுதலில் பன்னீருயிரும் வந்தன.]

(2) கரி, சவி, தலை, நரி, பசு, மணி, வழி, யவனர், ஞமலி, அங்ஙனம்.

முதலாகியபத்து உயிர்மெய்களும்மொழிக்குமுதலில்வந்தன.]

27. மொழிக்கு இறுதியில்வரும் எழுத்துகள்.—FINAL LETTERS.

ஆவிஞண நமன யரலவ ழளமெய்
சாயும் உகரம்நா லாறும் ஈறே. [எழு.சூ.52.]

[தனித்தும் மெய்யோடுகூடியும் வரும்பன்னிரண்டு உயிர்களும், ஞ முதலாகிய மேற்கூறிய பதினொருமெய்களும், குற்றியல் உகரமும் ஆகிய இருபத்துநான்குஎழுத்தும்மொழி இறுதியில்வரும்.]

(உ-ம்.) (1.) விள, நிலா, கிளி, ஈ, விடு, பூ, சேஎ, தே, பை, நொ, போ, கௌ.

[ஆவிமொழி இறுதியில்வந்தன.]

(2.) உரிஞ், மண், பொருந், மரம், பொன், சேய், நீர்,
கால், தெவ், தாழ், வாள், அஃகு.

[ஞ முதலாகிய பதினொரு எழுத்துகளும் மொழிஇறுதியில் வந்தன.]

28. மொழிக்கு இடையில்வரும் எழுத்துகள்.—CONJUNCTION OF LETTERS IN WORDS.

க ச த ப ஒழித்த ஈ[illegible] கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ர ழ வொழித் தீரெட்
டாகும்இவ் விருபான் மயக்கும் மொழிஇடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே.

[எழு.சூ.55.]

[க, ச, த, ப என்னும் நான்கும் அல்லாத பதினான்கு மெய்களும் வேறுமெய்களோடு கூடுங்கூட்டம் வேற்றுநிலைமெய்ம் மயக்கமாம்; ர, ழ அல்லாத பதினாறுமெய்களும் கூடுங்கூட்டம் உடனிலைமெய்ம்மயக்கமாம்; இவ்விரண்டுவித மயக்கங்களும் மொழிகளின் நடுவில்வரும்; உயிர்மெய் மயங்குவதற்கு அளவில்லை.]

(உ-ம்.) (1.) அங்கம்...............[வேற்றுநிலைமெய்ம்மயக்கு.]
(2.) பக்கம் ....[உடனிலைமெய்ம்மயக்கு.]
(3.) நெல்...............[உயிர்மெய்மயக்கு.]
[மயக்கு=கூட்டம்.]

போலி.

39. மொழி இறுதிப்போலி.—FINAL SUBSTITUTES.

மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன உளவே.

[எழு.சூ.67.]

[அஃறிணைப்பெயர்களில்* இறுதியில் நின்ற ம் ஆனது ன் ஒடு ஒத்துநடப்பனவும் உண்டு]

(உ-ம்.) "சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புட்போல்."
[மரன்=மரம்.] [நாலடி.3.10.]

இவ்விறுதிப்போலியை முதலில்சொன்னதினால் பின்வரு பவைகளும் அமையும் எனக்கொள்க :—

(உ-ம்.) (1.) சுரும்பு=சுரும்பர்; வண்டு=வண்டர்.
[மென்றொடர்க்குற்றியல் உகரம் அர் ஆதல்.]
(2.) பந்தல்=பந்தர்; சாம்பல்=சாம்பர்.
[சில ல் ஈற்றுப்பெயர் இறுதி ஆகிய ல் ஒற்று ர் ஆதல்.]

30. மொழி முதற்போலியும் இடைப் போலியும்.—INITIAL [*at the beginning of words*] AND MEDIAL [*in the middle of words*] SUBSTITUTES.

அ ஐ முதல்இடை ஒக்கும் ச ஞ ய முன்.
[எழு.சூ.68.]

[அவ்வும், ஐயும் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் ச ஞ, ய க்களின் முன்வந்தால் ஒத்துநடக்கும்.]

(உ-ம்.) 1. பசல்=பைசல்; மஞ்சு=மைஞ்சு; மயல்=மையல்
2. அமச்சன் = அமைச்சன்; இலஞ்சி = இலைஞ்சி
அரயர்-அரையர்;

---

31. மொழி இடைப்போலி.—MEDIAL SUBSTITUTES.

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே.
[எழு.சூ.69.]

[ஐ யின் பின்னும், ய் ஒற்றின் பின்னும் இயல்பாய் வரும் ந் ஒற்றோடு சிலவிடங்களில் ஞ் ஒற்று ஒத்துநடக்கும் என்று சொல்வாரும் உண்டு.]

(உ-ம்.) ஐந்நூறு=ஐஞ்ஞூறு; நெய்+நின்ற=நெய்ஞ்ஞின்ற.†

---

* அஃறிணைப்பெயர் என்றது பால்பகா அஃறிணைப்பெயரை.

† மண் + யாத்த=மண்ஞாத்த; பொன் + யாத்த=பொன் ஞாத்த, எனவும்வரும்

எழுத்ததிகாரம்.

II-வது: பதவியல்.—OF WORDS.

பதம்.

32. பதம் இன்னது என்பதும் அதனவகையும்.—WORDS HOW FORMED AND THEIR KINDS.

எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதமென
இருபால் ஆகி இயலும் என்ப. [பத.சூ.1.]

[எழுத்துகள் தனித்தாவது,தொடர்ந்தாவது,அருத்தத்தைத் தந்தால் பதம்ஆம்; அதுபகாப்பதம், பகுபதம் என இரண்டு வகைப்பட்டு நடக்கும் என்பார் அறிவுடையோர்.]

33. பகாப்பதம்.—INDIVISIBLE WORDS.

பகுப்பால் பயனற் றிடுகுறி ஆகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்.
[பத.சூ.4.]

[பிரிக்கப்படுவதினால் பகுதி, விகுதி முதலிய பயன் இல்லாமல் இடுகுறிஆகி முதற்காலந்தொடுத்து ஒன்றாய்முடிந்து நடக்கின்ற பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கும் பகாப்பதம்ஆம்.]

(1.) நிலம், நீ, பால்.......[பெயர்ப்பகாப்பதம்.]
(2.) போ, நில், வா.........[வினைப்பகாப்பதம்.]

(3.) மற்று, எ, ஒ, கொல்...[இடைப்பகாப்பதம்.]
(4.) கழி, தனி, உறு........[உரிப்பகாப்பதம்.]

---

34. பகுபதம்.—DIVISIBLE WORDS.

பொருள் இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.
[எழு.சூ.5.]

[பொருள்முதலிய ஆறும் காரணமாய்வரும் பெயர்ச்சொற்களும், காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும் பகுபதங்களாம்.]

(உ-ம்.) (1.) பொன்னன் ....[பொருட்பகுபதம்.]
(2.) அகத்தான்..........[இடப்பகுபதம்.]
(3) ஆதிரையான்.......[காலப்பகுபதம்.]
(4.) கண்ணன்.... ....[‡ சினைப்பகுபதம்.]
(5.) நீலன்..................[குணப்பகுபதம்.]
(6.) ஓதுவான்...........[தொழிற்பகுபதம்.]
} பெயர்.
நடந்தான்.........[தெரிநிலைவினைப்பகுபதம்.]
பெரிது... ....[குறிப்புவினைப்பகுபதம்.]

வினை என்பதனால் தெரிநிலைவினை, குறிப்பு வினை என இரண்டும் அமையும்.

"வினைபகுபதம்" என்றதனால் இருவகைவினையால் அணையும் பெயரும் பகுபதம்ஆம்என விளங்குகின்றது.

---

35. பகுபத உறுப்புகள்.—THE MEMBERS OF DIVISIBLE WORDS.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்.
[எழு.சூ.6.]

‡ சினை=உறுப்பு.

[பகுதி முதலிய மேற்கூறிய ஆறு உறுப்பினுள் பொருள் அமைதலுக்குத் தக்கவைகளை நினைத்துச்சேர்த்தால் எவ்வகைப்பதமும் முடியும்.]

உ-ம்). கூனி=கூன்(பகுதி) + இ(விகுதி).

உண்டான்=உண்(பகுதி) + ட்(இடைநிலை) + ஆன்(விகுதி)

மற்றவையுமிப்படியே கண்டுகொள்க.

பகுதி.

36. பகுதி இப்படிப்பட்டது.—THE ROOT DEFINED.

தத்தம், பகாப்ப தங்களே பகுதி ஆகும்.

[பத.சூ.7.]

[பகுபதங்களுள் அவற்றவற்றின் முதலில் நின்ற பகாப்பதங்களே பகுதிகளாம்.]

---

37. "செம்மை" முதலியபண்புப் பகுதிகள் விகாரப்படும் வகை.—THE INFLEXION AND COMBINATION OF INDIVISIBLE WORDS DENOTING QUALITY.

ஈறுபோ தல்இடை உகரம்இய் யாதல்
ஆதிநீ டல்அடி அகரம்ஐ ஆதல்
தன்ஒற் றிரட்டல்முன் நின்றமெய் திரிதல்
இனம்மிகல் இனையவும் பண்பிற் கியல்பே.

[பத.சூ.9.]

[செம்மை, சிறுமை முதலிய வாய்பாடுகளின் இறுதியில் உள்ள மை விகுதி கெடுதலும், நடுவில்நின்ற உ ஆனது இ ஆதலும், முதலில்நின்றகுறில் நெடில் ஆதலும், முதலில்நின்ற அ ஆனது ஐ ஆதலும், தன்மெய்நடுவில் மிகுதலும், முன்னின்றமெய் வேறொரு மெய்யாய்த்திரிதலும், வரும் எழுத்திற்கு இன எழுத்துமிகுதலும், இவைபோன்ற வேறுவகைவிகாரமும் அப்பண்பிற்கு இயல்பாம்.]

(உ-ம்.)
(1.) நல்லன்.........[நன்மையின் மை கெட்டது.]
(2.) கரியன்.........[கருமையின் மை கெட்டு, உ திரிந்தது.]
(3.) பாசி ....[பசுமையின் மை கெட்டுமுதல் நீண்டது.]
(4.) பைந்தார்.......[பசுமையின் மை, சு கெட்டு, ந் மிகுந்து அகரம் ஐ ஆனது.]
(5.) வெற்றிலை.....[வெறுமையின் மை கெட்டு, ற் இரட்டித்தது.]
(6.) சேதாம்பல்...[செம்மையின் மை கெட்டு, முதல்நீண்டு ம் த் ஆனது.]
(7.) பைந்தார்.....[ந் மிகுந்தது; "இனையவும்" என்றதினுக் கெட்டது.]

---

38. செய்வி, செய்விப்பி, முதலிய ஏவல்.—CAUSAL IMPERATIVES.

செய்என் வினைவழி விப்பி தனிவரின்
செய்விஎன் ஏவல் இணையின் ஈ ரேவல்.

[பத.சூ.11.]

["செய்" என்னும்வாய்பாட்டு வினைப்பகுதிகளின்பின் வி, பி என்பவைகளில் ஒன்றுவந்தால் "செய்வி" என்னும்ஓர் ஏவல்ஆம்; இவ்விகுதிகள் தம்மோடாவது,வேறுவிகுதிகளோடாவது இணைந்துவந்தால் "செய்விப்பி' என்னும்வாய்பாட்டு ஏவல்ஆம்.]

(உ-ம்.) (1.) அணி + வி = அணிவி; உருள் + து = உருட்டு.
(2.) அணி + வி + பி + அணிவிப்பி.
உருள் + து + வி = உருட்டுவி.

விகுதி.

39. விகுதிகள் இவை என்பது.—TERMINATIONS.

அன் ஆன் அள்ஆள் அர் ஆர் பம்மார்
அ ஆ குடு து று என் ஏன் அல் அன்

அம் ஆம் எம் ஏம் ஓம்மொ டும்மூர்
கடதற ஐ ஆய் இம்மின் இர் ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.

[பத.சூ.13.]

[மேற்கூறியமுபபத்தேழும்,இவைபோல்வனபிறவும்வினைப்பகுபதங்களின்விகுதிகள்ஆம்; பெயருக்கும் சிலவிகுதிகள்ஆம்.]

பெயரின் விகுதிகள்.......... { அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, தை, கை, பி, முன், ன், ள், ர், வ், முதலானவை.

பெயர் எச்ச விகுதிகள்.... { அ, உம்.

வினை எச்சவிகுதிகள்.......... { உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய, இயர், வான், பான், பாக்கு, இ, ய், கு, ஆல், கால், ஏல், ஏனும், உம், மல், மை, மே, து, றி, முதலானவை.

தொழிற்பெயர் விகுதிகள். .. { தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, முதலியன; அடம்என்பதுவழக்கத்தில்வரும்.

பண்புப்பெயர் விகுதிகள் ... { மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், தர், முதலியன.

எதிர்மறைவிகுதிகள்......... { இல், அல், ஆ, து முதலியன.

பிறவினை விகுதிகள்... ..... { வி, பி, கு, சு, டு, து, பு, று.

பிறவிகுதிகள்; (உ-ம்.)
- இ, ஐ, அம், (உ-ம்):—அலரி, பறவை, எச்சம்......... [வினைமுதற்பொருள்.]
- ஊருணி, தொடை, தொல்காப்பியம்.. [செயப்படுபொருள்.]
- மண்வெட்டி, பார்வை, நோக்கம்...... [கருவிப்பொருள்.]
- விடு, ஒழி, (உ-ம்.) வந்துவிட்டான், படித்தொழிந்தான். [துணிவுப்பொருள்.]
- கொள், (உ-ம்.) நடத்திக்கொண்டான். [தற்செயல்.]
- படு, உண், (உ-ம்.) ஓட்டப்பட்டான், அடியுண்டான்......... [செயப்பாட்டுவினை.]
- மை, (உ-ம்.) ஆண்மை, பெண்மை... [தன்மைப்பொருள்.]

இடைநிலை.

40. பெயரின் இடைநிலை.—MEDIAL PARTICLES OF NOUNS

இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க் கிடைநிலை எனலே.
[பத.சூ.14

[இலக்கியத்தைப்பார்த்து அதற்கு இலக்கணம் சொல்லுதலால் பகுதியையும் விகுதியையும் பிரித்து நடுவில் நின்றதை வினையால் அணையும்பெயர் அல்லாதபெயர்களுக்கு இடைநிலை என்று சொல்லுக.]

(உ-ம்.) அறிஞன் ... ... [ஞ் இடைநிலை.]
ஓதுவான் ... ... [வ் இடைநிலை.]
வலைச்சி ... ... [ச் இடைநிலை]
வண்ணாத்தி ... ... [த் இடைநிலை.]

41. இறந்தகால இடைநிலை.—MEDIAL PARTICLES DENOTING THE PAST TENSE.

த ட ற ஒற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலம் தருந்தொழில் இடைநிலை.
[பத.சூ.15.

[த்,ட்,ற், இன் ஆகிய இவை ஐந்துபாலிலும், மூன்று இடத்திலும் இறந்த காலத்தைக்குறிக்கும் வினைப்பகு பதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உ-ம்.)
(1.) நட + த் + அன் + அன் = நடத்தனன் = நடந்தனன்.
(2.) கொள் + ட் + ஆன் = கொட்டான் = கொண்டான்.
(3.) நில் + ற் + ஆன் = நிற்றான் = நின்றான்.
(4.) ஒடி + இன் + ஆன் = ஒடினான்.

ஆ + கு + இன் + ஆன் = ஆகினான் = ஆனான்.[இ குறைந்தது.]
விஞ்சு + இன் + அ + து = விஞ்சினது = விஞ்சியது.[ன் குறைந்தது.]

---

42. நிகழ்கால இடைநிலை.—MEDIAL PARTICLES DENOTING THE PRESENT TENSE.

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை.
[பத.சூ.16.]

[ஆநின்று, கின்று, கிறு ஆகிய இவை ஐந்துபாலிலும், மூன்று இடத்திலும் நிகழ்காலத்தைக் குறிக்கும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உ-ம்.) (1.) போகாநின்றான்; (2.) போகின்றான்; (3.) போகிறான்.

---

43. எதிர்கால இடைநிலை.—MEDIAL PARTICLES DENOTING THE FUTURE TENSE.

பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு
திசைவினை இடைநிலை ஆம்இவை சிலஇல.*
[பத.சூ.17.]

[ப், வ் ஆகிய இவை ஐந்துபாலிலும், மூன்று இடத்திலும் எதிர்காலத்தைக் குறிக்கின்ற வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம்.]

(உ-ம்.) (1.) உண்பான்; (2.) உண்ணுவான்.

---

44. காலங்காட்டும் விகுதிகள்.—TERMINATIONS DENOTING TENSE.

றவ்வொடு கரஉம் மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பும் எதிர்வும் டவ்வொடு

---

* "இவை சில இல" என்றதற்குப்பொருள் பின்சூத்திரத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

கறுவுந் தவ்வோ டிறப்பெதிர் வும்மின் ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்
செலவொடு வரவும் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.

[பத.சூ.18.]

[று, றும், து, தும் இவை இறந்தகாலத்தையும் எதிர் காலத்தையும்; டு, டும் இவை இறந்தகாலத்தையும்; கு, கும் இவை எதிர்காலத்தையும்; மின், ஏவல்விகுதிகள், வியங்கோள்விகுதிகள், இ, மார் இவை எதிர்காலத்தையும்; ப இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், "செய்யும்" என்னும் முற்றுவிகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும்; எதிர்மறை விகுதியாகிய ஆ மூன்றுகாலத்தையும் ஏற்றுவரும்" இவை சில இல" என்றவைகளுள்.†]

(உ-ம்.)

(1.) சென்று, சென்றும் [இறப்பு]; சேறு, சேறும், [எதிர்வு
(2) வந்து, வந்தும் [இறப்பு]; வருது, வருதும், [எதிர்வு.]
(3) உண்டு, உண்டும் [இறப்பு]; உண்கு, உண்கும், [எதிர்வு
(4.) செய்மின், செய்யாய், செய்க, சேறி, செய்ம்மார் [எதிர்வு

செய்ப, [இறப்பு, எதிர்வு.]
செய்யும், [நிகழ்வு, எதிர்வு.]
செய்யா, [இறப்பு, நிகழ்வு, எதிர்வு.]

இவற்றுள் அன்றி வேறுவகையாலும் காலந்தோன்றும்.
(உ-ம்.) விட்டான், பெற்றான்,

[பகுதிவிகாரத்தால் இறந[redacted]தோன்றியது.]

என்மனார், அறிந்திசினோர், மன், [redacted]ன, ய இறந்தகாலங் காட்டியன.
ஆயது.................

என்மர்.................ம் எதிர்காலங்காட்டியது.

உண்ணாநிடந்தான், உண்ணாவிருந்தான்............... ஆகிடந்து, ஆவிருந்து நிகழ்காலங்காட்டியன.

வருதி என்பதில் இ நிகழ்காலங்காட்டியது.

† சா ு, சந்தி, விகாரம் ஆகிய இம்மூன்றுறுப்பையுமியலில் விளக்குகிறார்.

எழுத்ததிகாரம்.

III-வது : உயிரீற்றுப்புணரியல்.

OF THE COMBINATION OF VOWEL-FINALS.

புணர்ச்சி.

15. புணர்ச்சி இன்னதென்பது.—COMBINATION OF LETTERS.

மெய்உயிர் முதலீ றாம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.
[உயிர்.சூ.1.]

[மெய்யே ஆவது உயிரே ஆவது முதலிலும் இறுதியிலும் உடைய பகாப்பதம் பகுபதம் என்கிற இரண்டுபதங்களும், தன்னோடுதானும், [redacted]பிறிதோடு பிறிதுமாய், அல்வழி, வேற்றுமை என்னும்[redacted]டனுள் ஒருபொருளில் பொருந்தும்போது, நிலைமொழியும் வருமொழியும் இயல்பாய் அல்லது விகாரமாய்த்தொடர்வது புணர்ச்சியாம்.]

16. அல்வழி, வேற்றுமை இவை யென்பது.—CASUAL AND INCASUAL COMBINATION.

வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில்பண் புவமை உம்மை அன்மொழி

எழுவாய் விளிஈ ரெச்சம்முற் றிடைஉரி
தழுவு தொடர்அடுக் கெனஈ ரேழே. [உயிர்.சூ.2.]

[வேற்றுமைப் புணர்ச்சி ஆவது ஐ, ஆல், கு, இன், அது, கண் எனும் ஆறு உருபும் மறைந்தாவது, வெளிப்பட்டாவது வரப் பதங்கள் பொருந்தும் தொடர்ச்சியாம்; அல்வழிப்புணர்ச்சியாவது வினைத்தொகை முதலிய ஐந்துதொகை நிலையிலும், எழுவாய் முதலிய ஒன்பது தொகாநிலையிலும் பதங்கள் பொருந்தும்தொடர்ச்சி ஆகிய பதினான்காம்.]

[வேற்றுமை.]

	1. வேற்றுமைத்தொகைநிலை		2. வேற்றுமைத்தொகாநிலை
(உ-ம்.)	வீடுகட்டினான்	[ஐ]	வீட்டைக்கட்டினான்
	கல்எறிந்தான்	[ஆல்]	கல்லால்எறிந்தான்
	கொற்றன்மகன்	[கு]	கொற்றனுக்குமகன்
	மலைவீழ் அருவி	[இன்]	மலையின்வீழ்அருவி
	சாத்தன்கை	[அது]	சாத்தனதுகை
	மணிஒளி	[கண்]	மணியின்கண்ஒளி.

[அல்வழி.]

(உ-ம்.)

(1.)	கொல்யானை	வினைத்தொகை.	ஐந்து தொகைநிலை
(2.)	கருங்குதிரை	பண்புத்தொகை.	
	சாரைப்பாம்பு	இருபெயரொட்டுப் பண்புத்தொகை.	
(3.)	பிறைநுதல்	உவமைத்தொகை.	
(4.)	இராப்பகல்	உம்மைத்தொகை.	
(5.)	பொற்றொடி	அன்மொழித்தொகை.	

(1.)	சாத்தன்வந்தான்	எழுவாய்த்தொடர்.	ஒன்பது தொகாநிலை.
(2.)	சாத்தாவா	விளித்தொடர்.	
(3.)	வந்தமனிதன்	பெயரெச்சத்தொடர்.	
(4.)	போய்ச்சென்றான்	வினைஎச்சத்தொடர்.	
(5.)	நின்றான்அவன்	தெரிநிலைவினைமுற்றுத் தொடர்.	
(6.)	பெரியன்அவன்	குறிப்புவினைமுற்றுத் தொடர்.	
(7.)	மற்றுவழி	இடைச்சொல்தொடர்.	
(8.)	நனிஉழைத்தான்	உரிச்சொல்தொடர்.	
(9.)	பாம்புபாம்பு	அடுக்குத்தொடர்.	

47. இயல்புப் புணர்ச்சி.—NATURAL COMBINATION.

விகாரம் அனைத்தும் மேவல தியல்பே.
[உயிர்.சூ.3.]

[பின்வரும் விகாரவகை எல்லாவற்றையும் அடையாதது இயல்புப்புணர்ச்சி ஆம்.]

(உ-ம்.) பொன்மலர்.

விகாரம்.

48. விகாரப் புணர்ச்சி.—MUTATIONAL COMBINATION.

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும்.
[உயிர்.சூ.4.]

[எழுத்தாவது, சாரியை ஆவது, ஒன்றும் பலவும் தோன்றுதலும், திரிதலும், கெடுதலும்மேற்சொன்ன விகாரம்ஆம். இம் மூவகைவிகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதல், இடை, கடை என்கின்ற மூன்றுஇடத்திலும் ஏற்றபடிவரும்.]

(உ-ம்.) (1.) மா + கனி = மாங்கனி............[ங் தோன்றியது.]
(2.) அல் + திணை = அஃறிணை..........[மெய்கள் திரிந்தன.]
(3.) நிலம் + வலயம் = நிலவலயம்...[ம் கெட்டது.].

---

49. செய்யுள் விகாரம்.—POETICAL CHANGES.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி
[உயிர்.சூ.5.]

[பாட்டில் வேண்டு மிடத்தில் மேற்கூறிய வலித்தல் முதலாகிய ஆறு விகாரங்களும் வரும்.]

(உ-ம்.)
(1.) வலித்தல்..." பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயாள்."
[பிறக்கிட=பிறங்கிட.] [இராமா.1.8.49.
(2.) மெலித்தல்." தண்டையின் இனக்கிளி கடிவோள்."
[தண்டை=தட்டை.]
(3.) நீட்டல்...." ஆளி பொங்கும் அரம்பையர் ஞெகியே."
[ஆளி=அளி=வண்டு.] [இராமா.1.15.62.]
(4.) குறுக்கல்..." கோலாற் கடாஅய்க் குறினும்."
[குறினும்=கூறினும்.] [நாலடி. 26.8.]
(5.) விரித்தல்...." வள்வார் முரசம் மதிர்மாநகர்."
[ம் விரிந்தது.] [இராமா. 1.4.73.]
(6.) தொகுத்தல்." துன்று துறத்தல் தகுவதோ?"
[துன்று=துன்றுமல்.] [நாலடி. 23.6.]

---

50. OMISSION OF INITIALS, MEDIALS AND FINALS IN WORDS.

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே.

[உயிர்.சூ.6.]

[ஒருசொல்லின்முதல், இடை, கடைஆகிய மூன்றுஇடத்தி லும் குறைந்துவருதலும் அச்செய்யுள்விகாரம் ஆம்.]

(உ-ம்.) (1.) " மரைஇதழ்." ... ...[மரை=தாமரை.]	மூன்றுஇடத்திலும்குறைதல்.
(2.) " ஒதிமுதுபோத்து."[ஒதி=ஒந்தி.]	
(3.) "நீல்உண்டுகிலிகை."[நீல்=நீலம்.]	

☞ "குறைதலும்" என்ற எச்சஉம்மையால் விதிஇல்லாமல் வருகிற வேறுவிகாரங்களும் உண்டுஎனக்கொள்க.

(உ-ம்.) யாது=யாவது ... ...[வ தோன்றிற்று.]
மாகி=மாசி... ... ...[சி ஆய்த்திரிந்தது.]
யார்=ஆர்... ... ...[ய் கெட்டது.] [டது.]
முழுகு=மூழ்கு... ... ...[ஆதி நீண்டு ழுவ்வில் உ கெட்
மிஞிறு=ஞிமிறு ... ...
தசை=சதை... ... ...
வைசாகி=வைகாசி...
[எழுத்து நிலைமாறின.]

இல்வாய்=வாயில்.....}
நகர்ப்புறம்=புறநகர்..} [சொல் நிலைமாறின.]

---

51. A SINGLE COMBINATION MAY ADMIT OF MORE THAN ONE KIND OF MUTATION.

ஒருபுணர்க் கிரண்டும் மூன்றும் உறப்பெறும்.

[உயிர்.சூ.7.]

[ஒருபுணர்ச்சியில் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள், ஒன்றுமாத்திரமல்லாமல், இரண்டு மூன்றும் வரப்பெறும்.]

உ-ம்.) நிலம் + பனை = நிலப்பனை. . [இரண்டுவிகாரம்.]
பனை + காய் = பனங்காய் ... ..[மூன்றுவிகாரம்.]

பொதுப்புணர்ச்சி.

52. ஞ், ந், ம், ய், வ் இவைகளின் புணர்ச்சி.—THE COMBINATION OF THE INITIALS ஞ், ந், ம், ய், வ் WITH OTHER LETTERS.

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞ ந ம ய வக்கள் இயல்பும்
குறில்வழி யத்தனி ஐ நொ து முன்மெலி
மிகலும்ஆம் ண ள ன ல வழிநத் திரியும்.

[உயிர்.சூ.8.]

[மொழிக்குக்கடையில் வரக்கூடிய இருபத்துநான்கு எழுத்துகளையும் இறுதியில் உடைய சொற்களின் பின்வரும் ஞ், ந், ம், ய், வ், இவை அல்வழியிலும் வேற்றுமையிலும் இயல்பாம்; குற்றெழுத்தின் பின்வரும் ய், ஐ, நொ, து, என்பவற்றிற்குப்பின்வரும் ஞ், ந், ம், (பிறசொற்களுக்குமுன் இயல்பாகிறதன்றி) மிகுந்தும்வரும்: ண், ள், ன், ல், இவற்றிற்குப் பின்வரும் ந், பிற ஈற்றின்முன் இயல்பாதல் அன்றி, திரியும்.]

(உ-ம்)

(1.) விள + ஞான்றது = விளஞான்றது......[இயல்பு.]

(2.) மெய் + நீண்டது = மெய்ந்நீண்டது....
நொ + ஞொள்ளா = நொஞ்ஞொள்ளா.. } [ந் ஞ் மிகுந்தன.

(3.) து + மாடா = தும்மாடா.............[ம் மிகுந்தது]

(4.) கண் + நலம் = கண்ணலம்...............[ண் முன் ந் திரிந்தது.]

53. THE COMBINATION OF THE FINALS OF EPICENE AND HIGH CASTE NOUNS WITH HARD CONSONANTS.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன் [மெய்
வன்மை மிகாசில விகாரம்ஆம் உயர்திணை.

[உயிர்.சூ.9.

[இருதிணைகளுக்கும் பொதுவான பெயர்களுக்கும், உயர்திணைப்பெயர்களுக்கும் ஈறான மெய்கள் வல்லெழுத்தை முதலில் உள்ளமொழிகள் வந்தால் இயல்பாம். உயிர், ய, ர, என்னும் இவ்விறுதிகளை உடைய இருவகைப்பெயர்களின் பின் வரும் க, ச, த, பக்கள் மிகாவாம். உயிர், ஈறும் மெய்யீறும் ஆகிய உயர்திணைப்பெயர்களில்சில நாற்கணங்களோடும் புணர்ந்தால் விகாரப்படுவனவும் உண்டு.]

(உ-ம்.)

கொற்றி, தாய் + குறிது, கை, செவி.[இயல்பு.]
அவர் + குறியர், கை......................[இயல்பு.]
நம்பி + குறியன், கை...................[இயல்பு.] } [இருவழியிலும்

கபிலன் + பரணன் = கபிலபரணர்.................
அரசன் + வள்ளல் = அரசவள்ளல்................. } [விகாரம்.]

54. THE INTERROGATIVES AND VOCATIVES COMBINE NATURALLY WITH HARD CONSONANTS.

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலிஇயல்பே.

[உயிர்.சூ.10.

[ஆ, ஏ, ஓ ஆகிய மூன்று ஈற்றுவினையின் பின்னும், யா என்னும் வினாப்பெயரின் பின்னும், விளிப்பெயர்களின் பின்னும் வரும் வல்லினம் இயல்பாம்.]

(உ-ம்) நம்பியாகொண்டான், சென்றான், போனான்; யாகுறியன, சிறியன. } [வினாவின்பின் வல்லினம் இயல்பாதல்.]

நம்பீகொள், செல், தா, போ...... } [விளியின்பின் வலியியல்பாதல்.]

55. THE COMBINATION OF HARD CONSONANTS WITH THE SECOND PERSON OF VERBS AND WITH IMPERRATIVES ENDING IN VOWELS OR IN ய், ர், ழ்.

ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.
[உயிர்.சூ.11.]

[உயிரையும், ய், ர், ழ் ஆகிய இம்மூன்றையும் இறுதியில் உடையமுன்னிலை வினையின்பின்னும் ஏவல் வினையின்பின்னும் வரும் வல்லினம் இயல்பும் விகற்பமும் ஆம்.]

(உ-ம்.)
1.) உண்டனை + கொற்றா = உண்டனைகொற்றா...
செய்தாய் + சாத்தா = செய்தாய்சாத்தா...
போனீர் + தேவரே = போனீர்தேவரே........
வாழ் + பூதா = வாழ்பூதா........ } [இயல்பு.]

(2.) நட + கொற்றா = நடகொற்றா, நடக்கொற்றா..
எய் + கொற்றா = எய்கொற்றா, எய்க்கொற்றா.... } [விகற்பம்.]

☞ ழ் முன்னிலையில் வாராது.

உயிரீற்றுச் சிறப்புப்புணர்ச்சி.

56. உயிரின்பின் உயிர்புணரும்வகை.—THE COMBINATION OF VOWELS WITH VOWELS.

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
[உயிர்.சூ.12.]

[இ, ஈ, ஐ ஆகிய இவைகளின்பின் யகரமும்; மற்ற ஏழு உயிர்களின்பின் வகரமும்; ஏயின்பின் ய, வ இரண்டும், உயிரைமுதலில் உடையமொழிவந்தால், உடம்படுமெய் என்று வரும்.]

(உ-ம்.)

(1.) மணி + அழகு = மணியழகு ... ... ⎫
நீ + இருந்தாய் = நீயிருந்தாய் ... ... ⎬ [ய்தோன்றிற்று.]
பனை + ஓலை = பனையோலை ... ... ⎭

(2.) பூ + அழகிது = பூவழகிது ... ... [வ் தோன்றிற்று.]

(3.) சே (= எருது) + ஓடிற்று = சேவோடிற்று ⎫ [வ், ய், இரண்டும்
நீயே + அறிவாய் = நீயேயறிவாய் ... ... ⎭ தோன்றிற்று.]

... ...வீரத்"
"சேவெலாம் காட்டுகின்ற." [இரா. 1.17.15.]

[ஏ (= அம்பு) + எலாம் = ஏவெலாம்.]

☞ "ஏனை உயிர்வழிவவ்வும்" என்றுசொல்லியிருந்தாலும் அருமையாய் யகரஒற்றுத் தோன்றுதலை "இடையுரிவடசொலின்" என்றதனுத்திரத்தினுற்கொள்க.

(உ-ம்.) "மாயிரு ஞாலம் உண்டோன்." [இரா. 1.6.24.

[மா + இரு = மாயிரு;]

"பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினரே.

[போ + இன் + ஆர் = போயினர்.] [இரா. 1.8.77.

57. THE COMBINATION OF THE INTERROGATIVE எ AND THE DEMONSTRATIVES WITH OTHER LETTERS.

[EXCEPTION TO 56, 52.]

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.

[உயிர்.சூ.13.

[எ என்னும் வினா இடைச்சொல்லின் பின்னும், அ, இ, உ என்னும் மூன்று சுட்டிடைச்சொல்லின் பின்னும், உயிரும்

வ்வும்வந்தால் வவ்வும்; ய அல்லாதமற்றமெய்கள் வந்தால் அம்மெய்களும்; செய்யுளில் சுட்டு நீண்டுவந்தால் ய வ்வும் மிகுதல் முறை ஆம்.]

(உ-ம்.) (1.) எ + அணி = எவ்வணி; அ + யாழ் = அவ்யாழ்.
(2.) இ + மலை = இம்மலை; உ + குடம் = உக்குடம்.
(3.) ஆ (= அ = அந்த) + இடை (= இடம்) = ஆயிடை.

"ஆயிடைப் பருவம்வந் தடைந்த எல்லையின்" [இரா.1.6.101.]

☞ "நெறி" என்றதனாற் பின்வருவனவும் அமையும் எனக் கொள்க:—

யாங்ஙனம்...... .... [யா வினாவின்பின் ங் மிகல்.]

ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம்......... [நீண்டசுட்டின்பின் ங் மிகல்]

ஈது, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு... ...... [சுட்டுப்பெயர் நீளல்.]

"செல்வுழிச்செல்க."...... [ல் பின் உடம்படுமெய் அல்லாத வ் தோன்றல்.]

---

58. FINAL உ DROPPED BEFORE VOWELS AND CHANGED INTO இ BEFORE ய. [EXCEPTION TO 56.]

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி.
[உயிர்.சூ.14.]

[குற்றியல் உ, உயிர்முதலில் உள்ளமொழிவந்தால், தனக்காதாரமாகிய மெய்யைவிட்டுக்கெடும்; யவ்வைமுதலில் உள்ளமொழிவந்தால் இ ஆகத்திரியும்; முற்றியல் உவ்வும் அவ்விரண்டுவிதியையும் சில இடங்களில் பெறும்.]

(உ-ம்.)

1.) நாகு + அருமை = நாகருமை. [குற்றியல் உ கெட்டது.]
கொக்கு + யாது = கொக்கியாது. [குற்றியல் உகரம் இ ஆனது.]

2.) அறிவு + அரிது = அறிவரிது. [முற்றியல் உ கெட்டது.]
அறிவு + யாது = அறிவியாது. [முற்றியல் உகரம் இ ஆனது.]

☞ "அழைப்பதுவே"=அழைப்பது+ஏ; இதில் குற்றியல் கெடாமல் வ் தோன்றியது காண்க.

[கெடும் என்றுமல் "ஒடும்" என்றதால் இது அமையும்.]

உயிரீற்றின் முன் வல்லினம் புணர்வ

59. க, ச, த, ப இரட்டிப்பது.—THE LETTERS க, ச, த, ப DOUBLED AFTER VOWELS.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

[உயிர். சூ. 15.]

[இயல்பினாலும் விதியினாலும் இறுதி ஆகநின்ற உயிர்களின் பின்வரும் க, ச, த, ப பெரும்பாலும்மிகும் சிறப்புவிதியிற் சொல்லாதவைகள்.]

(உ-ம்.) இந்தப்படம், வரச்சொன்னான், மரப்பலகை.

☞ சிறப்புவிதிகளில் க, ச, த, ப இயல்பாயும் விகற்பம் ஆயும்வரும் எனச்சொன்னவற்றிற்கு உதாரணம் :—

(1.) உண்ணியகொண்டான். [வினையெச்சத்தின்பின் இயல்பு.]
(2.) வந்தகுதிரை............[பெயரெச்சத்தின்பின் இயல்பு.]
(3.) வந்தனபறவைகள்......[வினைமுற்றின்பின் இயல்பு.]
(4.) தனதாள்கள்.........[ஆறன் உருபின்பின் இயல்பு.]
(5.) பலசொற்கள்..........[அஃறிணைப்பன்மையின்பின்இயல்பு
(6.) அம்ம! கொற்றா.........[அம்மவின்பின் இயல்பு.]

[உயிர். சூ. 17.]

(7.) பலபல, பற்பல; சிலசில, சிற்சில,
பல+சாலை=பல்சாலை, பலசாலை;
சில+யானை=சில்யானை, சிலயானை,
[பலப்பல, சிலச்சில என்றும்வரும்.]

[உயிர். சூ. 20]

(8) ஆ+குறிது=ஆகுறிது; மா+குறிது=மா குறிது;................ .... } [சில ஆகாற்றின்பின்
(9.) கேண்மியா+கொற்றா=கேண்மியாகொற்றா. } இயல்பு.]

(10.) உண்ணா + குதிரைகள் = உண்ணா குதிரைகள்...................... } [எதிர்மறை வினைமுற்று.]

[உயிர். சூ. 21.]

(11) யானை+குறிது=யானைகுறிது....[ஐ யின்பின் இயல்பு.]

(12.) கிளி + குறிது = { கிளிகுறிது.... / கிளிக்குறிது.. } [இ யின்பின் விகற்பம்.]

(13.) தினை + குறிது = { தினைகுறிது... / தினைக்குறிது. } [ஐ யின்பின் விகற்பம்.]

[உயிர். சூ. 26.]

(14.) பீ+குறிது=பீகுறிது......
நீ+குறியை=நீகுறியை.
மீ+கண்=மீகண்.........
} [பீ, நீ, மீ யின்பின் இயல்பு.] [மீ=மேல்.]

[உயிர். சூ. 28.]

(15.) அவனொடுபோ....[உ ஈற்று மூன்றும் உருபின்பின் இயல்பு.]
(16.) சாத்தனது தலை..[உ ஈற்று ஆறும் உருபின்பின் இயல்பு.]
(17.) ஒருகை, இருசெவி.....[எண்களின்பின் இயல்பு.]
(18.) வருபுனல், தருசோறு..[வினைத்தொகையின்பின் இயல்பு.]
(19.) அதுகுறிது... ....[அல்வழியில் சுட்டின்பின் இயல்பு.]
(20) இதுபொறுத்தான்.....[வேற்றுமையில்சுட்டின்பின்இயல்பு.]

[உயிர். சூ. 29.]

(21.) நாகுகடிது.[நெடிற்றொடர்க்குற்றியல் உ வ்வின்பின்இயல்பு.]
[வன்றொடர் அல்லாத மற்றைத்தொடர்களின் பின்னும் அல்வழியில் மிகாமைகாண்க.]

[உயிர். சூ. 30.]

(22.) நாகின்கடுமை... { ஒற்று இடையில்மிகாத நெடிற்றொடரின்பின் வேற்றுமையில் இயல்பு; இன்சாரியைபெற்றது. }

வரகுகதிர்...[சாரியைபெறாமல் உயிர்த்தொடரில் இயல்பு.]
[ஆய்தம், உயிர் இவைதொடர்ந்தகுற்றியல் உ வ்வின் பின் மிகாததுங்காண்க.]

60. SHORTENED உ IN டு AND று PRECEDED BY LONG OR SHORT VOWELS. [EXCEPTION TO 59.]

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே

[உயிர். சூ.33.]

[நெடில்தொடர், உயிர்த்தொடர் ஆகியகுற்றியல் உ க்களை யுடையமொழிகளுள் அந்த உ ஏறிநிற்கும் ட், ற் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும்.]

(உ-ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால் ... .. } [நெடில்தொடரில்
நீறு + படை = நீற்றுப்படை.. } ட் ற் இரட்டித்தன]
குருடு + கண் = குருட்டுக்கண்.. } [உயிர்த்தொடரில்
கயிறு + முடி = கயிற்றுமுடி ... } ட் ற் இரட்டித்தன.]

☞ பின்வருபவைகளும் அமையும் :—

(உ-ம்.)

(1.) "காவிரி புரக்கும் நாடுகிழ வோனே."
[வேற்றுமையில் இரட்டாமை.]

(2.) காடு + அரண் = காட்டரண்..... } [அல்வழியில் இரட்
களிறு + யானை = களிற்றுயானை. } டித்தன.

(3.) வெருகு + கண் = வெருக்குக்கண். } [இருவழியிலும் வேறு
எருது + மாடு = எருத்துமாடு..... } ஒற்று இரட்டித்தன.]

எழுத்ததிகாரம்.

IV-வது: மெய் ஈற்றுப்புணரியல்.

OF THE COMBINATION OF CONSONANT-FINALS.

மெய் ஈற்றுச்சிறப்புப்புணர்ச்சி.

61. THE COMBINATION OF VOWELS WITH CONSONANTS.
[GENERAL RULE.]

உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே.

[மெய்.சூ.1.]

[நிலைமொழி இறுதியில் நின்ற மெய்யின்மேல் வருமொழி முதலில்நின்ற உயிர்வந்துசேர்ந்து நடப்பது இயல்புப் புணர்ச்சியாம்.]

(உ-ம்.) அவன் + அழகன்=அவனழகன்.

62. CONSONANTS AFTER SINGLE SHORT LETTERS.
[EXCEPTION TO 61.]

தனிக்குறில் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும்.

[மெய்.சூ.2

[தனிக் குற்றெழுத்தின்பின்நின்ற ஒற்றுநின்று உயிர்வந்தால் இரட்டிக்கும்.]

(உ-ம்.) பொன் + அழகு=பொன்னழகு...[ன் இரட்டித்தது

63. ண், ன், ஈற்றுப்புணர்ச்சி.—ண் AND ன், NOT OCCURRING AFTER SINGLE SHORT LETTERS, DROPPED BEFORE ந.

குறில்அணை வில்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.

[மெய்.சூ.7]

[தனிக்குறில் ஒன்றுதவிர ஒருமொழி, தொடர்மொழிகளைச் சார்ந்த ண், ன் ஆனவை வருமொழிக்கு முதலில்வந்த ந, மயக்க விதிஇல்லாததினால், திரிந்த இடத்தில் கெடும்.]

(உ-ம்.)

தூண் + நன்று = தூணன்று ... .[நெடிலின் பின்.]

அரசன் + நல்லன் = அரசனல்லன் ....[பலகுறிலின் பின்.]

செம்பொன் + நன்மை = செம்பொனன்மை..... . ... [தொடர்மொழியின் பின்.]

---

64. ம் ஈற்றுப்புணர்ச்சி.—ம் FINALS UNITE WITH ALL INITIALS [GENERAL RULE.]

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும்.

[மெய்.சூ.16

[ம் ஈற்றுச்சொற்கள் இறுதியில் உள்ள மகர ஒற்று கெட உயிர் ஈறுபோல்புணர்வனவும், வல்லினம்வந்தால், கெடாமல் அவற்றிற்கு இனமாகத்திரிவனவும் ஆம்.]

பொதுவாய்ச் சொன்னதனால் வேற்றுமை, அல்வழி இரண்டிற்கும் இவ்விலக்கணம் அமையும்.

(உ-ம்.) (1.) வட்டம் + ஆழி = வட்டவாழி....
வட்டம் + கடல் = வட்டக்கடல்.
வட்டம் + நேமி = வட்டநேமி...
வட்டம் + வாரி = வட்டவாரி....
நாம் + கடியம் = நாங்கடியம்..
[அல்வழி.]

(2.) மரம் + அடி = மரவடி............. } வேற்றுமை வழி.
மரம் + கால் = மரக்கால்........
நம் + கை = நங்கை... ... .

☞ "இனமாத்திரிபவும் ஆகும்" என்றதனால்,
நாம் + பெரியம் = நாம்பெரியம் எனப் பவ்வின்முன் திரியாமை கொள்க.

---

64. ய், ர், ழ் ஈற்றுப்புணர்ச்சி.—THE COMBINATION OF ய், ர், ழ் FINALS WITH க, ச, த, ப.

யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்.
[மெய்.௫.21]

[ய், ர், ழ் ஆகிய மூன்று ஈற்றின்பின்னும் க, ச, த, ப க்கள் வந்தால் அல்வழியில் இயல்பாதலும்; மிகுதலும்; வேற்றுமையில் மிகுதலும்; வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதிஆம்.]

(உ-ம்.) (1.) வேய் + கடிது = வேய்கடிது.. } [அல்வழியில் இயல்பு.]
வேர் + சிறிது = வேர்சிறிது...
வீழ் + பெரிது = வீழ்பெரிது.

(2.) மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி. } [அல்வழியில் மிகுதல்.]
கார் + பருவம் = கார்ப்பருவம்
பூழ் + பறவை = பூழ்ப்பறவை.

(3.) நாய் + கால் = நாய்க்கால்.... } [வேற்றுமையில் மிகுதல்.]
தேர் + கால் = தேர்க்கால்......
பூழ் + கால் = பூழ்க்கால்......

(4.) வேய் + குழல் = வேய்ங்குழல், } [வேற்றுமையில் ங் க் மிகல்.]
வேய்க்குழல்................
ஆர் + கோடு = ஆர்ங்கோடு,
ஆர்க்கோடு...............

ல், ள் ஈற்றுப்புணர்ச்சி.

65. ல், ள் ஈறு ற், ட் உம் ன், ண் உம் ஆதல்.—ல் AND ள் CHANGED INTO ற் AND ட், ALSO INTO ன் AND ண்.

லள வேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரின் ஆம்மெலி
மேவின் னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப. [மெய்.சூ.24

[ல், ள் ஆகிய இரண்டு ஈறும் வல்லினம் வந்தால் வேற்றுமையில் முறையே ற் ட் ஆம்; அல்வழியில் ற் ட் ஆகாமையும் ஆதலும்ஆம்; இரண்டுவழியிலும் மெல்லினம்வந்தால் ன், ண் ஆம்; இடை இனம்வந்தால் இயல்பு ஆம் என்று சொல்லுவார் புலவர்.]

(உ-ம்.)

(1.) கல் + குறை = கற்குறை..... [வேற்றுமையில் ற் ஆனது.]
முள் + குறை = முட்குறை.... [வேற்றுமையில் ட் ஆனது.]

(2.) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது. [அல்வழியில் உறழ்வு.]

முள் + சிறிது = முள் சிறிது, முட்சிறிது. [அல்வழியில் உறழ்வு.]

(3.) கல் + முனை = கன்முனை..., [வேற்றுமையில் ம் வர ன் ஆனது.]
முள் + முனை = முண்முனை. [வேற்றுமையில் ம் வர ண் ஆனது.]

(4.) கல் + மலிந்தது = கன்மலிந்தது.. [அல்வழியில் ம் வர ன் ஆனது.]

முள் + முறிந்தது = முண்மு[illegible] [அல்வழியில் ம் வர ண் ஆனது.]

(5.) கல் + யாது = கல்யாது...... [அல்வழியில் ய வர இயல்பு.]
கல் + யாப்பு = கல்யாப்பு...... [வேற்றுமையில் ய வர இயல்பு.]

66. த், ந் முன்னும் வல்லினத்தின்முன்னும் வரும் ல், ள்.

ல் AND ள் BEFORE த், ந் AND HARD CONSONANTS.

குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உளபிற.

[மெய் சூ.26.]

[தனிக்குறில் அல்லாதமற்றை எழுத்துகளைச் சார்ந்துவரும் ல், ள் ஆனவை அல்வழியில்வந்த த் திரிந்தஇடத்தில் கெடுதலும், இருவழியிலும் வந்த ந் திரியும் இடத்தில் கெடுதலும், வல்லினம்வந்தால் அல்வழியில் உறழாமல் இயல்பாதலும், திரிதலும் வேற்றுமையில் திரியாமல் இயல்பாதலும் உண்டு.]

(உ-ம்.)

(1.) ஆல் + தீது = ஆறீது..........[அல்வழியில் ல் கெட்டது.]
வாள் + தீது = வாடீது ....[அல்வழியில் ள் கெட்டது.]

(2.) ஆல் + நன்று = ஆனன்று.. .[அல்வழியில் ல் கெட்டது.]
வாள் + நன்று = வாணன்று.[அல்வழியில் ள் கெட்டது.]

(3.) ஆல் + நன்மை = ஆனன்மை.[வேற்றுமையில் ல் கெட்டது.]
வாள் + நன்மை = வாணன்மை[வேற்றுமையில் ள் கெட்டது.]

(4.) கால் + கடிது = கால்கடிது..[ல் இன்பின் க வர இயல்பு.].
தேள் + சிறிது = தேள்சிறிது.[ள் இன்பின் ச வர இயல்பு.]

(5.) வேல் + படை = வேற்படை.
வாள் + படை = வாட்படை. } அல்வழியில் திரிபு.

(6.) கால்குதித்தோடியது..... ..
வாள்போழ்ந்திட்டமறவர்.. } வேற்றுமையில் இயல்பு.

67. த் AND ந் AFTER ன, ல AND ண, ள CHANGED INTO [ற், ன்] AND ட், ண் [RESPEC]TIVELY.

னல முன் றனவும் ள[illegible] [முன் ட]ணவும்
ஆகும் தநக்கள் ஆயும் காலே. [மெய்.சூ.34]

[ன், ல் ஆகிய இவற்றின் பின்வரும் த் ஆனது ற் ஆம்; அவற்றின் பின்வரும் ந் ஆனது ன் ஆம்; ண், ள் ஆகிய இவற்றின் பின்வரும் த் ஆனது ட் ஆம்; அவற்றின் பின்வரும் ந் ஆனது ண் ஆம், ஆராயுங்காலத்தில்.]

(உ-ம்.) பொன் + தீது, நன்று = பொற்றீது, பொன்னன்று. [த், ந்.]
கல் + தீது, நன்று = கற்றீது, கன்னன்று. [த், ந்.]
மண் + தீது, நன்று = மண்டீது, மண்ணன்று. [த், ந்.]
முள் + தீது, நன்று = முட்டீது, முண்ணன்று. [த், ந்.]

[வேற்றுமையில் வருவதற்கு உதாரணம் ஆராய்ந்துகொள்க.]

68. ஒருபுறனடை.—A REMARK.

இடை உரி வட சொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉம் பொருந்திய ஆற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.

[மெய். சூ. 36.]

[இடை, உரி, வட சொல் ஆகிய இவற்றுள் உயிர் ஈற்றுப் புணரியலிலும், மெய் ஈற்றுப்புணரியலிலும் தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு என்றுசொல்லியபுணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டுவருவனவும், இலக்கணப்போலிமொழிகளும், மரூஉமொழிகளும், இருவகை வழக்கிலும் நடக்கின்ற முறைமைக்கு இணங்கும்படி புணர்த்தல் அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமை.]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

எழுத்ததிகாரம்.

V-வது: உருபு புணரியல்.
COMBINATION OF CASUAL TERMINATIONS.

உருபுகள்.

69. உருபுகள் இடவகையால் இத்தனை என்பது.—NUMBER OF CASUAL TERMINATIONS.

ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலஎன
வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்
குருபும் உறழ்தர நாற்பதாம் உருபே.

[உருபு.சூ.1.]

[ஒருவன்முதலிய ஐந்துபெயருடனே எழுவாய் முதலிய எட்டுவேற்றுமை உருபையும்பெருக்கவரும் வேற்றுமை உருபுகள் நாற்பதாம்]

70. POSITION AND USE OF THESE TERMINATIONS.

பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே.

[உருபு.சூ.2.]

[வேற்றுமை உருபுகள் தம்பொருளைத் தரப்பெயர்க்குப் பின்வரும்.]

(உ-ம்.) மணி அடித்தான்...............[மணியை]

71. சாரியைவருதலும், வாராமையும் விகற்பமும்.—EUPHONIC INCREMENTS MAY OR MAY NOT OCCUR.

பதம்முன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.

[உருபு.௪.4.]

[பதத்தின்பின் விகுதிஆவது, பதம்ஆவது, உருபுஆவது புணரும்போது சாரியை ஒன்றுஆயினும் பலஆயினும் வருதலும் வாராமையும் இவ்விரண்டும் ஆகிய விகற்பமும் ஆகும்.]

(உ-ம்)

(1.) சென்றனன்………[சாரியைவந்தது.]		[விகுதிப் புணர்ச்சியில்.]
சென்றான்,………[சாரியைவரவில்லை.]		
சென்றன, சென்ற… [விகற்பம்.]		
(2.) புளியங்காய்………[சாரியைவந்தது.]		[பதப்புணர்ச்சியில்.]
புளிக்கறி………[சாரியைவரவில்லை.]		
நெல்லின்குப்பை,… நெற்குப்பை………	[விகற்பம்.]	
(3.) அவற்றை………[சாரியைவந்தது.]		[உருபுப் புணர்ச்சியில்.]
தன்னை………[சாரியைவரவில்லை.]		
ஆனை, ஆவை………[விகற்பம்.]		
(4.) ஆவினுக்கு………[பலசாரியைவந்தன.]		

சாரியை.

72. THE SEVENTEEN GENERAL INCREMENTS.

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்.
தம் நம் நும்ஏ அஉ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

[உருபு.௫.5.]

[மேற்கூறிய பதினேழும் இவைபோல்வனபிறவும் விகுதி, பதம், உருபு என்னும் மூன்று புணர்ச்சியிலும், தனிமொழிகளிலும் வருகிறதனால் பொதுச்சாரியை ஆகும்.]

பெயர்கள் வேற்றுமை யுருப்புணரும்போது வரும்விதம்.

73. "எல்லாம்" என்னும்மொழி வேற்றுமை உருபுபுணரும்போது வரும்விதம்.—THE WORD எல்லாம் HOW DECLINED.

எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றோ டுருபின் மேலும் உம்மே
அன்றேல் நம்இடை அடைந்தற் றாகும்.

[உருபு சூ 6

["எல்லாம்" என்னும் பொதுப்பெயர் அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுஉருபும் புணர்ந்தால் இடையில் அற்றுச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும்பெறும்; உயர்திணையில் வரும்போது இடையில் நம்முச்சாரியையும் உருபின் மேல் முற்றும்மையும்பெறும்.]

(உ-ம்.) எல்லாவற்றையும், எல்லாவற்றினும்
எல்லாநம்மையும், எல்லாநம்மாலும்.

74. THE DECLENSION OF தான், தாம், நாம், யான், யாம் நீ AND நீர்.

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும் நான்கா றிரட்டல.

[உருபு.சூ.8.

[தான் தாம், நாம் ஆகிய மூன்றுபெயரும், வேற்றுமை உருபு பெறும்போது தன், தம், நம், என நெடில் முதல் குறுகும்; யான், யாம், நீ, நீர் ஆகிய நான்குபெயர்களும் வேற்றுமை உருபுபெறும்போது "என்," எம், நின், நும் என வரும்; இவ்வேழுபெயரோடும் கு உருபு புணர்ந்தால் நடுவே

அகரச்சாரியைவரும்; கு உருபின் அகரச்சாரியைவந்தாலும் ஆறும்வேற்றுமை உருபுகள் வந்தாலும் இவ்வேழுசொற்களி லும் இறுதியாகிய தனிக்குறில்முன் ஒற்றுகள் இரட்டாவாம்.]

☞ "பிற" என்றதனால் பின்வருவதையுங் கொள்க.—

நீ [1-ம் வேற்.], உன்னை [2-ம் வேற்.]

நீர் [1-ம் வேற்.], உம்மை [2-ம் வேற்.]

---

75. வ் ஈற்றுச்சுட்டு வேற்றுமை உருபுபுணரும்போது வரும் விதம்.—THE DECLENSION OF வ ENDING DEMONSTRATIVES.

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

[உருபு.சூ.11.]

[வ் ஈற்று மூன்றுசுட்டுப்பெயருக்கும் வேற்றுமை உருபுகள் புணரும் இடத்தில் அற்றுச்சாரியை பொருந்துதல் முறைமை ஆம்.]

(உ-ம்.) அவற்றை, இவற்றை, உவற்றை.

☞ "வழியே" என்றதனால் "அவற்றினை" இவற்றினை என "இன்" சாரியை பெறுதலும், தனிக்குறில்முன் ஒற்றுயிர் வந்த இடத்தில் இரட்டியாமையும் அமையும் எனக்கொள்க.

---

76. சாரியைகாணும்வகை.—HOW THE INCREMENT IS TO BE DISCOVERED.

இதற்கிது சாரியை எனின் அளவின்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்திடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.

[உருபு.சூ.14.]

[விகுதிமுதலிய புணர்ச்சிகளில் இதற்குஇதுசாரியை என்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும், ஒழிந்தனவற்றுள்ளும், தனித்தனிச்சொல்லத்தொடங்கினால்அளவுபடாதாதலால்விகு

னிமுதலிய புணர்ச்சிகள்வரும் இடத்தில் அப்புணர்ச்சிகளைப் பகுத்து ஏ, அ முதலிய எழுத்துச்சாரியைகளையும், அன், ஆன் முதலிய பதச்சாரியைகளையும், இவ்விரண்டுசாரியையும் இல்லாமல்நிற்கிற இயல்பையும்தெரிய அறிவித்தல்பெரியோருடைய நெறியாம்.]

புறனடை.

77. இரண்டாம் வேற்றுமையைக்குறித்து.—PECULIARITIES OF THE SECOND CASE.

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐ உருபே. [உருபு.சூ.16.]

[பொதுவிதியோடு முடிதலே அன்றி அப்படிவிதித்த இயல்பிலே விகாரமாயும், விகாரத்திலே இயல்பாயும், உயர்திணையில் விரிந்தும் மறைந்தும் பொதுப்பெயரில் விரிந்தும் மறைந்தும் இவைபோல்வன பிறவேறுபாடுகளும் வரும் இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி.]

(உ-ம்.)

(1.) "நிற்புறங் காக்க"..........[இயல்பில் விகாரம்.]

(2.) மண்கொணர்ந்தான்...........[விகாரத்தில் இயல்பு.]

(3.) நம்பியைக்கொணர்ந்தான், கொற்றனைக்கொணர்ந்தான். [உயர்திணை, விரவுப்பெயர்களில் விரிந்தன.]

(4.) பல்லோர் அறியுஞ்சொல், ஆண்பெற்றாள்................[உயர்திணை, விரவுப்பெயர்களில்மறைந்தன.]

☞ பிறவும் என்றதனால் பின்வருவனவும் அமையும்.

(5.) வாருகட்டினான்..................[இயல்பில் இயல்பு.]

(6.) பலாக்குறைத்தான்............[விகாரத்தில் விகாரம்.]

(7.) தற்கொண்டான்... ....[உறழ்ச்சியில் திரிந்துவந்தது.]

78. A CONCLUDING REMARK.

இதிற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

[இதற்கிது முடிபுஎன்று இவ்வதிகாரத்தில் விதிக்கத்தக்கவைகளை எல்லாம் தனித்தனி வரையறுத்துச் சொல்லத்தொடங்கினால் அதற்கு அளவிராது; ஆதலால், வகுத்துச்சொல்லியவைகளின் இலக்கணங்களைக்கொண்டு வகுத்து விதிசொல்லாதனவற்றையும் கருத்தினால் வகுத்துக்கொள்க.]

. . . . .)திகாரம்.—ETYMOLOGY.

I-வது: பெயரியல்.—OF NOUNS.

மொழி.

79. சொல் இன்னதென்பது.—சொல் DEFINED.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்று
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.
[பெயர்.சூ.2.]

[ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூன்று பிரிவை உடையதாகி, இருதிணை ஆகிய ஐம்பாற்பொருளையும் அப்பொருளை அன்றித்தன்னையும், மூன்றிடத்திலும் வழக்கிலும் செய்யுளிலும், வெளிப்படையாலும் குறிப்பினாலும் விளக்குவது சொல்லாகும்.]

80. சொல் இத்தனைவகை என்பது.—KINDS OF சொல்.

ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.
[பெயர்.சூ.3.]

[ஒருமொழிகளாவன ஒருபொருளைத்தருவனவாம். தொடர்மொழிகளாவன பலபொருளைத்தருவன. பொதுமொழிகளாவன ஒருமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் நிற்பன.]

(உ-ம்.)

(1.) நிலம், நட, உறு, மன். ....[ஒருமொழிகள்.]

(2.) நிலம்வலிது, அதுசெய், சாலப்பெரியன்.[தொடர்மொழிகள்.]

(3.) எட்டு, தாமரை, வேங்கை.. .. ..[பொதுமொழிகள்.]

☞ எட்டு=எள்+து=எள் உண்; எட்டு=8.
தாமரை=தாவும்மரை ; தாமரை=தாமரை என்னும்செடி.
வேங்கை=வேகும்கை ; வேங்கை=ஓர்புலி அல்லது ஓர்மரம்.

---

81. உயர்திணை, அஃறிணைப்பெயர்.—HIGH CASTE AND NO CASTE NOUNS.

மக்கள் தேவர் நரகர் உயர்தி
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.

[பெயர்.சூ.4.]

[மக்கள், தேவர், நரகர்ஆகிய இவர்களைக்குறிக்கும் பெயர் உயர்திணைபெயர் ஆம்; இவர்கள்தவிரமற்றும் உயிருள்ளவைகளையும் இல்லாதவைகளையும் குறிக்கும்பெயர்அஃறிணைப் பெயராம்.]

82. உயர்திணையின்வகை.—DIVISIONS OF HIGH CASTE NOUNS.

ஆண் பெண் பலர் என மூப்பாற் றுயர்திணை.

[பெயர்.சூ.5.]

[உயர்திணைஆனது ஆண், பெண், பலர் என மூன்றுபாலையும் உடையது.]

(உ-ம்.) உயர்திணை. { ஆண்பால்......மகன், அரசன்.
பெண்பால்.....மகள், அரசி.
பலர்பால்.......அரசர், புத்திரர்.

83. அஃறிணையின்வகை.—DIVISIONS OF NO CASTE NOUNS.

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை
[பெயர்.சூ.6.]

[அஃறிணை ஆனது ஒன்று,பல எனஇரண்டுபாலை உடையது.]

(உ-ம்.) அஃறிணை. { ஒன்றன்பால்......அது.
பலவின்பால்......அவை, மரங்கள்.

இடம்.

84. மூவிடம்.—THE THREE PERSONS.

தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.
[பெயர்.சூ.9.]

[மூவிடம் ஆவன :—தன்மை, முன்னிலை, படர்க்கை.]

(உ-ம்.) நான், நடந்தேன் .... [தன்மை.]
நீ, நடந்தாய் .... [முன்னிலை.]
அவன், நடந்தான் .... [படர்க்கை.]

சொல்.

85. வழக்கு இவை என்பது.—DIVISIONS OF TAMIL USAGES.

இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலங் குழூஉக்(
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.
[பெயர்.சூ.10.]

[இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்று வழங்குகிற மூன்றுவகை இயல்புவழக்கும்; இடக்கரடக்கல் மங்கலம், குழூஉக்குறி என்று வழங்குகின்ற மூன்றுதகுதிவழக்குடனே வழக்கிலக்கணம் ஆறும்.]

[I. இயல்புவழக்கு.]

உ-ம்.)

(1.) நிலம், நீர், தீ............ {[இலக்கணமுடையது ; அ-து : இலக்கண வழியால்வந்தது.]

(2.) முன்றில்[=இல்முன்].. புறநகர்[=நகர்ப்புறம்] மீகண் [=கண்மீ]........ } [இலக்கணப்போலி. அ-து : இலக்கணம் இல்லை ஆனாலும் இலக்கணமுடையதுபோல் வருவது.]

(3.) அருமந்தபிள்ளை = அருமருந்தன்னபிள்ளை சோணாடு[=சோழநாடு] } [மரூஉ ; அ-து : இலக்கணஞ்சிதைந்து மருவியது.]

[II. தகுதி வழக்கு.]

(1.) கால்கழீஇவருதும்...... {[இடக்கர் அடக்கல் ; அ-து. சொல்லத்தகாததை மறைத்துச்சொல்வது.]

(2.) துஞ்சினார்[=செத்தார்] திருமுகம்[=ஓலை]... ... வெள்ளாடு[=காராடு].. } [மங்கலம் ; அ-து : மங்கலம் இல்லாததைத்தவிர்த்து மங்கலமாகச் சொல்வது.]

(3.) பறி[=பொன்]......... காரை[=ஆடை]....... சொல்விளம்பி[=கள்].. {[குழூஉக்குறி ; அ-து: ஒருகூட்டத்தார் ஏதாயினும் ஒருகாரணம் பற்றி ஒருபொருளின் பெயரை விட்டு வேறொருசொல்லாற் சொல்வது.]

---

87. வெளிப்படை, குறிப்பு.—DIRECT AND INDIRECT EXPRESSIONS.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை.

[பெயர்.சூ.12.]

[இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றை ஒழிக்கும் பொதுச் சொல், வலித்தல்முதலிய ஒன்பது விகாரச்சொல், மூன்று தகுதிவழக்குச்சொல், ஆகுபெயர்ச்சொல், அன்மொழித்தொகைச்சொல், வினைக்குறிப்புச்சொல், முதற்குறிப்புச்சொல், தொகைக்குறிப்புச்சொல், இந்தமுதல்தொகையல்லாத வேறு வழியால்வரும்குறிப்புச்சொல் ஆகியஇவைகளும் இவைபோன்றவேறுசொற்களும் குறிப்பினால்இருதிணை ஐம்பாற்பொருளைத்தரும் சொற்கள்ஆம்; இவைஅல்லாத மற்றைச்சொற்கள் எல்லாம் வெளிப்படையால் அப்பொருளைத்தரும் சொற்கள்ஆம்.]

(உ-ம்.)

(1.) ஆயிரமக்கள் பொருதார் [உயர்திணை ஆண்பால்.]
[மக்கள், பொதுப்பெயர்; பொருதார், விகுதியால் பொதுவினை.]
(2.) பிறைக்கடை பிறக்கிட......[பிறங்கிட, விகாரம்.]
(3.) பறி .... [பொன், தகுதிவழக்கு.]
(4.) புளித்தின்றான்..........[புளியம்பழம், ஆகுபெயர்.]
(5.) முற்றிழாய்! ....[பெண்ணே! அன்மொழித்தொகை.]
(6.) இவனிப்போதுசெல்வன்... [வினைக்குறிப்பு.]
(7.) ஆத்திசூடி படித்தான் ......[முதற்குறிப்பு.]
(8.) கன்னனோடு ஐவர்வந்தார்.[பாண்டவர், தொகைக்குறிப்பு.]

---

83. சொல் இத்தனை என்பது.—CLASSES OF WORDS.

அதுவே,

இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
எனஇரண் டாகும் இடைஉரி அடுத்து
நான்கும்ஆம் திசைவட சொல்லணு காவழி.
[பெயர்.சூ.13]

[முன்காட்டியசொல் இயற்சொல், திரிசொல், என்னும் தன்மையை உடைய பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் என இரண்டாம்; இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அவற்றுடன் சேர்ந்து நான்கும் ஆம்; (இப்படி நான்காய்வருவது) திசைச்சொல்லும் வடசொல்லும் அவற்றுடன் சேராதவிடத்து.]

89. இயற்சொல் இதுஎன்பது.—ORDINARY TAMIL WORDS.

செந்தமிழ் ஆகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்.
[பெயர்.சூ.14.]

[செந்தமிழ் நிலத்துமொழிஆகி, திரிசொல்லைப்போல் ஆகாமல் கற்றோருக்கும் மற்றோருக்கும் தம்பொருளை ஒருசரியாய் விளக்குகின்றதன்மையைஉடையஉலகவழக்கே இயற்சொல்.]

(உ-ம்) மண், பொன், மரம்......[பெயர் இயற்சொல்.]
நடந்தான், இருப்பான்..[வினை இயற்சொல்.]
அவனை, அவனால்.........[ஐ, ஆல் இடை இயற்சொல்.]
அழகு, அன்பு.... ....[உரி இயற்சொல்.]

———

90. திரிசொல் இது என்பது.—SYNONYMS AND WORDS OF SEVERAL SIGNIFICATIONS.

ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்.
[பெயர்.சூ.15.]

[ஒருபொருளைக்கருதிய பலசொல் ஆகியும், பலபொருளைக்கருதிய ஒருசொல் ஆகியும், அரிதாகக்கற்றோர் அறிகின்றபொருளை உடையனவாய்வருவன திரிசொல்லாம்.]

(உ-ம்.) (1.) பெயர்.
கிள்ளை, சுகம், தத்தை.
[கிளி என்னும் ஒரு பொருள்குறித்த பலபெயர்த்திரிசொல்.]
வாரணம் [=யானை, சங்கு, கோழி.]
[பல பொருள்குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.]

(2.) வினை.
படர்ந்தான், சென்றான் [=போனான்.]
[ஒரு பொருள்குறித்த பலவினைத்திரிசொல்.]

இறுத்தான் [=சொன்னான், வடித்தான்.]
[பலபொருள்குறித்த ஒரு வினைத்திரிசொல்.]

(3.) இடை.

சேறும், வருதும் [றும், தும்; தன்மைப்பன்மைவிகுதிகள்.]
[ஒருபொருள்குறித்த பலஇடைத்திரிசொல்.]

கொல்.

[இது ஐயப்பொருளில் ஆவது அசைநிலையாக ஆவதுவரும் ஆதலால், பலபொருள் குறித்தவொரிடைத்திரிசொல்.]

(4.) உரி.

சால, உறு, தவ, நனி, கூர், கழி [=மிகல்.]
[ஒருபொருள் குறித்த பலஉரித்திரிசொல்.]

கடி [=மணம், காப்பு, கூர்மை, இன்பம், அச்சம்.]
[பலபொருள்குறித்த ஒருரித்திரிசொல்.]

91. திசைச்சொல் இது என்பது.—WORDS PECULIAR TO CERTAIN DISTRICTS.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப.

[பெயர்.சூ 16.]

[செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்திலும், பதினெட்டுமொழிகளுள் தமிழ்ஒழிந்தமற்றைப் பாஷைகள் வழங்குமிடங்களிலும் உள்ளோரது குறிப்பை உடையனவாய் அவ்விடங்களில் இருந்து செந்தமிழ்நிலத்தில் வந்துவழங்குவன திசைச்சொல் என்றுசொல்வார் புலவர்.]

உ-ம்.) தென்பாண்டியில்......[பசு=பெற்றம்.]
குட்டநாட்டில்.........[தாய்=தள்ளை.]
குடநாட்டில்............[தந்தை=அச்சன்.]

92. வடசொல் இது என்பது.—SANSCRIT WORDS.

பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்.

[பெயர்.சூ.17.]

[ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவாகிய எழுத்தாலும் ஆரியத்துக்குமாத்திரமே உரியசிறப்பெழுத்தாலும் இவ்விரு வகை யெழுத்தாலும் செந்தமிழ்ச்சொல்லைப்போல் வடதிசை யில்இருந்து செந்தமிழ்நாட்டில்வந்து வழங்குவனவடசொல்.]

(உ-ம்). அமலம், கமலம்.........[பொதுஎழுத்தால்.]
சுகி, சுத்தி.. ....[சிறப்பெழுத்தால்.]
கடினம், சலம்... ....[ஈரெழுத்தால்.]

பெயர்.

93. பெயர்ச்சொல்.—NOUN.

இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம்தோற்றா
வேற்றுமைக் கிடன்ஆய்த் திணைபால் இடத்தொன்
றேற்பவும் பொதுவும் ஆவனபெயரே.

[பெயர்.சூ.18.]

[இடுகுறியும், காரணக்குறியும், மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து, வினையால் அணையுங்காரணக்குறி அல்லாதவை காலத்தைக்காட்டாமல், எட்டு வேற்றுமையும் சார்ந்துவரு தற்கு இடமாய், இருதிணை ஐம்பால் மூவிடம் ஆகியவற்றுள் ஒன்றை ஆவது, பலவற்றை ஆவது ஏற்பனவாய்வருவன பெய ர்கள் ஆம்.]

(உ-ம்.)

(1.) மரம், பனை, பலா... ... ...[இடுகுறிமரபு.]
(2.) அவன், பறவை, விலங்கு...[காரணக்குறிமரபு.]

(3.) "பொன்போலும் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே; மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேல் முட்டைக்குங் காடு."

[குமரன்பெயர்=முட்டை; இடுகுறி ஆக்கம்.]

(4.) பொன்னன், பூணன்... .....[காரணக்குறி ஆக்கம்.]
மற்றவைகளுக்கு உதாரணம் 2-ம். பக்கத்திற்காண்க.

☞ ஆண், பெண், பலர், ஒன்று, பலஎன்னும்பாற் பெயர் வரும்விதம் :—

(1.) பொருள்முதலிய ஆறுடன் சுட்டு, வினா, பிற, மற்று இவைகளின் அடியாகப்பிறந்து அன், ஆன், விகுதிகளைக்கொண்டு முடியுஞ் சொற்களும்; நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல் முதலிய பெயர்களும் ஆண்பாற் பெயராம்.

(உ-ம்.) தமன், ஊரன், தையான், செங்கணன், கரியன் ஈவான், அவன், எவன், பிறன், மற்றையான்.

(2.) மேற்கூறியவைகள் அடியாகப்பிறந்து ள் இ என்னும் விகுதிகளைப்பெற்று வருவனவும்; தோழி, செவிலி, மகடூஉ, நங்கை முதலானபெயர்களும் பெண்பாற் பெயராம்.

(உ-ம்.) தமள், சருவூரி, ஆதிரையாள், தடங்கண்ணி, பெரியள், ஈவாள், எவள், அவள்.

(3.) அவ்வாறேபிறந்த ர் ஈற்றுப்பெயர்களும், கள் என்னும் விகுதி ஏற்றுவருவனவும் பலர்பாற் பெயர்களாம்.

(உ-ம்.) தமர், கோக்கள், அரசர்கள், எவர், அவர்.

(4.) மேற்காட்டியபடியே பிறந்த து விகுதியை உடைய பெயரும், "ஒன்று" என்னும்பெயரும் ஒன்றன்பாற் பெயராம்.

(உ-ம்.) கரியது, ஒன்று, எது, இது, அஃது.

(5.) முன்சொன்னவழியேபிறந்து, அ, கள் விகுதிகளைப் பெற்று. "ஒன்று" அல்லாத பலபொருளைக்குறிப்பனவும், வ் ஈற்றுச்சுட்டும் உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில முதலியபெயர்களும் பலவின்பாற் பெயராம்.

(உ-ம்.) நெடியவை, குதிரைகள், இரண்டு, எவை, இவை, அவ்.

[பெயர்.சூ.19—23.]

---

94. பால்பகா அஃறிணைப்பெயர்.—NO CASTE NOUNS BOTH SINGULAR AND PLURAL.

பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற்பொதுவுடைய.

[பெயர்.சூ.24.]

[அஃறிணைப்பெயர்களுள் ஒருமை, பன்மை பகுக்கப்படாதபெயர்கள் எல்லாம் அத்திணையின் இருபாலுக்கும்பொதுவானபெயர்கள் ஆம்.]

(உ-ம்.) (1.) குதிரைவந்தது .... [ஒருமை.]
(2.) குதிரைவந்தன .... [பன்மை.]

---

95. தன்மை, முன்னிலை, படர்க்கைப்பெயர்கள். THE PERSONS OF பெயர்.

தன்மை யான் நான் யாம் நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல்பொது.

[பெயர் சூ.28]

[யான், நான், யாம், நாம் இவைதன்மைப்பெயர்கள், எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ இவைமுன்னிலைப்பெயர்கள், இவ்வொன்பதும் அல்லாதபெயர்கள் படர்க்கைப்பெயர்கள் ஆம்; அவற்றுள் "எல்லாம்" என்பது மூவிடத்திற்கும்பொதுவாம்.]

96. தான் முதலியவை ஒருமை; தாம் முதலியவை பன்மை.
தான், யான் &c. SINGULAR; தாம், யாம் &c. PLURAL.

தான் யான் நான் நீ ஒருமை பன்மைதாம்
யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்.

[பெயர்.சூ.30.]

[தான், யான், நான், நீ என்கிறஇவை இருதிணை ஒருமையில்வரும் பெயர்களாம். தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் என்பவை இருதிணைப் பன்மையில்வரும் பெயர்களாம்.]

97. எண்ணால்வரும் உயர்திணைப்பெயர் [புறனடை.]
HIGH CASTE NOUNS FROM NUMBERS.

ஒருவன் ஒருத்தி பெயர்மேல் எண்ணில.

[பெயர்.சூ.31.]

["ஒன்று" என்னும் எண்ணால் "ஒருவன்," "ஒருத்தி" என வருமே அல்லாமல் இவற்றின்மேல் இரண்டுமுதலாகிய எண்களால்இவ்வகை ஆண்பாற்பெயரும்பெண்பாற்பெயரும்வரா.]

98. "ஒருவர்" என்னும் பெயர்.—THE NOUN ஒருவர்.

ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

[பெயர்.சூ.32.]

["ஒருவர்" என்னுஞ்சொல் உயர்திணை ஆண்பெண் ஆகிய இரண்டுபாலுக்கும் பொதுவாய் அத்திணையிலே பன்மைவினைமுற்றைக்கொண்டுமுடியும் தன்மையை உடையது என்று புலவர்சொல்வார்.]

(உ-ம்) ஆடவருள் ஒருவர் அறத்தின் வழிநிற்பார்.
பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழிநிற்பார்.

99. ஆகுபெயர் வரும்விதம்.—METONYMY.

பொருள்முதல் ஆறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

[பெயர் சூ.33.]

[பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறுடனே நால்வகை அளவை, சொல், தானி, காரணம், காரியம், கருத்தா முதலாய்வரும் பொருள்களுள் ஒருபொருளின் இயற்பெயரால் அப்பொருளுக்கு இசைந்தவேறு ஒருபொருளை முற்காலந்தொடுத்து வழங்கிவருகிற முறைப்படியே சொல்லப்பட்டுவருவன ஆகுபெயர் ஆம்.]

(உ-ம்.)

(1.) குவளை போலுங் கண்,....["குவளை" பொருள் ஆகுபெயர்.]
[முதற்பொருளின் பெயர்சினைப்பொருளுக்கு ஆனது.]

(2.) "ஊர்கேட்ப"..................["ஊர்" இட ஆகுபெயர்.]
[இடப்பெயர் மனிதருக்கு ஆனது.]

(3.) கார் அறுத்தது............["கார்" கால ஆகுபெயர்.]
[மாரிகாலத்துப்பெயர் அக்காலத்துப்பயிருக்கு ஆனது.]

(4.) வெற்றிலை நட்டான்........["இலை" சினை ஆகுபெயர்.]
[அவயவத்தின் பெயர் கொடிக்கானது.]

(5.) "தூண்முட்டும் ஆம்கீழ்."...["கீழ்" குண ஆகுபெயர்.]
[குணத்தின்பெயர் மனிதனுக்கு ஆனது.]

(6.) வற்றல் உண்டான்..........["வற்றல்" தொழில் ஆகுபெயர்.]
[தொழிலின்பெயர் உணவிற்கு ஆனது.]

(7.) காலாலே நடந்தான்.["கால்" எண்ணல் அளவை ஆகுபெயர்.]
[எண்ணல் அளவைப்பெயர் உறுப்பிற்கு ஆனது.]
துலாக்கோல்.....["துலா" எடுத்தல் அளவை ஆகுபெயர்.]
நாழி உடைந்தது.["நாழி" முகத்தல் அளவை ஆகுபெயர்.]
இப்புலம் பத்துப்பாய்ப்பு["பாய்ப்பு" நீட்டல்அளவை ஆகுபெயர்.]

(8.) இதற்குரை சொல்............["உரை" சொல் ஆகுபெயர்.]
[சொல்லின்பெயர் பொருளுக்கு ஆனது.]

(9.) விளக்கு முறிந்தது............["விளக்கு" தானி ஆகுபெயர்.
[தீபத்தின்பெயர் தண்டிலுக்கு ஆனது.]

(10) திருவாசகம்......................[காரண ஆகுபெயர்.]
[முதற்காரணத்தின்பெயர் செய்யுளுக்கு ஆனது.]

(11.) இந்நூல் அலங்காரம்..["அலங்காரம்" காரிய ஆகுபெயர்.
[காரியத்தின்பெயர் காரணத்திற்கு ஆனது.]

(12.) இந்நூல்திருவள்ளுவர்["திருவள்ளுவர்" கருத்தா ஆகுபெயர்.
[கருத்தாவின் பெயர்நூலுக்கு ஆனது.]

(13.) வெற்றிலை நட்டான்..........[அடைஅடுத்த ஆகுபெயர்.]
[இலை ஆகிய சினைப்பெயர் வெறுமைஎன்கிறஅடை அடுத்து இலையை உடையபொருள் ஆகியகொடிக்கு ஆனது.]

☞ (1.) "ஆதி" என்றதனால் இன்னும் சில அமையும்:—
(உ-ம்.) காளைவந்தான், பாவைவந்தாள்.[உவமை ஆகுபெயர்.]
(2) கார் அறுத்தது என்பதில்,
கார்=கருநிறம், (மேலும்,) கார்=கார்மேகம்.
[இருமடி ஆகுபெயர்.]
(மேலும்,) கார்=ஓர்தானியம்.
[மும்மடி ஆகுபெயர்.]

(3.) மனுஷிருக்கிட்டு வழங்கிவரும் தேவர் முதலியவர்பெயரும் ஒருவகை ஆகுபெயராம் எனக்கொள்க.

வேற்றுமை.

100. வேற்றுமை இன்னதென்பதும் இத்தனை என்பதும்.—
CASE DEFINED: THE NUMBER OF CASES.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீறு ருய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.
[பெயர்.௬.31.]

[ஏற்ற எவ்வகையானபெயர்க்கும் இறுதியாய் அப்பெயர்ப் பொருளைவேறுபடுத்துவன ஆகியவேற்றுமைகள் எட்டாம்.]

101. வேற்றுமையின்பெயரும் முறையும்.—THE NAME AND ORDER OF THE CASES.

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளி என் றாகும் அவற்றின் பெயர்முறை.

[பெயர்.சூ.35.]

[அவ்வேற்றுமைகளுடைய பெயர்களும்முறையும் ஆவன பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளிஎன்பனவாம்.]

102. எழுவாய் மற்றஉருபுகளை ஏற்கும்.—THE SIX CASUAL TERMINATIONS ARE ADDED TO THE NOMINATIVE.

ஆறன் உருபும் ஏற்கும்அவ் உருபே.

[பெயர்.சூ.36.]

[எழுவாய்உருபு ஐ முதலிய ஆறுவேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.]

103. ஐ முதலியஉருபு ஏலாதவை.—WORDS WHICH DO NOT ADMIT OF THESE TERMINATIONS.

நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா.

[பெயர்.சூ.37.]

[நீயிர், நீவிர், நான் என்னும்மூன்றுபெயரும் எழுவாய்வேற்றுமையல்லாத பிறவேற்றுமைகளை ஏலா.]

104. எழுவாய்வேற்றுமை : பயனிலை.—THE NOMINATIVE : ITS PREDICATE.

அவற்றுள்,—எழுவாய் உருவு திரியில் பெயரே
வினை பெயர் வினக்கொளல் அதன்பய னிலையே.

[பெயர்.சூ.38.]

[வேற்றுமைகளுள் முதல்வேற்றுமையின் உருபு ஐ முதலிய உருபுபெற்றுத்திரியாத பெயரேஆம்; வினை, பெயர், வினா, இவைகளைக்கொள்வதே அதன்பொருணிலைஆம்.]

(உ-ம்.) (1.) "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்." [குறள்.13,9.]
["ஆறும்" வினை.]
(2.) "அறத்தான் வருவதே இன்பம்." [குறள்.4,9.]
["இன்பம்" பெயர்.]
(3.) "ஏதிலனா நோவ தெவன்." [நீதிநெறி. 25.]
["எவன்" வினா.]

☞ இம்முதல் வேற்றுமைக்கு உருபு இல்லைஆயினும் ஆனவன், என்பவன், ஆனவள், ஆனது என்பது, என்கின்றது, என்றது முதலானவை சொல்லுருபாகவரும் எனக்கொள்க.

105. இரண்டாம்வேற்றுமை.—THE SECOND CASE.

இரண்டா வதன்உரு பையே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும். [பெயர்.சூ.39.

[இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதே அதன் பொருள் ஆக்கல்முதலிய ஆறும் பிறவும்ஆம்.]
[இவை எழுவாய்வேறுபட்ட செயப்படுபொருள்கள் ஆம்.]

(உ-ம்.)
(1.) வீட்டைக்கட்டினான் .... [ஆக்கல்.]
(2.) மரத்தைவெட்டினான் .... [அழித்தல்.]
(3.) மோட்சத்தை அடைந்தான்.. [அடைதல்.]
(4.) ஊரைவிட்டான் .... [நீத்தல்=விடுதல்.]
(5.) மலையை ஒத்தான் .... [ஒத்தல்.]
(6.) செல்வத்தை உடையான் ...... [உடைமை.]
(7.) அரசன்பகைவரைச்சிறைச்சாலையை அடைவித்தான் .... [செயப்படுபொருள் குன்றுவினைக்கு இரண்டுசெயப்படுபொருள்வந்தன.]

106. மூன்றாம்வேற்றுமை.—THE THIRD CASE.

மூன்றா வதன்உரு பால் ஆன் ஓடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்.

[பெயர்.சூ.40.]

[மூன்றாம்வேற்றுமையின்உருபு ஆல், ஆன், ஓடு, ஒடு என்பவைகள். அவற்றின்பொருள் : கருவிமுதலிய மூன்றுமே.]

(உ-ம்.) (1.) பொன்னாற்செய்தவணி............[கருவி.]
(2.) குயவனால்வனையப்பட்டகுடம்....[கருத்தா.]
(3.) கொற்றனோடு சாத்தன்வந்தான்.[உடனிகழ்ச்சி.]

☞ கருவி முதற்கருவி, துணைக்கருவிஎன இருவகைப்படும்; சில இடங்களில் ஆல், ஆன் உருபுகள் சினைப்பொருளிலும் ஆல், தோறும் என்னும்பொருளிலும்வரும்.

(உ-ம்.) (1.) கண்ணால்குருடன்...... ..[சினைப்பொருள்.]
(2.) ஊரால்ஓர்மடம்.........[தோறும்.]

---

107. நான்காம்வேற்றுமை.—THE FOURTH CASE.

நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது ஆதல் [ருளே.
பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொ

[பெயர்.சூ.41.]

[நான்காம்வேற்றுமை உருபு கு என்பதே : அதன்பொருள் கொடைமுதலியவும் பிறவுமாம்.]

(உ-ம்)
(1.) சாத்தனுக்கு வீட்டைக்கொடுத்தான்...............[கொடை.]
(2.) அவனுக்கு இவன்பகை...............[பகை.]
(3.) கொற்றனுக்குநட்பன் சாத்தன்.[நேர்ச்சி.]
(4.) அருங்கலம் அரசர்க்குரியது.........[தகுதி.] ணகாரியம்.]
(5.) மோதிரத்திற்குப்பொன்..............[அது ஆதல்; முதற்கார
(6.) கூழுக்குக்குற்றேவல்.................. [பொருட்டு=நிமித்தகா
(7.) கொற்றனுக்குமகன்....................[முறை.] ரணகாரியம்.]

108. ஐந்தாம்வேற்றுமை.—THE FIFTH CASE.

ஐந்தா வதன்உரு பில்லும் இன்னும்
நீங்கல்ஒப் பெல்லை ஏதுப்பொருளே.

[பெயர்.சூ.42.]

[ஐந்தாம் வேற்றுமையினது உருபு இல், இன் என்பவை
களே. அவற்றின்பொருள் : நீங்கல்முதலியனவாம்.]

உ-ம்.) (1.) "நுனியிற்கரும்புதின்றற்று."......[நீங்கல்.]
(2.) "பால்உண்குருகிற்றெரிந்து."....[ஒப்பு.]
(3.) வேலூரிற்றெற்குச்சேலம்..........[எல்லை.]
(4.) கல்வியிற் பெரியர் கம்பர்..........[ஏது.]

இவ்வேற்றுமைக்குச் சொல்உருபுகளுமுண்டு அ-ன: நின்று,
காட்டிலும், பார்க்கிலும், இருந்து.

109. ஆறும்வேற்றுமை.—THE SIXTH CASE.

ஆறன் ஒருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவினீ ட்டம்
திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

[பெயர்.சூ.43.]

[ஆறும்வேற்றுமையின் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்பன்
மைக்குஅவ்வும்உருபாம். அவற்றின்பொருள் : பண்புமுதலிய
ஐந்து தற்கிழமைப் பொருள்களும் அவை அல்லாதபிறிதின்
கிழமைப்பொருள்களும் ஆம்.]

[I. தற்கிழமை.]

(உ-ம்.)

(1.) சாத்தனதுகருமை...[குணம்]		[பண்பு.]
சாத்தனதுவரவு.....[தொழில்.]		

(2.) கொற்றனது தலை.................. } [உறுப்பு.]
குதிரையினது செவி..................

(3.) மனிதரது தொகுதி.................. } [ஒன்றன்கூட்டம்.]
நெல்லினது குப்பை..................

(4.) மணிகளது தொகுதி.................. } [பலவின்கூட்டம்.]
பறவைகளது கூட்டம்..................

(5) நெல்லினது பொரி.................. } [திரிபின்ஆக்கம் அ-து: ஒன்று திரிந்து ஒன்றானது.]
மஞ்சளது பொடி..................

[II. பிறிதின் கிழமை.]

(1.) கொற்றனது குதிரை...... } [பொருள்.]
சாத்தனது வாள்..........

(2.) கொற்றனது வீடு......... } [இடம்.]
சாத்தனது நிலம்.........

(3.) கொற்றனது நாள்......... } [காலம்.]
மாரனது வேனில்.........

☞ மற்ற உருபுகள் வருவதற்கு உதாரணம் :—
எனதுகை, நினதுதலை, தனதுபுறம் [அது உருபு.]
எனகைகள், நினதாள்கள், ... [அ உருபு.]
"கழுந்தராய்உன கழல்பணி யாதவர்" [இரா.கி.பாயிரம்.]
இவ்வேற்றுமைக்கு உடைய எனுஞ்சொல் லுருபுவரும்.

---

110. ஏழாம்வேற்றுமை.—THE SEVENTH CASE.

ஏழன் உருபுகண் ஆதி ஆகும்
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப.

[பெயர்.சூ.44.]

[ஏழாம்வேற்றுமையின் உருபுகண்முதலியனவும். இவற்றின் பொருள் ஆவன : தம்மையேற்றபெயர்ப்பொருள் ஆகியபொ

மகாமகோபாத்தியாய

ருள்முதலிய ஆறும் இரண்டுகிழமைப்பொருள்களுக்கும் இட மாய் நிற்க அவற்றை வேறுபடுத்தலாம், என்று புலவர்சொ ல்வார்.]

[உதாரணம்வரும் இடத்திற்காண்க]

---

111. ஏழாம்வேற்றுமை உருபுகள்.—THE TERMINATIONS OF THE SEVENTH CASE.

கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே.

[பெயர்.சூ.45.]

[மேற்கூறிய கண்முதலானவை ஏழாம் வேற்றுமை இடப் பொருள் உருபுகள் ஆம்.]

இவற்றிற்கு உதாரணம் வந்தஇடத்திற் காண்க.

112. எட்டாம் வேற்றுமை.—THE EIGHTH CASE.

எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரியும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முகம் ஆகத் தான்அழைப் பதுவே.

[பெயர்.சூ.46.]

[எட்டாம் வேற்றுமையின் உருபுகள் விளி அடைந்தபெயர் ஈற்றினது திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றுக்கு அயல்எழுத்துத்திரிதல், ஆகியவைஆம். அவற்றின்பொருள்: பட ர்க்கை இடத்தாரைத்தனக்கெதிர்முகமாக அழைத்தலேஆம்.]

(உ-ம்.) குழையாய்! அரச! செல்வனே! மக்காள்!

113. விளி உருபு : ஓர்புறனடை.—A REMARK ON THE TERMINATIONS OF THE EIGHTH CASE.

அண்மையின் இயல்பும் ஈறழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.

[பெயர்.சூ.56.]

[மேற்சொல்லிய விளி உருபுகளுள் சமீபவிளிகளுக்கு இயல்பாதலும், ஈறுகெடுதலும்; தூரவிளிகளுக்கு அளபெடுத்தலும்; புலம்பல் விளிகளுக்கு ஓ மிகுந்துவருதலும் ஆகும்.]

(உ-ம்.)

(1.) தம்பி! [இயல்பு;] அரச! [ஈறழிவு.]......[அண்மை.]
(2.) மகனேஎ! [பிள்ளாஅய்! [அளபு.].......[சேய்மை.]
(3.) அண்ணாவோ!....................[புலம்பல்.]

---

114. எட்டாம் வேற்றுமையில் வாராதபெயர்கள்.—WORDS NOT ADMITTING OF THE VOCATIVE CASE.

நுவ்வொடு வினாச்சுட் டுற்ற னளர
வைதுத் தாம்தான் இன்னன விளியா.

[பெயர்.சூ.57.]

[நு, மூன்றுமுதல்வினா, மூன்றுசுட்டு, இவைகளைப்பொருந்திய ன், ள், ர் ஈற்று உயர்திணைப்பெயர்களும், வை, து ஈற்று அஃறிணைப்பெயர்களும், தாம், தான் ஆகியபொதுப் பெயர்களும், இவைபோல்வனவும் விளிக்கப்படா.]

☞ "இன்னன" என்றதினால் பிறன், மற்றையான் முதலான

115. வேற்றுமை மயக்கம்.—INTERCHANGE OF CASES.

யாதன் உருபின் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

[பெயர்.சூ.60.]

[எந்தவேற்றுமையிற் சொல்லிஇருந்தாலும் பொருள்சார்ந் தயக்கமே வேற்றுமைசாரும்.]

(உ-ம்.) "மனத்தால் மறுவிலர் ஏனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்." [நாலடி.18.10.]

[மனத்தால்=மனத்தில்; 7-ம் வேற்றுமை மயக்கம்.]

எட்டுவேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்.—THE GOVERNING WORD.

எல்லை இன்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கேழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்.
[பெயர்.சூ.62.]

[எல்லைப்பொருளில்வரும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் பெயரைக்கொண்டுமுடியும்; இவைஅல்லாத மற்றைவெற்றுமைகள் எல்லாம்வினையைக்கொண்டு முடியும்; நான்காம், ஏழாம்வேற்றுமைகள் வினை, பெயர் ஆகிய இரண்டையுங்கொண்டு முடியும், மிகுதியும் என்று புலவர்சொல்வார்.]

[உதாரணம் அந்தந்தவேற்றுமை உதாரணங்களிற்காண்க.]

சொல்லதிகாரம்.

II-வது : வினையியல், OF VERBS.

Boothalingam

117. வினை இன்னதென்பது.—DEFINITION OF VERB.

செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே.

[வினை. சூ. 1.]

[செய்பவன் முதலிய ஆறுபொருளையுங் கொடுப்பது தெரி

☞ "செய்பவன்" என்பதை ஐம்பாலிலுங் கொள்க.

(உ-ம்.) குடத்தை வனைந்தான்—இதில், குயவன் செய்பவன்; மண், தண்டசக்கரம் முதலியனகருவி; வனைந்தஇடமே இடம்; வனைதல் செயல்; இறந்தகாலமே காலம்; குடம், செய்பொருள்.

118 குறிப்புவினை.—THE INDIRECT VERB.

பொருள் முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

[வினை. சூ. 2.]

["பொருள்" முதலிய ஆறுங் காரணமாகப்பிறந்து முன் சொல்லிய "செய்பவன்" முதலிய ஆறனுள்கருத்தா ஆகிய ஒன்றைமாத்திரமே தெரிவித்துநிற்பது குறிப்புவினை ஆம்.]

(உ-ம்.) பொன்னன் [பொருள்]; வானத்தான் [இடம்.]
விகுதியால் செய்பவன் தோன்றியது.

119. முற்றுவினை.—THE FINITE VERB.

பொது இயல் பாலையும் தோற்றிப் பொருட்பெ
முதல்அறு பெயர்அல தேற்பில முற்றே. [யர்
[வினை.சூ.4.]

[வினைக்குப்பொது இலக்கணம் ஆகிய "செய்பவன்" முத
லித்துப் பொருட்பெயர் முதல் ஆகிய
அறுவகைப்பெயர் அல்லாத வேறொன்றையும் கொண்டுமுடி
யாதன குறிப்பு தெரிநிலை வினைமுற்றுகளாம்.]

(உ-ம்.) நடந்தான் பொன்னன் [தெரிநிலை];
பெரியது நிலம் [குறிப்பு.]

120. ஆண்பால் படர்க்கை.—THE THIRD PERSON SINGULAR, MASCULINE.

அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை.
[வினை.சூ.6.]

[அன், ஆன் ஆகிய விகுதிகளை உடையசொற்கள் ஆண்பாற்
படர்க்கை ஆம்.]

(உ-ம்.) நடந்தனன் குழையன் [அன்.]
நடந்தான் குழையான் [ஆன்.]

121. பெண்பாற் படர்க்கை.—THE THIRD PERSON SINGULAR, FEMININE.

அள்ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.
[வினை.சூ.7.]

[அள், ஆள் ஆகியவிகுதிகளை உடையசொற்கள் பெண்பாற்
படர்க்கை ஆம்.]

(உ-ம்.) (1.) நடந்தனள் [அள்]; (2.) நடந்தாள் [ஆள்.]

122. பலர்பாற் படர்க்கை.—THE THIRD PERSON PLURAL, HIGH CASTE.

அர் ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

[வினை.சூ.8.]

[அர், ஆர், ப, மார் ஆகிய விகுதிகளை உடையசொற்கள் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றும் ஆம். இவற்றுள் மார் விகுதியையுடையசொல் பெயருடனல்லாமல் வினையுடனும் முடியும்.]

(உ-ம்.) (1.) நடந்தனர் [அர்.]; (2.) நடந்தார் [ஆர்.]
(3.) நடப்ப [ப.]; (4.) கொண்மார் வந்தார் [மார்.]

123. ஒன்றன்பாற் படர்க்கை.—THE THIRD PERSON SINGULAR, NO CASTE.

துறுடுக் குற்றியல் உகர ஈற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பின் ஆகும்.

[வினை.சூ.9.]

[து, று, டு ஆகியவிகுதிகளை உடையசொற்கள் ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றும் ஆம்; டு குறிப்புவினைக்குமாத்திரமே உரியதாம்.]

(உ-ம்.) (1.) நடந்தது [து.]; (2.) போயிற்று [று.]
(3.) பொருட்டு=பொருளை உடையது [டு.]

124. பலவின்பாற் படர்க்கை.—THE THIRD PERSON PLURAL, NO CASTE.

அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.

[வினை.சூ.10.]

[அ, ஆ, ஆகிய விகுதிகளைஉடைய வினைச்சொற்கள் பலவின் பாற் படர்க்கை ஆம்; ஆ எதிர்மறையிடத்தது ஆகும்.]

(உ-ம்.) (1.) நடந்தன [அ.] (2.) நடவா [ஆ.]

ஆ, குறிப்புக்குவாராது.

---

125. இருதிணைக்கும் பொதுவினை.—VERBS COMMON TO THE TWO CLASSES.

தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டெ ரெச்சம் இருதிணைப் பொதுவினை.

[வினை.சூ.11.]

[தன்மை, முன்னிலை, வியங்கோள் முற்றுகளும், வேறு, இல்லை, உண்டு என்கிற குறிப்பு வினைமுற்றுகளும் பெயர் எச்ச வினைஎச்சங்களும் இருதிணைக்கும் பொதுவினைகளாம்.]

126. தன்மை ஒருமைவினை.—THE FIRST PERSON SINGULAR.

கு டு து று என்னுங் குன்றியல் உகரமோ
டல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

[வினை.சூ.12.]

[கு, டு, து, று ஆகியகுற்றியல் உகரவிகுதிகளையும், அல், அன், என், ஏன் ஆகியவிகுதிகளையும் உடையமொழிகள் இருதிணையில் மூன்றுபாலுக்கும் பொதுவான ஒருமைத்தன்மை முற்றும்]

கு, டு, து, று இவைதாமே காலங்காட்டுகின்றன அல் எதிர் காலவினைக்குமாத்திரம்வரும் ஆதலால் குறிப்புவினைக்குவாரா.

(உ-ம்.) (1.) உண்கு............[கு, எதிர்வு.]
(2.) உண்டு.............[டு, இறப்பு.]
(3.) வந்து, [து, இறப்பு]; வருது......[து, எதிர்வு.]

(4.) சென்று, [று, இறப்பு]; சேறு.....[று, எதிர்வு.]
(5.) நடப்பல்............[அல், எதிர்வு.]
(6.) வந்தனன்.........[அன்.]
(7.) வந்தனென் ......[என்.]
(8.) வந்தனேன் ......[ஏன்.]
(9) குழையினன்......[அன்.]

127. தன்மைப்பன்மை.—THE FIRST PERSON PLURAL.

அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம்மூர் க ட த ற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.

[பெயர் சூ.13.]

[அம், ஆம் ஆகியவிகுதிகளை உடையசொற்கள் முன்னிலை யாரையும், எம், ஏம், ஓம் ஆகியவைகளை ஈற்றில் உடையமொழிகள்படர்க்கையாரையும், கும், டும் தும், றும் ஆகிய இவைகளை இறுதியாக உடையசொற்கள் முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னோடுகூட்டும் உளப்பாட்டுத்தன்மைப் பன்மைமுற்றும்.]

(உ-ம்.)

(1.) சென்றனம், சென்றாம், [யாம், யானும் நீயும்.]

(2.) சென்றனெம், சென்றேம், சென்றோம் { யாம், யானும் அவனும்.

(3.) உண்கும், உண்டும், செல்லுதும், சேறும் { யாம், யானும் நீயும் அவனும்.

128. முன்னிலை உளப்பாட்டுப்பன்மை.—THE SECOND PERSON PLURAL. [*when the second person comes together with the third.*]

முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை.

[வினை.சூ.14.]

[முன்னிலையோடுகூடிய படர்க்கையும் முன்னிலையாம்.]

(உ-ம்.) நீயும் அவனும் வந்தீர், உண்மின், குழையீர்.

129. முன்னிலை ஒருமை.—THE SECOND PERSON SINGULAR.

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா வீற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.

[வினை.சூ.15.]

[ஐ, ஆய், இ ஆகிய ஈற்றுமொழிகளும் ஏவலில்வருகின்ற சகல ஈற்றுமொழிகளும் மூன்றுபால்களுக்கும் பொதுஆகிய முன்னிலை ஒருமைவினை ஆம்.]

(உ-ம்.) (1.) சென்றனை செல்கின்றாய் சேறி! [ஐ, ஆய், இ.]

(2.) செல்லாய் செல் நட படி [ஏவல் ஈறு.]

(3.) முடியினை, வேலாய், [குறிப்புவினை.]

☞ "மூன்றும்" என்று பிரித்தமையால் ஏவல் வினைமுற்றுக்கள் குறிப்புவினையில் இல்லை எனக்கொள்க.

இ எதிர்காலங்காட்டும்.

130. முன்னிலைப்பன்மை.—THE SECOND PERSON PLURAL.

இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின்அவற் றேவல்.

[வினை.சூ.16.]

[இர், ஈர் ஆகிய இரு விகுதிகளையும் உடையசொற்கள் இருதிணைப்பன்மை முன்னிலை வினைஆம். மின் என்னும் விகுதியை உடையசொற்கள் அவற்றின் ஏவல்ஆம்.]

(உ-ம்.) (1.) நீர் சென்றனிர், சென்றீர், [தெரிநிலை.]

(2.) நீர் வில்லினிர், வில்லீர், [குறிப்பு.]

(3.) நீர் சென்மின், உண்மின், [ஏவல்.]

☞ உண்ணும் என உம் விகுதியும் வரும்.

131. வியங்கோள்.—THE OPTATIVE.

கய வொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப.

[வினை. சூ.19.]

[க, ய, ர் ஆகிய் இவைகளை இறுதியாக உடையமொழிகள் வியங்கோள் முற்றுகளாம். இவை மூவிடத்திலும் ஐம்பாலி லும் செல்லும் என்று புலவர் சொல்லுவார்.]

(உ-ம்.) வாழ்க, வாழிய, வாழியர்.

☞ சிறுபான்மை அல் விகுதியுமவரும்; இதை

"வருத்துனையாதவும் வருத்தனர் கொளலே."

என இவ்வாசிரியர் கூறியதாற் கொள்க.

(உ-ம்.) "நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்." [குறள்.12 3

[விடல்=விடுக.]

அகரவிகுதியும் வரும்.

(உ-ம்.)

"விண்ணிடை மதியினை மிகையிதென்னவே." [இரா.1.5.9.]

[என்ன=என்க.]

---

132. OF வேறு, இல்லை AND உண்டு.

வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன.

[வினை சூ.20.]

[வேறு, இல்லை, உண்டு ஆகியமூன்று குறிப்புவினைமுற்றும் ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியனவாம்.]

(உ-ம்.) யான், யாம். நீ, நீர்......
அவன், அவள், அவர்..... } வேறு, இல்லை, உண்டு.
அது, அவை....................

☞ மேற்கூறியவைஅன்றி வேண்டும், தகும், படும், என் னுஞ்சொற்களும் ஐம்பால்மூவிடங்களுக்கும் பொதுவானவை எனக்கொள்க:—

(உ-ம்.)

(1.) "யானை அனையவர் நண்பொரீஇ நாய்அனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்." [நாலடி. 22. 3.

(2.) அவ்வேலைசெய்யத்தகும்.

(3.) "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்." [குறள்.34.5.]

133. பெயர் எச்சம்.—RELATIVE PARTICLES.

செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டிற்
காலமும் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வதாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. [வினை.சூ.21.

[செய்த, செய்கின்ற, செய்யும் என்கிற மூன்றுவாயபாட்டுச்சொற்களில் காலமும் செயலும் தோன்றி, பாலுடன் "செய்பவன்" முதலிய ஆறுவகைப்பொருட்பெயர்களும் குறைந்துநிற்பன பெயர் எச்சவினைஆம்.]

(உ-ம்.)

(1.) உண்ட { சாத்தன், கலம், வீடு, ஊண், இரா சோறு.

(2.) கரியபசு, உள்ளருணர். [குறிப்பு.]

134. செய்யும் என்னும் எச்சம்.—THE RELATIVE PARTICIPLE செய்யும்.

செய்யும்என் எச்சஈற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்முந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே.
[வினை.சூ.22.

[செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயர்எச்சத்தினுடைய ஈற்று உயிர்மெய்கெடுதலும், செய்யுளில் உம் விகுதி உந்து

எனத்திரிதலும், அதுவினைமுற்று ஆனால் அதன் ஈற்று உயிர் அனுலும் உயிர்மெய்யாலும் கெடுதலும் உளதாம்.]

(உ-ம்.)

(1.) "யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு?" [குறள். 40. 7.]
[சாம்=சாகும்; கு கெட்டது.]

(2.) "கூப்பெயர்க்குந்து நீர்க்கோழி."
[பெயர்க்குந்து=பெயர்ச்கும்.]

(3.) "மருளினும் எல்லாம் மருண்ம"

(4.) "மார்வினையொடுமுடிமே," [வினை.சூ.8.]
[முடிமே=முடியுமே.]

-o-

135. வினைஎச்சம்.—ADVERBIAL PARTICIPLES.

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினைஎச் சம்மே.

[வினை.சூ.23.]

[செயலும், காலமும்விளங்கி பாலும். வினையும் குறைந்து நிற்பது வினைஎச்சமாம்.]

☞ "வினை" எனப்பொதுப்படச்சொல்லியிருப்பதால் தெரிநிலைவினையும், குறிப்புவினையும், வினையால் அணையும்பெயரும், தொழிற்பெயரும் குறைந்தும்நிற்கும் எனக்கொள்க.

136. வினை எச்சவாய் பாடுகள்.—DIFFERENT FORMS OF ADVERBIAL PARTICIPLES.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினைஎச் சம்பிற
ஐந்தொன் றுறுமுக் காலமும் முறைதரும்.

[வினை.சூ.24.]

[மேற்கூறியவற்றுள் முதல் ஐந்தும் இறந்தகாலத்தையும்,

நடுவில் நின்ற ஒன்றும் நிகழ்காலத்தையும் பின்நின்ற ஆறும் எதிர்காலத்தையுங் காட்டுவனவாகும்.]

☞ இவற்றுள் செய்து என்பது ஒழிய மற்றவை விகுதியால் காலங்காட்டும்.

வேறுவகை வினை எச்சங்களை "இன" என்றதனாற்கொள்க.
[18-ம் பக்கத்திற்காண்க.]

137. இவைஅவாவுமாறு.—THE WORDS WHICH FOLLOW THESE.

அவற்றுள்,—முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் வினைமுதல் கொள்ளும் பிறவும்ஏற் கும்பிற.
[வினை.சூ.25.]

[அவ்வினை எச்சங்களுள் முதலில் உள்ளநான்கும் இறுதியில் உள்ள வான், பான், பாக்கு என்னும் மூன்றுவிகுதிகளை உடையமூன்றும் செய்பவனைக் கொண்டுமுடியும்; நடுவில் உள்ளஐந்தும் இவைபோல்வனபிறவும் செய்பவனை அன்றி மற்றவைகளையும் கொண்டுமுடியும்.]

(உ-ம்.) (1.) தான் நடந்துவந்தான்.........[வினைமுதல்.]
(2.) தான் உண்டெனமகிழ்ந்தான். } [வினைமுதலும் பிற
பிறன்உண்டெனமகிழ்ந்தான். } வுங்கொண்டன.
[மற்றவைகளுக்கு உதாரணம் இப்படியேகாண்க.]

138. மேற்கூறியதற்கு ஓர்புறனடை.—A REMARK ON THE ABOVE.

சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்.
[வினை.சூ.26.]

["முதலில் நான்கும் ஈற்றில் இரண்டும்" என்றுசொன்ன வினை எச்சங்கள் சினைவினையாயின் அவைசினை வினைஉடனே அன்றிமுதல்வினை உடனும் முடியும்.]

(உ-ம்.) சால் ஒடிந்து மாடு விழுந்தது.

[ஒடிதல், சினைவினை; விழுதல், முதல்வினை.]

---

139. INTERCHANGE OF THE FORMS OF THE ADVERBIAL PARTICIPLE.

சொற்றிரி யினும்பொருள் திரியா வினைக்குறை.

[வினை.சூ.27.

[வினை எச்சங்களுள் சொல்திரிந்தாலும் அவற்றின் பொருள்திரியா.]

(உ-ம்.) (1.) கோழிகூவிப் பொழுதுவிடிந்தது……[கூவ.]

(2.) யான்கொள்ளுவான் பொன்கொடுத்தான்..[கொள்ள

140. ஆக்கம் INDISPENSABLE.

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

[வினை.சூ28.]

[ஆக்கத்தால்வருகின்ற வினைக்குறிப்புச்சொற்கள் ஆக்கச்சொற்கள் இல்லாமல்வரா.]

(உ-ம்.) (1.) சாத்தன் நல்லன் ஆயினன்.

[நல்லன், ஆக்கவினைக்குறிப்பு; ஆயினன், ஆக்கம்.]

(2.) சாத்தன் நல்லன்…[ஆக்கம் தொக்கது.]

141. செய்யும் என்னும் முற்று.—THE FINITE VERB OF THE FORM செய்யும்.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

[வினை.சூ.29.]

[செய்யும் என்னும்முற்றுவினை பலர்பாற்படர்க்கை, முன்னிலை, தன்மைகளில்செல்லாது.]

ஆதலால் மற்றை நான்குபாலிலும்செல்லும் எனக்கொள்க.
(உ-ம்.) (1.) அவன், அவள், அது, அவை உண்ணும்.
(2.) "மலைநலம் உள்ளும் குறவன்" [நாலடி.36.6.]
(3.) "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்." [குறள்.7.9.]
[உள்ளும்=உள்ளுவான்; உவக்கும்=உவப்பாள்.]

142. யார் என்பதைக்குறித்து.—OF யார்.

யார்என் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.
[வினை.சூ.30.]

[வினாப்பொருளைத்தருகிற யார் என்கிறவினைக்குறிப்பு முற்று உயர்திணைமுப்பால்களுக்கும் பொதுவினையாம்.]
(உ-ம்.) அவன், அவள், அவர், யார்.
☞ யார்என்பது ஆர் எனவும்வரும். [50-ம்.சூ.காண்க.]

143. "எவன்" என்பதைக்குறித்து.—OF எவன்.

எவன்என் வினாவினைக் குறிப்பிழி இருபால்.
[வினை.சூ.31.]

[வினாப்பொருளைத்தருகிற எவன்என்னும் குறிப்புவினைமுற்று அஃறிணை இரண்டுபாலுக்கும் பொதுவினையாம்.]

(உ-ம்.)
(1.) அஃது, அவை, எவன்.
(2.) "சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்?" [குறள்.6.7.]
☞ எவன், என்பதுமருவி என், என்னை, என்ன, ஏன், எனவும்வரும்.
(உ-ம்.) "நீயோ அன்றேனென்றாய்," [இராமாயணம்]
"காக்கினென் காவாக்கால் என்." [குறள். 31. 1.]

144. முற்று எச்சம் ஆய்வருதல்.—FINITE VERBS USED AS PARTICIPLES.

வினைமுற் றேவினை எச்சம் ஆகலும்
குறிப்புமுற் றீரெச்சம் ஆகலும் உளவே.

[வினை. சூ. 32.]

[தெரிநிலைவினைமுற்றே வினைஎச்சம்ஆகிவருதலும், குறிப்புமுற்று வினைஎச்சம்ஆகியும் பெயர்எச்சம் ஆகியும் வருதலும் உளவாம்.]

(உ-ம்.) போனான் நின்றான்=போய்நின்றான்.

அவன்வேலினன்வந்தான்=வேலினன் ஆகிவந்தான்.

[வினைஎச்சம் ஆனது.]

"வேந்திறலினன் விறல்வழுதியொடு" [திறலினனாகியவழுதி.]

[பெயர் எச்சம் ஆனது.]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சொல்லதிகாரம்.

III-வது : இடைச்சொல்லியல்
OF PARTICLES.

145. பலவகை இடைச்சொற்கள்.—DIFFERENT KINDS OF PARTICLES.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனெண் பகுதியில் தனித்தியல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்

[இடை. 1]

[வேற்றுமைஉருபுகள், வினைஉருபுகள், சாரியைஉருபுகள், ஒப்புருபுகள், தத்தம் பொருளைக்காட்டியசொற்கள், இசைநிறைக்கிறசொற்கள், அசைநிலைச்சொற்கள், குறிப்பினால்வருஞ்சொற்கள், என்கிற எட்டுவகையை உடையனவாய் தனித்துவழங்கப்படாமல் பெயரிலும் வினையிலும் பின்னும் முன்னுமாகிய ஆறனுள் ஓரிடத்தில் ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நடப்பது இடைச்சொல்லாம்.]

146. இடைச்சொல் ஆகிய ஏ.—THE PARTICLE ஏ.

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனஆ றேகா ரம்மே.

[இடை. 3.]

[ஏகாரம் பிரிநிலை முதலான ஆறுபொருளைத்தரும்.]

(உ-ம்.) (1.) அவனே செய்தான்..................[பிரிநிலை.]
(2.) நீயே வந்தாய்?......................[நீயா? வினா.]
(3.) நிலனே நீரே தீயே வளியே......[நிலனும் எண்.]
(4.) "செய்யும் என் முற்றே"..........[ஈற்றசை.]
(5.) நானே செய்தேன். ....[தேற்றம்=துணிவு
(6.) ஏ ஏ இவள் ஒருத்தி பேடியோ..[இசைநிறை.]

☞ இவை அன்றி ஏ எதிர்மறைப்பொருளையும் தரும்.

(உ-ம்.) யானே செய்தேன்.........[செய்திலேன், எதிர்மறை.]

---

147. இடைச்சொல் ஆகிய ஓ.—THE PARTICLE ஓ.

ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனஎட் டோவே.

[இடை.௯.4

[ஓகாரம் ஒழியிசை முதலான எட்டுப்பொருளைத்தரும்.

(உ-ம்.)

(1.) இங்கிருக்கவோவந்தாய்.....[ஒழியிசை.]
[இருக்கவல்ல, போகவந்தாய் என ஒழிந்தசொல் கரு; நிற்கின்றது.]
(2.) அவனோசெய்தான்?.........[வினா.]
(3.) ஓ ஓ பெரியன்!............[உயர்வு சிறப்பு.]
ஓ ஓ சிறியன்!...............[இழிவு சிறப்பு.]
(4.) நானோசெய்தேன்,.........[நான்செய்திலேன்,எதிர்மறை.]
(5.) சாத்தனோ, அன்று கொற்றனோ, அன்று..[தெரிநிலை.]
[இல்லாமை தெரிந்துநிற்கின்றது.]
(6.) ஓ ஓ என்ன உணர்வில்லையோ.[கழிவு.]
[இரக்கப்பொருள்.]
(7.) "கட்டுரைப்பதென்கொலோ"..[அசைநிலை.]
(8.) அவனோசொன்னான்.............[பிரிப்பு.]
[பலருள் இருந்து ஒருவனைப்பிரித்துச்சொல்லல்.]

148. என, என்று என்னும் இடைச்சொற்கள்.—THE PARTICLES என AND என்று.

வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
எனவெனும் மொழிவரும் என்றும் அற்றே.

[இடை.சூ.5.]

[என, என்று என்னும் இடைச்சொற்கள் வினைமுதலிய ஆறுபொருளில்வரும்.]

(உ-ம்.)

1.) "சென்றான் எனப்படுதலான்"..................[வினை.]
2.) "உடையர் எனப்படுவதூக்கம்" ....[பெயர்.]
3.) ஒல்லென ஒலித்தது.................................[குறிப்பு.]
4.) "ஏ எனப்பூதமொன்றெழுந்ததாம் அரோ"...[இசை.]
5.) கை என கால் என.................................[எண்.]
6.) வெள்ளெனவிளர்ந்தது..................................[பண்பு.]

149. உம் என்கிற இடைச்சொல்,—THE PARTICLE உம்.

எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை ஆக்கமோ டும்மை எட்டே.

[இடை.சூ.6.]

[உம் என்னும் இடைச்சொல் எதிர்மறைமுதலிய எட்டுப் பொருள்களிலும்வரும்.]

(உ-ம்.)

(1.) செய்தலுங்கூடும்..................................[எதிர்மறை.]
(2.) குறவரும் மருளுங் குன்றம்..................[உயர்வு சிறப்பு.]
"மீனும்நாறினவேறினிவேண்டுமோ"......[இழிவு சிறப்பு.]
(3.) பத்தாயினும் எட்டாயினும் கொடு......[ஐயம்.]
(4.) கொற்றனும்வந்தான்..............................[சாத்தன்வந்ததன்றி எனப்பொருள்கொண்டால், இறந்ததுதழுவிய எச்சஉம்மை; இனிச் சாத்தனும்வருவான் என்றர்த்தங்கொண்டால் எதிரதுதழுவிய எச்சஉம்மை.]

(5.) ஐம்புலனும் அறிவுக்கிடம்...... ...[முற்றும்மை.]
(6.) நானும் அவனும் போனோம்.......[எண்.]
(7.) நானும் அல்லன் நீயும் அல்லன்...[தெரிநிலை.]
(8.) பாலும் ஆயிற்று......................[ஆக்கம்.]
[அதுவே மருந்தும் ஆயிற்று.]

150. மற்று என்னும் இடைச்சொல்—THE PARTICLE மற்று

வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

[இடை.சூ.14

[வினைமாற்றுமுதலியபொருளில் மற்று என்பதுவரும்.]
(உ-ம்.) "மற்றறிவாம் நல்வினை" ....[வினைமாற்று
"மற்றுத்தம் வல்லுரு அஞ்சன்மின்".[அசைநிலை.]
"மற்றென் செய்யார்"...................[பிறிது.]

151. கொல் என்னும் இடைச்சொல்—THE PARTICLE கொ

கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.

[இடை.சூ.16

[கொல் என்பது ஐயம், அசைநிலை என்னும் இரண்டுபொ
ளிலும் வரும்.]

(உ-ம்.)
(1.) சாத்தன் கொல் கொற்றன் கொல்...............[ஐயம்.]
(2.) "யாதுகொல் இதுவென எண்ணல்தேற்றலர்."[அசைநிலை

152. அந்தில் ஆங்கு என்னும் இடைச்சொல்—THE PARTICLI அந்தில் AND ஆங்கு.

அந்தில்ஆங் கசைநிலை இடப்பொருள் அவ்வே.

[இடை.சூ.17

[இவ்விரண்டு இடைச்சொற்களும், அசைநிலைப்பொருளையும், இடப்பொருளையும் தரும்.]

(உ-ம்.) (1.) அந்நிற் கழலினன்......................[அசைநிலை.
(2.) "அந்நிற் கொழுநற்காணிய".......[இடம்.]
(3.) "சொரிந்திட் டரிப்பரித்தாங்கு"...[அசைநிலை
(4.) ... ...ஆங்குத்தாம்
போந்திப்புனைந்த உடம்பும்." ....[இடம்.]

---

153. யா முதலிய இடைச்சொற்கள்.—THE PARTICLES யா &c.

யா கா பிற பிறக் [1]கரோ போ மா[2]திகும்
சின் குரை ஓரும் போலும் இருந்[3]திட்
டன்[4]றாம் தாம்தான் கின்றுநின் றசைமொழி.

[இடை. சூ. 22.]

[யா முதலியவை எவ்விடங்களிலும் வருகிற அசைச்சொற்களாம்.]

[உதாரணம் வரும் இடத்திற் காண்க.

1. பிறக்கு, அரோ; 2. மாது, இகும்; 3. இருந்து, இட்டு 4. அன்று, ஆம்.

சொல்லதிகாரம்.

வது: உரிச்சொல்லியல்.

OF ADJECTIVES AND ADVERBS.

154. உரிச்சொல் இவை என்பது.—ADJECTIVES AND ADVERBS.

பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி
ஒருகுணம் பல்குணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்.

[உரி.௫.].

[இசை, குறிப்பு, பண்பு ஆகிய பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் தெரிவிக்கிற பெயர் ஆகி ஒருகுணத்தையும் பலகுணத்தையும் சார்ந்து பெயர்வினைகளைவிட்டு நீங்காமல் செய்யுளுக்கு உரியனவாய் நிற்பன உரிச்சொல்ஆம்.]

☞ இசை = ஓசை; குறிப்பு மனத்தால் அறியப்படுவது; பண்பு ஐம்புலன்களால் அறியப்படுவது.

155. THE WORDS சால, &c.

சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

[உரி.௫.௬.

[இவை மிகுதிஎன்கிற ஒருகுணத்தைக்குறிக்கும் உரிச்சொற்கள் ஆம்.]

(உ-ம்.) (1.) "சாத்தன்கொல் சாலச்சிறந்தது."........[சால.]

(2.) "உறுபுலி ஊன் இரைஇன்றி."..........[உறு.]

(3.) "தவ உயர்ந்தன."............................[தவ.]

(4.) "கல்லாதவரும் நனிநல்லர்."................[நனி.]

(5.) "புத்திகூர் அருள்வீரன்."..................[கூர்.]

(6.) "கல்வியான்ஆய கழிநுட்பம் கல்லார்."...[கழி.]

சொல்லதிகாரம்.

V-வது: பொதுவியல்.—OF PARTS OF SPEECH IN GENERAL.

156. செய்யுளில் ஆ ஓ ஆதல்.—IN POETRY ஆ BECOMES ஓ.

பெயர்வினை இடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே.

[பொது.சூ 2.

[செய்யுளில் பெயர், வினை ஆகிய இரண்டிலும் ன், ள், ர், ய், ஆகிய இறுதியின்முன் உள்ள ஆகாரம் ஓ ஆதலும்உரித்தாம்.]

(உ-ம்.) "நீண்டோனே! கரியோனே!" [பாரதம்.

[மற்றவைகளுக்குதாரணம் வரும் இடத்திற்காண்க]

157. வேற்றுமை உருபும் வினையும்.—CASUAL TERMINATION AND VERBS.

உருபுபல அடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும்.

[பொது.சூ 4.

[வேற்றுமைஉருபுகள் பலஅடுக்கிவந்தாலும், வினைச்சொற்கள் வெவ்வேறு பலஅடுக்கிவந்தாலும், தத்தம் எச்சம் ஒன்று ஈற்றில்வர அதனோடு அவைஎல்லாம்முடியும்.]

(உ-ம்.)

(1.) கொற்றன் தன்சகோதரனைப் புத்தியால்வென்றான்.
[பல உருபுகள் விரவி ஒருவினைகொண்டன.]

(2.) சாத்தனைக் கொற்றனைக்கண்டேன்...[தம்முள் வேறுபல.

(3.) உண்டான் ஓடினான் பாடினான் கொற்றன்.[வினைமுற்று.

158. இடைப்பிறவரல்.—ADJUNCTS.

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலும்ஆம் ஏற்பன.

[பொது.சூ.5.]

[வேற்றுமை உருபுகளும், முற்றுகளும், இருவகை எச்சங்களுங்கொள்ளும் பெயர், வினை ஆகிய இவற்றிற்கு இடையில் பொருந்துவன ஆகிய பிறசொற்கள் வருதலும் ஆம்.]

(உ-ம்.)

(1.) கல்வியால் மிகச்சிறந்தான்.. ....[வேற்றுமை.]
(2.) இறங்கினன் மலைமீதேறினமனிதன் .. ..[முற்று.]
(3.) தேர்ந்த சென்னைபுரிப்புலவன்... ... .[பெயர் எச்சம்.]
(4.) எடுத்து இப்போதுகொடுத்தான்..........[வினைஎச்சம்.]

159. ஒருமொழி வேறொன்றை அமைத்தல்.—ONE WORD INCLUDING ANOTHER.

ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.

[பொது.சூ.7.]

[நால்வகைச்சொற்களில் ஏதாவது ஒருசொல் ஒழிந்ததனது இனத்தைக்கொண்டு முடிதற்கு உரித்தாகும்.]

(உ-ம்.)

(1.) சோற்றை தனி உண்டான். [கறியை தனி தின்றான்.]
(2.) நஞ்சுண்டவன் சாவான்.

[நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாகும், நஞ்சுண்டன சாகும் என அமையும்.]

160. எச்சம் முடிதல்.—SUPPLYING OF ELLIPSIS.

பெயர்வினை உம்மைசொல் பிரிப்பென ஒழியிசை
எதிர்மறை இசை எனும் சொல்ஒழி பொன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்.

[பொது.சூ.9.]

[பெயர், வினை, உம்மை, சொல், பிரிப்பு, என, ஒழியிசை, எதிர்மறை, இசை, ஆகிய இவ்வொன்பதுசொல் எச்சங்களும், குறிப்பெச்சமும், தங்கள்தங்கள் எச்சங்களைக்கொண்டு முடியும்.]

(உ-ம்)

(1) செய்தகொற்றன், நல்லசாத்தன். [பெயரெச்சம்]

(2) செய்துபோனான், செய்துநல்லனாயினான். [வினைஎச்சம்.]

(3.) பொன்னனும்வந்தான். [உம்மை, முன்சாத்தனும்வந்தான் எனத்தன் எச்சங்கொண்டது]

(4) வருவேன் என்றான். [சொல் எச்சம்; "வருவேன்" எனச்சொன்னான் எனத்தன் எச்சங்கொண்டது.]

(5.) அவனேசெய்தான், அவனோசெய்தான்.
[பிரிநிலை எச்சம்; பிறர்செய்திலர்எனத்தம் எச்சங்கொண்டன.]

(6) "எழுந்தனர் பொருக்கென இரதம் ஏறினர்." [இரா]
[என எச்சம்; தன்எச்சம் ஆகிய வினைகொண்டது. இ-ள்: விரைவில் தேர் ஏறினர்.]

(7.) செய்யவோபோனான்.................. [ஒழியிசை எச்சம்.]
[இ-ள். செய்ய அல்ல.]

(8.) செய்யினும்நன்று, அவனோசெய்தான்.
[எதிர்மறை எச்சம்; (இ-ள்:) செய்யாவிடினும் நன்று, அவன்செய்திலன்.]

(9.) "கற்றார் அனைத்திலர்பாடு," .... [குறள்.41.9.]
"வெஃகி வெறிய செயின்," .... [குறள்.18.5.
[இசை (=சொல்) எச்சம்; கற்றார்=நூலைக்கற்றார் வெஃகி=பொருளைவெஃகி]

10 ம் சூத்திரத்தின் அடியிற்காண்க.

---

61. தொகைநிலைத்தொடர்.—ELLIPTICAL CONSTRUCTION

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை

ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு [சொல்
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்
[பொரு.சூ.10

[பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடுவினைச்சொல்லும், வேற்றுமைமுதல் ஆகியபொருள்களில் அவற்றின் உருபுகள் நடுவிலே தொக்குநிற்க இரண்டு சொல்முதலாகத்தொடர்ந்து ஒருசொல்போல் வருவனதொகைநிலைத்தொடர்சொல் ஆம்.]

162. ஆறுதொகைநிலை.—THE SIX KINDS OF ELLIPTICAL CONSTRUCTION.

வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகைஆ றாகும்.
[பொரு.சூ.11

[வேற்றுமை முதல் ஆகிய ஆறும் அந்தத்தொகைநிலை.]

163. வேற்றுமைத்தொகை.—ELLIPSIS OF CASUAL TERMINATIONS.

இரண்டு முதலா இடைஆ றுருபும் [யே.
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை
[பொரு.சூ.12

[இரண்டு முதலான ஆறுவேற்றுமை உருபுகளும் தொக்கன வேற்றுமைத்தொகை ஆம்.]

இவற்றிற்கு உதாரணம் 23-ம் பக்கத்திற்காண்க.

"ஆறுருபும்" என்றதனால் உருபும் பயனும் உடன்தொக்க தொகையையுங்கொள்க.

(உ-ம்.) "அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங்காக்கும்"
[கதிர்ஞாயிறு—கதிரை உடையஞாயிறு.]

[2-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்றொக்கதொகை.]
"பொன்மலர்நாற்றமுடைத்து." [நீதிநெறி.5
[பொன்மலர்=பொன்னும் ஆகியமலர்; 3-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்றொக்கதொகை.]

---

164. வினைத்தொகை.—ELLIPSIS OF TENSE IN VERBS.

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.
[பொது.சூ 13.

[காலத்தைக்காட்டும் இடைநிலைதொக்கு நிற்கும் பெயரெச்சம் வினைத்தொகை ஆம்.]

(உ-ம்.) "விளைநிலம்," "எறிநீர்."

இவை விளைகிற, விளைந்த, விளையும்; எறிகிற, எறிந்த, எறியும், என விரியும்.

☞ வருபுனல், தருசுடர், உணர்ந்திடுஞானம் என வினைப் பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

---

165. பண்புத்தொகை.—ELLIPSIS OF THE ADJECTIVE SIGN.

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.
[பொது.சூ.14

[குணத்தைவிளக்கும் "ஆகிய" என்னும் பண்புருபு தொக்குநின்றவைகளும், ஒருபொருளுக்கு இரண்டுபெயர்கள் பொதுவாயும் சிறப்பாயும் வந்தவைகளும் பண்புத்தொகைகள் ஆம்.]

(உ-ம்.)
(1.) கருங்குதிரை.............................[வண்ணப்பண்பு.]
(2.) உருளைப்பூமி...............................[வடிவுப்பண்பு.]
(3.) இருசெவி.................................[அளவுப்பண்பு.]
(4.) இன்சொல்.................................[சுவைப்பண்பு.]

(5.) சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன் ...[இருபெயரொட்டு.]
(6.) வெண்ணிறத்தூவி.................... [பன்மொழித்தொடர்.]
[வெண்மை ஆகியநிறம் ஆகியதூவி; தூவி—இறகு.]

166. உவம உருபுகள்.—PARTICLES OF COMPARISON.

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.
[பொ.க.சூ.17

[மேற்கூறிய "போல" முதலியவை உவம உருபுகள் ஆம்.]

167. உம்மைத்தொகை.—ELLIPSIS OF உம்.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்மிலது தொகை.
[பொ.து.சூ.17.

["எண்ணல்" முதலிய நான்கு அளவைப்பெயர்களுள் உம் உருபு இல்லாதன உம்மைத்தொகைகள் ஆம்.]

(உ-ம்.)

(1.) இராப்பகல் . .. .[இராவும் பகலும்.]
(2.) இரண்டரைப்பலம் . .. .[எடுத்தல்.]
(3.) மூன்றேமுக்கால் ஆழாக்கு....[முகத்தல்.]
(4) மூந்நூற்று முப்பத்தைந்தடி..[நீட்டல்.]
(5) சேர சோழ பாண்டியர்.... [பன்மொழித்தொடர்.]

168. அன்மொழித்தொகை.—TROPE.

ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி.
[பொ.து.சூ.18.]

[வேற்றுமை முதலிய ஐந்துவகைத்தொகை நிலைத்தொடமொழிகளின்புறத்து வேறுமொழிகள் தொக்குவருதல் அ மொழித்தொகையாம்.]

(உ-ம்.) "முற்றிழாய்! [=பெண்ணே!];" உயிர்மெய்.

---

169. பலர் ஈறு.—THE PLURAL TERMINATION.

உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

[பொது.சூ 21

[உயர்திணை ஒருமையில்வருகிற உம்மைத்தொகைகள் பலபால் விகுதிகளை உடையனவாம்.]

(உ-ம்.) சேரசோழபாண்டியர்; தேவன் தேவிகள்.

☞ "ஈறே" என்றதேற்றத்தால் நன்மை தீமை, நன்மை தீமைகள் தந்தை தாய், தந்தை தாயர் என அஃறிணைப்பெரும் பொதுப்பெயரும்வரும் எனக்கொள்க.

---

170. தொகாநிலை.—UNELLIPTICAL CONSTRUCTIONS.

முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடைஉரி அடுக்கிவை தொகாநிலை.

[பொது.சூ.23

["முற்று" முதல் "விளி" ஈறாகஉள்ள ஐந்துவகைப்பொருள்களில் மொழிகள் புணரும் புணர்ச்சியும், வேற்றுமை உருபுகளோடு மொழிகள் புணரும் புணர்ச்சியும், உரி, அடுக்கு, ஆகிய சொற்புணர்ச்சியும் ஆன இவை தொகாநிலையாம்.

உதாரணம் 23-ம் பக்கத்திற்காண்க.

---

171. ஏழு வழு.—THE SEVEN GRAMMATICAL ERRORS.

திணையே பாலிடம் பொழுது வினா இறை
மரபாம் ஏழும் மயங்கினும் வழுவே.

பொது.சூ.24

["திணை" முதலிய ஏழும் மயக்கினால் வழுவாம்.]

¹ இவற்றின்விடை.

(1.) நம்பிவந்தது ....[திணைவழு.]

(2.) தாய் வந்தான் ....[பால்வழு.]

(3.) அவன் வந்தேன் ....[இடவழு.]

(4.) நேற்றுவருவான் ....[காலவழு.]

(5.) அப்பசுபாலோ இனையோ? ....[வினாவழு.]

(6.) கடம்பூர்க்குவழியாது? என்பதற்கு, இடம்
பூணி என் ஆவின்கன்றன்று ....[விடைவழு.]

(7) பசுவின் குட்டி. .... என்பது. ....[மரபுவழு.]

172. உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணை

A NO CASTE NOUN PRECEDED BY A HIGH CASTE NOUN.

உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.

[பொது.சூ.26

[உயர்திணையைப்பற்றியபொருள் முதலிய ஆறையும் அவ்வு யர்திணையோடு சேர்த்து முடித்தால் அவ்வுயர்திணை முடிபை உடையனவாம்.]

(உ-ம்.) கொற்றன் பொன் பெரியன், நாடுபெரியன், வாளுன் பெரியன், கைசிறியன், குணநல்லன் நடைகடியன்.

☞ பரணனோடு பெரியது என அஃறிணையோடு சேர்த்தால் அஃறிணைமுடிபை உடையதாயும்வரும்.

173. திணை, பால்பேதமான பெயர்களுக்கு ஒருமுடிபு

HIGH AND NO CASTE NOUNS HAVING A COMMON PREDICATE.

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே.

[பொது.சூ.26.]

[திணை, பால் வேறுவினைப் பலபொருள்கள இவைகலந்து வந்தஇடத்தில் சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிவினாலும் ஒருமுடிபை உடையன ஆம்.]

(உ-ம்.)

(1.) "நீங்களும் சான்றோரும் ஒப்பர்." [திணைவிரவல். [சிறப்பு.]

(2.) மூர்க்கரும் முதலையுங் கொண்டதுவிடா.............................. [திணைவிரவல் இழிவு.]

(3.) மனைவியுந்தானும் வந்தான் . ... [பால்விரவல்.] [சிறப்பு.]

(4.) மாலையும்முடியும் கவித்தான்.... [வேறு வினைப் பலபொருள் விரவல்.] [சிறப்பு.]

[மற்றவைகளும் இப்படியேகாண்க.]

171. திணை, பால் வழுஅமைதி.—GENDERS AND NUMBERS INTERCHANGED.

உவப்பினும் உயர்வினுஞ் சிறப்பினும் [1]செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.

[பொது சூ.28.]

["உவப்பு" முதலியவைகளினாலே பால், திணைவழுவி வந்தாலும் இலக்கணமேயாம்.]

(உ-ம்.)

(1.) மகனை, என் அம்மைவந்தாள்........................ [உவப்பு.]

(2.) ஒருவனை, அவர்வந்தார்.................................[உயர்வு.]

(3.) "தாதா மூவேழுலகுக்குந்தாயே." ....[சிறப்பு.]

(4.) "எனைத்துணையராயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்."...........................[செறல்.]

(5.) வீரத்தன்மை இல்லானை நோக்கி,இவன்பெண்.[இழிப்பு.]

[1] செறல்=கோபித்தல்; [2] இழிப்பு;=இழித்தல்.

175. ஒருமை, பன்மை, இடம் :—INTERCHANGE OF NUMBERS AND PERSONS.

ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே.

[பொது.சூ.29]

[ஒருமையிற் பன்மைச்சொல்லையும், பன்மையில் ஒருமைச்சொல்லையும், ஓரிடத்தில் வேறிடத்துச்சொல்லையும் தழுவுதலும் உள ஆம்.]

(உ-ம்.)

(1) அவன் இக்கிணற்று நீர் எல்லாம் இறைத்தான்.
[ஒருமையிற் பன்மை.]

(2) இரண்டுகையும் அடித்தது.......[பன்மையில் ஒருமை.]

(3.) சாத்தன் தாய் இவைசெயவலோ? [தன்மையில் படர்க்கை.]

(4) நீயோ, அவரோ, யார் இது செய்தார்?
[விரவி ஓரிடத்திற் பிற இடம் வந்தது.]

---

176. நிகழ்காலம்.—THE PRESENT TENSE.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே.

[பொது.சூ.32.]

[மூன்று காலத்திலும் செயல் இடைவிடாமல் ஒரேவிதமாய் நடக்கின்றபொருள்களை நிகழ்காலத்தாற் சொல்வார் புலவர்.]

(உ-ம்.)

வனம் அடர்த்தியாய் இருக்கிறது.
கடவுள் சகலமும் பார்க்கிறார்.

177. TENSES INTERCHANGED.

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.

[பொது.சூ.33.]

[விளைவு, மிகுதி, தெளிவு, இயல்பு ஆகிய இவைகளினாலே மூன்றுகாலங்களும் ஏற்கும் இடத்தில் ஒருகாலம் மற்றொரு காலம் ஆகச்சொல்லப்படவும்பெறும்.]

(உ-ம்.)

(1.) என்னுடன்வருகிறாயா? என்றவினாவிற்கு.
விடை. வந்துவிட்டேன், வந்துவிட்டேன்.
[விளைவினால் நிகழ்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.]

(2) இவ்வீட்டில் இருந்தால் மோசம்போனாய்...[மிகுதி.
[எதிர்காலத்துக்கு இறந்தகாலம் வந்தது.]

(3.) மின்னினால் மழைபெய்தது.......................[தெளிவு.
[எதிர்காலத்துக்கு இறந்தகாலம்வந்தது.]

(4.) முன் எல்லாம் அவன் இங்கேவருவான்......[இயல்பு.
[இறந்தகாலத்துக்கு எதிர்காலம் வந்தது.]

178. மரபு.—USAGE.

எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.
[பொது.சூ.37.]

[எந்தப்பொருளை எந்தச்சொல்லினால் எந்தவழியால் அறிவுடையோர் சொன்னார்களோ அப்படிச்சொல்லுதல் மரபாம்.]

(உ-ம்.) குதிரைச்குட்டி; பசுக்கன்று; மாங்கன்று; தென்னம்பிள்ளை; கோழிக்குஞ்சு.

179. சொல் அடுக்கிவரல்.—REPETITION OF WORDS.

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கொருசொல்
இரண்டு மூன்று நான் கெல்லைமுறை அடுக்கும்.
[பொது.சூ.44.]

[அசைநிலை, பொருள்நிலை,[1] இசைநிறை இவற்றிற்கு ஒருசொல் இரண்டு, மூன்று, நான்குவரை முறையாக அடுக்கும்.]

[1] பொருள்நிலை பலவகைப்படும். அ-வை:—விரைவு, கோபம், சந்தோஷம், பயம், அவலம், முதலியன.

(உ-ம்.) அன்றே அன்றே .... [அசைநிலை.]
"வந்தது வந்தது கூற்று" .... [விரைவு.]
விடு விடு .... [கோபம்.]
உண்ணுக உண்ணுக .... [சந்தோஷம்.]
பாம்பு பாம்பு பாம்பு .... [பயம்.]
"பாடுகோ, பாடுகோ, பாடுகோ, பாடுகோ" [இசைநிறை.]

---

180. உம்வேண்டியது.—உம் NECESSARY.

இனைத்தென் றறிபொருள் உலகின் இலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்.
[பொது. சூ. 48.

(உ-ம்.) (1.) மூவேந்தரும் வந்தார்... [இனைத்தென்றறிபொருள்.
(2.) ஒளியுள் இருள் எங்குமில்லை [உலகிலாப்பொருள்.]

---

181. ஒருபொருட்பன்மொழி.—SYNONYMS.

ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.
[பொது. சூ. 47

[ஒரு பொருளைக்குறித்த பலமொழிகள் சிறந்து நிற்கின்றன ஆதலால் அவை தப்பன்று.]

(உ-ம்.) "நாகிளவண்டு" "ஈர்த்திரைத் தார்த்தல்" "மீமிசை"
[இராமாயணம்.]

---

182. செயப்படுபொருளைக் கருத்தாவாகச் சொல்லல்.

THE OBJECT USED AS THE SUBJECT.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே
[பொது. சூ.

[செயப்படுபொருளை வினைமுதலைப்போலவைத்து வி
பொருந்தச் சொல்வதும் வழக்கில் உரித்தாம்]

(உ-ம்.) இவ்வீடுயான்கட்டியது.

"இனைத்தனும்" என்னும் உம்மையால் கருவி, நிலம், செயல், காலம், ஆகிய இவைகளையுங் குறித்துவரும் எனக் கொள்க :—

(உ-ம்.)

(1.) இவ்வெழுத்தாணி யான்எழுதியது .[கருவி.]
(2.) இவ்வீடு யான் இருந்தது... .. ..[நிலம்.]
(3.) இச்செயல் யான் செய்தது. ....[செயல்.]
(4.) இவ்வருஷம் அவன் சௌித்தது.. .... [காலம்.]

நன்னூற்சுருக்கம்

முற்றும்.

INDEX.

சூத்திரவகராதி

—:o:—

	பக்கம்.	சூ.
அ.		
அ ஆ ஈற்ற	69	124
அ இ உம்	3	9
அ ஐ முதல்	13	30
அசை நிலை	96	179
அண்மை	65	116
அடைவெ இயல் ...	50	88
அத்திறல்	83	152
அம் ஆம்	71	127
அம்முதல் .	3	6
அர் ஆர்	69	122
அவற்றுள் அ இ ...	3	7
அவற்றுள் எழு ...	59	101
அவற்றுள் முதல் ...	76	137
அள் ஆள் இறு ...	68	121
அன் ஆன் அள்	17	39
அன் ஆன் இறு	68	120
அன் ஆன் இன்	41	71
ஆ ஈ ஊ ஏ	3	8
	77	140
ஆண்பெண்	47	83
ஆநின்று	20	42
ஆவி ஞண	14	27
ஆவிபரம	28	55
ஆறனுருபு ...	59	102
ஆறன் ஒருமைச் .	62	109
இ		
இ ஈ ஐ வழி	28	56
இசை கெடின்	6	17
இடுகுறிகாரணப் ..	2	5
இடுகுறிகாரணமர.	53	93
இடை இனம்	4	13
இடை உரி	39	69
இதற்கிது சாரியை	43	77
இதற்கிதுமுடி	45	79
இடல்ட ஒழி	21	5[illegible]
இயல்பின்	44	78
இயல்பெழு	10	25
இரண்டாவன்	60	105
இரண்டுமுதல்	89	163
இர் ஈர் ஈற்ற	72	130
இலக்கணம்	48	86
இலக்கியம்	19	40
இனைத்தென்	97	180
ஈ.		
ஈறுபோதல்	16	37
ஈற்றியாவினா	27	54

	பக்கம்.	சூ.
உடன்மேல்.........	34	61
உயர்திணைஉம்.....	92	169
உயர்திணைதொ ...	93	172
உயிருட்...............	2	3
உயிர்மெய்.........	[illegible]	
உயிர்வரின்...... ..	30	58
உருபுபல...........	86	157
உருபுமுற்றீ	87	158
உவப்பினும்... . .	94	174
எ.		
எகரவினா...	29	57
எட்டன்உருபே...	64	112
எண்ணல்...	91	167
எண்பெயர்.	1	1
எண்மூ...............	26	
எதிர்மறை...	82	149
எப்பொருள்... ...	96	178
எயா முதலும்....	4	10
எல்லாம்......... ...	42	74
எல்லைஇன்னும்....	66	116
எவன்என்	78	143
எழுத்தே.........	14	32
ஏ.		
ஏழன் உருபு... ...	63	110
ஏற்கும்......	58	100
ஐ.		
ஐ ஆய்	72	129
ஐ ஔ இ...... .	5	14
ஐகான்........	13	31
ஐந்தாவதன்.	62	108
ஐந்தொகை...	91	168
ஒ.		
ஒருபுணர்க்........	26	51
ஒருபொருள்குறித்த	51	90
ஒருபொருட்பன்.	97	181
ஒருமையிற்...	95	175
ஒருமொழிஒரு ...	46	81
ஒருமொழிஒழி ...	87	159
ஒருமொழிதொடர்	46	80
ஒருமொழிமூவழிக்	25	50
ஒருவர்..	56	98
ஒருவன்ஒருத்திபல	40	70
ஒருவன்ஒருத்திபே.	56	97
ஒழிஇனை	81	147
ஒன்றேபல	48	84
ஒன்றொழி.	49	87
க.		
கசதப............ .	12	2[illegible]
கண்கால்...... ...	64	111
கபவொடு.........	73	131
கா.		
காலம்கரந்த	90	164
கு.		
குறுகுறு	70	126
குறியதன்.........	6	16
குறிப்பு வினை...	35	63
குறிச்செறி...	38	67
கொ.		
கொல்லே	83	15[illegible]
ஞ.		
ஞகுண.....	7	18

	பக்கம்.	சூ.
சா.		
சாலவுறு	85	155
சி.		
சினைவினை....	76	138
செ.		
செந்தமிழ் ஆகு .	51	89
செந்தமிழ்நிலம்..	52	91
செயப்படு. ...	97	182
செய்என்	17	38
செய்த	74	133
செய்து	75	136
செய்பவன்	67	117
செய்யும்........ ..	74	131
சொ.		
சொற்றிரியினும்.	77	139
ஞ.		
ஞணமுன்	9	22
ட.		
டறஒற்றின்.....	19	41
தத்தம்............	16	36
தற்சுட்., ...	9	21
தனிக்குறில்.....	34	62
தன்மைமுன்னிலைப.	48	85
தன்மைமுன்னிலைவி	70	125
தன்மையான்	55	95
தா.		
தான்தாம்........	42	75
தான்யாம்...	56	96
தி.		
திணைபால்.........	93	173
ய...........	92	171
து.		
துறடுக்...	69	123
தொ.		
தொழிலும்...	75	135
தோ.		
தோன்றல்........	24	48
நா.		
நான்காவதற்....	61	107
நீ.		
நீயிர்நீவிர்........	59	103
நு		
நுவ்வொடு...... ..	65	114
நெ.		
நெடிலோடுயிர்த்.	33	60
நெடிலோடாய்தம்	8	19
ப.		
பகுதிவிகுதி.... ...	15	35
பகுப்பால்........	14	33
பண்பை....... ...	90	165
பதம்முன்...	41	72
பல்லோர்...	77	141
பல்வகைப்	85	154
பல்வழியிடத்.....	20	43
பன்னிருயிரும்....	11	26
பா.		
பால்பகா...........	55	94
பி.		
....	80	146
பு.		
புள்ளிவிட்...		15

	பக்கம்.	சூ.
பெ.		
பெயரோ ஐ ஆல் .	59	101
பெயரொடு.........	88	161
பெயர்வழித்.........	40	71
பெயர்வினையிட...	86	156
பெயர்வினைஉம்..	87	160
பொ.		
பொதுஇயல்......	68	119
பொதுஎழுத்... ..	53	92
பொதுப்பெயர்..	27	53
பொருள்இடம்...	15	34
பொருள்முதல்ஆறி	67	118
பொருள்முதல்ஆறோ	57	99
போ.		
போலப்புரைய...	91	166
ம.		
மகரஇறுதி........	12	29
மக்கள்தேவர்.....	47	82
மவ்வீறொற்றழிந்..	35	64
மு.		
முக்காலத்தினும்..	95	176
முற்றீரெச்சம்....	92	170
முன்னிலை...... ...	71	128
மூ.		
மூன்றுவதன்... ...	61	106
மூன்றுயிர்...... ..	10	23
மெ.		
மெய்உயிர்........	22	45
மெல்லினம்.	4	12
மொ.		
மொழிமுதற்	1	2

	பக்கம்.	சூ.
ய.		
யகரம்வரச்.......	9	20
யரழமுன்னர்க் ...	36	65
யா.		
யாகாபிற..........	84	153
யாதன்.	65	115
யார்என்...	78	142
ல.		
லழவீற்	10	23
லழவேற்றுமை...	37	66
வ.		
வலித்தல்....... ...	24	49
வல்லினம்	4	11
வவ்விறு...	43	76
வி.		
விகாரம்..........	24	47
வினாவினும்... ...	95	177
வினைபெயர்......	82	148
வினைமாற்றசை...	83	150
வினைமுற்றே	79	141
வே.		
வேறில்லை.........	73	132
வேற்றுமைஐ... ..	22	46
வேற்றுமைவினைசா	80	145
வேற்றுமைவினைடன்	89	162
ற.		
றவ்வொடு...	20	44
ன.		
னலமுன்	38	68

முற்றும்.

நன்னூற்சுருக்க

அநுபந்தம்

APPENDIX

ABRIDGMENT OF THE NANNUL;

CONTAINING A TABLE FOR PARSING,
EXAMPLES PARSED, AND THE ANALYSIS OF UPWARDS OF ONE HUNDRED
WORDS OF MORE THAN ORDINARY DIFFICULTY, SELECTED
FROM THE RAMAYANAM, NALADI, CURAL, AND
NIDI-NERI-VILAKKAM.

G. P. SAVUNDRANAYAGAM PILLAI, B. A.
VERNACULAR TRAINING MASTER, GOVERNMENT NORMAL SCHOOL, MADRAS,
FORMERLY HEAD MASTER, NORMAL SCHOOL, CHEYORE, COIMBATORE.

MADRAS:
PRINTED AT THE AMERICAN MISSION PRESS.
1863.

ADVERTISEMENT.

I have published this Appendix separately from my Abridgment of the Nannúl, with the view of making the table, examples, and analysis it contains, accessible to such classes as do not use the Abridgment: I believe, that, independently of the Nannúl, this may be usefully introduced into classes which read other elementary works on Grammar; for boys may very well be taught how to parse and analyze words, before they can take up the Abridgment of the Nannúl.

G. P. S.

GOVT. NORMAL SCHOOL,
Madras, September, 1863.

Price 2. Annas

Loganathan's Book.

28th January 1914.

TABLE FOR PARSING.

பதங்கட்கு இலக்கணஞ்சொல்லும் முறைகாட்டும் அட்டவணை.

பெயர்ச்சொல்.—Noun.

- பெயர்
  - பொது: இடுகுறி / காரணம் { மரபு, ஆக்கம் }
  - *சிறப்பு: காரண இடுகுறி மரபு
  - பண்பு... ... ...
  - தொழில்... ... .
  - வினையாலணையும் ....
  - [இது காரணப்பெயரில் அடங்கியது]
- பால்
  - உயர்திணை { ஆண், பெண், பலர் }
  - அஃறிணை { ஒன்றன், பலவின், † பால்பகாதது }
- தன்மை / முன்னிலை / படர்க்கை
  - எழுவாய்த் தொகாநிலைத் தொடராய்,......
  - 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம் வேற்றுமை;— பொருளில் வந்த { தொகைநிலைத் —தொடராய், தொகாநிலைத் —தொடராய், }
  - விளி வேற்றுமைத் தொகாநிலைத் தொடராய்,
- —கொண்டு முடிகின்றது. (சந்தி உண்டாகிற் கூறுக.)

---

* இயற்பெயர், பெரும்பாலும், இடுகுறிப்பெயரிலும், சிறப்புப்பெயர் காரணப்பெயரிலும், அடங்குதலால், இவற்றை இவ்வட்டவணையிற் காட்டினோமில்லை.

† திணை, பால், இடங்களுக்குப் பொதுவாய் வரும் பெயர்களின் பொதுமை, மேல்வருஞ் சிறப்புப்பெயர் விகற்பங்களை நீக்குதலால், அதனையுடன் கூறுதல் நியமன்று; பின்னே கூறப்படும் வினைக்கும் இது பொருந்தும்.

வினைச்சொல்.—VERB.

(தெரிநிலை வினை எனின்.)

- செயப்படுபொருள் உள்ள
- செயப்படுபொருள் இல்லாத
  - இறந்தகாலம்
  - நிகழ்காலம்
  - எதிர்காலம்
  - முக்காலத்துப் பொது
    - உயர்திணை { ஆண், பெண், பலர்
    - அஃறிணை { ஒன்றன், பலவின்
    - பால்பகாத்து
      - பால்
        - தன்மை
        - முன்னிலை
        - படர்க்கை
          - உடன்பாடு
          - எதிர்மறை
            - தெரிநிலை
              - செய்வினையாய்நிற்கின்ற
              - செயப்பாட்டுவினையாய் நிற்கின்ற
                - தன்வினை
                - பிறவினை
                  - வினைமுற்று; தொகாநிலைத் தொடராய்,—எழுவாய்க்குப் பயனிலையாய் முடிகின்றது.
                  - வினையெச்சம்; தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது.
                  - பெயர் எச்சம்; தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது.
                  - *வினையாலணையும் பெயர்.
                  - *தொழிற்பெயர்.

(குறிப்பு வினை எனின்.)

- செயப்படுபொருள் உள்ள
- செயப்படுபொருள் இல்லாத
  - உயர்திணை { ஆண், பெண், பலர்
  - அஃறிணை { ஒன்றன், பலவின்
    - பால்
      - தன்மை
      - முன்னிலை
      - படர்க்கை
        - உடன்பாடு
        - எதிர்மறை
  - மூவிடம் ஐம்பாலுக்கும் பொது……………………
    - குறிப்பு
      - வினைமுற்று; தொகாநிலைத் தொடராய்,—எழுவாய்க்குப் பயனிலையாய் முடிகின்றது
      - வினையெச்சம்; தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது.
      - பெயரெச்சம்; தொகாநிலைத் தொடராய்,—கொண்டு முடிகின்றது.
      - * வினையாலணையும் பெயர்.
      - * தொழிற்பெயர்.

* வினையால் அணையும் பெயர்க்கும், தொழிற்பெயர்க்கும், இவையேயன்றிப் பெயரின் அட்டவணையின்படியும் இலக்கணம் கூறுக.

இடைச்சொல்.—PARTICLE.

வேற்றுமை, வினை, சாரியை, ஒப்பு, முதலியன (152-ம் சூத்திரத்தைக் காண்க)	இடைச்சொல் (பொருள் உண்டென்று கூறுக)

உரிச்சொல்.—ADJECTIVE AND ADVERB.

இசை, குறிப்பு, பண்பு	உரி	—கொண்டு முடிகின்றது.
அல்லது		
குணப்பண்பு, தொழிற்பண்பு	உரி	

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

EXAMPLES PARSED.

இலக்கணங்கூறிய உதாரணங்கள்.

1. "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." [குறள். 3. 8.]

நிறை என்பது செயப்படுபொருள் இல்லாத, இறந்தகால, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினைக் காலங்கரந்த பெயரெச்சம்; வினைத்தொகைநிலைத்தொடராய், மொழி என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["நிறைமொழி" என்பதில், சந்தி இயல்பு]

மொழி என்பது ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; உடைமைப்பொருளில் வந்த, உருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத் தழாத்தொடராய், மாந்தர் என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மொழிமாந்தர்" என்பதில், சந்தி இயல்பு.]

மாந்தர் என்பது காரண மரபுப் பொதுப்பெயர்; உயர்திணைப் பலர்பாற் படர்க்கை; ஆறும் வேற்றுமை; பண்புத் தற்கிழமைப் பொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், பெருமை என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மாந்தர் பெருமை" என்பதில், சந்தி இயல்பு.]

பெருமை என்பது இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புப் பொதுப்பெயர்; அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; ஆக்கப்படுபொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["பெருமை நிலத்து" என்பதில், சந்தி இயல்பு.]

நிலத்து எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயர்; அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை; ஏழாம் வேற்றுமை; பிறிதின் கிழமைப்பொருட்கு இடம் இடமாய் நிற்கின்ற இடப்பொருளில் வந்த தொகைநிலைத்தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

[நிலம் + அத்து = நிலத்து என வந்ததில், மகரங்கெட்டு, அத்துத் தோன்றியது; இது விகாரச் சந்தி.]

மறை எ-து காரண இடுகுறி மரபுப் பொதுப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராய், மொழி என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["மறைமொழி" என்பதில், சந்தி இயல்பு]

மொழி எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபுப் பொதுப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், காட்டிவிடும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["மொழி காட்டிவிடும்" என்பதில், சந்தி இயல்பு.]

காட்டிவிடும் எ-து செயப்படுபொருள் உள்ள, நிகழ்கால, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினை வினைமுற்று; மொழி என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்கின்றது.

2. "அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்." [குறள். 20. 8.]

அருமை என்பது இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புப் பொதுப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; பண்புத் தொ[illegible]த் தொடராய், பயன் என்னும் பெயருடன் முடி

[அருமை என்பதன் ஈறுபோய், பகரத்துக்கினமாகிய மகரம் மிகுந்தது, சந்தி விகாரம்.]

பயன் எ-து இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புச் சிறப்புப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; அடையப் படுபொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், ஆயும் என்னும் வினையைக்கொண்டு முடிகின்றது.

["பயன் ஆயும்" என்பதில், சந்தி இயல்பு.]

ஆயும் எ-து செயப்படுபொருள் உள்ள, எதிர்கால, உயர்திணைப் பலர்பாற் படர்க்கை, உடன்பாட்டுத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினைப் பெயரெச்சம்; தொகாநிலைத் தொடராய், அறிவினார் என்னும் பெயரைக்கொண்டு முடிகின்றது.

["ஆயும் அறிவினார்" என்பதில், சந்தி இயல்பு; இவ்வெச்சம் காலத்தை உணர்த்தாது உரிமையை உணர்த்திறது]

அறிவினார் எ-து காரண ஆக்கச் சிறப்புப்பெயர்; உயர்திணைப் பலர்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், சொல்லார் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றது.

["அறிவினார் சொல்லார்" என்பதில், சந்தி இயல்பு.]

சொல்லார் எ-து செயப்படுபொருள் உள்ள, உயர்திணைப் பலர்பாற் படர்க்கை, எதிர்மறைத் தெரிநிலைச் செய்வினையாய் நிற்கின்ற, தன்வினை வினைமுற்று; தொகாநிலைத் தொடராய், அறிவினார் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நிற்கின்றது.

பெருமை, [அருமை என்பதற்குச் சொல்லியதுபோற் சொல்லி, பயன் என்பதனோடு முடிக்க.]

["பெரும்பயன்" என்பதில், சந்தி விகாரம்.]

பயன் எ-து இடுகுறி மரபுக் குறிப்புப் பண்புச் சிறப்புப் பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; எழுவாய்த் தொகாநிலைத் தொடராய், இல்லாத என்னும் வினையைக்கொண்டு முடிகின்றது.

["பயன் இல்லாத" என்பதில், சந்தி இயல்பு]

இல்லாத எ-து செயப்படுபொருள் 'இல்லாத, அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை, எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்; தொகாநிலைத் தொடராய், சொல் என்னும் பெயரைக் கொண்டு முடிகின்றது.

["இல்லாத சொல்" என்பதில், சந்தி இயல்பு.]

சொல் எ-து ஆகுபெயராகிய காரண இடுகுறி மரபு இசைப்பண்புப் பொதுப்பெயர்; அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை; இரண்டாம் வேற்றுமை; நீக்கப்படு பொருளில் வந்த தொகைநிலைத் தொடராய், சொல்லார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகின்றது.

ANALYSIS OF DERIVATIVE WORDS.

பகுபத முடிபு.

அ

அங்காத்தல் = அங்கா (பகுதி) + த் (சந்தி) + தல் (விகுதி).

அழுக்கறுப்பான் = அழுக்காறு (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[ஆகாரம் அகரமானது குறுக்கல் விகாரம்.]

அற்றம் [இல்லாமை] = அறு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[தன்னொற்றிரட்டல் விரித்தல் விகாரம்; உகரங்கெட்டது சந்தி.]

அற்று [அத்தன்மைத்து] = அன் (பகுதி, இடைச்சொல்) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[னகரம றகரமானது சந்தி]

அனையர் = அனை (பகுதி, இடைச்சொல்) + ய் (சந்தி) + அர் (பலர்பால் விகுதி).

அன்று = அல் (பகுதி, பண்பு) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[லகரம் னகரமானது சந்தி; அன்று என்பது குறிப்பு வினைமுற்று]

அன்ன = அன் (பகுதி, இடைச்சொல்) + ன் (சந்தி) + அ (அன்ன என்பது முற்றெனின், பலவின்பால் விகுதி; பெயரெச்சமெனின், பெயரெச்ச விகுதி).

ஆ

ஆத்த [கட்டின] = யா (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, முற்றுவிகுதி).

[யா ஆகாரமானது மரூஉ.]

ஆய = ஆ (ப்குதி) + ய் (இறந்தகால இடைநிலை) + அ (ஆய என்பது பெயரெச்சமெனின், பெயரெச்ச விகுதி; முற்றெனின், முற்று விகுதி).

ஆய [ஆராய] = ஆய் (பகுதி) + அ (வினையெச்ச விகுதி).

ஆற்ற = ஆற்று (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை, தொகுத்தல் விகாரம் பெற்றது) + அ (பெயரெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி]

ஆற்ற [செய்ய] = ஆற்று (பகுதி) + அ (வினையெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி]

ஆன்றார் [அறிவுடையோர்] = அகல் (பகுதி) + ற் (இறந்த கால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[அகல் என்பது ஆல் என மருவியது; லகரம றகரமானது சந்தி; றவ்வானது னவ் வாயத் திரிந்தது மெலித்தல் விகாரம்]

☞ அகலக்காண்டி என்பது ஆலக்காண்டி என, இது வழக்கத்திலும் இருக்கின்றது

இ

இல = இல் (பகுதி, பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று) + அ (பலவின்பால் விகுதி).

இளவல் [இளையவன்] = இளமை (பகுதி, பண்பு) + வ் (சந்தி, தோன்றினது) + அல் (பண்புப்பெயர் விகுதி).

[இளமை என்பதில் மை கெட்டது; இளவல் என்பது ஆகுபெயர்]

இவறன்மை = இவறு (பகுதி) + அல் (தொழிற்பெயர் விகுதி) + மை (விகுதிமேல் விகுதி).

[உகரக்கேடு சந்தி; அனைத்தும் ஓர் பகுதியாய இவறல் என நின்று, அதனுடன் மை விகுதி சேர்ந்தது; லகரம் னகரமானது சந்தி.]

இவறியான் = இவறு (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை) + ய் (சந்தி) + ஆன் (ஆண்பால் விகுதி).

[இடைநிலை னகரக்கேடு கடைக்குறை விகாரம்.]

இன்னாத = இன்னா (பகுதி, பண்பு) + த் (எழுத்துப்பேறு, விகாரம்) + அ (விகுதி).

உக்க = உகு (பகுதி) + க் (விகாரம்) + அ (பெயரெச்ச விகுதி).

[பகுதியின் ஒற்று இரட்டியதே காலங் காட்டியது.]

உணர்த்துகிற்றும் = உணர்த்து (பகுதி) + கில் (ஆற்றலுணர்த்தும் விகுதி) + றும் (தன்மைப் பன்மை எதிர்கால விகுதி).

[அனைத்துமோர் பகுதியாய், உணர்த்துகில் என நின்று, றும் விகுதியோடு சேர்ந்தது; லகரம் றகரமானது சந்தி.]

உண்ணிய = உண் (பகுதி) + ண் (சந்தி) + இய (எதிர்கால வினையெச்ச விகுதி).

[இதை வியங்கோள் விகுதியாகக்கொண்டு, அவ்வினை எனினும் அமையும்.]

எ

எச்சம் = எஞ்சு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[ஞகரம் சகரமானது வலித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி; எச்சம் = சந்ததி, குறைச்சொல்; இது தொழில் ஆகுபெயர்; இப்படி அன்றி, அம் என்பதை வினைமுதற்பொருள் விகுதியெனக்கொண்டு, இதைத் தொழிலடியாகப் பிறந்த பெயர் என்பதும் பொருந்தும்.]

எற்று [எத்தன்மையது] = என் (பகுதி, இடைச்சொல்) + று (குறிப்பு வினைமுற்று விகுதி).

[னகரம் றகரமானது விகாரம்.]

எனைத்து = எனை (பகுதி) + த் (சந்தி) + து (குறிப்பு வினைமுற்று விகுதி).

என்றல் = என் (பகுதி) + தல் (தொழிற்பெயர் விகுதி).

[தகரத்திரிபு சந்தி.]

என்று [சூரியன்] = எல் (பகுதி, இடைச்சொல்*) + று (ஒன்றன்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

*தொல்காப்பியத்தில் உள்ள "எல்லே இலக்கம்" என்னும் சூத்திரத்தினால், எல் என்பதை இடைச்சொல் என்னலாயிற்று.

B

ஏ

ஏமாந்தேம் = ஏமா. (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஏம் (தன்மைப் பன்மை விகுதி).

[ஏமாத்தல் = ஏமம் + யாத்தல்; தகரம் நகரமானது விகாரம்.]

ஏற்றான் = ஏல் (பகுதி) + ற் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி]

ஒ

ஒட்பம் = ஒள் (பகுதி) + பம் (பண்புப்பெயர் விகுதி).

[ளகரம் டகரமானது சந்தி.]

ஒழுகலார் = ஒழுகு (பகுதி) + அல் (எதிர்மறை விகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[உகரங்கெட்டது சந்தி]

ஒற்கம் [தளர்ச்சி] = ஒல்கு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[லகரம் றகரமாய், உகரங்கெட்டது சந்தி.]

ஒன்னலர் = ஒன்று (=பொருந்து, பகுதி) + அல் (எதிர் மறை விகுதி) + அர் (பலர்பால் விகுதி).

[ஒன்றல் என, அலொத்துமோர் பகுதியாய் நின்று, அர் விகுதியைச் சேர்ந்தது; று கெட்டது கடைக்குறை விகாரம்; னகரம் சந்தி.]

க

கடவுள் = கட (பகுதி) + வ் (சந்தி) + உள் (தொழிற்பெயர் விகுதி).

[கடவுள் = எல்லாவற்றையுங் கடந்து மேலாயிருப்பவர்; இது தொழிலாகுபெயர்.]

கவற்ற = கவற்று (பகுதி) + அ (நிகழ் காலவினையெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

கழிந்தன்று = கழி (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + று (ஒன்றன்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.]

கனன்று = கனல் (பகுதி) + ற் (இறந்தகாலஇடைநிலை) + உ (இறந்தகால வினையெச்ச விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

கா

காமுற்று = காமம் + உற்று.

[அம் கெட்டது கடைக்குறை.]

காமுற்று = காமுறு (பகுதி) + உ (இறந்தகால வினையெச்ச விகுதி).

[பகுதியின் ஒற்று இரட்டல் விரித்தல் விகாரம்; அதன் உகரக்கேடு சந்தி; இரட்டியதே இறந்தகாலங் காட்டியது.]

கு

குற்றி = குறு (பகுதி, பண்பு) + இ (ஒன்றன்பால் விகுதி).

[தனிக்குற்று இரட்டியது விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி.]

கே

கேண்மை = கேள் (பகுதி, பண்பு) + மை (பண்புப்பெயர் விகுதி).

[ளகரம் ணகரமானது சந்தி.]

கேளார் [பகைவர்] = கேள் (பகுதி) + ஆ (எதிர்மறை விகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[கேளா என அனைத்துமோர் பகுதியாய் நின்று, ஆர் என்னும் விகுதியை அடுத்தது; விகுதி ஆகாரக்கேடு முதற்குறை விகாரம்.]

கேளிர் = கேள் (பகுதி) + இர் (பலர்பால் விகுதி).

கொ

கொணர்ந்தான் = கொணா (பகுதி) + ர் (விரித்தல் விகாரம்) + த் (சந்தி) + த் (இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி)

[ஆகாரம் அகரமானது குறுக்கல்விகாரம்; தகரம் நகரமானது சந்தி.]

கொழுநர் = கொழு (பகுதி, பண்பு) + ந் (இடைநிலை) + அர் (பலர்பால் விகுதி).

கோ

கோடும் = கொள் (பகுதி) + தும் (எதிர்கால விகுதி).

[ஒகரம் ஓகாரமானது நீட்டல் விகாரம்; ளகரக்கேடுந் தகரத்திரிபுஞ் சந்தி.]

கோட்டம் = கோடு (பகுதி) + அம் (தொழிற்பெயர்விகுதி).

[டகரம் தோன்றியது விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி]

கோட்டினான் = கோட்டு (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை + ஆன் (ஆண்பால் விகுதி).

[உகரங்கெட்டது சந்தி.]

சா

சாம்பின [சாம்பராயின] = சாம்பு (பகுதி) + இன் (இறந்தகால இடைநிலை) + அ (பலவின்பால் விகுதி; அல்லது, பெயரெச்ச விகுதி).

[உகரக்கேடு சந்தி]

சான்று [சாட்சி] = சால் (பகுதி) + று (ஒன்றன்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

சி

சினந்தான் = சின (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்; சினம் என்னும் பெயரடியாகப் பிறந்தது]

சூ

சூன்றிட்டது = சூல் (பகுதி) + து (சாரியை) + இடு (துணிவுப்பொருள்விகுதி) + ட் (விகாரம்) + அ (சாரியை) + து (ஒன்றன்பால் விகுதி).

[பகுதியின் லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது விகாரம்; துவ்வில் தகரம் றகரமானது சந்தி; இடு விகுதி சேர்ந்து, அனைத்துமோர்பகுதியாய்நின்று, பின் மற்றும் சாரியை முதலியவற்றை ஏற்றது.]

செ

செம்மல் = செம் (பகுதி, பண்பு) + ம் (சந்தி) + அல் (பண்புப்பெயர் விகுதி).

[செம்மல் = புத்திரன்; இது பண்பாகுபெயர்.]

செய்துகொண்டான் = செய் (பகுதி) + து (சாரியை) கொள் (தற்செயற்பொருள்விகுதி) + ட் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[செய்துகொள் என அனைத்துமோர் பகுதியாய் நின்று, இடைநிலை முதலியன பெற்றுமுடிந்தது; ளகரம் டகரமானது சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்]

செவ்விய = செம்மை (பகுதி, பண்பு) + இ (விரித்தல்) + ய் (சந்தி) + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

[செம்மை என்பதின் மை கெடுதலும், மகரம் வகரமாதலும், வகரம் தோன்றலும், சந்தி.]

செற்றார் = செறு (பகுதி) + ஆர் (விகுதி).

[றகரம் விரித்தல் விகாரம்; அவ்விரட்டலே காலங்காட்டியது; உகரக்கேடு சந்தி]

சோ

சோகாப்பர் = சோகம் + யாப்பர்.

[அம் கெட்டது கடைக்குறை]

சோகாப்பர் = சோகா (பகுதி) + ப் (சந்தி) + ப் (இடைநிலை) + அர் (விகுதி).

*சோர்தர = சோர்,நா (பகுதி) + அ (விகுதி).

[ஆகாரம அவ்வானது குறுக்கல் விகாரம்; ரு விரித்தல் விகாரம்; உகரக்கேடு சந்தி]

☞ சூழ்தர, அயர்தர, செயதர, போதர, முதலியவற்றையும் முடிக்கும்விதம் இவ்வாறே ஆம்

த

தந்தை = தாம் (பகுதி) + தை (பெயர் விகுதி).

[தாகாரத்திலுள்ள ஆ அகரமானது குறுக்கல் விகாரம்; மகரம் நகரமானது சந்தி.]

தமது = தாம் (பகுதி) + அ (சாரியை) + து (ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று விகுதி; அல்லது, அப்பெயர் விகுதி).

[தா தவ்வானது குறுக்கல் விகாரம்.]

தருகின்ற = தா (பகுதி; தா தவ்வானது குறுக்கல் விகாரம் + ரு (விரித்தல் விகாரம்) + கின்று (நிகழ்கால இடைநிலை + அ (பெயரெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

தழைப்ப (அஃறிணைப் பன்மை வினைமுற்றெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + அ (பலவின்பால் வினைமுற்று விகுதி).

தழைப்ப (உயர்திணைப் பன்மை வினைமுற்றெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப (பலர்பால் வினைமுற்று விகுதி).

தழைப்ப (செயவெனெச்சமெனின்) = தழை (பகுதி) + ப் (சந்தி) + ப் (விரித்தல்) + அ (நிகழ்கால வினை எச்ச விகுதி).

து

துப்பார் = து (= உண், பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

துரப்பன = துர (பகுதி) + ப் (சந்தி) + ப் (எதிர்கால இடைநிலை) + அன் (சாரியை) + அ (பலவின்பால்வினைமுற்றுவிகுதி).

துன்னற்க = துன் (பகுதி) + ன் (சந்தி) + அல் (எதிர்மறை விகுதி) + க (வியங்கோள் விகுதி).

[துன்னல் என அனைத்துமோர் பகுதியாய் நின்று, கவ் விகுதியைப்பெற்றது.]

துன்னியார் = துன் (பகுதி) + ன் (சந்தி) + இன் (இறந்தகாலவிடைநிலை) + ய் (சந்தி) + ஆர் (பலர்பால் விகுதி).

[இன் என்பதிலுள்ள னகரங் கெட்டது கடைக்குறை]

தூ

தூகின்றார் = தூ (பகுதி) + கின்று (நிகழ்கால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[உகரக்கேடு சந்தி.]

தோ

தோற்றம் = தோன்று (பகுதி) + அம் (தொழிற் பெயர் விகுதி).

[உகரக்கேடு சந்தி; னகரம் றகரமானது வலித்தல் விகாரம்; தோறறம் என்பது ஒரு பொருளை உணர்த்தினால், ஆகுபெயராம்.]

தோன்றல் [அரசன், புத்திரன்] = தோன்று (பகுதி) + அல் (தொழிற்பெயர் விகுதி).

[உகரம் சந்தியாற் கெட்டது; இது தொழிலாகுபெயர்.]

தோன்றியக்கால் = தோன்று (பகுதி) + இன் (சாரியை) ய் (சந்தி) + அ (சாரியை) + க் (சந்தி) + கால் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[சாரியை னகரக்கேடு கடைக்குறை]

☞ இதில், தகரத்தோற்றம் தோன்றின என்பது பெயரெச்சமன்றென்பதை விளக்குகின்றது.

ந

நடை + நட (பகுதி) + ஐ (தொழிற்பெயர் விகுதி).

[நட என்பதில், ஈற்றகரக் கேடு கடைக்குறை.]

நடையன் = நடை (பகுதி) + ய் (சந்தி) + அன் (ஆண்பால் விகுதி).

நட்பு = நள் (பகுதி) + பு (தொழிற்பெயர் விகுதி).

[ளகரம் டகரமானது சந்தி]

நண்பு = நண் (பகுதி, பண்பு) + பு (பண்புப்பெயர் விகுதி).

நண்ணினர் = நண் (பகுதி) + ண் (சந்தி) + இன் (இறந்தகால இடைநிலை) + அர் (பலர்பால் விகுதி).

[இதைப் பண்படியாகப் பிறந்த பெயராகக் கொள்ளின், இன் சாரியை ஆம்.]

நள்ளார் = நள் (பகுதி) + ஆ (எதிர்மறைவிகுதி; நள்ளா என அனைத்தும் ஓர் பகுதி) + ஆர் (பலர்பால் விகுதி).

[ஆர் விகுதியின் ஆகாரங்கெட்டது முதற்குறை]

நீ

நீண்டக்கடைத்து = நீள் (பகுதி) + து (சாரியை) + அ (சாரியை) + க் (சந்தி) + கடை (எதிர்கால வினையெச்ச விகுதி) + த் (சந்தி) + து (பகுதிப் பொருள் விகுதி).

[நீட்ட என, ளவ்வுந் தவ்வுந் திரிதலும், உகாங்கெடுதலும் சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்]

☞ நீண்ட எனபது பெயரெச்ச மன்றென்று, க[illegible] தோற்றத்தினுல் விளங்குகின்றது.

நீத்தனள் = நீ (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + அள் (பெண்பால் விகுதி).

நு

நுட்பம் = நுண் (பகுதி, பண்பு) + பம் (பண்புப்பெயர் விகுதி).

[ணகரம் டகரமானது சந்தி.]

நோ

நோற்றார் = நோல் (பகுதி) + ற் (இறந்தகால இடைநிலை) ஆர் (பலர்பால் விகுதி).

[லகரம் சந்தியால் றகரமானது.]

ப

பயக்கும் = பய (பகுதி) + க் (சந்தி) + கு (சாரியை + உம் பெயரெச்ச விகுதி; அல்லது, வினைமுற்று விகுதி).

[உகரங் கெட்டது சந்தி; பய என்பது பயம் என்னும் பெயரடியாகப் பிறந்தது.]

பயந்தான் = பய (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.]

பல்லவர் = பன்மை (பகுதி, பண்பு; மை கெட்டது சந்தி) + ல் (சந்தி) + அ (சாரியை) + வ் (சந்தி) + அர் (பலர் பால் விகுதி).

பா

பாத்து = பகு (பகுதி; பா என மருவியது) + த் (சந்தி) = த் (இறந்தகால இடைநிலை) + உ (வினையெச்ச விகுதி).

[இதுபோல, பகுதி என்பது பாதி என மருவி வழங்குகின்றது]

பாலமை = பால் (பகுதி) + அ (சாரியை) + மை (பகுதிப பொருள் விகுதி).

[அகரச்சாரியை இன்றி, பான்மை எனவே சாதாரணமாய வரும்]

பி

பிறன் - பிற (பகுதி, இடைச்சொல்) + அன் (ஆண்பால் விகுதி).

[பிற எனபதின ஈற்றகரமொழிநதது கடைக்குறை; இபபடி அன்றி, விகுதி னகரம எனி னும அமையும்]

பிறிது = பிற (பகுதி, இடைச்சொல்) + இ (விரிதரல்) + து (ஒன்றன்பால் விகுதி).

[பிற என்பதில் ஈற்று அகரக்கேடு கடைக்குறை]

பொ

பொருது = பொரு (பகுதி) + த் (இறந்த கால இடைநிலை) + உ (வினையெச்ச விகுதி).

பொறுத்தான் = பொறு (பகுதி) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

போ

போந்தது = புகு (பகுதி; இது போ என மருவியது) + த் (சந்தி) + த் (இறந்தகால இடைநிலை) + அ (சாரியை) + து (ஒன்றன் பால் விகுதி).

[தகரம் நகரமானது சந்தி.]

போன்றன = போல் (பகுதி, இடைச்சொல்) + ற் (இறந்தகால இடைநிலை) + அன் (சாரியை) + அ (பலவின்பால் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி; றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

மா

மாட்சிமை = மாண் (பகுதி, பண்பு) + சி (பண்புப்பெயர் விகுதி) + மை (விகுதிமேல் விகுதி).

மாண்டார் [மாட்சிமைப்பட்டார்] = மாண் (பகுதி, பண்பு) + ட் (இறந்தகால இடைநிலை) ஆர் (பலர்பால் விகுதி.)

மாண்டார் [இறந்தார்] = மாள் (பகுதி) + ட் (இறந்தகால இடைநிலை) + ஆர் (பலர்பால் விகுதி).

[ளகரம டகரமானது சந்தி; டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம்]

மு

முதற்று = முதல் (பகுதி) + று (ஒன்றன் பாற் குறிப்புவினை முற்று விகுதி; அல்லது, அப்பெயர் விகுதி).

[லகரம் றகரமானது சந்தி]

மோ

மோப்ப = முகர் (பகுதி; இது மோ என மருவியது) + ப் (சந்தி) + ப் (விரித்தல் விகாரம்) + அ (நிகழ்கால வினையெச்ச விகுதி; அல்லது, பலவின்பால் விகுதி).

[மொபப எனபதை உயாதிணைப பன்மை வினைமுற்றாகக் கொள்ளின், பகர விகுதியும்]

வ

வளமை = வள் (பகுதி, பண்பு) + அ (சாரியை) + மை (பண்புப் பெயர் விகுதி).

[அகரச்சாரியை இல்லாத இடத்தில், வள் + மை = வண்மை]

வள்ளன்மை = வள் (பகுதி, பண்பு) + ள் (சந்தி) + அல் (பண்புப்பெயர் விகுதி) + மை (பண்புப்பெயர் விகுதி).

[லகரம் னகரமானது சந்தி; வள்ளல் எனபது கொடையாளனுக்கு ஆகுபெயராய, மை விகுதியோடு சேர்ந்து, அவன தனமையை உணர்த்திற்று]

வறந்தக்கால் = வற (பகுதி) + த் (சந்தி) + து (சாரியை) + அ (சாரியை) + க் (சந்தி) + கால் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[சாரியை உகரக்கேடு சந்தி; தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்]

வா

வாழியர் = வாழ் (பகுதி) + இயர் (எதிர்கால வினையெச்ச விகுதி).

[இது "வாழியர்" என்னும் வியங்கோளுக்கும் பொருந்தும்.]

வி

விடுபாக்கு = விடு (பகுதி) + பாக்கு (எதிர்காலவினையெச்ச விகுதி).

☞ பாக்கு என்னும் விகுதி, தொழிற்பெயர்ப்பொருளிலும் வரும்; இதைப்பற்றி 143-ம் சூத்திரத்திலுரையிற்காண்க.

வித்தகன் = வித்தகம் (பகுதி; அம் கெட்டது கடைக் குறை) + அன் (ஆண்பால் விகுதி).

விளக்கம் = விளங்கு (பகுதி) + அம் (தொழிற்பெயர் விகுதி).

[ஙகரம் ககரமானது வலித்தல் விகாரம்; உ கெட்டது சந்தி; பொருளை உணர்த்தினால் ஆகுபெயர் ஆம்.]

விழுமியார் = விழுமு (பகுதி) + இ (விரித்தல் விகாரம்) + ய் (சந்தி) + ஆர் (பலர் பால் விகுதி).

[விழுமு என்பதில், உகரக்கேடு சந்தி.]

வீ

வீழ்த்தென = வீழ்த்து (பகுதி, பிறவினை) + என (இறந்தகால வினையெச்ச விகுதி).

[சந்தியால், வீழ்த்து என்பதிலுள்ள உகரங்கெட்டது; இது நன்னூலார் மதம்; சிலர் வீழ்த்தால் என என்று இரண்டு சொல்லாக்கி, அல் தொகுத்தல் என்பர்.]

வெ

வெற்றி = வெல் (பகுதி) + தி (தொழிற் பெயர் விகுதி).

[வெல் என்பதன் லகரமும் தகரமும் றகரமானது சந்தி.]

வென்றி = வெல் (பகுதி) + தி (தொழிற் பெயர் விகுதி).

[லகரமும் தகரமும் றகரமானது சந்தி; வெற்றி என நின்று, பகுதி றகரம் னகரமானது மெலித்தல் விகாரம்.]

வே

வேட்கும் = வேள் (பகுதி) + கு (சாரியை) + உம் (பெயரெச்ச விகுதி; அல்லது, வினைமுற்று விகுதி).

[ளகரம் டகரமானதும், உகரங்கெட்டதும், சந்தி.]

வேட்டான் = வேள் (பகுதி) + ட் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் விகுதி).

[சந்தியால், ளகரம் டகரமானது.]

வேண்டார் = வேண்டு (பகுதி) + ஆர் (பலர்பால் எதிர்மறை விகுதி).

[வேண்டு என்பதில், உகரக்கேடு சந்தி.]

☞ வேண்டார் என்பது தற்கால வழக்கத்தில், வேண்டாம் என மருவி, இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வழங்குகின்றது.

வேறல் [வெற்றி] = வெல் (பகுதி) + தல் (தொழிற் பெயர் விகுதி).

[பகுதி எ ஏயானது நீட்டல் விகாரம்; லகரக்கேடும், தகரம் றகரமாகத் திரிதலும், சந்தி.]

நன்னூற் சுருக்க அ[redacted]தம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கருவூர்ப்புராணம்.

கருவூர்ப்புராணவசனம்.

இவை

கோயமுத்தூர் வித்துவான்

கந்தசாமிமுதலியார் அவர்களாலும்

நேகமம் வித்துவான்

முத்துநாகப்பமுதலியார் அவர்களாலும்

திருத்தப்பட்டு

ஷை கந்தசாமிமுதலியார் அவர்களால்

சென்னை:

இந்து தியலாஜிகல் யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

விரோதி௵ ஆடிமீ

விலை ரூபா-க.

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருக்கருவூர்த்திருவானிலை

பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ்
சுண்டலாருயிராயதன்மையா
கண்டனூர்கருவூருளானிலை
யண்டனாருளீயுமன்பரே. (க)

நீதியார்நினைந்தாயநான்மறை
யோதியாரொடுங்கூடலார்குழைக்
காதினார்கருவூருளானிலை
யாதியாரடியார்தமன்பரே. (உ)

விண்ணுலாமதிசூடிவேதமே
பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை
யண்ணலாரடியார்க்குநல்லரே. (ங)

முடியர்மும்முதயானையீருரி
பொய

கபு
அடிகள்யாவையுமாயவீசரே. (ச)

பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர்
மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையார்கருவூருளானிலை
யங்கையாடரவத்தெம்மண்ணலே. (ரு)

தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியின்
மேவர்மும்மதிலெய்தவில்லியர்
காவலர்கருவூருளானிலை
மூவராகியமொய்ம்பரல்லரே. (௬)

பண்ணினார்படியேற்றார்நீற்றார்மெய்ப்
பெண்ணினார்பிறைதாங்குநெற்றியார்
கண்ணினார்கருவூருளானிலை
நண்ணினார்நமையாளுநாதரே. (௭)

கடுத்தவாளரக்கன்கயிலையை
யெடுத்தவன்றலைதோளுந்தாளினா
லடர்த்தவன்கருவூருளானிலை
கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே. (௮)

உழுதுமானிலத்தேனமாகிமா
ளுழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினான்கருவூருளானிலை
முழுதுமாகியமூர்த்திபாதமே. (௯)

புத்தர்புன்சமணாதர்பொய்யுரைப்
பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை
யத்தர்பாதமடைந்துவாழ்மினே. (௧௦)

கந்துமார்பொழிற்காழிஞானசம்
பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்தும்வல்லவர்
சிந்தையிற்றுயராயதீர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சருக்க அட்டவணை.

இலக்கம்.	பக்கம்.	பெயர்.	பாடற்றொகை
௧	௧	பாயிரம்	௩௧
௨	௮	வராககிரிச்சருக்கம்	௬௩
௩	௧௭	ஆம்பிராவதிநதிச்சருக்கம் ...	௫௮
௪	௨௭	சராசரச்சருக்கம்	௬௧
௫	௩௬	அலங்காரவதிச்சருக்கம். ...	௧௫
௬	௩௯	பிரமச்சருக்கம்	௩௫
௭	௪௪	பதரிவனச்சருக்கம்	௨௪
௮	௪௮	திக்குப்பாலகச்சருக்கம். ...	௧௩
௯	௫0	கடவுளருச்சனைச்சருக்கம் ...	௨௧
௧0	௫௪	சுக்கிரனுபதேசம்பெற்றசருக்கம் ...	௪௧
௧௧	௬0	முசுகுந்தச்சருக்கம்	௩௧
௧௨	௬௫	தீர்த்தச்சருக்கம்	௩௪
௧௩	௭௧	தலதீர்த்தச்சருக்கம்	௪௩
௧௪	௭௭	*கோபிதாரச்சருக்கம்	௧௨0
௧௫	௯௫	விபண்டகச்சருக்கம்	௭௨
௧௬	௧0௬	நியமச்சருக்கம்	௬௮
௧௭	௧௧௭	தலமகிமைச்சருக்கம்	௬௩
௧௮	௧௨௭	‡கருவூர்த்தலச்சிறப்புச்சருக்கம் ...	௬௧
௧௯	௧௩௫	எறிபத்தச்சருக்கம்	௬௭
௨0	௧௪௬	புகழ்ச்சோழச்சருக்கம்.. ...	௫௧
௨௧	௧௫௩	கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம் ...	௧௫௭
		ஆகச்சருக்கம் - ௨௧ - க்குத்திருவிருத்தம் ...	௧௧௨௯

*கோபிதாரசருக்கத்தை, கோபிதாரத்துவசன்சருக்கமென்றும்

‡ கருவூர்த்தலச்சிறப்புச்சருக்கத்தை, நகரச்சிறப்புச்சருக்கமென்றும் சிலபிரிதிகளிலிருக்கின்றன.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கருவூர்ப்புராணம்

பாயிரம்.

கணபதி வணக்கம்.

இன்னதிப்பெற்றித்தொன்றற்கேற்பனவிவையென்றோதும்
மன்னுமப்பொருளியாவுமலைவறத்தெரியுமாறு
முன்னவன்புழைக்கைநால்வாய்முக்கணன்செக்கர்மேனிப்
பொன்னவிர்கமலம்பூத்தபூங்கழல்போற்றிசெய்வாம். (க)

பாயனுந்திருவுமுந்திப்பாலனுந்துயிலுஞ்செங்கண்
மாயனும்வேறுவேறுதிசைதிசைமயங்கிமாழ்கத்
தூயபாற்கடலைவாங்கித்துதிக்கையாற்சிதறுந்தெய்வ
நாயகற்கன்புசெய்துநான்றமிழ்நடத்தலுற்றேன். (உ)

சபாபதி.

வேறு.

ஈர்தந்தகமலமலரயனெடுமாலமரர்தருநீழல்வைகும் [றக
போர்தக்குலிசன்முதலியர்பரவப்புலியுமொருபணியும்போற
கார்தந்தகுழலிமயவனிதைமுகமலர்ந்துவிழிகளிப்பநாளுஞ்
சீர்தந்தகனகமணிமன்றாடும்பேரொளியைச்சிந்தைசெய்வாம்.

பசுபதீச்சுரர்.

மேவருதத்துவசித்தியடைந்துதத்தமெய்யுணர்ந்துவிமல
ஞான, மூவகையாருயிர்விளங்கிமுத்திருமன்பால்வழங்குமொ
ருமுத்திவாழ்வைப், பாவனைகடந்துநின்றபரஞ்சுடரைப்பசுப
திநாயகனைமுன்னைத், தேவர்கடேவைக்கருவூர்ச்சிவக்கொழுந்
தையிதயமலர்திகழவைப்பாம். (உ)

வடிவுடையம்மை.

நதிகாட்டும்புனற்கழனிவளங்காட்டவறங்காட்டுநலஞ்சே
ர்வஞ்சிப், பதிகாட்டும்பசுபதியோரிடங்காட்டவலங்காட்டும்
பரையைமேலாங், கதிகாட்டுங்கருங்குயிலையருள்காட்டுங்கய
லிரண்டுகோட்டுந்தூய, மதிகாட்டுமடமயிலைவடிவுடையநாயகி
யைவணங்கிவாழ்வாம். (௩)

தலைவிநாயகர்.

அஞ்சுளாரணியெழுத்தோராறுளார்சடையிற்கண்ட
நஞ்சுளாரணியபாகநயந்துளார்ஞானம்பூத்த
நெஞ்சுளாரணிபயந்தநிறைமதக்கவுட்கோல்வாய்
வஞ்சுளாரணியமேவுங்களிற்றினைவழுத்தல்செய்வாம். (௪)

முருகக்கடவுள்.

உரைதருசுருதிவேதவுபநிடதத்தினுச்சிப்
பரையருள்விழிகளிப்பப்பார்விசும்புய்யத்தோன்றி
வரைபகமுருக்கிவெஞ்சூர்மாமுதறடிந்துமுந்நீர்க்
குரைகடலைகுடித்தவைவேற்குமரனுக்கன்புசெய்வாம் (ரு)

நந்திதேவர்.

அந்திவான்பிறையுமானுமடன்மழுப்படையுமேந்தித்
தந்திவீழுரிவைபோர்த்ததனிமுதலுருவந்தாங்கிப்
புந்திமாலகலஞானபோதகவெயில்விரிக்கு
நந்திவானிரவிநாடிகமதிருணலிவுசெய்வாம். (௬)

திருஞானசம்பந்தர்.

பொன்புனைக்கமலச்செல்விபோற்றுபேரெழிலுந்தூய
வன்புநல்லறமுங்கற்புமவ்வமாகஞான
முன்புருவமைந்தபேதைமுற்றியவென்புக்காவி
பின்பருள்புரிந்தகாழிப்பிள்ளைதாட்கன்புசெய்வாம். (௭)

திருநாவுக்கரசர்.

சூழிமால்யானைதாழப்பிணித்தகற்றுணைந்தாழா
தாழிவாய்மிதப்பமேலாமைந்தெழுத்துணர்விளங்கிக்
காழிவாழ்ஞானம்பூத்தக்கவுணியக்கொழுந்தைநட்ட
வாழிவாகீசர்வாசமலர்ப்பதம்வணங்கல்செய்வாம். (௮)

வெள்ளியங்கிரியைநீங்கிநாவலூர்மிளிரத்தோன்றி
யொள்ளியதோள்கபாகன்சாதனத்தோட்டிக்குள்ளாய்த்
தெள்ளியபரவையாழ்ந்துசங்கிலிசிமிழ்ப்புற்றுசு
தள்ளியகளிற்றின்பாததாமரைதலைமேற்கொள்வாம். (௯)

மாணிக்கவாசகர்.

துன்றிருணீங்குமாறுஞ்சுடரொளிதோன்றுமாறு
முன்றிருமறைகாணாதமுதலெழுந்தருளிப்பார்மேற்
றன்றிருஞானபாதமளித்தலுந்தனையுணர்ந்த
தென்றிருவாதவூரன்சேவடிசென்னிசேர்ப்பாம். (௧0)

தண்டியடிகள் மற்றைநாயன்மார்.

உண்டிதானஞ்சமானார்சேடமுண்டியர்வுண்ட
தண்டிதாள்போற்றிசெய்துதனிமுதல்விழியிற்றோன்றுங்
கண்டிதார்மார்புதிண்டோள்கரங்களங்கன்னஞ்சென்னி
கொண்டுதோமணிவோர்யாரேயவர்பதங்குறித்துவாழ்வாம். (௧௧)

தெண்டிரைபுவனிவானம்பாதலந்திகழ்வோர்தம்மிற்
பண்டிருவருங்காணாதபரமனுக்கன்புபூண்டு
வெண்டிருநீறுபால்வெண்ணிலவெனமிளிரப்பூசி
மண்டிருள்சீக்குந்தொண்டர்பதமலர்வழுத்தல்செய்வாம். (௧௨)

இதுவுமது.

அக்கமாமணிவெண்ணீறைந்தெழுத்திவையடைவுசேரத்
தக்கபேரன்பினோர்ந்துதரித்துணர்ந்தவர்தம்பாதச்
செக்கமலத்துக்கேற்றபணிவிடைதிருத்தினோர்தாம்
புக்கவர்க்கேவலாற்றும்புனிதர்தாள்போற்றிபோற்றி. (௧௩)

எறிபத்தர்.

மறிவைத்தகரனுக்கன்பர்கொடுவருமலரைச்சிந்தும்
வெறிவைத்தகளிறும்பாகும்வீடவெங்கணிச்சிவீசிச்
செறிபத்தரிடையூறீர்ந்துசிவநெறிவழாதுசெய்யு
மெறிபத்தரிணைத்தாளுள்ளத்திருத்தியெம்மிடர்கடீர்வாம். ()

புகழ்ச்சோழநாயனார்.

அளவிலாநிலைநாதற்குச்சேதிமமாதியாற்றிக்
களமதினோராதிர்ந்தசடைத்தலைகாண்டலும்பொற்
கிளர்முடிமிசைபரித்துக்கேழ்கிளரெரியின்மூழ்கும்
வளர்புகழ்ச்சோழனார்தம்மலரடிமுடிமேல்வைப்பாம். (௧௫)

கருவூர்த்தேவர்.

ஊர்ந்தனங்கருவூரனையுதரத்திலினியூராமை
சார்ந்தனங்கருவூரென்னத்தவந்திளைத்தாற்றித்தக்கோ
ரார்ந்தநங்கருவூரெந்தையாணிலையடிகள்பாதஞ்
சேர்ந்தநங்கருவூர்த்தேவர்சேவடிசென்னிசேர்ப்பாம். (௧௬)

அகம்படிமைத்தொண்டர்.

பிணித்தபூங்கொடிசூழ்வஞ்சிப்பிஞ்ஞகனினிதுவைகு
மணித்தகடிழைத்தசோதிவயக்குபொற்சினகரத்தி
னணித்தனபதிபோல்வாழ்க்கையடைந்தகம்படிமையாகப்
பணித்தகுற்றேவலாற்றும்பரிசனர்பதங்கள்போற்றி. (௧௭)

மெய்கண்டசந்தானத்தார்.

மொழிவழியொழுகுமன்பர்முன்புறுகருப்பையுந்திச்
சுழிவழியிழியாவண்ணந்துணைப்பதந்தலைநல்கி
விழிவழியருளினேற்றுமெய்கண்டசந்தானத்து
வழிவழிவருவோர்காமர்சேவடிவணங்கிவாழ்வாம். (௧௮)

சத்தியஞானியார்.

கதமலமடுவிற்றோயாதனுதினங்கருதுந்தூயர்
சிதமலரிதயவாவிமுகிழ்ப்பினுஞ்சிவபுரக்கோ
சதமலர்வதனவாசான்சத்தியஞானிஞானப்
பதமலர்தமியேனுள்ளத்தடங்கெழுபான்மைத்தாமால். (௧௧)

புராணவரலாறு.

வேறு.

அரனருட்கொண்டருணந்திசனற்குமரர்க்குரைப்பவவர்
வியாதர்க்கோதத், தரமொடவர்சூதமுனிதனக்குரைத்தபுரா
ணத்துட்டகைமைசான்ற, வுரைகருவூர்ப்பெருமைபலவுயர்பி
ரமகைவருத்தபுராணத்திற்பார், விரவுசிவகேத்திரகாண்டத்து
பரிபாகத்தில்விளம்புமன்றே. (௨௦)

அறையுபரிபாகத்திலீரைம்பானிருநான்குமறைந்தபின்
னர், முறையில்வருமத்தியாயத்தி லுரைபெருமைவடமொழி
யைவிண்ணோ, ரிறையருளின்மூழ்குமறையவர்முதலமுதுக்கு
றைவோரெவருந்தென்கா, லுறைமலயவரைக்கிழமைத்தவமு
னியன்றாரால். (௨௧)

உரைக்குதியென்றுரைத்தசதுமறைக்கிழவர்முதலியசீரா
னின்மிக்கோ, ரிரைக்குமிசைத்தமிழ்புனையிந்நூற்குறைவுதிர்
த்தெடுப்பரெனுந்திரத்தாற், சருக்கமிருபஃதாலேவகுத்தகவற்
பாவினமாய்த்தயங்காநின்ற, விருத்தவியல்யாப்புறுதிபயக்கநல்
லோர்வியக்கவெனவிளம்பினேனால். (௨௨)

இந்நூற்றருவடசொல்வித்துழியங்குரித்தெனதுநாவி
னெய்துஞ்,சந்தமார்தமிழ்க்கவிதைப்பணையேந்திமெஞ்ஞானச்

ணிகாப்பாக, வந்துநீர்வஞ்சிவனத்தொளிபூத்த புராணமெனை
வளர்ந்ததன்றே. (௨௩)

கருவூர்ப்புராணம்.

யாதுகாரணங்கருவூர்ப்புராணமிசைப்பதற்கிதுநாளென்
னின்முன்னோ,   ரோதுகாதைகளனைத்துமத்தலத்திற்பாதகர்
சென்றுறினுஞ்சிவன், றீதுறுவகைமுத்தராவரிஃதுண்மையெ
னுந்திறத்தால்யானுங், கோதுறுதவணெய்தியுய்வதுகாரணமா
கக்கூறலுற்றேன். (உ௪)

முத்தநிரைத்தொளிகவினுமுழுமதிவெண்குடைச்சகரர்
முரிமுந்நீ, ரித்தரணிபுரந்ததன்மேன்மூவைஞ்ஞூறெண்ணாந்
தாமெல்லையாண்டி, லத்தர்பசுபதிநாதர்சந்நிதானத்திலருளன்
பர்கேட்ப,   வுத்தமநற்பொருட்கருவூர்ப்புராணமிலகிற்கவென
வுரைத்ததன்றே. (உ௫)

நூற்பயன்.

சுருதிமறைதொடராதபசுபதிநாதன்சரிதைத்தொடர்பி
னொன்று, கருதியுளங்கேட்குநர்தாமுத்தியடைகுவரெனநூல்
கழறிற்றென்று, னிருமலராயவைமுழுதுஞ்செவிப்புலனுக்கமு
தமெனநிறையநல்கிப், பருதியெதிரிருளின்மலவிருளிரிப்போர்
பெறும்பயன்யார்பகரற்பாலார். (உ௬)

அவையடக்கம்.

அருள்விரவுசுரபிதருசராசரங்களனைத்தினையுமறிவுநெஞ்ச,
மொருவொருபுன்மாப்படைப்பலென மனமுன்னுதன்மானுமு
ரவுநூலிற்,   பொருவிலர்சொற்றிடுங்கருப்பபுரிவடசொற்புரா
ணத்தைப்பொதியவெற்பின், மருவுசெழும்பசுந்தமிழின்வகுத்
துரைப்பனெனத்துணிந்துமதித்ததம்மா. (உ௭)

மையறுநூற்கடறினைத்தாகமத்துறையிற்படிந்தமதிவல்
லோர்முன்னர், தையலலங்காரவதிமூலமுகட்டிற்புணர்பெரு
மான்சரிதைவீறால், வெய்யவன்புல்லியசொல்லும்விழுமியவா
ம்விழுமியசெல்வத்தின்மிக்கோர், செய்யபொருண்முடிதுகிலு
ங்கைக்கொளுவாரப்பொருளின்சிறப்பான்மன்னோ. (உ௮)

வேறு.

யானைமுதலடெங்களத்தினெறிபத்தர்கெடெங்களத்தின்
மானவடிவாளிடத்தான்மகிழும்வடிவாளிடத்தான்
கானுறுமான்பொருத்தத்தான்கரங்கொளுமான்பொருந்தத்தா
ஞனகர்வஞ்சியானடையிலருள்வஞ்சியான். (உக)

தூயொளிமேவிரும்பரசன்சுரரயன்மால்விரும்பரசன்
காயுவரிவிடமிசைந்தான்கௌரியுறவிடமிசைந்தான்
றீயர்புரம்பொருவில்லான்றேவர்தமிழ்ப்பொருவில்லா
ஞய்கருவூராதியானிசைகருவூராதியான். (௩0)

ஆனிலையாரவிர்துவசரலரவன்மாலவனகர்தை
யானிலையாரழலுருவமருவிநிமிரணிகருவூ
ரானிலையாரடிகளுக்காளாவீர்காளடன்மேதி
யானிலையார்கவர்கெடுஞ்சூலடுதொழிற்காளாகீரே. (௩௧)

பாயிரம் முற்றுப்பெற்றது.

வராககிரிச்சருக்கம்.

வேறு.

நீற்றுவாலொளிமேனியின்பாலொளிநிறைவெள்
ளேற்றுவார்கொடியுயரியவிறையவன்சரிதை
சாற்றுவாய்மையனசூதமாமுனிவரன்றவங்க
ளாற்றுவார்திகழ்நைமிசாரணியத்தையடைந்தான். (௧)

அடைந்தவேலையிற்சவுனகராதியாமுனிவர்
மிடைந்துசென்றெதிர்தழீஇக்கொடுமிகவளவளாவி
யுடைந்தவார்கடலொலித்தெனவேத்தெடுத்துரைத்துக்
கிடந்தவன்பொடுகொணர்ந்துதம்மிருக்கையிற்கெழுமி. (௨)

ஆயிடைத்தவிசேற்றிநின்றருக்கியமுதவிச்
சேயிடைப்படர்கவலையின்வருத்தங்கடீர்த்து
நீயிடைப்படயாங்கள்செய்தவமெனநிகழ்த்தித்
தாயிடைப்படாரினியநன்முகமனுஞ்சாற்றி. (௩)

வேதநூற்கடற்கரைகண்டவியாதனேயனைய
சூதமாதவசுதைமதிக்கண்ணிசூழ்வேணிப்
பூதநாயகன்புண்ணியபுராணத்திற்போக்குங்
காதலோமிகவுடையயாங்கழறலொன்றுளதால். (௪)

நன்றுசொல்லினீர்நனிதவமிழைத்துமுக்குறும்பும்
வென்றுநாற்பொருண்மேற்படுகேள்வியின்மிக்கீர்
மன்றுளார்புரிவைதிகசைவத்தின்வழியி
னின்றுளாரலால்யாவரேகதியிடைநிலைப்பார். (௫)

வேறுதேவுளனுயர்கதிதருமெனவிரும்பி
லூரியாவையும்யாரையும்வந்தழியொடுங்க

19

வாறுசேர்சடிலத்தனேநித்தனென்றறிதிர். (௬)

சிவனதுண்மையைந்தெழுத்துமேதிகழ்திருவெழுத்து
சிவனைநோக்கிநின்றாக்கியதியானமேதியானஞ்
சிவனதன்பருக்காட்படுஞ்செல்வமேசெல்வஞ்
சிவனதக்கநீறணிக்கிடுஞ்சின்னமேசின்னம். (௭)

அங்கணன்றலத்தாற்றியவறங்களேயறங்க
டிங்கள்வேணியன்சந்நிதித்தீர்த்தமேதீர்த்தம்
புங்கவன்றனக்காற்றியபூசையேபூசை
சங்கரன்றனையேற்றியசரிதமேசரிதம். (௮)

அன்னவாகலானவிர்மதிகொழுந்தமுதிறைக்கும்
பொன்னவாஞ்சடைப்புங்கவன்சரிதையின்முதியோர
சொன்னவாறுகேட்பதுமுயன்றீருளர்துணிவா
லென்னைநீர்வினவியதனைமொழிமெனவிசைப்பார். (௯)

வாதராயணனருண்மொழிவழிபயில்கேள்விச்
சூதமாதவசுடர்மணித்தொகுதியுமகிலுஞ்
சீதவார்பொழிற்சிகரியிலருவிகொண்டிழியும்
வேதநீடுருவாயதோர்வெள்ளியங்கிரியில். (௧௰)

மாலயன்புரந்தரன்றவம்புரியுமாமுனிவர்
மேலவானவர்தானவர்விஞ்சையரியக்கர்
நூலினுண்ணுணர்வுடையவர்பூசுரர்நோன்மை
சாலுமாதிரக்கிழவருஞ்சென்னிதாழ்ந்திறைஞ்ச. (௧௧)

நிறையுமன்புடன்சனகருநெக்குநெக்குருக
வறைதரும்புகழ்ச்சனந்தனரஞ்சலிருத்த
மறைவனந்தருசனாதனர்வணங்கிவாழ்த்தெடுப்பக்
குறைவருஞ்சநற்குமரருட்குழைந்துகைகுவிப்ப. (௧௨)

உலகெலாந்தரும்பரம்பரையொருமருங்கிருப்ப
வலகினூன்மொழிக்குமரவேணனந்தலையமர
நிலவுநீடுதத்துவம்புணர்ந்தகன்றுநின்மலமா
யிலகுபேரொளிக்குள்ளொளியாகியவிறைவன். (௧௩)

கமைத்தவம்புரிமயன்கண்டுகெற்கவுமரிதாச்
சமைத்தபொற்சினகரத்திடைத்தாபதருளம்போ
லமைத்ததூயவத்தாணிமண்டபத்தினுளரிமா
ணிமைத்தமாமணியாதனத்தினிதுவீற்றிருந்தான். (கச)

தலைவன்மாமணியாதனத்திருந்துழிதலத்தின்
றலைவில்கேள்வியன்சநற்குமாரன்றொழுதெழுந்து
நிலையினிற்றலுந்திருவுளத்துணர்ந்தருணிமலன்
கலைபயின்றுணர்நந்திபாற்கடைக்கணோக்கருளி. (கரு)

வருகநந்தியாம்வைகுநற்றலங்களும்வளனு
முருகுமன்பினன்சநற்குமாரன்றனக்குணர்வு
பெருகநீயறைகுதியெனப்பிஞ்ஞகனருளா
லருகணைந்தவம்முனியொடுந்தனதிடனணைந்தே. (கசு)

எந்தைநின்னுழையருள்சுரந்திசைப்பதற்கியைய
முந்தையெத்துணைத்தவமிழைத்தனன்முனியென்றுச்
சிந்தைவைத்துநற்றானங்கடெளிவுறவோதி
விந்தைசேர்தலப்பெருமையும்விளம்பமேயினனால். (கஎ)

ஓதுதொல்பதியவற்றினுளுதியர்கோனாட்டின்
மீதுயர்ந்தவாம்பிரவதிநதிக்கரைமிசையிற்
றீதுபோதுமிழ்வஞ்சுளாடவியெனச்சாற்று
மாதிமாபுரச்சிறப்பினையன்றுரைத்தனனால். (கஅ)

அம்மநுண்பொருளதன்பயனகத்திளைப்பரிதா
லெம்மனோர்புலன்றெளிவுறவிரித்தினிதெவையுஞ்
செம்மையாலொருபொருளிருகாற்செப்புகென்றார்
மும்மையுந்தெரிசவுநகர்முதலியமுனிவர். (ககூ)

சொற்றவாசகங்கேட்டலுஞ்சூதமாமுனிவன்
முற்றநோற்றமாமுனிவிர்நீராதலான்முதல்வ
னுற்றவாதிமாபுரித்திறனோதுகென்றுரைத்தீர்
மற்றையார்நமக்கொப்புளார்முனிவரின்மன்னோ. (உ௦)

தீருதற்கரும்பாவங்கடீரும்வெண்டிரைசூழ்
பாரினுட்பெருந்திருவரும்படித்தமைகேட்பிற்
சாருதற்கருங்கதிவருஞ்சத்தியமென்றால்
யார்கொலத்தலக்கதையினைவரையறுத்திசைப்பார். (உக)

இன்னணஞ்சிலவுண்மைகள்பயக்குமாறியம்பிப்
பன்னருந்தவவியாதனைப்பன்முறைபரவி
யன்னவன்பதநினைந்தவனுதரம்பெருகிச்
சொன்னவாறுகேட்குதிரெனச்சொல்லுகின்றனனால். (உஉ)

வேறு.

புனிதவெண்ணீறுநிலவுதல்போலப்புனிற்றிளம்பிறைநிலா விரிக்குந், தொனிகெழுமந்தாகினிநனிபுனையுஞ்சுடர்முடியடிகளையிறைஞ்சிப், பனிவரைமேருவுயரியகயிலைப்பருப்பதமெனப்புகழ்நிறுவித், தனிநெடுங்கவிகைநிழற்றுசேரலர்கோன்றங்கியகொங்குநன்னாடு. (உங)

முதியவர்தொழும்பேரூர்சதுமறையோர்முறைதொழுந்திருவவிநாசி, வதிதருபவானிகூடல்செங்கோடுவெளர்கொடுமுடிநெடுமாயன், விதிபுகழ்முருகன்பூண்டிவெள்விடையோன்வெஞ்சமாக்கூடலுமேனைப், பதிகளுமுளவந்நாடுதென்றென்பாற்பன்றிவெற்பொன்றுளதன்றே. (உச)

குடுமிதொட்டிழியுங்கவிழ்தலையருவிதாழுதல்குளிர்பசும்பொதும்பர், நெடுமலர்பொதுள்பைந்தளிரிளங்கொம்பர்நீணுதிநிரைநிரைபொதுப்ப, நடுமுகடகல்வான்புழைபடுவழியினறுமணிகொழித்தெறிதிவலைப், படுதிரைசுருட்டியலைத்தெழூங்கங்கைப்பாய்புனலொழுகுதன்மானும். (உரு)

கானலந்திகழ்தண்டலையதன்புறனுங்கழிபெருமுழையுளவேனு, மூனலனுகருமுழுவைவெம்பேழ்வாய்பிலமெனத்திறந்திடுமொருசார், தேனலன்பருகிப்புனமெறிந்துழுநர்சிறுகுடிப்பெரியதொல்வளஞ்சே, ரேணமால்வரைதானென்னினும்யானைமலையெனத்திரிதருமொருசார். (உசு)

எழில்கண்டபிலுங்குகட்டயன்மேயுமிரலைவானுயர்முகடணையு, முழுமதிக்கலைரயைப்பிணையெனத்தாவமுரட்புரிக்கோடசென்றுரிஞ்சிப், புழைபடவெழியினிழிசுதையமுதம்பூங்குறக்கொடிச்சியர்தினமு, முழுகலுமுகந்துநுகர்தலும்யாவுமதுவெனின்மொழியுமாறெவனே. (உஎ)

நிறையரமகளிர்பொன்னகர்துறந்துசாரலினிலைத்தலாகொய்வார், பிறைதவழ்சாரற்கொடிச்சியர்விசும்பிற்பெயர்ந்து கற்பகமலர்கொய்வார், குறைவறுதிருவுந்தொழிலுநல்லெழிலுங்குணங்களுமொருங்குளவிவரை, யறிவரிதெனினுங்கண்ணறிவிக்குமன்றிமற்றுர்கொலோவறிவார். (உஅ)

தளர்நடைத்தென்றறிரிவனமொருசார்சந்தனச்சோலைகளொருசார், கிளர்பசும்புயல்கண்டபில்வனவொருசார்கின்னரமிதுனங்களொருசார், வளரமைதாளஞ்சொரிவனவொருசார்மதமிபஞ்சொரிவனவொருசா, ரிளகுதேனிழியுமிருவனமொருசாரிறவுளர்குரம்பைகளொருசார். (உகூ)

பலவிதருசெறிதாபரங்களினாலும்பஃறலைமுடிகளினாலுங், குலவுபூஞ்செடிப்பைங்கொடிகளினாலுங்குகைகளின்றொகைபலவாலு, மலமடைதூரப்பாற்றெறிதலினாலுமாழைநுண்ணுதிபலவாலு, மூலவுசிர்வாலகில்லியரென்னுமொருவகையிருடிகளாலும். (கூ0)

கண்ணுறக்காண்போருண்ணிகழ்பாவங்கலத்திறவரந்தரலானும், புண்ணியச்சாந்தங்கண்டிகைபுனையும்புனிதமாமுனிவரரானு, மெண்ணருங்கோடிசித்தர்களானும்யாவையுந்தருந்திறலானுந், தெண்ணிலாமுடியோனுறைதலானுந்திப்பியமலையெனத்திகழும். (கூக)

வேறு.

முன்பதன்வரன்முறைமொழிந்துநூல்பய
லன்பினன்காசிபன்மரபிலாயவன்
மன்பதைபரவுசீர்வராகமாமுனி
யென்பவன்றுறவினிலேதமில்லவன். (கூஉ)

வாலியவடிசிலோர்பாதிமற்றையோர்
கால்வயினறும்புனலயின்றுகால்விட்டுக்
கோலியவிரதமேற்கொள்ளும்பான்மையா
லேலுறுமிரதர்களென்னவுமெய்தினேன். (௯௩)

ஆற்றருநோன்புகளாற்றியாடல்வெள்
ளேற்றினன்றிருவருட்கேறபச்செய்குவன்
சாற்றருநான்மறைக்கடவுட்டாழ்ந்தவ
னீற்றணியுயரியநெறிவழாதவன். (௯௪)

சரியையுங்கிரியையுந்தவறிடாதிழைத்
தரியஞானத்தனையடைகுவானதற்
குரியயோகங்களையுஞற்றவேண்டினன்
விரியுநான்மறைவழிவியந்துநோக்குறா. (௯௫)

காத்திருப்பிலவிற்றறிஞர்களுவதற்காளாயினர். (கசரு

யாதுபுரியினும்பொறுப்பதிசையரசர்க்கென்விறைஞ்சி
யாதுபுரிகுதலெனவேந்தகன்றனனுணவிருள்போ
யோதுமருர்தவருழிஞானேதயமூற்றுங்கிருண்மைப்
போதுசிதைக்கதுக்குணயாற்பொருந்தினன்செக்கிரப்புத்தே

கறைகெழுமாமணிமிடற்றார்கனைகழற்சேவடிமலரின்
மறையவரின்றடைகின்றாரென்பனமங்கலவார்த்தை
யறையுவரிநீருலகிலறிவிப்பான்போலெழுந்து
முறைமுறைறவைகறையின்மறைமுகாதழுழங்கியசங்கம். (௧௪

ஆதித்தனெழுமமையத்தந்தணர்தத்தமிற்குழுமிச்
சாதித்தன்மையைநீங்கிச்சாதித்தனமையணுகிப்
போதித்தாரணிதிணிதோட்புரவலற்குமமரையெல்லாம்
பேதித்தாரணியமுறப்புரிவிததான்பெரிதுமென்றே. (௧௪௮)

ஏற்றவனையுறந்தண்டமிழைத்திதுபோழ்தெல்லோரும்
வேற்றொருநன்புலத்தடைதலவியப்பெனவான்பொருனைகதி
யாற்றொருதீரத்தடைந்தாரருந்தவரன்றடைகின்ற
பேறதினையோர்ந்திலர்வேதம்பிதற்றியபிராந்தரெலாம். (௧௪௯)

முற்றுமருந்தவத்தினருமுதிதிரையாம்பிரவதியி
னுற்றனரவ்வுழியடர்ந்துகெருங்கமறையோரையுளந்
துற்றபுலப்பகையெனககணடகன்றுசுடர்க்கோயில்புக்கார்
மற்றவர்கண்மருண்டுதிசைமயங்கிமறுகிடைநின்றார். (௧௫௦)

கங்கைபுனைவார்கோயிற்கலந்தகருவூர்த்தேவர்
பொங்கருள்கூர்சிவயோகம்புரிந்ததுமுற்றியதேயோ
வங்கவரன்போதவமோவாதரமோயாதுகொல்லோ
தங்கைகொடுதிருவுருவைத்தழுவினாசரணடைந்தார். (௧௫௧)

படர்ந்தெழுதுந்துமியார்த்தபணிமலர்சிந்தினவானந்
திடந்தகடற்புவிகுழுமிக்கெழுமியதிசயம்விளைத்த
தொடர்ந்தமறையவர்துளங்கித்துகடீர்ந்ததூயவரை
யடர்ந்தனமென்றழுதுவிழியருவிசொரிதரநின்றார். (௧௫௨)

எங்குற்றீர்துகடீர்ந்திரிதுதெரியாதிடரிழைத்தே
மங்குற்றேநகரிலென்றேவருக்துமன்றயனர்தேறத்
தங்குற்றீர்கருவூரார்தமதுகுலமாதவிறு
மிங்குற்றமிரிந்ததெனநுவன்றவிசும்பிடைவாணி. (௧௫௩)

மறையுயிர்த்தாரழல்வேள்விவளர்ப்பவரும்மகிழ்தூங்கக்
கறையணக்கர்கோதாருங்கணத்தர்மணிகுயிற்றுமறை
யறைநகழற்றண்மலரிலருச்சனையாற்றியாதிசைவத்
துறைகெழுமாகமச்சலதிதனைத்துசுகோதயராரூர். (௧௫௪)

வேறு.

அந்தணர்தொகுதிவாழ்கவானினந்தழைகமாரி
சந்ததம்பொழிகசைவந்தலையெடுத்திடுகவேந்த
ரிக்கிராதருவினோங்கவெம்பிரானன்பர்சூழ்க
சிந்துவெண்டிரைநீர்ஞாலந்திருமகள்வளர்கமன்னோ. (௧௫௫)

வெண்டிருநீறுபாரில்விளங்குகமிளிர்செவ்வேணி
யண்டர்நாயகனார்நாமவைந்தெழுத்தருளினோங்கப்
பண்டைநான்மறையுமாகமங்களும்படர்கவெங்குந்
தொண்டருந்தொண்டர்சாற்றுப்புராணமுஞ்சூழ்ந்திலங்க. ()

ஞானதேசிகர்சீர்மங்கசாற்பெருங்கவிதைசூழ்க
தேனலர்ப்பொழில்சூழ்வஞ்சித்திருநகர்வளஞ்சிறக்க
வானவர்நாதன்பூசைவளப்பெருந்திருவினோங்க
தானமுஞ்சமயமாறுந்தலத்துளோர்யாரும்வாழ்க. (௧௫௭)

கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம்முற்றுப்பெற்றது.

ஆகசருக்கம் ௨௧-க்கு திருவிருத்தம்-௧௧௨௧.

கருவூர்ப்புராணம் முற்றிற்று.

மெய்கண்டதேவர்

மெல்லடிவாழ்க.

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

—o—

கருவூர்ப்புராண வசனம்.

காப்பு.

வஞ்சிவனத்தின்வளங் கூறுவாமதில்வாழ்
குஞ்சரத்தின்பாத முளங்கொண்டு.

புராணவரலாறு.

கலைமாமதிசூடியகடவுள் கடல்சூழுலகத்திடையமருந்
தலமான்மியத்தையருணந்தி தம்பாலுணர்ந்தசனற்குமரன்
சொலவாங்கதுதேர்வியாசமுனி சூதர்க்குரைப்பவவர்வழிச்சௌ
பலமாமுனிவர்தொழுங்கருவூர்ப் பசுபதீசப்பெருமானே.

கருவூர்த்தலமான்மியமானது கிருபாசமுத்திரமாகிய திருநந்திதேவர் சனற்குமாரமகாரிஷிக்கும், அவாவேதவியாசமுனிவருக்கும், அவர் சூதபுராணிகருக்குந் திருவாய்மலர்ந்தருளிய பதினெண்புராணங்களுள் பிரமகைவருத்தமென்னு மகாபுராணத்திலே சிவக்ஷேத்திரகாண்டத்திலே நூற்றொன்பதாம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது,

வராககிரிச்சருக்கம்.

மகவாயுயர்காசிபமுனிதன் மரபிலுதித்தவராகமுனி
மிகவேயோகசித்தியினை விரும்பிச்சிவபூசனையாற்றி
யிகலொன்றின்றிமுத்தியினை யெய்தும்வராககிரிச்சாரற்
பகலோனுழையாப்பொழிற் கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

முனிபுங்கவராகிய சூதபுராணிகர் ஒருநாள் நைமிசாரணியத்தை யடைந்தபொழுது சவுனகாதிமகாரிஷிகள் வந்தனவழிபாடுசெய்து வஞ்சுளாரணியமாகிய கருவூர்மான்மியத்தைமுன்னொருகாற்கேட்டு மமைவுபெற்றிலோம் மீட்டுந்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சூதபுராணிகர் சொல்வாராயினார், வெண்கொற்றக்குடையினையுடைய சேரராஜனால் அரசுபுரியப்பட்டகொங்குநாட்டிலே கருவூர், பேரூர், அவிநாசி, பவானிகூடல், திருச்செங்கோடு, திருப்பாண்டிககொடுமுடி, திருமுருகன்பூண்டி, வெஞ்சமாக்கூடல், முதலியபலதலங்களும் தென்புறத்திலே வராககிரியென்னும் மலையுமிருக்கின்றன. அவற்றின்வளமைசொல்லுதற்கரியன. அம்மலையிடத்துப் பற்பலசித்தர்களும் முனிவர்களும் வசித்தலினாலும் சிவபெருமான் திருக்கோவில்கொண்டெழுந்தருளி யிருத்தலினாலும் சிரேட்டமுட்மைபெற்றது. அதன்வரலாறு சொல்லுதுங் கேட்பீர்களாக. காசிபகோத்திரத்திலே துறவறத்திற்சிறந்தவராகிய வராகமுனிவரென்பவர் ஒருவரிருந்தார். அவர்சரியாபாதம் கிரியாபாதங்களில் வல்லவராகிச் சிவயோகம்செய்தற்கு நல்லதலம்நாடி இந்தக்கிரியைஅடுத்து வன்னிமரத்தருகில் சிவலிங்கமொன்றுதாபித்து பூசித்துவந்தார். சிவபெருமான் பிரசன்னராய் யாதுவேண்டுவதெனவினவ, பெருங்கருணைத்தடங்கடலே? உமதுதிருவருளால் சரியைகிரியையெனனும் இரண்டுபாதங்களுமுணர்ந்தேன். சிவயோகத்தைஅடியேனுக்கு அனுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச்சிவபெருமான் திருவுளங்கூர்ந்து வராகமுனிவனே? யோகமானது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென எட்டங்கங்களையுடையது. என்று அதன்விரிவையும் திருவாய்மலர்ந்தருளி இம்மலையானது யோககிரியாக ஆதியிலேயே படைக்கப்பட்டதாதலின் இதனிடத்து நீயோகசித்திபெற்றுமுத்தியடையக்கடவை. உனக்குயோகீசனென்னும் பெயரும் இம்மலைக்கு நீபூசித்தகாரணத்தால்வராககிரியென்னும் பெயரும் உண்டாகுகவென்று அனுக்கிரகஞ்செய்து மறைந்

தருளினர். அவ்வாறே வராகமுனிவர் யோகீசராய் முத்தி பெற்றார். இம்மலையும் வராகமலையென்று வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது,

ஆம்பிராவதிநதிச்சருக்கம்.

வேதம்பரசுங்கிரியிடத்துவிமலையருளேயுருவாகிச்
சூதநதியாம்பிராநதியென்றுயர்பேர்சூடித்தோய்ந்தவர்தம்
மேதமகற்றிமருங்கிருபாலெண்ணில்சிவத்தானம்மருவிப்
பாதம்பணியக்கிருபைசெயும்பசுபதீசப்பெருமானே.

ஓர்காலத்திலே மழைபெய்யாதுமன்னுயிர்கள் வருந்தும் பொழுது சிவபெருமான் உமாதேவியைநோக்கி நீவராககிரியைச்சூழ்ந்த நாடனைத்தும் உய்யும்பொருட்டு அக்கிரியினின்றும் ...ாதுகலையை நதியுருவமாகவரும்படிசெய்யக் கடவாயென்று ஞ்ஞாபிக்க, அவ்வண்ணமே உலகமாதாவாகிய உமாதேவியாரவ வராககிரியினின்றும் தமது அருளையே நதியுருவாக ஒழுகச் செய்தனர். அந்நதியினிருமருங்கிலும் பல்லாயிரம் முனிவர்கள் மாவிருக்கமாகவிருந்து தவஞ்செய்தார்கள். அந்நதி அமமையின்திருவருளேயுருவாய்வருதலின் அம்பாநதியென்றும், ஆம்பிரமென்கிற பெயரையுடைய மாமரங்களினது நீழலில்வருதலின ஆம்பிரமாநதியென்றும்பெயர்பெறும். காமதேனுவானது கருவூரையடைந்து பூசிப்பதற்குமுன்னர் இநநதியையடைந்து இருமருங்கிலுமுள்ள பலசிவத்தானங்களைப்பூசித்தபடியால், இந்நதிக்குப் பொருனையென்னும் பெயருமுள்ளது. அந்நதிவராககிரியினின்று மிழிந்து இருகரையிலுமுள்ள பலசிவஸ்தலங்களையும் வணங்கிக் காவேரிநதியுடனே திருமுக்கூடல்என்று மியைந்திற்கலத்தலைச்செய்யும். அந்நதிக்கரையில் வராகமுனிவரால் பூசிக்கப்பட்ட யோகலிங்கமென்னும் தலமுதலாக திருமுக்கூடலீறாகத்,தேவர்கள்,இருடிகள், சித்தர்கள், வாலகில்லியரென்னும் இயக்கர்கள்; விநாயகசுப்பிரமணியர்கள்; பிரமவிட்டுணுக்கள்,

முதலாயினோர்பூசித்த அளவிறந்ததலங்களுமுள்ளன. அவற்றுள் சந்திரன் குருபத்தினிசாபந்தொலையப்பூசித்த சோமேசலிங்கமும், அனந்தகணேசனென்னும ஒருஇலிங்கமும், வெண்மணலைக் குவித்து அகத்தியர்பூசித்த அகத்தியலிங்கமும், காஞ்சேசன் என்னும் இலிங்கமும், அடுத்தபிரம்புவனத்திலே தெய்வீகஆரிஷலிங்கங்களும், கொங்கணேசமென்னுந்தலத்தில் கொங்கணேச்சுரன்என்னும் இலிங்கமும், காளீசனென்னுமிலிங்கமும், தாரகாகணங்களாற்பூசிக்கப்பட்ட தாரகேச்சுரனென்னுமிலிங்கமும், வீரபத்திரர்பூசித்த வீரேசனென்னும் இலிங்கமும், விசாலலிங்கமும், காட்சிலிங்கம், திலகுலேச்சுரலிங்கம் முதலியவிலிங்கங்களுஞ்சிறந்தன. அவற்றுள்ளும் ஆதிமாபுரமாகிய கருவூரிலே பஞ்சவிலிங்கங்கள்என்னும் ஐந்துஇலிங்கங்கள் மிகச்சிறந்தன.

அவைவருமாறு:—

௧. புற்றிடங்கொண்டெழுந்தருளிய ஆதிநாயகனென்னும் பசுபதிலிங்கம்.

௨. அதன்கீழ்பால் கோடீச்சுரலிங்கம்.

௩. அதன்கீழ்பால் கயிலாயநாதலிங்கம்.

௪. அதன்தெற்கே கரியமாலீசாஎன்னுமிலிங்கம்

௫. அதற்கு அக்கினிதிக்கில் ஆம்பிராநதிக்கரையில் வஞ்சுளேச்சுரலிங்கம், என்பனவைகளே.

அன்றியும் வஞ்சுளேச்சுரத்துக்குக்கிழக்கே அரசவனத்திலே திருமால்பள்ளிகொண்டருளியதலமும் ஒன்றுளது. அந்நதி காவேரிநதியுடன்கலக்குமிடத்திலே மணியீசன்என்னும் சிறந்த லிங்கமொன்றிருக்கின்றது. இவ்வாம்பிராநதியொன்று, மணிமுத்தாநதியொன்று, காவேரிநதியொன்று, ஆகமூன்றுநதிகளும் ஒருங்குகூடுதலாலவ்விடத்திற்குத் திருமுக்கூடலென்று பெயர். இங்ஙனமாகிய ஆம்பிராநதியின் வளங்களையும் அதிலாடினோர்பெற்றபேற்றையும் இனைத்தெனக்கூறுதலரிது.

நான்காகாவது,

சராசரச்சருக்கம்.

மேலாம்பிரமன்றுயில்கூரவிளிந்தசரத்தோடசரமெலாம்
மாலாய்ப்படைக்கக்கருதிவெண்ணெய்வரையின்பாங்கர்ச்சுரபி
தவம், கோலாநின்றுசராசரத்தின்சுவடுநோக்கிச்சிருட்டிசெய்
து, பாலாற்பூசைபுரிந்தேத்தும்பசுபதீசப்பெருமானே

உலகத்தின்கண்ணுள்ள நால்வகையோனி யெழுவகைத் தோற்றமாகிய சராசரங்களனைத்தும் பிரமதேவரானவர் துயில் கூரும்இரவில் அந்தரப்பிரளயத்தினு லழிவுபெற்றன. பிரமதேவர் துயிலொழிந்து சராசரங்களின் விளிவைநோக்கிப் பெரிதும்வருந்தி முன்போலமறுபடியும்படைக்கத்தொடங்கினர். அத்தொழில்கைகூடாது இடர்ப்பட்டு அதனைவிடுத்துக் கைலயங்கிரியிலே சிவபிரானைநோக்கித்தவஞ்செய்தனர். அதன்முன்னரே சிவபெருமான்சிருட்டியை நினைந்தபொழுது காமதேனுவந்துவணங்கியது. அதனைநோக்கி நீபூமியின்கண்சென்றுபிரமதேவனைப்போல் சிருட்டித்தொழில்செய்யக்கடவாயென்று ஆஞ்ஞாபித்துவிடைகொடுத்தனுப்பினர். பின் ப்பிரமதேவருக்குப் பிரசன்னராகப்பிரமதேவரானவர் அடியேன் துயின்றமையால் சராசரங்கள்அழிந்துபோயின. அதனாற்பாவமுமறதியும் சம்பவித்தன. அப்பாவம் நீருமபொருட்டுஞ் சிருட்டித்தொழில்கை வரும்பொருட்டுந் தேவரீரை அருச்சிக்க விரும்புகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் அங்ஙனமேல் நீ ஆம்பிராநதிக்குவடகரையிலுள்ள கருவூரையடைந்து அங்குநம்மைபூசிப்பாயாகவென்று அருளிச்செய்தார். அவர்பூசித்தவாறும் சிருட்டிபெற்றவாறும் பின்னர்க்கூறப்படும் அதுநிற்க. முன்விடைபெற்றகாமதேனுவானது பூலோகத்திலே தென்றிசையையடைந்து தவஞ்செய்யநல்லதலம்யாதென்று நாடுங்காலையில், நாரதமகாரிஷியானவர் அதனையெதிர்ந்து, தேனுவே! ஆம்பிராநதிக்கரையில் வஞ்சுளாரணியமொன்றுள்ளது. அங்குச்சென்றுதவம்புரி

வையாயின் இஷ்டசித்தியெளிதிற்பெறுவாயெனக் காமதேனு வர்க்கிரியையடுத்து அங்கிருக்கும் ஆம்பிராநதிக்கரையிலுள்ள புலதலங்களையும்வணங்கி வஞ்சிவனத்தைக்கண்ணுற்று நாரதர் மொழிப்படி தவஞ்செய்துகொண்டிருந்தது. ஓர் நாள், காமதேனுவே! இந்தவஞ்சிவனத்திலே ஒருபுற்றினிடத்திலே பாதலத்தினின்றுந்தோன்றிய ஆதிலிங்கமென்னும் ஒருமகாலிங்கம் இருக்கின்றது. அதனைப்பூசிப்பாயாகவென்று ஆகாயத்தினின்றும் ஒருவாக்குளெழுந்தது. அவ்வாக்கின்படியேசென்று புற்றினிடத்தெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைக்கண்டு அத்தியந்தபரவசமடைந்து அந்தமகாலிங்கத்துக்கு பால்முதலியஉபகரணங்களால் அபிடேகநைவேத்தியமுதலியனசெய்து வசித்துக்கொண்டிருந்தது. பின்னர் ஓர்நாள் சிவலிங்கப்பெருமானது திருமுடியின்வாமபாகத்திலே காமதேனுவினது காற்குளம்புபட்டு உதிரஞ்சொரிந்தது. அதனைநோக்கி, ஆ, கெட்டேன் இதற்கென்செய்வேனென வருந்தாநிற்புழி, சிவபெருமான் பசுவே! உன்மீதுபிழையில்லை அதுநமது திருவிளையாட்டானிகழ்ந்ததாதலின் அதற்காகநீவருந்தற்க. இன்றுமுதல் நீபூசித்தகாரணத்தால் எம்மைப்பசுபதிநாயகனென்று முப்புவனங்களும் போற்றக்கடவன. நாம்இருக்குமிவ்விடத்திற்குத் தென்கீழ்த்திசையிலே சராசரங்களின் அடிச்சுவடுகள் அடையாளங்களாகவைக்கப்பட்டிருக்கின்றன. பிரளயங்கடோறும் பிரமதேவன்முதலாயினோர் படைத்தற்றொழிலை நமதனுக்கிரகத்தினால் அவ்வடையாளங்களைநோக்கியே செய்யாநிற்பர் நீயுமங்குச்சென்று நம்மைச்சிந்தித்தால் படைக்குமாற்றலை பெறுவாய் என்று அருளிச்செய்து மறைந்தனர். காமதேனு அவ்வாறே தென்கீழ்த்திசையையடைந்து சராசரங்களின் அடிச்சுவடுகளிருத்தலைநோக்கிச் சிவத்தியானஞ்செய்து படைக்கத் தொடங்கிற்று. சராசரங்களனைத்தும பழமைபோலவே படைக்கப்பட்டன. அவைகளின் புசிப்புநிமித்தம்வடதிசையிலேவெண்ணெயமலையென்று ஒருமலையைவகுத்து அதன்கீழ்த்திசையிலே தேனு

தீர்த்தமென்று ஒருதீர்த்தமகழ்ந்து சிலகாலம்சிவார்ச்சனை செய்துகொண்டிருந்து பின்னர் சுவர்க்கலோகஞ்சென்றது. வெண்ணெய்மலையானது தரிசிப்போர்க்கு இட்டசித்திகளைவேண்டுவோர் வேண்டியவண்ணங் கொடுப்பதுமன்றி உட்டினகாலத்தும்தண்ணென்றிருத்தலால் அதன்பெயரை விளக்கும்.

௫ந்தாவது,

அலங்காரவதிச்சருக்கம்.

மண்ணின்மீதுசிவதலத்துள்வஞ்சிவனமேசிறந்ததென
வண்ணலருளலங்காரவதிகேட்டிந்தத்தலனடைந்து
பெண்ணினல்லார்தம்மோடும்பிரசமலர்தூய்ச்சிவபூசை
பண்ணவவட்குப்பாகமருள்பசுபதீசப்பெருமானே.

கைலையங்கிரியிலே எழுந்தருளியிருந்த எம்பெருமானைஎம்பிராட்டியெழுந்துவணங்கிச் சர்வலோகைகநாயகரே பலவிதமாகிய தவங்களினும் உயர்ந்ததாய் செய்தற்கெளியதாயரிய பலனைத்தரத்தக்கதவம்யாது, அதனைத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யச் சிவபெருமான் எல்லாத்தவங்களினுஞ்சிறந்தது சிவார்ச்சனைசெய்தலொன்றேயாமென்றருளிச்செய்தனர். மகாதேவியார் மீட்டும்வணங்கி அடியர்கள் சிவபூசைசெய்தல்வேண்டும். எந்தவிடத்திற்செய்வது விசேடமாகுமென்பதனையும், அருளிச்செய்யவேண்டுமென்றிரப்பமகாதேவரானவர் வஞ்சுளாரணியஞ்சூழ்ந்தகருவூரே அதற்குத்தக்கதலமென்று அனுக்கிரகஞ்செய்தருளினர். உமாதேவியார் அனுஞ்ஞையைப்பெற்று இலக்குமி சரஸ்வதிமுதலிய தேவியர்களோடு அலங்காரவதியென்னும் பெயரோடு பூலோகத்தையடைந்து வஞ்சுளாரணியத்திலேசென்று ஆம்பிராவதிநதியிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து திருநீறு அக்கமணிமுதலிய சிவசின்னந்தரித்து ஆகமவிதிவழுவாமற்பசுபதிநாயகரைப்பூசித்தார். இலக்குமிசரஸ்வதிமுதலிய தேவமாதர்களும் பூசித்தார்கள். சிவபெருமான

அலங்காரவதியார்பூசையையுவந்து அவருக்குப்பிரியாவரந் தந்தருளி யுடனிருத்தினுர். மற்றதேவமாதர்களுக்கும் அவரவர் விரும்பியவரங்களைக் கொடுத்தருளினுர்.

பிரமச்சருக்கம்.

வையம்படைக்குமாற்றலினை மறந்துமலர்மெல்லணைக்கிழவன்
துய்யவரம்பெற்றொருகேள்விதொடங்கிச்சொல்லின் கிழத்திமணந்,
செய்யச்சிறுட்டிதந்தவன்செய்தீர்த்தமுவந்துபடியுனர்க்குப்,
பையப்பழுக்குமருட்கனியேப்சுபதீசப்பெருமானே.

முன்னர்க்கூறியபடி பிரமதேவரானவர் ஸ்ரீகயிலாயத்திலே சிவபெருமானிடத்திலே உத்தரவுபெற்றபின்னர்க்கருவூரையடைந்தார். பாவங்களுக்குப் பகையாகவொழுகும் ஆம்பிராநதியிலேமூழ்கி விபூதியுருத்திராக்கமுதலிய சின்னங்கள்தாங்கி ஆதிலிங்கப்பெருமானைமெய்யன்போடுவிதிப்படி பூசித்துக்கண்களானந்தவருவிசொரிய மெய்புரோமாஞ்சிதங்கொள்ளநாத்தழுதழுப்பநின்று பலவாறுபுகழ்ந்து தோத்திரித்தனர். சிவபெருமானெதிரேதோன்றி வேண்டியவரங் கேட்பாயாகவென்று திருவுளம்பற்றப்பிரமதேவரானவர் ஆண்டவனே? யானுயின்ற காலையில் சராசரங்கள் அழிந்தமையானேர்ந்தபாவமும்,யானே முதல்வனென்றுளன்னுள்ளத்தேயெழும்புமகந்தையும், படைத்தற்றொழிலை ஒவ்வோர்காலத்தில்மறக்குமபொச்சாப்பும், நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச்சிவபெருமான் அங்ஙனமேவரந்தந்தருளி மற்றும்பிரமதேவரை நோக்கி இவ்விடத்து நீயொரு வேள்விபுரிந்து கலைமாதைமணந்து படைத்தற்றொழிலைச்செய்திருந்து பின்னர்நின்னுலக மடைவாயாகவென்று பணித்துமறைந்தருளினுர். பிரமதேவர் அப்பணிதலைமேற் கொண்டு ஆம்பிராநதிக்குவடக்கே வஞ்சுளேச்சுரத்துக்குக் கிழக்கே பசுபதீச்சுரத்துக்குத்தெற்கே பிரமதீர்த்தமென்று தம்பெயரா

லொருதீர்த்தமுண்டாக்கி அதன்கரையிற்சிலநாள் தவஞ்செய்து வதிந்து வெண்ணெய்மலையையடுத்து அதன்வடக்கேஒருயாக குண்டஞ்சமைத்து அனேகமுனிவர்களுந்தேவர்களுஞ்சூழவேத விதிப்படி யவ்வேள்வியைமுடித்துக் கலைமாதைக்கலியாணஞ் செய்து பின்னர்ச்சின்னாள் கருவூரில்வசித்துப் பசுபதீசருக்குத் திருக்கோவிலசமைத்துத் திருத்தேர்முதலிய திருவிழாக்களும் நடத்தித்தென்றிசையிலே அரிகரபுத்திரனையும் பத்திரகாளியை யுந்தாபித்து வழிபட்டுவந்தார். அவரதுகாதலகின்றவேறியபின் னர்ப்பிரமலோகஞ்சென்றார்.

ஏழாவது,

பதரிவனச்சருக்கம்.

முதியதவத்துவியாதமுனிமுன்னேன்பூசைமுயன்றொருபால்
வதியவல்லதலனருளின்வழங்கவேண்டவவற்கிரங்கி
நதியின்வடக்கேசிற்றிலையுநறியசிறியகனியுமுடைப்
பதரிவனந்தந்தருள்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

பிரமதேவரியற்றிய யாகத்திற்காக வந்திருந்த மகாரிஷிக ளில் வேதவியாசரொழிந்த மற்றையோர்கள் தத்தம்மிருக்கை யிற்சேர்ந்தார்கள். வேதவியாசரானவர் நிரந்தரமாய்க்கருவூரில் வசிக்கக்கருதிப் பசுபதீசப்பெருமானை வந்தித்து உளளன்போடு தோத்திரஞ்செய்து அஞ்சலியஸ்தராய் நிற்புழிப் பரமசிவம் வெளிப்பட்டு வேண்டும்வரம்யாதென்றுகேட்ப வேதவியாசரா னவர் இறைவனே? உம்மைச்சதாகாலம்பூசித்து நீங்காமலிவ் விடத்துத்தானே இருத்தல்வேண்டுமென்னும பேரவாவுளதா யிற்று. அதற்குத்தக்கவிடம்நியமித்தருளவேண்டுமென்றுவேண் டச்சிவபெருமான் நம்தாலயத்திற்கு உக்கினிதிக்கிலே ஆம்பிரா நதிக்குவடகரையிலே ஒரு இலந்தைவனமிருக்கிறது. அவ்விட த்துவதிந்து நம்மையருச்சிப்பாயாகவென்று அருளிச்செய்து மறைந்தார். வேதவியாசமுனீந்திரரானவர் அவ்விலந்தைவனத்

துழிச்சென்று அதன்விம்பித்தங்களைநோக்கிவியந்து அவ்விடத் துத்தமதுசிட்டரோடும் வசிப்பாராயினர்.

எட்டாவது,

திக்குப்பாலகச்சருக்கம்.

சீருந்திருவுமுடையவராந்திக்குப்பாலரெனுந்தேவர்
நீரும்பூவுங்கொடுபூசைநிகழ்த்தவவர்கடமக்கிரங்கி
யாரும்பெறாதவவாடதவியருளுந்தன்மைவியந்துநிதம்
பாரும்விசும்பும்புகழ்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

சிருட்டித்துவக்கத்திலே கருவூரிலே - இந்திரன்-அக்கினி-யமன்-என்னுந்தேவர்கள் பசுபதிச்சுரனைப்பூசித்து முறையே கிழக்குத் தென்கிழக்குத் தெற்கென்னுந் திசையாதிபத்தியமும பலவளன்களும்பெற்றார்கள். திருமாலுடனே யுயுத்தஞ்செய்த முராசுரனென்பானது மரபிலே அக்கினியக்கண னென்னும் அசுரனொருவனிருந்தான். அவனுக்குமிக்கவல்லமையுடையதுற்சயன்என்னும் புத்திரன்பிறந்து கலைநடைமுதலியன பயின்று வலலோனாய்ப் பலவிடங்களிலுஞ்சென்று தேவர்முனிவர் முதலாயினோருக்கிடுக்கண்விளைத்து வருகையிலொருநாள் நல்வினைவயத்தாற்கருவூரையடைந்தான். அவ்விடத்துப்பலமுனிவரர்கள் சிவபூசைசெய்தலைக் கண்ணுற்றவளவில் அவனது இயற்கைத் துற்குணங்களனைத்தும் அவனைவிட்டகல அவன் அந்தமகரிஷிகளைப் பூசிப்பானாயினன். அப்பூசையின்வலியால் நிருதியாகித் தென்மேற்றிசையாதிபத்தியம்பெற்றான். வருணன்பூசித்துமேற்றிசையாதி பத்தியம்பெற்றான். வாயுவானவன் திருவானிலைநாதன் திருக்கோவிலைத்திருவலமிட்ட பெரும்புண்ணியத்தால் வாயுவென்னும்பதவியும் வடமேற்றிசையாதிபத்தியமும் பெற்றான். குபேரன்சிவபெருமானுக்கு இரத்தினாபரணங்கள் சாத்தி

யலங்கரித்துப் பூசித்ததவவலியால் வடதிசையாதிபத்தியம்பெற்றுச்சங்கநிதிபதுமநிதியாதி நிதிக்கோனாயினான். ஈசானன்பூசித்துவடகீழ்த்திசையாதிபத்தியம்பெற்றான்.

ஒன்பதாவது,

கடவுளார்ச்சனைச்சருக்கம்.

அலரிசோமனரிபிரமராகண்டலனேமுதலமர
ரிலகுமிருடிகணமூவரொன்னுந்தமிழ்நாட்டரசரொடு
குலவுமறையோர்முதற்றேவர்குழுமிச்சிவமாக்குறிநிறுவிட்
பலரும்பூசைசெயுங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மகாவிட்டுணுவானவர் திருவாநிலையுடையாரைப்பூசித்து இலக்குமிதேவியை மணந்து எவ்வுயிரையுங் காத்தலாகிய அதிகாரம்பெற்றுக் கருவூரிலே திருக்கோவில்கொண் டிருப்பாராயினார். வேதங்களானவை பசுபதிநாயகரை வழிபட்டு உண்மை பேசுதலென்னும் வரம்பெற்று மூவுலகத்தும வழங்காநிற்பன. அனேக ரிஷிகள் திருவாநிலைநாதர்க்குத் தென்கீழ்த்திசையிலே வேள்விகள்புரிந்து அளவிறந்த சிவப்பிரதிட்டைகளுஞ்செய்து வாழ்வடைந்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் ஆநிலையடிகள் திருவாலயத்துக்குக் கீழ்பாலும், ஆமபிராநதிக்கு மேல்பாலுமாகத் தம்பெயரால் தீர்த்தமுண்டாக்கிப் பூசித்தார். அத்தீர்த்தக்கரையில் அளவிறந்தவர்கள் தவஞ்செய்து சித்திமுத்திகளைப் பெற்றார்கள். தாடகையென்பாள் பசுபதீச்சுரர்ஆலயத்துள்ளே ஒருதீர்த்தம் உண்டாக்கிப் பூசித்து மாரீசனென்னும் பிள்ளையைப்பெற்றாள். சேரசோழ பாண்டியர்களென்னும் மூவேந்தர்களும்பூசித்துத் திருவாலயத்திருப்பணி முதலாயினசெய்து கதியடைந்தார்கள். சூரியன் சந்திரன்முதலிய நவக்கோள்களும்பூசித்து வேண்டும் வரங்களைப்பெற்றார்கள்.

பத்தாவது,

சுக்கிரனுபதேசம்பெற்றசருக்கம்.

இச்சைமிகுத்துப்புகர்பூசையினிதினாற்றவவற்கிரங்கி
மச்சையோர்ததவுடலுயிர்கண்மாய்ந்தவிடத்துமெழப்பவல்ல
விச்சையருளியதைக்கசனும்வியாழன்மகனுகவுணர்த்தவருள்
பச்சைசெழும்பூம்பொழிற்கருவூரப்பசுபதீசப்பெருமானே.

அசுரகுருவாகிய சுக்கிரன் கருவூரிலே பதரிவனத்திலே ஒரு அக்கினிகுண்டமமைத்து அதன்மத்தியிலே ஒற்றைககாலில் நின்று ஐம்புலன்களையுமடக்கிப் பஞ்சாக்ஷர தியானபரனாய் நூறுவருடம் அரியதவத்தைச்செய்தான. அவனது தவத்திற் கிரங்கி மஹாதேவரானவர் உமாசமேதராய்த்தோன்றிச் சுக்கிரனைநோக்கி நீ இறந்தோரை யெழுப்புதற்குரிய மிருதசஞ்சீவினியென்னும் மந்திரத்தைவிரும்பித்தவஞ்செய்தனை, அதனை யுபதேசிக்கப் பெறுவாயென்று உபதேசித்து இம்மகாமந்திரத்தை நின் சீடர்களாகிய அசுரர்களுக்கு உபதேசியா தொழியக் கடவாயென்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். பின்னர்ச்சுக்கிரன் தனது பதியினையடைந்து வாழ்ந்திருந்தான். சிலநாட் சென்றபின்னர் ஒருகாலத்திலே தேவர்களுக்கு மசுரர்களுக்கும் பெரிய யுத்தமுண்டாகித் தேவப்படையால் அளவிறந்த அசுரர்கள் மாண்டார்கள். அஃதுணார்ந்த சுக்கிரன் தான்கற்ற மிருதசஞ்சீவினிஎன்னும் மந்திரவல்லமையால் இறந்தொழிந்த அசுரர்களைப் பிழைத்தெழும்படி செய்தான். இறந்த அசுரர்களுயிரபெற்றெழுந்ததைநோக்கித் தேவாகள்பயந்து தேவகுருவாகிய வியாழனையடுத்து நடந்த வரலாறுகூறினர். வியாழன் சுக்கிரன்கற்ற மந்திரவலியை வியந்து தன் *குமாரனாகிய கசன் என்பவனைநோக்கி நீ சுக்கிரனையடுத்து அவன் மனதுக்கிசையயவொழுகி மிருதசஞ்சீவினி மந்திரத்தை உபதேசிக்கப் பெற்று இங்குவருவாயாகவென்று விடுப்பத் தேவர்கள் அக்கசனைநோக்கி 'நீ நுந்தைமொழிப்படி மந்திரங்கற்று வருவா

யாயின் நினைக்கும் யாகத்தின் சன்னவிப்பாகம் தருவேமென்று மொழிந்தார்கள். அவ்வாறேகசனும் சுக்கிரனது இருக்கையை யடைந்து அடியேன் தேவரீரைச்சரணடைந்தேனென மிகப் பணிவோடுவணங்கி மொழியச் சுக்கிரன் இரக்கமுற்று நீயாவன்? இவண்வந்தவாறென்னை? எனவினவ, கசன் ஐய! யான் வியாழனுடைய குமாரன் என்பேர் கசன் உமக்கடிமைசெய் யும்பொருட்டு வந்தேன் என, சுக்கிரன் மனமுவந்து ஆனிரை மேய்க்கும்படி பணித்த பணிவிடையைக்கசன் ஆயிரம்வருடஞ் செய்திருந்தான். இவ்வாறு ஒழுகுறும்நாளிலே வியாழனது புத்திரியாகிய தேவயானியென்பாள் கசனிடத்திலே பற்றுடையாளாய் அவனைத் தினந்தோறுஞ் சோலையிற்சென்று புதுமலர் கொய்துதரும்படி வேண்டிப்பெற்றும், யாழ்வாசிக்கக்கேட்டு மகிழ்ந்தும் காலங்கழிப்பாளாயினாள். கசன் மிருதசஞ்சீவி மந்திரத்திற்காகக் குருபணிவிடைசெய்து வருதலையுணர்ந்ததைத்தியர்கள் பொறாராய் அவனைக்கொன்று புலிக்கிரையாக்கினார்கள். அன்றிரா கசன்வராமையால் தேவயானி சுக்கிரனிடத்து மொழியச் சுக்கிரன் உணர்ந்து மிருதசஞ்சீவி மந்திரத்தாற்கசனை வரவழைத்தான். மற்றொருநாள் தைத்தியர்கள் அவ்வாறே கசனைக் கடலிலமிழ்த்திக்கொன்றார்கள். அன்றுந் தேவயானி வேண்டுகோளால் சுக்கிரன் கசனை எழுப்பினான். பின்னொருநாள் தைத்தியர்கள் கசனைக்கொன்று தீயடுத்து நீறாக்கி அச்சாம்பரைச் சுராவுடன்கலந்து அச்சுராவை ஒருபொன்வள்ளத்திற்பெய்து சுக்கிரனிடத்துக் கொணர்ந்து உண்ணக்கொடுத்தார்கள். சுக்கிரன் அம்மதுவை யருந்திக் களித்திருந்தான். அற்றைப்பகல்கழிய விரவிற் கசன்வராமையைத் தேவயானியாலுணர்ந்த சுக்கிரன் முன்போல மிருதசஞ்சீவி மந்திரத்தையுச்சரித்துக்கசனை அழைத்தான். கசன் சுக்கிரனது வயிற்றிலே யுயிர்பெற்றெழுந்து அடிகளே! யான் எவ்வாறு வெளிப்படுவதெனச் சுக்கிரன் இம்மோசம் தைத்தியர் செய்கையாலேநேர்ந்ததென்றுணர்ந்து, தன்வயிற்றினிடத்திருக்குங் கசனுக்கு மிருதசஞ்சீவிமந்திரத்தை யுபதேசித்துத் தன்வயிற்றைப் பீறிவெளி

யில்வரக் கற்பித்தான். அவ்வண்ணமே சுக்கிரனது வயிற்றினின்றும் வெளிவந்த கசனானவன் அம்மிருதசஞ்சீவி மந்திரத்தைக்கொண்டு சுக்கிரனை எழுப்பினான். உயிர்பெற்றெழுந்த சுக்கிரன் இனி இம்மதுவையருந்தினோர் சண்டாளராகவென்று சபித்துக் கசனைநோக்கி நினதெண்ணம் முற்றியது. இனி நின்னிருக்கைக் கேகக்கடவாயென்று விடைகொடுப்பக் கசன்வணங்கி விடைபெற்றுச்செல்லுழித் தேவயானி தடுத்துத் தன்னை வதுவையாற்றிச்செல்லும்படி வேண்டினாள். கசன் தேவயானியைநோக்கி நீ குருபுத்திரியா யிருத்தலி னின்னை மணத்தல் தகுதியன்று அன்றியும் நின்றந்தை வயிற்றினின்றும் நீயும் நானும் தோன்றினமையால் சகோதரியுமாவாயாதலின் நின்னை வேட்டல் முறையன்றென்று மறுத்தான். தேவயானி சினந்து கசனே நீ என்றந்தையின்பாலுணர்ந்த மந்திரத்தை மறந்துவிடக்கடவாயென்றுசபித்தனள். கசன்வருந்தித்தேவயானியை நோக்கி நீ வியபசாரியாகக் கடவாயென்று சபித்துவிட்டுப் பொன்னுலகம்சென்று தாதையைவணங்கி நிகழ்ந்தவையனைத்துங்கூறி அம்மிருதசஞ்சீவி மந்திரத்தை வேறொரு மறையவனுக்குபதேசித்துத் தேவர்கள் வாக்குத்தத்தஞ் செய்தபடி யாகத்தின்கண் அவிப்பாகம்பெற்று வாழ்ந்திருந்தான்.

பதினொன்றாவது.

முசுகுந்தச்சருக்கம்.

வில்லுவத்தினிலைபறித்துவிமலன்றிருமேனியிலெறிந்த
புல்லவுணர்வின்முசுக்கலையைப்புவியாளரசர்தமின்மேலாம்
நல்லவரசாய்முடிபுனையநல்கியாண்டதனிமுதலே
பல்லவஞ்சேர்பொழிற்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

முசுக்குந்தச்சக்கிரவர்த்தியானவர்பூர்வசன்மத்திலே குரங்காயிருந்தபொழுது வில்வமரத்திலேறி அதன் இலைகளைப்பறித்துக்கீழேயிட அவை சிவபெருமான் திருமேனியிற்பட்ட புண்ணிய

வத்தால் அவ்வுணர்ச்சிமறவாதிருக்குமவணமை குரகுமுக மும் மானிடவடிவமும் அருளப்பெற்று அரசனுகப்பிறந்து கரு வூரிலே அரசுசெலுத்திக்கொண்டிருந்தார். அவர் ஸ்ரீசிதம்பரம், திருவாரூர், திருமறைக்காடு,முதலிய பலதலங்களிலும்சென்று வணங்கி மீண்டுங்கருவூரையடைந்து வசித்தார். அக்காலையில் தேவேந்திரன் மாற்றலன்போருக்கு ஆற்றாதுடைந்து வருந்து தலையுணர்ந்து அவனுக்குப்படைத்துணைசெய்து வெற்றி பெறு வித்தார். அவ்விந்திரன ஆன்மார்த்தமாகப் பூசிக்கப்பட்ட ஸ்ரீ தியாகராசப்பெருமானை அவனுற்பெற்றுத்திருவாரூரிலேதாபித் தார். திருப்பரங்கிரியிலே ஸ்ரீ முருகக்கடவுள் தெய்வயானை யம் மையைத் திருக்கல்யாணம் செய்தபொழுது அத்திருவோலக் கத்தை கண்டிறைஞ்சிக் கண்களிகூர்ந்தார். பின்னர்க்கருவூ யடைந்து நீதிகோடாதுபன்னுளரசாண்டு முத்தியடைந்தார்

பன்னிரண்டாவது.

தீர்த்தச்சருக்கம்.

காசிதனிலேகங்கைமணிகன்னிகைப்போர்த்திர்த்தமுத
லாசில்பலவாந்திருத்தலனுமதனுக்கிசையவாங்காங்கே
தேசுமலியும்பலபலவாந்தீர்த்தமமைத்தேயெம்மனோர்
பாசவினையைப்பறிக்கவல்லபசுபதீசப்பெருமானே.

கௌதமகோத்திரத்திலே காசிப கோத்திரத்திலே காலவ முனிவரென்பவ ரொருவரிருந்தார். அவரிடத்துத் தேவத்துதி யெனனும் முனிவரர்வந்தார். அவருக்கு அர்க்கியபாத்திய ஆச மனங்கொடுத்து இனியமுகமன்கூறி ஆசனத்தெழுந்தருளச் செய்துவணங்கி தவக்கடலே தேவரீர் எங்குநின்றும் எழுந் தருளாநின்றீர்? என்று விண்ணப்பஞ்செய்ய தேவத்துதி மக ரிஷியானவர் தீர்த்தயாத்திரைசெய்துவருகின்றோம் எனத்தேவ ரீர் சென்றுடியதீர்த்தங்களையும் அவைகளிருக்குந் தலங்களையும் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று காலவமுனிவர் வேண் டத் தேவத்துதிமுனிவர் சொல்வாராயினர்.

கேதாரத்திலே - புட்கரதீர்த்தம்.
காசியிலே - கங்கையிலேமணி கனணிகைதீரத்தம்.
பிரயாகையிலே - திரிவேணிதீர்த்தம்.
கயையிலே - பிதிர்தீர்த்தம்.
அலம்புதியிலே - வன்னிதீர்த்தம.
மணிகூடத்திலே - திரிபுட்கரதீர்த்தம், நர்மதை, கோதாவரி,
துங்கபத்திரை, யமுனைமுதலிய தீர்த்தங்கள்.
ஸ்ரீபருப்பதத்திலே — அம்பாதீரத்தம்.
மாளவததிலே - பானுதீர்த்தம.
சததாரணியத்திலே - பிரமதீர்த்தம்.
சீகாளத்தியிலே - பொன்முகலித்தீர்த்தம்.
பிற்பாசகத்திலே - வருணதீர்த்தம்.
திருவாலங்காட்டிலே - குகதீர்த்தம்.
காஞ்சிபுரத்திலே - வேகவதிமுதலியதீர்த்தங்கள்.
அருணாசலத்திலே - பிரமதீர்த்தம் துர்க்கைதீர்த்தம்.
விருத்தாசலத்திலே - மணிமுத்தாநதி
சிதம்பரத்திலே - சிவகங்கைமுதலியதீர்த்தங்கள்.
திருவாரூரிலே - தேவதீர்த்தம்.
வேதாரணியத்திலே - மத்தியானமணிகன்னிகை,வேததீர்த்தம்
கோடிதீர்த்தம்முதலியதீர்த்தங்கள்
திருப்புகலூரிலே - அக்கினிதீர்த்தம்.
திருவெண்காட்டிலே - காயத்திரிதீர்த்தம்.
திருச்சாய்க்காட்டிலே - சாயாதீர்த்தம்.
திருக்கடவூரிலே - யமதீர்த்தம்.
சீகாழியிலே - பிரமதீர்த்தம.
திருமயிலாடுதுறையிலே - காவிரியிலே,துலாமாசத்திலேகங்கை
யுதிக்குந்தீர்த்தம்.
புள்ளிருக்கும்வேளூரிலே - சண்முகதீர்த்தம்.
திருவாவடுதுறையிலே - காமதேனுதீர்த்தம்.
திருவீழிமிழலையிலே - சுக்கரதீர்த்தம்.
திருவாஞ்சியத்திலே - சூரியதீர்த்தம்.

திருவிடைமருதூரிலே-காருண்ணியதீர்த்தம், காவிரியிலேபூசத்
தீர்த்தம்முதலியதீர்த்தங்கள்.
திருநாகேச்சுரத்திலே-முருகதீர்த்தம்.
கும்பகோணத்திலே-மாமகதீர்த்தம்.
திருச்சத்திமுற்றத்திலே-வேலாயுததீர்த்தம்.
திருவலஞ்சுழியிலே-வலஞ்சுழிதீர்த்தம்.
திருவையாற்றிலே-பஞ்சநதிதீர்த்தம்.
திருவானைக்காவிலே-சம்புநதி, சந்திரபுட்கரணி, முதலியதீர்த்தங்கள்.
மதுரையிலே-பொற்றாமரை, வையைமுதலியதீர்த்தங்கள்.
கந்தமாதனத்திலே-சேது, தனுக்கோடிமுதலியதீர்த்தங்கள்.
திருக்குற்றாலத்திலே-சித்திராநதிதீர்த்தம்.
திருநெல்வேலியிலே-தாம்பிரவர்ணியிலேசிந்துபூர்துறை, ஏமபுட்கரணி, சர்வதீர்த்தம்முதலியதீர்த்தங்கள்.
கன்னியாகுமரியிலே-கன்னிகைதீர்த்தம்.
திருவனந்தபுரத்திலே-தர்மதீர்த்தம்.
கேரளத்திலே-பாண்டுமகாதீர்த்தம்.
கோகன்னத்திலே-கோடிதீர்த்தம்.
கொங்குநாட்டிலே-காஞ்சிநதிகுடகநதிஆம்பிராநதிமுதலியதீர்த்தங்கள்.

கொங்குநாட்டிலே மேற்சொன்ன ஆம்பிராநதிக் கரையிலே திருக்கருவூரென்னும் திவ்வியக்ஷேத்திரமானது அனேக தீர்த்தங்களுடன் சிறந்துவிளங்குகிறதென்று தேவத்துதி மகாரிஷியானவர் காலவமுனிவருக்குத்திருவாய்மலர்ந்தருளினார்.

பதின்மூன்றாவது,
தலதீர்த்தச்சருக்கம்.

சிவமார்வஞ்சிவனத்தினிடைத்திகழாம்பிரமாநதியுடனே
நவமார்தேனுமுருகவேள்சதுமாமுகத்தோன்றாடகையா
மிவரார்கண்டநாற்றீர்த்தமிலகுமரசதீர்த்தமுடன்
பவநோய்தீர்க்குந்தீர்த்தமருள்பசுபதீசப்பெருமானே.

காலவமுனிவர் மீட்டுந்தேவத்துதி முனிவரை வணங்கிச் சுவாமீ! அனேக தலங்களையுந் தீர்த்தங்களையுங்கூறி யீற்றிலே ஆம்பிராநதிக்கரையிலே திருக்கருவூரென்னுந் திவ்யக்ஷேத்திர மானது பலதீர்த்தங்களோடு விளங்குகிறதென்று கூறிவிடுத்த தென்னை திருவுளம்பற்றவேண்டுமென்றுவினவ, நன்றுவினுயி னீர் கேட்கக்கடவீரென்று தேவத்துதிமுனிவர் சொல்வாராயி னர். உலகத்தினுள்ளே எல்லாப்பதிகளுந்தோன்று முன்னர்த தோன்றி ஆதிபுரியென்னும் பெயர்பெறுகையாலும், பிரம தேவன் கற்பந்தோறும்படைத்தற்றொழில்செய்யக் காரணமா யிருந்து கர்ப்பபுரியென்னு நாமம்பெற்றமையாலும், ஓர்விளக் கிலேதோன்றிய பலதீபங்கள் ஒடுங்குங்காலத்தில் தோனறிய முறையேயொடுங்கி ஒன்ருனாற்போல ஆதிலிங்கமாகிய பசுப தீச்சுரரானவர் தன்னுற்றோற்று விக்கப்பட்ட பலதலங்கள் தீர்த் தம் மூர்த்திகளையுந் தன்னுட்கரத்தலினலே கரபுரியென்னும் பெயர் பெற்றமையாலும், கர்ப்பபுரியினுஞ் சிறந்ததலம்பிறி தொன்றில்லை, அதன்பெருமை தோன்றுமாறு மற்றெல்லாத் தலன்களையு முன்னமொடுத்தோதிக்கர்ப்பபுரியினை யீற்றிற்கூறி னுமெனக், காலவமுனிவர் அத்தலனிலுள்ள தீர்த்தவிசேடங் களைச் சாங்கோபாங்கமாய்த் திருவாய்மலர்ந்தருள வேண்டு மெனத், தேவத்துதிமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

இந்தக்கருவூரிலே அநந்தந்தீர்த்தங்களுள்ளன. அவற்றுள ஆறுதீர்த்தங்கள் மிகச்சிறந்தன. அவைவருமாறு:—

க. ஆம்பிராநதி-இதுதோன்றியொடுங்குங்காறுஞ் சிறந்த தீர்த்தமேயாயினும் வஞ்சிவனத்தெல்லையில் அநநதி சர்வோத் கிருஷ்டமாகையால் மகாதீர்த்தமெனப்படும்.

உ. தேனுதீர்த்தம் - இதுவெண்ணெய்மலைக்குக் கிழக்கே யுள்ளது.

ங. முருகதீர்த்தம் - பசுபதீச்சுரத்துக்குக்கிழக்கே ஆம பிராநதிக்கு மேற்கேயுள்ள கோபிதாரவனத்திலிருப்பது.

௪. அரசதீர்த்தம - பதரிகாச்சிரமத்துக்குமேற்கே ஆய்பிராகதிக்கரையிலே அரசவனத்திலுள்ளது.

௫. தாடகைதீர்த்தம் - இது ஆநிரையக ராலயத்துள்ளே பூர்வதிக்கிலேயுள்ளது.

௬. பிரமதீர்த்தம் - இதுவஞ்சுளேசராலயத்துக்குக் கிழக்கேயுள்ளது. இதனைஅவ்வாலயத்திற்குமேற்கே யிருந்ததாகப் புராணத்துட்கூறப்படுகிறது. ஒருகால்பூர்வத்தில் பிரம தீர்த்தத்துக்குக்கிழக்கே இருந்தவஞ்சுளேசசுர ஆலயமானது நதிப்பெருக்காற் பழுதுபட்டுப்பின்னர் அத்தீர்த்தத்தின்மேல் புறத்திற்கட்டப்பட்டிருக்கிறதுபோலும்.

இத்தீர்த்தங்கள் மிகவும்விசேடித்தவைகளாதலின் இவற்றிலொன்றின் புனலைச்சிரத்திற் புரோக்ஷித்துக்கொள்ளினும், தொடினும், உட்கொள்ளினும் சகலபாவங்களையும் போக்கிப் புண்ணியத்தைத்தருமானால் இவற்றில்விதிப்படி நீராடுவோர் பெறும்பலனை எம்மனோரால் அளவிடற்கெளிதோ? அன்று.

பதினான்காவது,

கோபிதாரத்துவசன்சருக்கம்.

பூமிக்குடையவிசாலைநகர்மன்னன்கோபிதாரனெனு
மழிவில்புகழோனகத்தியனாரடையவவனையவமதித்துப்
பொழியுங்கருணைநோக்கிழந்துபொல்லாக்குட்டநோயடைந்த
பழியைத்தொலைத்ததிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மிகுந்த வளமைபொருந்திய விசாலைஎன்னும் நகரத்திலே திராவிடமரபிலே தோன்றிச் சகலசற்குண சம்பன்னனாகிய கோபிதாரத்துவசன்என்னும் அரசனொருவனிருந்தான். அவன் சிவபத்தி யடியார்பத்தியுடையோனாய் மன்னுயிர்களுக்கன்னை போன்று மனுநெறிகோடாது அரசுபுரியுநாளிலோர்நாள், சிவனடியாரிற்சிறந்த அகத்தியமுனிவரானவர் பலமகாரிஷிகள் தமமைச்சூழ்ந்துவர அவ்வரசனைக் காணும்பொருட்டு எழுந்தருளி

அரசனிடத்துவந்தார். அரசன்சிவபத்தாக்ரகண்யராகிய அகத்தியரையும் முனிபுங்கவர்களையுங்கண்டு எழுந்து வந்தனைவழிபாடுசெய்திலன். ஊழ்வினை அறிவைமயக்குதலால் வாளாவிருந்தான். அகத்தியமகாமுனிவரானவர் தம்மை அவமதித்தலையுந் திருவுள்ளங்கொள்ளாது தம்முடன்போந்த சிவனடியார்களை அவமதித்தற்குப் பொறாதவராய்ச் சென்றவழியேமீண்டு தம்முடனுறையும் பிரமிட்டனென்னும் முனிவர்பிரானை நோக்கிச் சிவனடியார்களை மதியா தகந்தைகொண்டிருந்த அவ்வரசனைச் சபிக்க நினைந்தேன். இன்றுவிரதகாலமாயிருத்தலினா லங்ஙனஞ் செய்திலேன், நீபோயவ்வரசனைச்சபித்து வருவாயாகவென்று ஏவ அவ்வாறே பிரமிட்டமுனிவரானவர் கோபிதாரத் துவசனிடத்துச்சென்று சிவனடியாரைஅவமதித்திருந்த மன்னவனே? நீ குட்டநோயால் வருந்தக்கடவையென்று சபித்து மீண்டனர். பின்னர் முனிவர்கள்யாவரும் பொதியமலையையடைந்தார்கள். கோபிதாரத்துவசனுக்கு யாவரும் அருவருக்கத்தக்க குட்டநோயானது மேற்கொள்ள அரசன் துணுக்குற்று நோயின் வருத்தஞ்சகிக்கலாற்றாது வருந்தினான். அந்நோய்நீங்கும் பொருட்டுப் பற்பலபிராயச்சித்தங்கள்செய்தும் அதுசற்றும் நீங்கிலது. பிணியின் வருத்தஞ்சகிக்கலாற்றாது நாடுநகரந் துறந்து வனத்திற்றிரிதருகையில் முன்செய்த புண்ணியவசத்தால் பிரமிட்டமகாமுனிவரது ஆச்சிரமத்தையடைந்தான்.பிரமிட்டமுனிவரைக்கண்டு அவரதுபாதங்களில்வீழ்ந்து பணிந்து இறைவனே யான்செய்தகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டும் என்று பலவாறுவேண்டினான். ஓ? அரசனே நினக்குஇக்குட்டநோய் வரும்படி சபித்தவன்நானேயாயினும் அதனைஎன்மனசோச்சையாகச் செய்திலேன். எனதாசிரியராகிய அகத்தியமுனிவரது கட்டளைப்படிசெய்தேன். அச்சாபநீங்கியுய்யவேண்டுமானால் அகத்தியமகாமுனிவரது பாதத்திற்சரணடையக்கடவாயாக என்றுவிடைகொடுத்தார். கோபிதாரத்துவசனானவன் அகத்தியமுனிவரது ஆச்சிரமத்தையடைந்து அவரதுபாதங்களில் தண்டாகாரமாய்விழுந்து மனங்கசிந் துருகிப்பணிந்தான்.

அகத்தியமுனிவர் அரசனைநோக்கி மனமிரங்கி, வருதிகோபிதாரத்துவசமன்னனே? சிவனடியார் நிந்தைசெய்த பெருங்கொடும்பாவத்தால் இச்சாபம்பெற்றனை இதுதீரவேண்டுமாயின் சேரநாட்டிலே ஆமபிராநதிக்குவடகரையிலேயுள்ள சர்ப்பபுரியையடையக்கடவாயாக, அங்குப்பதரிவனத்திலேவசிக்கும் வேதவியாசமுனிவரையடுத்து அவர்கூறுமாறு ஒழுகிப்பிரமதீர்த்தத்திலேமூழ்கிப் பசுபதீச்சுரனைப்பூசிப்பாயாகவென்றுதிருவாய்மலர்ந்தருளிவிடைகொடுப்ப அரசன்வணங்கிவிடைபெற்றுக்கருவூரையடைந்தான். அங்கு, பதரிவனத்திலே அடியார்குழாங்களோடு வீற்றிருந்தருளிய வேதவியாசமுனிவரைக்கண்டு வணங்கியெழுந்து அஞ்சலியஸ்தனாய்நிற்ப அவன்முகநோக்கி வியாசமுனிவரானவர் கோபிதாரத்துவசனே நீ இங்ஙனம் பொலிவழிந்து குட்டநோயால்வருந்தி யடைந்தவாறென்னை என்று வினவக் கோபிதாரத்துவசன்சொல்லுவானாயினான். சுவாமி! அடியேன் செல்வச்செருக்கினாலே சிவனடியார்களாகிய அகத்திய மகாமுனிவர் முதலாயினோரைக்கண்டும் எழுந்து வந்தனை வழிபாடுசெய்யாதிருந்தேன் அதுகண்டு அகத்தியமுனிவர் பிரமிட்டமுனிவரால் இந்நோய்கொண்டுழலுமாறு சபித்தார். அதனால்நேர்ந்த இக்கொடுநோயானது எவ்விதபரிகாரஞ்செய்துந் தீராது அகத்தியமுனிவரையே சரணமடைந்து அவருத்தாரப்படி தேவரீரிடத்து இங்குவந்தேன் என்று விண்ணப்பஞ்செய்ய வேதவியாசரானவர் சிவசிவஎன்று இருகன்னங்களையும் பொத்திச் சிவனடியாரைநிந்தனைசெய்த பாவிகளைக்காணவும் பேசவும் விதியில்லையாயினும் அகத்திய மகாமுனிவரோ பிராயச்சித்தங் கூறி இவ்விடத்திற்கனுப்பிய காரணத்தால் இவ்வரசனைப்புறக்கணித்தலுங் கூடாதெனவெண்ணி, அரசே! எவ்வகைப்பாவங்கள்செய்யினும் அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமுள. குருத்துரோகம், சிவத்துரோகம், சங்கமத்துரோகம், என்னு மூன்று துரோகங்களும் சாற்றருங்கொடிய மகாபாதகங்களாதலின் அவைகள் எவ்வகைச்சாந்திகளாலுந்தீரா நீ அகத்தியமுனிவர் அனுஞைப்படி கருவூரையடைந்தமையால் அப்பாவம் நீங்கு

தற்கு உபாயங்கூறுதும்கேள் தினந்தோறும்பிரமதீர்த்தத்திலே மூழ்கிக் காலைமுதல்மாலை வரையில் பசுபதீச்சுரத்தையும்,வெண்ணெய்மலையினையும், பிரமகுண்டத்தினையும், பிரதக்கணஞ் செய்து, பசுபதிப்பெருமானையும் பூசிப்பாயாக, இவ்வாறு எட்டு நாட் செய்வாயாயின் உய்வாய்என்று திருவாய்மலர்ந் தருளினர்.

கோபிதாரத்துவசன் அவ்வண்ணமேயொழுகி எட்டாநாள் சிவார்ச்சனைசெய்து தோத்திரம்செய்கையில் சிவபெருமான் பிரசன்னராய் அரசன்வேண்டும்வரங்களைக்கொடுத்தருளி மறைந்தார். கோபிதாரத்துவசன் மறுவொழிந்த மணிபோல் விளங்கிச்சின்னாள் கருவூரிலேவதிந்து அப்பால் விசாலையென்னும் தனதுநகரத்தையடைந்து, அங்குஒருபுத்திரனைப்பெற்று அவன் றோண்மேல் இராச்சியபாரத்தைச்சுமத்திப் பின்னர்க்கருவூரையடைந்து சிவபூசையே நியமமாகச்செய்திருந்து ஈற்றிலே முத்தியடைந்தான்.

பதினைந்தாவது,

விபண்டகச்சருக்கம்.

அஞ்சாக்கொடியகொலைசெய்விபண்டகனும்வேடனுதிரைநாள்
நஞ்சார்களத்தெம்பெருமான்றன்திருமேனியிலார்நகைகவரும்
நெஞ்சான்னெருக்கமுண்டிறப்பநிகரில்கைலையடைவித்த
பஞ்சானனனேதிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

யமனையொத்துமாக்களது உயிரையும் பொருளையும் ஒருங்குகவருங்கள்வனாய் வேடுவகுலத்திற்பிறந்த விபண்டகனென்பவனொருவனிருந்தான், இவ்வேடன்செய்யும் வன்கொடுஞ்செய்கைகளை நினைப்பினுங்கூசும். இவ்வாறொருழுநாளில் மார்கழித் திருவாதிரை மகோச்சவம்வர அவ்வுச்சவத்திற்குச் செல்லும் அடியார்கூட்டத்துடன்சேர்ந்து அவர்களைப்போலச் சிவசின்னந்தாங்கிக் கள்ளவேடம்பூண்டு கருவூரையடைந்து ஸ்ரீநடேசப்

பெருமான்மீ தணிந்திருக்குந் திருவாபரணங்களைக்கவரச் சமயம்பார்த்துக் காத்திருந்தான். அப்பொழுது தாண்டவேசப்பெருமான் சகலவைபவங்களுடனே திருவிழாக்கொண்டருளினார். அக்காலத்திலே விபண்டகனாகிய வேடன் நெருக்குண்டு கீழேவிழ அடுத்துநின்றோர்சிலர் அவனை எடுத்துபசரித்தும் நெருக்கத்தில் துவைப்புண்ட காரணத்தால் இறந்தான். அவனைப்பற்றவந்த யமதூதர்களைத்துரத்திச் சிவகணங்கள் அவனை விமானத்திலேற்றிச் சிவபுரத்தை அடைவித்தார்கள்.

பதினாறாவது,

நியமச்சருக்கம்.

எற்றுதிரைத்தீம்புனன்மூழ்கியெழுத்தைந்தோதிநீறுபுனைந்
துற்றவனநன்மலர்கைக்கொண்டியருஞ்சிவபூசனையாற்றிக்
குற்றந்தீரத்திருக்கோயில்சூழ்நியமங்கொண்டவர்க்குப்
பற்றுக்கோடாந்திருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

நியமமாவது விடியற்காலத்திலெழுந்து ஊர்ப்புறத்துச் சென்று மலசலமோசனஞ்செய்து சவசமுடித்துப்பற்கோலிட்டு வாய்பூசி ஆம்பிராநதிக்கட்சென்று விதிப்படிநீராடிவிபூதியுருத்திராக்கமணிந்து திருவைந்தெழுத்தைத்தியானித்து நந்தனவனத்துட்சென்று பத்திரபுட்பாதிகளை விதிவிலக்கறிந்தெடுத்துத் திருப்பூங்கூடையிற்பெய்து இல்லத்தின்கட்சென்று சிவபூசைவழாதுசெய்து திருவாலயத்தையடைந்து விதிப்படி பிரதக்கணமாதியசெய்து சிவலிங்கப்பெருமானையும் அம்மைவிநாயக சுப்பிரமணியராதிகளையும் விதிப்படி மெய்யன்போடு நமஸ்கரித்துப் புறம்போந்து வீட்டின்கண்ணே விருந்தினர்முதலாயினாரோடும் புசிக்கலாகாதனவிலக்கி யமுதருந்திநண்பகலிலே கண் துயில்கொள்ளாது சிவபுராணசிரவணஞ்செய்து மாலையிலும் சந்தியாவந்தனாதி சிவதரிசனமீறாகச்செய்து போதருவதேயாம். இதனைச்செய்தொழுகுவோர் நித்தியானந்தமுத்தியைப்பெறுவது திண்ணம்.

பதினேழாவது,
தலமகிமைச்சருக்கம்.

கயிலாயம்மந்தரம்மதுரைகாசிகாஞ்சிபிரயாகை
நயிமிசக்காசேதுவுடனகராங்கருவூரொனுமொன்பான்
செயிர்தீர்நல்லதலங்களுள்ளேசிறந்ததலமாங்கருவூரிற்
பயிலாநிற்போர்க்கருள்பழுத்தபசுபதீசப்பெருமானே.

கயிலாயகிரி-மந்தரகிரி-மதுரை-காசி-காஞ்சி - பிரயாகை-நைமிசாரணியம்-சேது-கருவூர் - என்னும் ஒன்பது தலங்களும் உலகத்திலுள்ள மற்றெல்லாத்தலங்களிலுஞ் சிறந்தன. அவற்றுள்ளுங் கருவூர்மிகச்சிறந்தது. கருவூரொழிந்த மற்றெட்டுந் தலங்களையுந் தெரிசிக்கும்பேற்றைக்கருவூர் ஒன்றே எளிதிற்கொடுக்கும், கருவூரிலே சிவபெருமான் திருவாநிலையென்னுந திருக்கோயிலில் எழுந்தருளியிருத்தலானும், திருநெடுமால்பள்ளிகொண்டிருத்தலினாலும் அதனைபாற்கரபுரம்என்ப. மலை, ஆரணியம், நதி, தீர்த்தங்கள், நகரம், திருக்கோயில், என்னும்ஆறு மங்களங்களையு முடைத்தாயிருத்தலின் அதற்கு ஷண்மங்கல க்ஷேத்திரமென்றும்பெயர். அத்தலத்தைச்சுற்றிலும் ஐங்குரோசம்வரையில் பவித்திரமாகையால் அதிலுள்ள சராசரங்களனைத்தும் பரிசுத்தமானவைகளேயாம். இத்தலத்திற்செய்யும் புண்ணியங்கள் மற்றதலங்களிற்செய்வதினும் ஒன்றனந்தமாய் விருத்தியாகும். பாவங்கள்தேய்ந்துபோம். குறுநிலமன்னவர் கொடுங்கோல்செலுத்தி உலகக்கலியின் மூழ்கவருங்காலத்திலே ஆதிப்பெருமானது திருவுருவத்திலே கரையான்என்னுஞ்சிதல் படரும். என்று இத்தலமான்மியத்தைச் சூதபுராணிகர் நைமிசாரணியவாசிகளுக்கு உணர்த்தியருளினர். இப்புராணத்தைப் படித்தோர்கேட்டோர் படிப்பித்தோர் கேட்பித்தோர் எழுதினோர் எழுதுவித்தோர் முதலாயினோரும் பேரானந்தப்பெருவாழ்வடைவார்கள்.

பதினெட்டாவது,

கருவூர்ச்சிறப்புச் சருக்கம்.

கடிசேர்மதிலுநெடுமாடங்களினுந்தெருவுமாடமிசைக்
கொடியார்கிளையுந்திருக்கோயிற்குலமுமடவார்கொழுனருடன்
குடிசேர்கலனுந்தபோதனர்கள்குழுவும்பல்கிவளமையிலே
படிமீதுயர்ந்ததிருக்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

மிகுந்தசிறப்புற்றோங்கிய சோலைகளாலும் மருதநிலஞ்சூழ்ந்த வளப்பமிகுதியினாலும் இந்திரன்நகரத்துக்கு மேலான எழில்வாய்ந்த கருவூர்நகரமானது அநேக வேதப்பிராமணர்களும், தபோதனர்களும், முடிமன்னர்களும், வணிகர்களும், சூத்திரர்களும், மற்றுமுள்ள மரபினரும் தத்தம்மனைவி மகாருடனே தத்தம்மாச்சிரமங்களுக்கு விதித்தவிதிப்படி ஒழுகலினாலும், நெல்முதலியனபயிரிடுவோர் செய்யுங்கிருஷிகத்தொழிலினாலும், அரசர்பயிலும் படைக்கலத்தொழிலினாலும், பிறவாற்றானும், ஓசைமலிந்து தனக்கிணையில்லாததாய் விளங்கும்.

பத்தொன்பதாவது,

எறிபத்தச்சருக்கம்.

அத்தர்க்காகுமலர்சிதைத்தயானைபாகரோடமையா [ழ்
தொத்திங்கெனையுமடுகவெனவுடைவாள்உளவன்கொடுப்பநெகி
சித்தராகியவ்வானைத்தமதுகளத்திற்செறித்தவெறி
பத்தர்க்கிரங்கியருள்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

உறையூரிலே அரசாக்ஷிசெய்துகொண்டிருந்த புகழ்ச்சோழரானவர் தமதாக்ஷிக்குள்ளாகிய கருவூரிலே மேனாட்டரசர்கள் திறையளத்தலைக்காணும்பொருட்டு வந்திருந்தார், கருவூர்த்திருவானிலைநாயகரைத் தரிசித்து வாழ்ந்திருக்குநாளிலே சிவனடியார்களுக்கு இடர்நேர்ந்துழியிம்மெனப்போந்து, இடர் செய்வாரைக் கடியும்பொருட்டு மழுப்படையேந்திய கையையு

டையராகிய எறிபத்தரென்னும் பெரியவரொருவரிருந்தார். அக்காலத்திலே பிராமணகுலத்திற் றோன்றியவராயும், நித்தலும பொழுதுவிடியுமுன்னெழுந்து ஸ்நானஞ்செய்து விதிப்படி நந்தனவனம்புகுந்து திருப்பூங்கூடையிலே பலவிதபத்திரபுஷ்பங்களெடுத்து அதனை இண்டைதொடையல் முதலியமாலைகளாக்கிச் சிவபெருமானுக்குக்கொடுத்து வருநியமமுடையவராயும் இருந்த சிவகாமியாண்டாரென்பவர் தந்நியமப்படி பூக்கொய்தமைத்த பூங்கூடையைக் கோலிற்றூங்கவிட்டு அதனைத் தோளிற் சுமந்து தெருவீதியிலே செல்லாநின்றார். அன்றுமகாநவமி யாகையால் நகரமலங்கரிக்கப்பட்டிருந்ததுமன்றிப் புகழ்ச்சோழரது பட்டவர்த்தனமென்னும் பெயரியயானையானது அலங்கரிக்கப்பட்டுப் பாகர்களுடன் தெருவிற்பவனிவராநின்றது. அக்காலையில் அவ்வியானைக்குச் சிவகாமியாண்டார் எதிர்ப்பட யானை அவரதுதோளிற்கிடந்த திருப்பூங்கூடையைப்பறித்து அதனுள்ளிருக்குமலர்களைச் சிந்திச்சிதறிவிட்டுத் தெருவிற்போயது சிவகாமியாண்டார் அதனுடன்தொடர்ந்து பற்றலாற்றாது சிவதா? சிவதா? என்றுமுறையிட்டனர். அதுகேட்டுவந்த எறிபத்தர் அங்குநிகழ்ந்தனவற்றைச் சிவகாமியாண்டாருணர்த்த வுணர்ந்து மழுப்படையோடு யானையின்முன்னர்க்குதித்து அதனது துதிக்கையைத்துணித்து வீழ்த்தினர். பட்டவர்த்தனமென்னும் யானை அலறிக்கீழேவிழுந்து மாய்ந்தது. அதன்மேற்கொண்டிருந்த இரண்டுபாகரையும் அதனயலில்வந்த மற்றிருவரையும் தடிந்து வீழ்த்தினர். அதனைக்கண்ட சிலரோடி பட்டவர்த்தனம்பட்டதென்று அரசருக்கறிவிக்க அரசர் அதுமாற்றலரானிகழ்ந்ததாகவெண்ணிச் சிம்மாசனத்தினின்றுமிழிந்து ஒருபரிமீதேறி யானைபட்டகளத்தையடைந்தார், அங்குப் பகைவராவாரியாவரையுங்காணாது தமதுடல்பொருளாவி மூன்றினையுமடிமைபடைத்துடைய சிவனடியார் நிற்பக்கண்டார். உடனே பரியினின்றுமிழிந்து சிவனடியாரது பாதங்களிலேவீழ்ந்துவணங்கி சுவாமி! அடியேன் தீரவிசாரியாமையால் இவ்வழியடைந்தேன் தேவரீர் செய்கையென் றுணரப்பெற்றாலிங்கு வருவேனல்

லேன். யானைசெய்த சிவாபராதமென்னையோ அதுவுமுணர்ந்தி லேன் என, எறிபத்தர் அரசரே சிவகாமியாண்டார் சிவபெருமானுக்காகக் கொணர்ந்த செழுமலரை இவ்வியானைபறித்துச் சிதறியது. பாகாமுதலாயினோர் அதுகண்டும் விலக்காதொழிந்தார்கள். ஆதலின்யானையையும் பாகரையுந்தடிந்தேன் என்று கூறினர். புகழ்ச்சோழர்மீட்டும்வணங்கி அடிகளே! இப்பெருங் கொடுஞ் சிவாபராதத்திற்குக் காரணஸ்தன்யான். என்னையுங் கோறல்அமையும். தேவரீர் கையிலுள்ள மழுப்படை மிகப்பரிசுத்தமானதாகையால் அதுபாவியாகியவடியேனைச் சிதைத்தற் கொல்லாது. எனதுடைவாளைத் தருகின்றேன் அதுகொண்டு என்னைத்தடிந்து குற்றந்தீர்த்தல்வேண்டுமென்று மொழிந்து உடைவாளைக்கொடுப்ப எறிபத்தர் அரசரது திருவுள்ளக்கிடையையுணர்ந்து வாளைவாங்காதொழியின் அரசிறந்துபடுமென்றுணர்ந்து கருணையோடு வாளைவாங்கினர். அரசர் உய்ந்தேன் உய்ந்தேன்என்று மகிழ்ந்து குவிந்து நின்றனர். வாளைவாங்கிய எறிபத்தர் வேறொன்றுஞ் செய்தற்குத் தோற்றாதவராய்த் தமதுகளத்தை யீருதலேதுணிபென்றுதுணிந்து களத்திடை வாட்பூட்டி அரியலுற்றார். அதனைக்கண்ணுற்ற புகழ்ச்சோழர் மிகவும்அஞ்சி எறிபத்தரது திருக்கரத்தைப்பற்றிக்கொள்ள எறிபத்தரும் விடாராய்க்களத்தைக்கொடுப்ப இவ்வன்பர்களதுஅன்புக்கிரங்கி ஆகாயவாணியானது அன்பர்காள் உங்களது மெய்யன்பினையுலகமறிந்துய்யுமாறு இந்நிகழ்ச்சி நிகழ்ந்தது; என்று எழுந்தது. அக்காலையில் எறிபத்தர் புகழ்ச்சோழர்என்னு மிரண்டுண்மை நாயன்மார்களும் ஒருவரையொருவர்வணங்கி யிருவரும் ஆகாயவாக்கைவணங்கிச் சிறந்தார்கள். உடனேபட்டிறந்தயானையும் பாகரும் உயிர்பெற்றெழுந்தார்கள். சிவகாமியாண்டாரது திருப்பூங்கூடையும் புஷ்பங்களால்நிரம்பிற்று. தேவதுந்துமியார்த்தன. தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். அடியார்கள் ஆரவாரித்தார்கள். இவ்வற்புதம் நிகழ்ந்தபின்னர்ச் சின்னாள் எறிபத்தர்சிவத்தொண்டுசெய்திருந்து முத்திபெற்றார்.

இருபதாவது,

புகழ்ச்சோழச்சருக்கம்.

காய்ந்தசுடர்வேற்புகழ்ச்சோழர்கண்ணார்நுதலோனடியார்கள்
வேய்ந்தசடையாதிகளிடத்துமெய்யன்புடையார்பெரும்போரி
ன், மாய்ந்ததலையொன்றினிற்சிறுபுன்சடைகண்டயர்ந்துவளர்த்
தெரியிற்,பாய்ந்துகதிபெற்றிடுங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

வளவர்பிரானாகிய புகழ்ச்சோழரானவர் கருவூரிலே அழகிய அத்தாணிமண்டபத்திலே அமைச்சர் முதலாயினோர்சூழக் கொலுவீற்றிருக்கையில் மேற்குநாட்டரசர்கள் வரிசை வரிசையாகவந்து திறையளத்தலைக்கண்டு மகிழ்ந்து அமைச்சர்களை நோக்கி மேற்றிசையிலே இன்னும் நமக்கடங்காத வேந்தர்களுமுளரோவென்று வினாவினார். அமைச்சர்கள்வணங்கி ஆண்டவனே! மலையரணமுடைய அதிகனென்பானொருவனிருக்கின்றான் என, அங்ஙனமாயின் அவனோடுயுத்தஞ்செய்து வெற்றிபெற்று வருவீர்களாகவென்று மந்திரிகளுக்கு விடைகொடுத்தார். விடைபெற்ற மந்திரிகள் இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகளோடுஞ்சென்று அதிகனது நகரத்தைவளைந்துகொண்டார்கள். அதனைஅதிகனுணர்ந்து தனது சேனையோடெதிர்த்துப்போராடினான். கடைசியாக அதிகன்போருக்குடைந்து புறங்காட்டியோடியொளித்தான். வெற்றியடைந்த அமைச்சர்கள் அதிகனதுநகரத்துட்சென்று பற்பலவளங்களையுங்கவர்ந்து படுகளத்திறந்த பகைவர்சிரங்களைப்பொதிகளிலேற்றி அரசர் பெருமான்முன்னர்க்கொணர்ந்தார்கள். அவர்கள் கொணர்ந்தபகைவர் படையின்றலைக்குவியலை அரசன்நோக்குழி ஓர்தலையில் சிறியசடையொன்றிருத்தலைக்கண்டார் ஆ கெட்டேன் சிவனடியார்களைக்கொன்று பழிபூண்டேனேஎன்று மிகவும் வருந்தினார். அடிக்கடி அத்தலையை நோக்கிநோக்கிக்கண்ணீர்சொரிந்தார். இப்பழியை யான் தீக்குழித்தொழித்தாலல்லது நீக்குதலரிதுஎன்று தீர்மானித்தார். அமைச்சர்கள் அண்ணலே இதனை மனுநூல் வழிப்பிராயச்சித்தஞ்செய்தொழித்த லமையாதோ

இதற்காகத் தேவரீர்பிராணத்தியாகம் செய்தல்வேண்டுமோ என்றுவணங்கிக்கூறப் புகழ்ச்சோழர் சிவனடியார்களைச் சிதைத்ததோடத்திற்குப் பரிகாரமுமுளவோவென்று மறுத்து புத்திரனுக்கு இராச்சியபட்டாபிஷேகம்செய்யக் கற்பித்துத் திருவாலயத்திலே அக்கினிக்குண்டமு சமைப்பித்து வெட்டுண்டசடைத்தலையை நல்லபொற்றும்பாளத்திலேவைத்து பட்டினுலேயலங்கரித்து அதனைத்தமதுமுடிமேற்றாங்கித் திருவாலயத்துட்போய்த் திருவானிலையுடையானை வலம்வந்து அக்கினியிலேழுழ்கினுர், தேவதுந்திமிமுழங்கத் தேவர்கள் புஷ்பமாரி பெய்யப் புகழ்ச்சோழரானவர் சிவபெருமானது ஸ்ரீபாதாரவிந்த நீழலையடைந்தார.

இருபத்தோன்ருவது,

கருவூர்த்தேவர்கதிபெறுசருக்கம்.

வரமார்கருவூர்த்தேவரொனுமௌனசிவயோகியர்வேதச்
சிரமாரிசைப்பாபலமொழிந்துசிவத்தானங்கள்பலவணங்கிக்
கரமார்நெல்லியெனச்சித்திகாட்டிவதியவவர்க்குமுத்திப்
பரமானந்தந்தருங்கருவூர்ப்பசுபதீசப்பெருமானே.

கருவூர்த்தேவரானவர் கருவூரிலே மறையவர்குலத்திலே பிறந்தவர். இவர் உலகாயுதமுதலியபலசமயங்களையும் கன்காராய்ந்துணர்ந்து சைவசமயமேசற்சமயமென்றுதேறி அதன்வழியேயொழுகுவாராயினுர். வேதம் ஆகமமென்னும் முதனூல்வல்லோராய் வைதிகசைவந்தழைத்தோங்கத் திருவிசைப்பாபாடியருளினுர். இவர் சிவயோகங்கைவந்த சித்தராகையால் எச்சமயங்களிற்சென்றாலும் எத்தொழில்புரிந்தாலும் மாதவஞ்செய்தாலும் மாதர்பாலிருந்தாலும் தாமரையிலையினீர்போல் பற்றற்றிருப்பர். இவர் திறத்தையுணராத புன்மதியினராகிய பிராமணர் சிலர்கூடி இவர் மதுவுணருந்தும் வாமமார்க்கத்தவரென்று இகழ்ந்தார்கள். அவர்களைத்தெருட்ட நினைத்து அவர்

கள்காண அகாலத்திலே மழை வருவிக்கச்செய்தும், ஈதிபெரு கிவரப்பணணியும், சிவபெருமானது திருக்கோயிற்றிருக்கதவந் தான் திறக்கச்செய்தும், பூதங்கள் குடைபிடித்துவரக்கற்பித் தும், இவ்வாறுபல அற்புதங்கள்செய்தனர், மலைகளிலும் வன ங்களிலும் சஞ்சரித்தனர். பற்பலநாட்டகத்துஞ்சென்று சிவ தெரிசனம் செய்யக்கருதி, கொங்குநாடு, குடநாடு, கன்னடம், துளுவம் மகதம் கோசிகம் கோசலம் உஞ்சை அவந்தி சாளக் கிராமம் மாளவம் ஆரியம் மராடம் குருக்கேத்திரம் இலாடம் அயோத்தி ஏமாங்கதம் கவுடம் பல்லவம் மத்தியம் முதலிய தேயங்களிலும் அவற்றை யடுத்தவனமுதலியவைகளிலும் செ ன்று காசி காஞ்சி காளத்தி அருணசலம் முதலிய பலதலங்களை யும் சிதம்பரமுதலியதலங்களையும் தரிசித்துப் பாண்டிநாட்டை யடைந்து மதுரைமுதலிய தலங்களைவணங்கித் தாம்பிரவர்ணி நதிதீரத்திலே குருகூரென்னும் வைணவாலயத்தையடைந்தார். அப்படியவரடையுமுன்னரே திருமாலானவர் அடியார் கனவிற் றேன்றிக் கருவூர்ச்சிவயோகியார் இங்குவருகின்றூர் அவர்க்கெ திரசென் றுபசரியுங்கள் என்றருளப் பாகவதர்கள் பரிவாரங்க ளோடு எதிர்சென்றுவணங்கி ஆசீர்வதிக்கப்பெற்றூர்கள். அங்கு நின்றுந் திருச்செந்தூரைவணங்கி கன்னியாகுமரியையடைந்து குமரிதீர்த்தமாடிச் சுசீந்திரத்தைப்போற்றித்திருநெல்வேலியை யடைந்தார். நெல்லையப்பனை யன்போடழைக்க அவர் அன்பர் பெருமையை யுலகிற்கறிவுறுத்துமாறு வராமற்றூழ்ந்தார் ஈச னிங்கில்லாமையால் கல்லோர்குறைந்து நகரம் எருக்கெழுக் கடவதென்று சபித்தனர். சிவபெருமான் அடியார்களைக் கருவூர் த்தேவரிடத்துத்திரண்டுவரும்படி ஆஞ்ஞாபித்துத்தாம்அவருக கெதிர்தோன்றி அனுக்கிரகித்தருளினூர். கருவூர்த்தேவர் ஆநந்த க்கடலில் மூழ்கினவராய்த் திருவிசைப்பாபாடித்துதிசெயதார் அப்போது சிவனடியார்களும்வந்து வணங்கி அவர் முன்ன ரிட்டசாபம் நீக்கியருளப்பெற்றூர்கள். அதன்மேற்கே ஒரு குரோசதூரத்தில் ஒருசிவலிங்கத்தைக்கண்டு யோகியார் தழுவ அவ்விலிங்கங்குழைந்தது. அங்குநின்றுந் திருப்புடைமருதூரை

யடைந்து சிவபெருமானை யழைத்தபொழுது கன்றின்குரல்
கேட்ட பசுவைப்போல ஓலஓலவென்றருளி எதிர்வந்து காட்சி
கொடுத்தருளினர். அங்கு திருவிசைப்பா பாடிப்பணிந்தார்.
அங்குநின்றுங் கசேந்திரமோட்சமென்னும் விஷ்ணுவாலயத்
யடைந்து, அப்பால் முன்றீசரைவணங்கி அழைத்தார் அவர்
எதிர்தோன்றி வேண்டுவதென்னையென, மதுவேண்டுமென்ன
அவர் காளியைநோக்கிக் கருவூர்த்தேவருக்கு மதுக்கொணர்ந்து
தருப்படிபணித்தருள, காளி மதுவைக்கொணர்ந்தாள். இதனை
யுணர்ந்த காளி கோட்டவாசிகளாகிய கருமயோகிகள் கருவூர்த்
தேவரையடுத்துவணங்கத் தேவர் அவர்களைநோக்கி மீன்கொ
ணரும்படி கூறினர். அவர்கள்போய்த்தேடியும அகப்படாமல்
கருவூர்த்தேவர்பால் விண்ணப்பஞ்செய்ய அருகேயிருந்த ஒரு
வன்னியரத்தைநோக்கி மீன்வருஷம் வருஷிக்கும்படி கட்டளை
யிட அவ்வாறே வருஷித்தது. கருவூர்த்தேவர் கருமயோகிகளை
நோக்கி நீங்கள் இவ்வாறு செய்யலாற்றது மயங்கி மதுபானு
திகள் செய்துழலுவதென்னையென்று அறிவுறுத்த அவாகள்
முத்திநெறி யடையும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று
வேண்ட அவர்களைப் பொதியமலைக்கு வரும்படி யுத்தரவு
செய்து அருகிலுள்ள ஒருவிஷ்ணுவாலயத்தையடைந்து அவ
ரைவிளித்தும் அவர் வராமையால் அவருக்குப் பூசையற்றுப்
போகவெனச் சபித்தார். அங்ஙனமேயாயது. பின்னர்த் திருக்
குற்றலம், சென்று திருவிசைப்பாபாடியருளிப் பொதியமலை
யையடைந்து அகத்தியனுரைத்தருசித்து அங்கொருசார் எழுந்
தருளியிருந்தார். அப்பொழுது தஞ்சையிலே சோழராஜனுற்
சமைக்கப்பட்டஒருபெரியஆலயத்திலே சிவப்பிரதிஷ்டைசெய்
யப்பலவாறு முயன்றும் மருந்திளகிப் பந்தனமாகாது வருந்தி
னன். கருவூர்த்தேவர்வந்தாலல்லது காரியம்சித்தியாகாதென்று
ஆகாசவாக்குப்புறப்பட்டது. அங்கிருந்த பெரியோர்களுள் உரு
வமறைத்தெழுந்தருளிய போகநாதரானவர் கருவூர்த்தேவருக்
குக்காக்கையின்காலிற்கட்டி ஓலைவிடுத்துக் கருவூர்த்தேவரை
வரவழைத்தார். கருவூர்த்தேவர் அங்குவந்திருந்த போகநாதர்

முதலியோர் அனுமதிகொண்டு ஆலயத்தினுள்ளே பிரவேசித்துச் சிவலிங்கப்பெருமானை ஆவுடையாளுடன் சேர்த்துச்செவ்வனே நிறுத்தித்தமது திருவாய்த்தம்பலத்தை யுமிழ்ந்து பந்தனம்செய்தருளினர். அப்பந்தனம் பசும்பொன்னுருக்கி யமைத்ததுபோலிருத்தலை நோக்கி யாவரும் வியந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள், அவ்விடம் விட்டுத்திருவானைக்காவை வணங்கித் திருவரங்கத்திற்கு வந்தார். அவர் எழிலைக்கண்ட ஒரு பொதுமாது அவரிடத்து உள்ளன்புடையாளாய் அவரிடத்துச்சென்று தன்னெண்ணத்தை அறிவிப்ப அவரும் இயைந்து அவளதுஇல்லத்திற்சென்று அவளதுபோகத்தைநுகராது நுகர்ந்திரண்டுநாளிருந்தனர். இரண்டாநாளிரவிலேமறைந்துவிட அவள் அவரைத்தேடிப் புலம்புவாளாயினள். அவரோதிருவரங்கனுதரது திருக்கோயிலையடைந்து திருமாலையழைத்து அவரது மார்பகத்தணிந்திருந்த விலையேறப்பெற்ற மாணிக்கமாலையை அவர்தரப்பெற்றார். அதனை அம்மாதுக்குநல்கி அவளைநோக்கிப்பெண்ணே யாம்செல்லுதும் நீஇன்றுபோல என்று நம்மைநினைப்பினும் நாம்வருவேமென்றுகூறி அவ்விடம்விடுத்துத் திருப்பராய்த்துறை திருவீங்கோய்மலை திருவாட்போக்கி திருக்கடம்பந்துறைதிருமுக்கூடல் முதலியதலங்களைத்தரிசித்துக் கருவூரையடைந்து இனிதுவீற்றிருந் தருளினர். திருவரங்கத்திலே திருப்பள்ளியுணர்த்தும் அடியார்கள் திருமால் திருமார்பகத்திருந்த அரதனவடங்காணப்பெறாது மயங்கிப்பாகவதர்களுக்கறிவிப்ப அவர்கள் ஒருங்குகூடி ஆராய்வாராயினர். அப்பொழுது அப்பொதுமாது அவ்விரத்தினமாலையை மார்பகத்தணிந்தவளாய் வெளியேபோதர அவளைப்பிடித்துக்கேள்விலார்முன்னர்க் கொணர்ந்தார்கள். அவளைவிசாரித்த பொழுது அவள்ஒருபிராமணர் கொடுப்பப்பெற்றேன். அவர் இன்றும் என்மனைக்குவருவாரெனப் பாகவதர்கள் அவளை அவள்வீட்டிற்கனுப்பிவிட்டு நகர்காவலாளரைநோக்கி அவள்வீட்டைக்காவல் செய்யவும் கள்வன்வருமேல் பற்றிக்கொணரவுங் கற்பித்தார்கள். அன்றிரவிலே கருவூர்த்தேவரை அப்பெண்ணனவள் நினைக்க

அஃதுணர்ந்துபோந்த அவருடன் அவள்உரையாடா நிற்புழி நகர்காப்போர் அவரைச்சென்றுபற்றி மறுநாள் கோவிற்கூட்டத்தாரிடத்திலே ஒப்புவித்தார்கள். பாகவதர்கள் கருவூர்த்தேவரைநோக்கி இப்பெண்ணணங்கிற்கு இவ்விரத்தினவலியைத் தந்தவர்நீர்தாமோவென அவர் ஆமென்றார். அற்றேல் இதனை உமக்குத்தந்தவர் யாவரெனக் கருவூர்த்தேவர் இதனைஎனக்குக் கொடுத்தவர் திருவரங்கேசரேஎன்றார். அவர்கள்நகைத்து இம்மாலையையுமக்குத் திருவரங்கேசர்தந்தருளிய துண்மையாயின் அவரை இச்சபையகத்தழைத்துச் சொல்லுவித்தல் வேண்டுமென்றார்கள். கருவூர்த்தேவர் திருவரங்கப்பெருமானை அவ்வண்ணஞ் செய்யுமாறுவேண்ட அவர் ஆகாயத்திலேதோன்றி யாவருங்கேட்ப இவ்விரத்தினமாலையைக் கருவூர்த்தேவருக்கு நாமேகொடுத்தோம் என்றருளிச்செய்து மறைந்தார். பாகவதர்கள்பயந்து கருவூர்த்தேவரைவணங்கி அபராதம்க்ஷமிக்க வேண்டினார்கள். அவ்வாறே அனுக்கிரகம்செய்து கருவூரையடைந்து வசித்திருந்தார். ஒருநாள்இரவிலே கருவூர்த்தேவரது குலத்தினராகிய பிராமணர்கள்சிலர்கூடிஅரசனிடத்துச்சென்று கருவூர்த்தேவர் மரபுக்கடாத மதுவுணருந்தி வாமபூசைசெய்கின்றார். அதனைநோக்கி அவரைக்கண்டித்தல் வேண்டுமென்றுகூற அரசன்ஒருவாறுஇசைந்துகருவூர்த்தேவரதுஆச்சிரமத்தையடைந்து அவருத்தாரப்படி அவர்மாணுக்கர் அவரிருக்கையின் ஒவ்வோர்பாகத்தையுங் காட்டக்கண்டான். அங்கு வேதாகமமுணர்ந்த தபோநிதிகளும் அவர்கள்உண்பனவும் பூசையாகமுதலிய வைதிகசற்காரியங்கள் செய்தற்கான உபகரணங்களும் மலிந்திருத்தலைக்கண்டான் அரசன்பயந்து கருவூர்த்தேவர் பாதங்களிலே வீழ்ந்துவணங்கி தான்செய்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்றுமன்றாடினான். கருவூர்த்தேவர் அரசனைநோக்கி இப்பொழுது இவ்விடத்துள்ள பிராமணர்கள் இருக்கையைப் பரிசோதித்துவாவென்று பணித்தருள அங்ஙனமேசென்று பார்க்கும்பொழுது அங்கு மதுக்குடங்களும் புலால்களும் நிறைந்திருத்தல்கண்டு அவர்களைமுனிந்து நகரத்தைவிடுத்து வேட

ரோடு காட்டகத்துழலும்படி துறத்தினான். இதனைக் கருவூர்த் தேவருக்குணர்த்த அவர்அரசனைநோக்கி அவர்களைநீத்தல்கூடா து. அரசன்யாவரையும் பொதுவாகப் புரத்தல்வேண்டுமென்று கூறியனுப்பினர். அரசனாற்கடியப்பட்ட அந்தணர்கள் திரண்டு ஆம்பிராநதிக்கரையையடைந்து கருவூர்த்தேவருக் கிடர்செய் யக்கருதிக்காத்திருந்தார்கள். கருவூர்த்தேவர் ஆம்பிராநதிக்குச் சென்றும் அவர்களிடத்து அகப்படாமல் திருவாநிலைக்கோயிலை யடைந்தார். அவர்களும் பின்தொடர்ந்து ஆலயத்தையடைந் தார்கள். கருவூர்த்தேவர் கதியடையவேண்டியகாலம் சமீபித்த படியால் அவர்பசுபதீச்சுரரைத்தழுவிக்கொள்ள அவரைச் சிவ பெருமான் தம்முள்ளே இரண்டறக்கலந்துகொண்டருளினர். அப்பொழுது தேவதுந்துமியார்த்தன.தேவர்கள்பூமழைசொரிந் தார்கள். பிராமணர்கள் அவரதுமெய்யன்பையும் சிவபெருமா னது திருவருளையுங்கண்டுபயந்து தங்கள்பிழைக்காகப் பரிதபித் தார்கள். அப்பொழுதுஆகாசவாணி அவர்கள்தப்பிதங்கள் மன் னிக்கப்பட்டனவென்று விளம்பிற்று. அன்பர்கள் அதிசயித்துக் கொண்டாடினர்கள்.

ம்பலம்.

கருவூர்ப்புராணவசனம்
முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவர்மெல்லடிவாழ்க.

சிவஞானயோகிகள்திருவடிவாழ்க.

கோயமுத்தூர்வித்துவான்

கந்தசாமிமுதலியாரியற்றியது.

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
3	8	3	பூத்தக்கவுணி	பூத்தகவுணி
4	14	2	களிரும்	களிறும்
	15	4	சோழநார்	சோழனார்
9	8	4	யேற்றி	யேத்தி
	12	3	வனந்தரு	வளந்தரு
10	17	2	மிழைத்தனன்	மிழைத்தனே
12	29	1	வனமொரு	வனவொரு
14	41	2	யேற்றுடன்	யேத்துடன்
	44	4	புகன்றன்பால்	புகன்றனமால்
15	49	3	றற்பணம்	றார்ப்பணம்
16	55	2	வகுக்குறு	வகுக்குது
17	61	1	கொண்டெம்	கொண்டம்
19	14	1	செங்கோல்	செங்கால்
23	37	1	கவரிதழ்	கவிரிதழ்
24	46	3	வறிரு	விறிரு
31	32	1	சுளைநறு	சுவைநறு
33	45	2	யின்பசுந்	யிற்பசுந்
	47	2	துளையுஞ்	துறையுஞ்
	48	2	பிறந்தைவாரு	பிறந்தைவாரி
38	10	3	தெய்வை	தேய்வை
40	7	3	ஷ	ஷ
41	13	2	பரபரனே	பராபரனே
	18	2	குணக்கென	குடக்கென
42	21	1	பின்புதிய	பிற்புதிய
	25	1	சனாந்தகனுந்	சனாந்தனனுஞ்
45	5	1	உற்றுளையு	உற்றுறையு
		2	றுளதவணி	றூளதவணி
48	2	4	படைத்ததனால்	படைத்தனனால்
52	9	1	சூர்க்கோக்குரு	சூர்க்கொக்குரு
		4	கொழுத்தெறி	கொழித்தெறி
53	20	2	றளைகுற்றுந்	றறைகுற்றுந்
	21	2	புகன்றனன்	புகன்றனம்

சோதனபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
56	17	1	வாணீணில	வானீணில
57	19	4	நிலைவு	நிலவு
	20	4	நொந்தகன்றனன்	நேர்ந்தகன்றனன்
58	26	2	ருயறிங்	ருயரிங்
	27	2	திற்புக்கா	திர்புக்கா
60	1	4	வயனிடை	வயினிடை
62	10	3	கற்பபுரி	கர்ப்பபுரி
	12	3	நாழும்	நாளும்
	13	1	மதிற்தோற்றம்	மதித்தோற்றம்
64	28	3	கேழ்வி	கேள்வி
65	1	1	வண்டுநாண்	வண்டுணு
67	13	1	துணிரின்	துணரின்
		3	கெழிமி	கெழுமி
70	30	2	கொழுத்தெறி	கொழித்தெறி
74	20	1	தனித்தொடீ	தனிற்றொடீ
	24	1	வியாழங்	வியாளங்
79	13	4	லொன்றுமுறை	லொன்றுமுனை
80	21	1	றுயருழன்று	றுயருழந்தா
81	26	4	புலர்ந்தான்	புலந்தான்
	28	4	சாந்தான்	சார்ந்தான்
82	33	3	தவிர்த்து	தவித்து
84	45	2	துழங்கி	துளங்கி
86	58	2	விற்பருவ	விற்புருவ
	63	4	யையவுற்ற	வையவுற்ற
90	87	3	யியற்றினும்வாம்	யியற்றினும்வான்
	88	3	நிலைவறநிறப்பி	நிலைவுறநிற்பி
95	1	4	மிழநகை	மிளநகை
96	7	3	கொழுவ	கொளுவ
98	20	1	டியிருழப்ப	டியருழப்ப
	21	4	கொடுங்கடல்	தொடுங்கடல்
100	38	3	விடல்குழை	வுடல்குழை
101	45	3	தவசில்	தவிசில்
107	10	3	விரற்கோ	விரற்கொ
108	18	4	விளைஞ்சி	விறைஞ்சி

பக்கம்.	பாட்டு.	அடி.	பிழை.	திருத்தம்.
109	20	3	கழிபொருந்தூல	கழிபெருந்தூல
	22	3	தறியாமை	தரியாமை
		4	போழ்ந்து	போந்து
110	27	1	சாற்றி	சாத்தி
111	31	2	முள்ளிரிற்	முள்ளிறிற்
	35	2	குரைத்த	குறைத்த
		3	முப்பாதக	முபபாதக
113	47	1	னெய்	நெய்
117	2	3	பிறைதாள்	பிறைதாழ்
119	14	2	புணந்துமென	புணர்துமென
	15	3	பதிகளிகிற்	பதிகளிற்
131	30	1	முதிறுமுக்	முதிருமுக்
132	40	1	வாயினுங் [ட	வாயிலுங்
143	52	4	தொக்கத்தொண்	தொக்கதொண்ட
146	6	3	வாணகைப்பலரு	வாணகைப்பரு
147	12	2	தனர்வாது	தனரலாது
152	45	1	நுதலினுதலி	நுதலிநுதலி
155	10	4	ருணைப்பரோ	ருணைப்பாரோ
156	18	2	றிழைத்தாலு	றிளைத்தாலு
157	26	2	காதவ	காவத
159	40	3	தேன்றுக்கமழ்	தேனறுக்கமழ்
162	62	4	தனைவலித்தான்	தனில்வலித்தான்
163	66	1	யணைக்கூஇ	யணைக்கூஉ
164	76	2	சுரூபமு	சுரூவமு
167	97	3	பொனணிறைப்ப	பொனணிநாப்ப
173	134	4	மிடற்றோர்புரி	மிடற்றேற்புரி
174	141	1	வியற்றினரிரு	வியற்றினிரிரு

31-37-40-65-82-100-146-149 பக்கங்களில், உருஞ்சு,, என்றுவருபவைகளை உரிஞ்சு,, என்றுகொள்க.

பிசோதனைபத்திரம்.

வசனம்.

பக்கம்,	வரி.	பிழை.	திருத்தம்.
6	7	ஆகாயாத்தி	ஆகாயத்தி
11	13	பசுபதிஞெயக	பசுபதிநாயக
23	23	ராதிகளையு	ராதியர்களையு
28	24	அரசன்	அரசர்
30	22	ருழ்ந்தார்	ருழ்க்தார்
31	4	வாலயத்	வாலயத்தை
33	30	அங்கும்தா	அங்குமதா

அரசனுடைய, முரணைநகர்தான் என்று. முரணைநகர் மேயே
னாறு, சாறலுமாம் சொல்லலாம். எ - று.

உறையூரைச்சார்ந்த மள்ளநாட்டிலுள்ள முரணைநகரத்த
ரசராகிய சந்திரன்சுவாக்கியென்பவன் ஆசிரியரை ஆதரித்த
மை, இந்நூலைச் செய்வித்தமையாகிய நன்றியைப் பற்றி மாவிர
தநகரம் முரணைநகர் மாமேடாக்கூறினார் முதநூல் முதுனப
வரால் செய்யப்பட்ட அருமநூல். அந்நூல் முதலாவது தலைஞைனை
கருப்பட்டவர் அந்நூல்கூறும் விதிவிலக்குகளை யறிந்து ஒழு
கச்செய்தலால் கேடா நவுக்கல். வாழ்கா ரியப்பொருட்டா
யெ எதிகாலச்செய்திசொல்லசம. தாமரை முதலாகுபெயர்.
காமநோயும் உகரச்சாரியை பெற்றுக்காமருளவிந்து;
காமம் வருளைப காமருள எனுமேதலைப்பாருமுளர்; இதும
ரூ. பொருள் கலைப்பொருட்கு விருப்பத்தோன்றுகின்ற என்
பது. கருமையினாவிகாரமாகிய காரெனபதுபோலப் பசுமை
யின் விகாரமாகிய பார்பூமிக்குப்பண்பாகுபெயர். பசுமையின்
ய பண்படியோடு, பகுதிப்பொருள் விகுதியாகிய் மையீ
றுபுணர்ந்து கெடுமாதாலாயில் ஆதிநீணடு, எறறுகரங்கெ
டு நின்றதென்றபல, பரளை றுமவீகா டிமுதனிண்டு,
எற்றகரங்கெடுமீள றதெனின், தன்னில்விகாரப்படுவதோ
சொல இன்மையாலும், வினையடி இவ்வாறு விகாரப்பட்டிடல்
பனைமையாலும் அங்ஙது குறறமே ஆம். (கஎ)

* ஓடாத தானை நளனென்று ளொருவன் [illegible]
பீடாருஞ் செல்வப் பெருடைவண்டோ - டோ [illegible]
முருகுடைய மாதர் முலையணைக்கும் தண்டார்
அருகுடையான் வெண்குடையா னங்கு.

(இ-ள்.) பீடு - செல்வம் - ஆரும் - நிறைகின்ற, செல்வப்பெ
ருடை - சிறப்பமைந்த பணவனே, வண்டோடு - ஆண்வண்
டு [illegible] உண்டு [illegible] களைடுக்கொண்ட திறல், உடைய - (பேர
ரும் [illegible]) உடைத்திறல், முருகு - ஒழுகும்தேன், மாதர்
[illegible] (அணைந்த) மாதர்களுடையமுலைக்கே, அணைக்கும்.

நலேயச்செய்கின்ற, தண்தார் - குளிர்ச்சியாகியமலர்மாலையை அருகுஉடையான் - (மார்பின்) அருகிலுடையானும், வெள்குடையான் - வெண்கொற்றக்குடையை யுடையானுமாகிய, ஒருவன் - ஓரரசன், ஆங்கு - அம்மாவிந்தநகரத்தில், ஓடாத்தானை - (போரில்) பின்னிடாதசேனையையுடைய, நளனென்று - நளனென்றுசிறப்பித்துச் சொல்லப்பட்டு, உளன் - இருக்கின்றனன். எ - று.

ஓடுருபு ஏழாவதனிடப்பொருளது. ஊடா செயவென்வாய்பாட்டிறந்த காலவினையெச்சத்தின் திரிபு. உடைய என்னும் செயவென்வாய்பாட்டிறந்தகால வினையெச்சத்துக்குப் பேரரும்பென்னும் வினைமுதல் எஞ்சிநின்றது. பெடை ஊடுதல் பேரரும்புடைதலுக்கும், பேரரும்புடைதல் தேன் சிந்துதலுக்கும் காரணமாயின. முருகுடையமாதரொன்பதற்கு இளமையுடையமாதரெனவும் உரைக்கலாம்; அங்ஙனம் உரைத்தால், பெடை ஊடுதலால் தன்னிலுள்ளதேன் முலைகளை நனைக்குமெனின் அவ்வினைக்குமாலை என்பது கருத்தாவாகக் கொள்க. மாது விருப்பம்; அது கண்டோர்க்கு விருப்பத்தைத் தருகின்ற பெண்ணுக்குக் காரியவாகுபெயர்; பண்பாகு பெயருமாம்; அச்சொல் அர் என்னும் பலர்பாற்படர்க்கைவிகுதி பெற்று மாதரென நின்றது. வெண்குடை என்பதில் மையீறுகெட்டு நின்றவெள் என்பதனீற்றுள்ளகரம் மெல்லினமுதன்மொழிமுன்ணகரமாதல்போல, நன் - மெய் - சூ - கசு. இன்படி வல்லினமுதன்மொழி முன்னும் ணகரமாயிற்று. (கஅ)

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான் - மாத
அருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு.

(அ - ரை.) தாது - தாதுக்கள், அவிழ் - விரிகின்ற, தாரான் - மலர்மாலையணிந்த நளன், சீதம் - குளிர்ச்சியா

மதிக்குடைக்கீழ் - சந்திரன்போன்ற தனது குடைநிழலில், செம்மை அறம் - குற்றமற்ற அறங்கள், டெபப - தங்கவும், மாதர் - மங்கையர், அருகு - தமதருகிலவைத்து, ஊட்டும் - ஊட்டிவளர்க்கின்ற, பைங்கிளியும் - பசுமையாகிய கிளியும், ஆடல்பருந்தும் - வெற்றியையுடையபருந்தும், ஒரு கூட்டில் வாழ - ஒரு கூட்டில் வாழவும, உலகு - உலகத்தை, தனிக் காத்தான் - பொதுவிலலாமல ஆண்டான். எ - று.

பொதுவில்லாமல காத்தலாவது - சில அரசர்கள் தன்னோ டொபபச சில தேயங்களை ஆளத் தான்சிலதேயங்களை ஆளு தலில்லாமல் தாமேமுழுறறும ஆளல். ஆளுகை தண்ணளி யோடுகூடியதாகையால அவன் குடைக்குச் சீதமதி உவமை யாயிற்று. பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில்வாழ என்றதனால் வலியோர் மெலியோரை வருத்துதலின்றி நட் பினராய வாழ என்பது குறிபபெசசம. குடை பண்பாகுபெ யர். மதிபொருளடியாகப பிறந்த ஒன்றன்படர்க்கைப் பெ யர்ச்சொல்; மது பகுதி, இ ஒன்றனபடர்க்கைவிகுதி, உக ரக்கேடு சந்தி, மது சுவையுடையசாறு; அது இங்கு அமுதத் தையுணர்த்திற்று; இறைவனுடைய மனததில் பிறந்தமை யால் மதி இடவாகுபெயரெனின், "மதிநுட்பநூல்" எனச் செயயுளிலும், இபபடிசசொல்ல இவனுக்கு மதிகெட்டதா எனவழக்கிலும்மதி அறிவுக்கே அனறி, மனததுக்கு வழங் காமையால் அதுகுறறமே. ஊட்டும் பிறவினையாகிய எதிர் காலபபெயரெசசம்; உண்பகுதி, டு பிறவினைப்படுத்தும் விகுதி, பகுதி முதனீண்டது ரீட்டல் விகாரம், ணகரம் டக ரமாதல் சநதி. உம் எதிர்காலப் பெயரெசசவிகுதி, உகரக் கேடு சந்தி. இது இயல்பினால் நிகழ்காலம எதிர்காலமாக வந்த காலவழுவமைதி. பைங்கிளி பண்புத்தொகை; பசு மையென்னும் பண்புபபெயர் கிளியென்னும் பதபபுணர்ச் சியில் மையீறுகெட்டு, அடி அகரம் ஐகாரமாகி, "இனைய வும்" என்பதனால், சுகரம்கெட்டு, ஙகர இனவெழுத்து மிகுக்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான் - தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

(இ - ள்.) தேன்குவளை - மணமுள்ளகுவளைமலரிலுள்ள, தேன் ஆடி - தேனில் முழுகி, வண்டு - வண்டுகள், சிறகு உலர்த்து - சிறகை உலரச்செய்கின்ற, நீர் நாடன் - நீர்வளமுள்ள நிடதநாட்டரசன், பூநாடி - மலரைக் கருதி, சோலை புக - சோலையில் புகுவதற்கு, வாங்கு - வளைந்த, வளை-வளையலணிந்த, கையார் - கையையுடையமாதர்களது, வதனமதி-முகமாகிய சந்திரன், பூத்த - மலர்ந்த, பூகுவளை - பொலிவாகிய குவளைமலர்களினது, காட்டிடையே - காட்டினிடத்தே, போயினான் - சென்றான். எ - று.

வாங்குவளைக் கையாரென்பதற்கு, வளைவாங்குகையாரெனப் பதங்களை நிறுத்தி, வளையல் நீங்குகின்ற கையையுடைய மாதரெனவும் பொருள்கூறலாம்; அவனையடையப் பெறாமையால் மெலிந்த உடலினராகி, வளையல்கள் கையினின்றும் கழலநின்றார்களென்பது கருத்து. வதனமதிபூத்த பூங்குவளைக்காட்டிடையேபோயினானென்றது,—தன்னழகை மங்கையர்கள் வியந்து பார்க்கப்போயினானென்பதை. பூத்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சம் குவளையென்னும் பிறபெயர்கொண்டது. மதிபூத்தகுவளை பால் வழுவமைதி. குவளைமுதலாகுபெயர். குவளைக்காடு ஒன்றன் கூட்டத்தற்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். உலர்த்து காலங்கரந்த பெயரெச்சமாகிய பிறவினை இடமடியாகப் பிறந்த நாடனென்னும் பெயரின்முதனிலையாகிய நாடென்னும் பெயர்கொண்டது. ஏ பிரிநிலை; உலர்பகுதி, த் சந்தி, து பிறவினைப்பகுதியும் விகுதி, இவ்வாறு முடிந்த உலர்த்து காலங்கரந்த பெயரெச்சமாகிய வினைத்தொகைவினைசசொல். உலர்த்து நீரென்பதை உலர்த்தும் நீரெனப்பதம் பிரித்துப் பொருள் கூறலுமாம். (உ௦)

வென்றி மதவேட்டன் வில்லெடுப்ப வீதியெலாம்
தென்றன் மதுநீர் தெளித்துவர - நின்ற
தளவேனல் மீதலரும் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனல் வந்த தெதிர்.

(இ - ள்.) நின்ற - (முல்லைநிலத்தில்) வளர்ந்த, தளவு-முல்லைக்கொடிகள், ஏனல்மீது - தினைப்பயிரின்மேல படர்ந்து, அலரும் - மலர்கின்ற, தாழ்வரைசூழ் - நீண்டமலைகள்சூழ்ந்த, நாடற்கு எதிர் - நிடதநாட்டரசனுக்கு எதிரில், வென்றி- (யாவரையும) வெற்றிகொள்ளுதலுடைய, மதவேள் - மதனாகியகாமன், தன்வில் எடுப்ப - (போரைக்கருதி) வில்லைக் கையிலெடுக்கவும், வீதி எல்லாம் - (அரசன் செல்லும்) வீதி முழுமையும், தென்றல் - தென்காற்று, மதுநீர் - மலர்த்தேனாகிய நீரை, தெளித்துவர - தெளித்துச செல்லவும், இளவேனல்வந்தது - இளவேனிற்காலம் சென்றது. எ - று.

இனி நளராசன் தமயந்தியின்மேல் விருப்புங்கொள்ளுஞ் செய்தியைக் கூறுவாராதலால் அதற்கிசைய, காமத்துக்குரிய வேனிற்பருவம் நளராசனை எதிர்கொண்டதாக இங்குக் கூறினார். செல்லும் வீதியில் இவனது பேரழகைக்கண்டு மாதர் மோகங்கொள்ளலால் வேள் வில்லெடுப்பதாயினன். வர, வந்தது இரண்டும் இடவழுவமைதி. நன் - பொது-சூ, ருo. வேனல் பண்பாகுபெயர். வென்றி தொழிற்பெயர்; வெல் பகுதி, தி புடைபெயர்ச்சிவிகுதி, லகரமும்,தகரமும் றகரமாகத்திரிதல் சந்தி, பகுதியீற்றுச சந்திறகரம் னகரமாதல் யெலித்தல் விகாரம்; இவ்விகாரம் பெறாமல வெற்றியெனவும் வழங்கும். மதவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். மதுநீரென்பதும் அத்தொடர். எடுப்ப, வர என்னும் காரியப்பொருளன ஆகிய எதிர்காலச் செயவெனெச்ச மிரண்டடுக்கி வந்ததென்னும் ஓசசங்கொண்டன. எடுப்ப எடுபகுதி, ப் சந்தி, ப் விரித்தல் விகாரம், அ எதிர்காலவினையெச்சவிகுதி. குவ்வுருபு எல்லைப்பொருளது. வேனன்மீதலருந் தாழ்வரைசூழ் நாடனென்றதினால் நிட

நாட்டுக்கு முல்லையும், குறிஞ்சியும் அல்லமையிலுள்ளன என் பதாயிற்று. ஆகவே காட்டரண், மலையாண் உடையது மா விந்தமென்பது பெறப்பட்டது. (உக)

தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான் - கார்வண்டு [ப்
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய யோற்கொதுங்கி
புக்கிருந்தா லன்ன பொழில்.

(இ - ள்.) கார்வண்டு - கருமையாகிய வண்டுகள், தொக்கிருந்து - கூடி, ஆலித்து - களியாநின்று, உழலும - உலவுகின்ற, தூங்குஇருள் - நீண்ட இருள், வெயயோற்கு - சூரியனுக்கு, ஒதுங்கி - விலகி, புக்கு இருந்தால் அன்ன - புகுந்திருந்தாலொத்த, பொழில் - சோலையை, தேரின்துகளை - (தான் ஏறிசசெல்லுகின்ற) தேரினுலெழுகின்ற புழுதியை, திருந்து இழையார் - திருந்திய ஆபரணங்களையணிந்த மாதர்களது, பூங்குழலின் - பூவையணிந்தகூந்தலினது, வேரிப்புனல் - தேனுகிய நீர், நனைப்ப - நனைக்கும்படி, அடைந்தான் - சேர்ந்தான். எ - று.

சோலைமரங்களினடர்ச்சியால் வெயில் உள்ளே நுழையப் பெறுமைபற்றிக் குளிர்ந்திருண்டிருத்தலால் இருள்புக்கிருந்தாற்போல்வதாயிற்று. தேரின்றுகள் மூன்றுவதன் ஏதுப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; இதில் இன்சாரியையின் ஈற்றுனகரம் றகரமாயது எதுகைத்தொடைநோக்கிவந்த வலித்தல் விகாரம். தொக்கிருந்து செயதென்வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம்; தொகு பகுதி, இரு பகுதிப்பொருள் விகுதி, பகுதிமுற்றியலுகரமாதலால் ககரமெய்விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி; அனைத்துமொருபகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெசசவிகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம். உழலுமென்னும் வினையடியாகப் பிறந்த நிகழ்காலப்பெயரொச்சமும், அன்ன என்னும் இடைச்சொல்லடியாக

பிறந்த குறிப்புப்பெயரெச்சமும், முறையே நிலமாகவும், செய்வதாகவும் நின்றபொழிலென்றும் பெயர்கொண்டன. ஆலித்து ஆலியாநின்றென்பதன் றிரிபு. தூங்கிருளென்பதில் தூங்கு அழிபசி, வருந்துபிணி என்பனபோலக் காரியப்பொருட்டாகிய வினைத்தொகையாகக்கொண்டு, எல்லாவுயிர்களும் தூங்குதற்குரிய இருளெனப்பொருளுரைப்பினும் பொருந்தும். அவ்விருள் - இராத்திரியிருள். வெய்யோன் பண்படியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கைப்பெயர்; மையீறுகெட்டு நின்ற வெம்பகுதி, ஆன் ஆண்பாற்படர்க்கைவிகுதி, முன்னின்ற மெய்யாகிய மகரம் யகரமானது சந்தி, தனிக்குறின்முன்னொற்றாகிய யகரமிரட்டலும் அது; இவ்வாறுமுடிந்துநின்ற வெய்யானென்பதில் ஆ ஓவானது செய்யுள் வழக்கு; வெம்மைசொல்லளவில் பகுபதமெனவும், மை பகுதிப்பொருள் விகுதியெனவும் உரையாசிரியர்கள் கூறியதை மறந்து, பண்படியாவும் பெயரென்பதைச் சிந்தியாமல், "எ எனவருமுயிர்மெய்யீறாகாது" "எகரமெய்யொடேலாது" என்னும் சூத்திரங்களை மதிக்காமல் வெ முதனிலையென மயங்கிக்கூறுவாரொருவர். (௨௨)

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
றாணிறத்தாற் பொய்கை தலஞ்சிவப்ப - மாணிறத்தான்
முன்னைப்புட் டோனறு முளரித் தலைவைகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

(இ - ள்.) ஆங்கு - அவ்விடத்தில், தன்நீள் நிறத்தால் - தனது மிகுந்த வெண்ணிறத்தால், சோலை நிறம்பெயர - சோலை தன் பசுமைநிறம் மாறவும், நீடியதன் தாள் நிறத்தால் - நீண்ட தனது அடியினது செந்நிறத்தால், பொய்கை - தடாகம், தலம் சிவப்ப - நீருள்ளவிடம் சிவக்கவும், அப்புள் - நீரில், தோன்றும் - முளைத்த, முளரித்தலை - தாமரைமலரில், வைகும் - தங்குகின்ற, அன்னப்புள் - அன்னப்பறவை, மாண் நிறத்தான்முன் - மாட்சிமையாகிய ஒளியையுடைய நளராசனுக்குமுன்னே, தோன்றிற்று - காணப்பட்டது. எ - று.

சோலைநிறம் பெயர்தல் வெண்ணிறமாதல். சோலைநிறம் பெயர, பொய்கைதலஞ்சிவப்ப என்பன பால்வழுவமைதி. பொய்கைத்தலஞ்சிவப்ப எனப்பாடமாயினபோது தடாகத் தினிடம் சிவக்க எனவுரைக்க. பொய்கைத்தலம் ஒற்றுமைப் பொருள்தாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் மாணிறத்தானென்பதற்கு மாட்சிமைப்பட்ட மார்பையுடை யானெனவுமுரைக்கலாம். நிறம் பண்பாயினும் தான் விசே டியமும், நீள் விசேடணமுமாக நிற்றலால் நீணிறம் பண்புத் தொகைநிலைத்தொடர். நிலைமொழியை வினைத்தொகை வினைச்சொலாகக்கொண்டு, வினைத்தொகைநிலைத்தொட ராக்கினுமமையும். 'நீடிய இறந்தகாலப் பெயரெச்சம்; நீடு பகுதி, இன் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, இடைநிலை னகரக்கேடு கடைக்குறை, ய் சந்தி. முளரி பொ ருளாகுபெயர். தோன்றல - முளைத்தல், (அது காணப்படு தல்.) வ ஈற்றசை. (௨௯)

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்-கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து

(இ - ள்.) மேதிக்குலம் - எருமையின் கூட்டம், ஏறி- (வயலில்) சென்று, மெல்கரும்பை - மென்மையாகிய கரும் புகளை, கடித்துக் கோதி - கடித்துமென்று, முத்து உமிழும்- முத்துகளை உமிழ்கின்ற, கங்கைநீர் நாடன் - கங்கை நீரையு டைய நிடதநாட்டரசன், பெயர்ந்து-(பூங்காவிற்கருத்து) மாறி, பேதை - பெண்ணே, மடம் - இளமையாகிய, அன்னந்த ன்னை - அன்னத்தை, பிழையாமல் - தப்பாமல், பிடித்துத்தா என்றான்-பிடித்துக்கொடுவென்று கட்டளையிட்டனன். எ-று.

பெயர்தல் மாறுதல். பிழையாமை தப்பிப்போகவிடாமை. அறியாமையையுணர்த்தும் பண்புப் பெயராகியமடம் தன் காரணமாகிய இளமையின்மேல் நின்றது. 'பண்பாகுபெய

ராகிய பேதை அண்மை விளியாதலால் இயல்பாயிற்று. இப் பெண் பணிப்பெண்களில் ஒருத்தி. முத்துகளின் பிறப்பிடமாகிய பொருள்களில் கரும்பும் ஒன்றாதலால், மேதிக்குலம் கரும்பைக்கடித்துக கோதி முத்துமிழ்வதாயிற்று. முத்துப பிறப்பிடசசெய்யுள்.—தந்திவராக மருப்பிப்பி பூகந்தழைகதலி, நந்துசலஞ்சலமீன்றலை கொக்குரளினமின்னார், கந்தரஞ் சாலிகழைகன்னலாவின்பல்கட்செவிகார், இந்துவுடும்பு கராமுத்தமீனுமிருபதுமே. இது ஆசிரியர் செய்த இரத்தினச் சுருக்கத்துள்ளது. விகுதி புணர்ந்துகெட்டுநின்ற தா என்னும் ஏவலொருமை வினைமுற்று அரசனுடைய இரப்புரையாய் நின்றமையால் மரபு வழுவமைதி: தான் அசை. என்றான் இடைசசொலடியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கை இறந்த காலவினைமுற்று; என்பகுதி, ற் இறந்தகால இடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கைவிகுதி. (உ௪)

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே-நீடியாற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து,

(இ - ள்.) நீடிய - நீண்ட, நல் - குற்றமற்ற, பைங்கூந்தல் - பசுமையாகிய கூந்தலையுடைய, வல்லியர்கள் - பூங்கொடியை ஒத்த பணிப்பெண்கள், நாடி - (பிடிக்கும்உபாயத்தை) ஆராய்ந்து, நல்லமயிற்குழாம் - சிறந்தமயிலின்கூட்டம், ஓடிவளைக்கின்றது - ஓடிசசுற்றிக்கொள்வதை, ஒப்ப - ஒத்திருக்கச்சுற்றிக்கொண்டு, மடஅன்னத்தை - இளமையாகிய அன்னத்தை, பற்றி - பிடித்து, கொடுபோந்து - கொண்டுவந்து, தம்கோவின்முன் - தமதுஅரசனுக்குஎதிரில், தாழ்ந்துவைத்தார் - வணங்கிவைத்தார்கள். எ - று.

ஒப்ப என்றமையால் சுற்றிக்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்னத்தின்மேல் நாட்டமுடையாராதலால் கூந்தல்சோர்தலையும் மதித்திலரென்பார் நீடியபைங் கூந்த

லென்றார். எனவே அதுகலாபத்தை ஒத்ததென்பதாயிற்று. வளைக்கின்றது நிகழ்காலத்தொழிற்பெயர்; இத்துவ்விகுதி, வளைப்பது, வளைத்தது, வளையாததுஎன எதிர்கால இறந்தகாலத்தொழிற்பெயர்க்கும், எதிர்மறைத்தொழிற்பெயர்க்கும், வேது, விழுது என காலஇடைநிலைபெறாத தொழிற்பெயர்க்கும் விகுதியாய்வரும். உவமையாகுபெயராய்ப் பெண்ணை உணர்த்திநின்றவல்லி, அதன்பன்மைக்கண் அர்விகுதிபெற்றது; கள் ஒரு பொருட்பன்மொழியாய் விகுதிமேல் விகுதியாகவந்தது. கொடுகொண்டென்பதன் மரூஉ. போந்து இறந்தகாலவினையெச்சம்; புகுஎன்பதன்மரூஉ ஆகியபோபகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல்விகாரம். (உரு)

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிரு முன்னர் வைத்தலுமே-அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

(இ - ள்.) அங்கு-அச்சோலையில், ஆய் இழையார் - ஆராய்ந்தணிந்த ஆபரணங்களையுடைய பெண்கள், அன்னந் தனைப்பிடித்து - அன்னத்தைப்பிடித்து, கொண்டுபோய் - தாங்கிச்சென்று, மன்னன் - அரசனுடைய, திருமுன்னர் - அழகியஎதிரிடத்தில், வைத்தலும் - வைக்குதலும், அன்னம் - அன்னமானது, தன்னுடைய வான்கிளையைத்தேடி - தனதுஉயர்ந்த உறவாகிய அன்னங்களைத்தேடி, மலங்கிற்றே - வருந்தியதே, மன்னவனைக்கண்டு - அரசனைப்பார்த்து, கலங்கிற்றே - மனம்கலங்கியதே. எ - று.

திரு கண்டோரால் விரும்பப்படும் அழகையுணர்த்தும் பண்புப்பெயர். முன்னர் பண்புப்பெயர்; முன்பகுதி, அர்பகுதிப்பொருள்விகுதி, நகரம் னகரமாதல் சந்தி, அர்விகுதியெனல் குற்றமென்பதை நன்னொன்பதனுலுணர்க. இதுபண்பாகுபெயராய் இடத்தையுணர்த்திற்று; காலத்தையுணர்த்

தலுமுண்டு. வைத்தலும் இறந்தகாலவினையெச்சம்; வைபகுதி, த், அல்சாரியை, உம்இறந்தகால வினையெச்சவிகுதி, தகரத்தோற்றமும், உகரக்கேடும்சந்தி. இதனைஅடுத்த வாற்றசை; மற்றஇரண்டும் இரக்கப்பொருளன. இதுபுதியனபுகுதல். கிளி உவமையாகுபெயர். மன்னன் இடைச்சொலடியாகப்பிறந்தபெயர்ச்சொல்; மன் பகுதி, (மிகுதிப்பொருளது)ன் சந்தி, அன் ஆண்பாற்படர்க்கைவிகுதி. மலங்கிற்று ஒன்றன்படர்க்கை இறந்தகாலவினைமுற்று; மலங்குபகுதி, இன் இறந்தகால இடைநிலை, று ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதியீற்றுகரங் கெட்டதும், இடைநிலையீற்று னகரந்திரிந்ததும் சந்தி. (௨௬)

அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார மடநடையும்-விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

(இ - ள்) களிவண்டு - (தேனையுண்டு) களித்தவண்டுகள் மாண - (தாம்) மாட்சிமைப்பட, பிடித்த - பற்றிய, தார்மன் - மலர்மாலையணிந்தஅரசன், மடஅன்னமே - இளமையாகியஅன்னமே, அஞ்சல் - அஞ்சுதலொழி, பிடித்தது - உன்னைப்பிடிப்பித்தது, உன்தன் - உன்னுடைய, அணிநடையும் - அழகாகியநடையும், வஞ்சிஅனையார் - பூங்கொடியையொத்தவரது மடநடையும் - மென்மையாகியநடையும், (இவ்விரண்டில்) விஞ்சியது - சிறந்ததை, காண - காணுதற்கு ஆம், என்றான் - என்றுசொல்லினான். எ - று.

இரண்டில், ஆம என்பன எஞ்சிநின்றன. அஞ்சல் ஏவலொருமை எதிர்மறைவினை; அஞ்சுபகுதி, அல்ஏவலொருமை எதிர்மறைவிகுதி, உகரகேடுசந்தி; இதுஐப்பால்மூவிடங்களில்செல்லாமையால் வியங்கோளெனல்குற்றம். இளமையையுணர்த்தும் மடமென்னும்பண்பு மென்மைக்காயிற்று, விஞ்சியது ஒன்றன்படர்க்கை இறந்தகாலவினையாலணையும்பெ

யர். பிடிப்பித்தது பிறவினையாகிய இறந்தகாலத்தொழிற்பெயர்; இதில் பிவ்விகுதி தொகுத்தலாயிற்று. காண்முன்னிலையொருமை அசைச்சொல்; ஏவலொருமை எதிர்காலவினையெனக்கொண்டு, நீஅறி எனவுரைக்கினும் பொருந்தும். இடைச்சொல் பெயருளடங்குமாதலாலும், இச்சொல்மிகுதிப் பொருளாதலாலும் மன்னென்பனிதப் பண்பாகுபெயரென்க. (உஎ)

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம் - வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

(இ - ள்.) செய்ய - சிவந்த, கமலம் - தாமரைமலரிலெழுந்தருளிய, திருவைநிகர்ஆன - திருமகளை ஒத்த, தையல் - பெண்ணால், பிடித்த - பிடிக்கப்பட்ட, தனிஅன்னம் - ஒப்பற்ற அன்னம், வெய்ய - கொடிய, அடுமாற்றம் - கொலையையுணர்த்துஞ்சொல்லை, இல்லாத-சொல்லுதலில்லாத, அரசன்சொல்கேட்டு - அரசனுடைய சொல்லைக்கேட்டு, தடுமாற்றம் - (யாதுசெய்வேனோவென்னும்) கலக்கம், தான்தீர்ந்தது - தான் நீங்கியது. எ - று.

கமலம்முதலாகுபெயர். தையல் பண்பாகுபெயர். வெய்யவென்படியாகப் பிறந்தகுறிப்புப்பெயரெச்சம்; வெம்மைபண்புப்பெயர் பெயரெச்ச அகரவிகுதிப்புணர்ச்சியில் "ஈறுபோதல்" என்பதனால் மையீறுகெட்டு, "முன்னின்றமெய்திரிதல்" என்பதனால் மகரமெய் யகரமெய்யாகத்திரிந்து, அது தனிக்குறின்முன்னொற்றாதலால் யகரம்இரட்டலாகிய சந்திபெற்று முடிந்தது. அடுமுதனிலைத்தொழிற்பெயர், அடுமாற்றம் இரண்டாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கதொகைநிலைத்தொடர்; வினைத்தொகை நிலைத்தொடராகவாவது, எதிர்காலப்பெயரெச்சத் தொகாநிலைத்தொடராகவாவது கொள்ளினும்பொருந்தும்; வினைத்தொகை வினைச்சொல்

பெயரெச்சத்து ளடங்குதலால், இப்பெயரெச்சம் காரியப் பொருளெனலாயின்று, தன்னையுணர்த்தும் கருவியாகிய மர்ற்றமென்னும் பெயர்கொண்டதென்க. சொற்கேட்டு என்பதில் நிலைமொழி அஃறிணைச்சொல்லாயினும், குற்றொற்றடுத்தமொழியாதலால், நன் - உருபு, கசு-ரூ, இல் " விகாரத்தியல்பும்,, என்றஉம்மையைஇறந்தது தழீஇயஇழிவு சிறப்பும்மையாகக்கொண்டு, மெய் - உச - ஆம்சூத்திரத்தின்பொதுவிதிப்படி லகரந்திரிந்தது. (உஅ)

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்றன்
இசைமுகந்த தோளுக கிசைவாள் - வசையில்
தமையந்தி யென்றோதும் தையலாண் மென்றோள்
அமையந்தி யென்றோ ரணங்கு.

(இ - ள்.) திசை - எட்டுத் திக்கிலுள்ளாரையும், முகந்த - தன்னுளடக்கிய, வெள்கவிகை - வெண்கொற்றக் குடையையும், தேர்வேந்தே - தேர்சசேனையையுமுடைய அரசனே, இசை - கீர்த்தியை, முகந்த - நிரம்பப்பெற்ற, உன்தன தோளுககு - உன்னுடைய தோள்களுக்கு, இசைவாளதகுவாள், வசைஇல் . (அழகு, குணம், செயல், இவற்றால்) நிந்தையில்லாத, தமையந்தி என்று ஓதும் - தமயந்தியென்று சிறப்பித்துச சொலலப்படும், தையலாள் - பெண்ணாகிய, மெல்தோள் - மென்மையாகியதோள், அமைஅந்தி - மூங்கில் போலும் அழகுடையாள், என்ற ஓர் அணங்கு-என்றுசொல்லபபட்ட ஓர்மாது. எ - று.

திசை இடவாகுபெயர். கவிகை தொழிலாகுபெயர். வேந்துபண்பாகுபெயர். அணங்கு உவமையாகுபெயர். தமையந்தியென்பதில் யகரமுன்நின்ற அகரத்துககு ஐகாரம்போலி. முகத்தல் மொள்ளுதல். கவிகையென்றது ஆளுகையை. தோள் இசைமுகத்தலாவது - போரில்வெற்றிகொள்ளலும், ஈகைமுதலியவற்றில் சிறத்தலும், அழகும் திண்மையுமுடைமையும் ஆகிய இவற்றால் வரும்புகழைப் பெறுதல்·அந்தி பண்படியாகப்பிறந்த பெண்பாற்படர்க்கைப் பெயர் ; அந்தப்பகுதி, (இ

னைச்சொல்) இ பெண்பாற்படர்க்கை விகுதி, பகுதியீற்று ம்முக்கேடுகடைக்குறை. என்பகுதி, ன் சந்தி, அ சாரியை, ப் சந்தி, படுசெயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, அனைத்துமொருபகுதி, அ பெயரொச்சவிகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும் சந்தி, இரட்டியதே காலங்காட்டியது, இவ்வாறுமுடிந்து என்னப்பட்ட எனகின்ற இடைச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலச் செயப் பாட்டுப்பெயரொச்சம்; படு விகுதி தொகுக்கப்பட்ட என்ற என்னுஞ்சொல் அகரவிகுதி தொகுத்தலாயின்றது. (உ௬)

அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் - சொன்னமயில்
ஆர்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

(இ - ள்) அன்னம்மொழிந்த - அன்னஞ்சொல்லிய, மொழிபுகாதமுன் - சொல் (முற்றும்) நுழையாதமுன், கன்னி - கன்னியாகியதமயந்தி, மனக்கோயில் - மனமாகியகோயிலை, புக்கு - நுழைந்து, கைக்கொள்ள - வசமாக்கிக்கொண்டதினால், அநங்கன் - மன்மதன், சிலைவளைப்ப - வில்லெடுத்து வளைத்ததனால், பார்மடந்தை - பூமியாகிய பெண்ணுக்கு, கோமான்பதைத்து - அரசனாகியநளன் பதறி, சொன்னமயில் - நீசொல்லியமயிலை ஒத்தவள், ஆர்மடந்தையென்றான் - எவருடைய மதளென்றுகேட்டான். எ - று.

மொழி மொழியப்படுவதென்னும் பொருளில் மொழியென்னும் முதனிலை, செயப்படுபொருண்மை விகுதியாகிய ஐ புணர்ந்து கெட்டுகின்றது; தொழிலாகுபெய ரெனினுமொக்கும். புக்கு இறந்தகாலவினையெச்சம்; புகுபகுதி, உ வினையெச்சவிகுதி, பகுதிமுற்றியலுகர மாதலால் ககரமிரட்டியது விரித்தல் விகாரம், அதுவே காலங்காட்டியது, உகரக்கேடு சந்தி; கைக்கொள்ள ஒரு சொல்லின் தன்மையது; இது சிலைவளைத்தலுக்குக் காரணமாதலின் இறந்த கால

வினையெச்சம். வளைப்ப என்பது பதைத்தலுக்குக் காரண மாய்நிற்றலின் இதுவும் இறந்தகாலத்தது. அழகுநற்குணநற் செயலுடைய பெண்ணைப்பெற்றமை கருதி, ஆர்மடந்தை யென வினாவினான். இது உயர்வுபற்றி வந்தபால் வழு வமைதி. ஆர்யாவரென்பதன் மரூஉ. மடந்தை மகளென் பதன் மேலது.' அநங்கன் உருவமில்லானென்பது ; இதன் செய்தி.—சிவன்செய்த யோகத்துக்கு விக்கினஞ்செய்த கார ணத்தால அம்மூர்த்திக்குக்கோபம் பிறந்துநெற்றிக்கண்ணால் எரித்தமையால் உருவில்லானென்பது. சொன்ன இறந்த காலப்பெயரெச்சம்; சொல்பகுதி, இன் இறந்தகால இடை நிலை, அ பெயரெச்ச விகுதி, இடைநிலை இகரக்கேடு, முதற் குறை, லகரம்னகரமாதல் சந்தி. (கூய)

எழுவடுதோண் மன்ற விலங்கிழையேர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை — உழூநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

(இ-ள்.) எழு - தூணை, அடு, வென்ற, தோள்மன்ற - தோள்களையுடைய அரசனே, இலங்கு இழை-விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்தபெண், ஏர்தூண்ட - ஏரைநடத்து கையில், கொழுநுதியின் - கொழுவினது நுனியினால், சாய்ந்த குவளை - படிந்தகுவளைமலர்களை, உழூநர் - உழவர், மடைமிதிப்ப - நீர்மடையினிடதது மிதிப்பதினால், தேன்பாயும்- (அம்மலர்களினின்று) தேன்பாய்கின்ற, மாடு - பக்கத்தில் ஒலிநீர்-ஒலிக்கின்ற நீர்வளமுள்ள, நாடன் விதர்ப்பநாட்டரச னாகிய, கொடை - கொடுக்குந்தொழிலையுடைய, விதர்ப்பன் வீமராசனால், பெற்றது - பெறப்பட்டவளாகிய, ஓர்கொம்பு- ஒப்புற்றபூங்கொம்பை ஒத்தவள்.

கொம்பென்றதற்கு ஏற்கப்பெற்ற தென்றார். இதுஇறந்த காலச் செயப்பாட்டு வினையாலணையும்பெயர்; படுவிகுதி தொகுத்தலாயிற்று. எழு தொழிலாகுபெயர். இலங்கிழை வி

மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்கார ணப்பெயர். தூண்ட நிகழ்காலச் செயவெனெச்சம். மிதிபய என்னும் செயவெனெச்சம் பாய்தலுக்குக் காரணமாய் நிற்ற லால் இறந்தகாலத்தது. கொழுநுதி கிளைத்தற் கிழமைப்பொ ருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். மடை தொழிலடியாகப்பிறந்தபெயர்; மடு பகுதி, ஐ வினைமு தற்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி, மடுத்தல் உண்ண ல்; அதுநீரைத்தன்னில் அடக்கல். பாயுமென்னும் பெயரெ ச்சம் நாடனென்னும் பெயரின்முதனிலையாகிய நாடென்னு ம்இடப்பெயர்கொண்டது; தேன்பாய்தலுக்கு நீரும்காரண மாதலால் பாயுமென்னும்பெயரொச்சம் நீரொன்னும் காரண ப்பெயர்கொண்ட தெனினும்இழுக்காது. கொடை ஐ விகு திபெற்றதொழிற்பெயர், (௩௧)

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

(இ - ள்.) நாற்குணமும் எ-நான்குகுணங்களுமே, நாற் படைஆக-நான்குவகைச்சேனையாகவும், ஐம்புலனும்எ - ஐம் பொறிகளுமே, நல்அமைச்சுஆக-நல்லமந்திரியராகவும், ஆர்க் கும் - (பாதத்தில்) ஒலிக்கின்ற, சிலம்பே - சிலம்புகளே, அணி முரசுஆக - அழகியமுரசாகவும், கண்எ - கண்களே, வேல்ப டையும் வாளும்ஆக -வேலாயுதமும்வாளுமாகவும், வதனமதி க்குடைக்கீழ் - முகசந்திரனாகிய குடையின்கீழ், பெண்மை- பெண்தன்மையை, அரசுஆளும் - அரசாள்வாள், எ-று.

நாற்குணமாவன.—அச்சம், (அன்புகாரணமாக உண்டா கும்பயம்) மடம், (அன்புடையார்கூறுவதைக் கேட்டும்தான் முன்கொண்ட கருத்தைவிடாமை) நாணம், (கணவனிடத் துவிருப்பக்குறிப்புத்தோன்றியபோது உண்டாகும் உள்ளத் திணெடுக்கம்) பயிர்ப்பு, (முன்கண்டறியாதவற்றைக்கண்ட போது மனம்பொருந்தாத கூச்சம்) நாற்படை - தேர், யா

னே, குதிரை, காலாள். புலன் பண்பாகுபெயர். ஐம்பொறி கள்—மெய், வாய், கண், மூக்கு, செவி. சிலம்பேஎன்றும் பிரிநிலை ஏகாரத்தைககுணம்புலனென்பவற்றுசகும் கூட்டுக. வாளுமேயென்றும் எகாரத்தைக் கண்ணென்பதனோடு சார்த்துக. முகத்தைசசந்திரனாக வுருவகஞ்செய்து, அதனைப்போருடையாக வுருவகஞ்செய்தமையால உருவகவுருவகம். மறம் ஏற்றசை. பெண்ணுக்குரிய நாற்குணங்களையுமுடையாளாகி, மனத்தைபபொறியின்வழிப போக்காமல் அடக்கிப் பெண்கள் நாயகமாயிருக்கின்றன ளென்பதுகருத்து. இச்செய்யுள்சிறப்புருவகவணி. பெண்மையென்றது உயர்திணைப் பெண்மையை. ஆகஎன்றும் செயவெனெச்சத்தீறு தொகுததல். புலம்என்பதில்இருகுறிலை யடுத்தமகரமாதலால், அம்மகரத்துக்குனகரம்போலியாகவாதது. (௩௨)

*மோட்டிளங் கொங்கை முடியச சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு - நாட்டேன்
அலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலமபுமா நூபுரங்கள் பூண்டு.

(இ - ள்.) மோடு - உயர்வாகிய, இளகொங்கை - இளமுலைகளை, முடியச்சுமந்து - முற்றும் தான் சுமப்பதினால், ஏறமாட்டாது - ஓங்கவலியிலது, இடையென்று - இடையென்றுகருதி, நூபுரங்கள் - சிலம்புகள், நாள்தேன் - புதிய தேனால், அலம்பு - அலம்பப்படும், வார்கோதை - நீண்ட கூந்தலையுடையாளது, அடி இணையில் வீழ்ந்து - இரண்டு பாதங்களிலும் விழுந்து, பூண்டு - விடாமல்பற்றி, வாய்விட்டுப்புலம்பும் - வாயதிறந்து புலம்பாநிற்கும். எ - று.

சுமந்து சுமக்க என்பதன்திரிபு; இது காரணப் பொருட்டாகிய இறந்த காலவினையெசசம். ஏறல் வளர்தல். மாட்டாது ஒன்றன்பாற்க்கை எதிர்மறை வினைமுற்று; மாட்டு பகுதி, ஆ எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொழுங்குறி, து ஒன்றன்பாற்கைகை விகுதி; மாட்டும், மா

ட்இவான் என எதிர்காலத்தில் வினைமுற்றும், மாட்டாமல் மாட்டாத மாட்டாமை என எதிர்மறையில் வினையெச்சப் பெயரெச்சங்களும் தொழிற்பெயரும்வரும். மலரின் புதுமையைத் தேனின்மேலேற்றி நாட்டேனென்றார். வார்கோதை வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர். இடை பண்பாகு பெயர். இது தற்குறிப் பேற்றம். (கக)

என்று நுடங்கு மிடையென்ப வேழுலகும்
நின்ற கவிகை நிழல் வேந்தே - ஒன்றி
அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்றுது தேய்ந்து.

(இ - ள்.) ஏழு உலகும் - ஏழ் தீவுகளிலும், நின்ற - நிலைத்த, கவிகை நிழல் - குடையினது நிழலையுடைய, வேந்தே அரசனே, அறுகால் - ஆறு கால்களையுடைய, சிறுபறவை—வண்டுகள், ஒன்றி- நெருங்கி, அஞ்சிறகால்—அகத்திலுள்ள சிறகினால், வீசும் - வீசப்படுகின்ற, சிறுகாற்றுக்கு ஆற்றுது—மெல்லியகாற்றுக்குச சகிக்காமல், தேய்ந்து—இளைத்து, என்றும்- எப்போதும், நுடங்கும் - துவளும், இடை என்ப - இடையென்று சொல்லுவார்கள் (கண்டோர்கள்) எ - று.

உலகு தீவின்மேலது; தீவு ஏழாவன.—நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. ஏழு தீவுகளிலும் கவிகை நிழல் நிற்றலாவது அவை இவனது ஆணையின் கீழமைந்து நிற்றல். அறுகாலென்னும் விசேடணத்தால் சிறுபறவை வண்டையுணர்த்தியது. பறவை தொழி லடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; பற பகுதி, வ் சந்தி, ஐ வினைமுதற்பொருண்மை விகுதி. அறுகாற்சிறுபறவை இரண்டாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்கதொகைநிலைத்தொடர்; அறுகாலென்பதைப் பண்
புப ... றந்த அன்மொழித்தொகைக் கா
ண ..., இருபெயரொட்டுப் பண்

மொசகும். அஞ்சிற்றெகன்பதை அகம்சிறகெனப்பதும் பிரிக்க; நிலைமொழியினிடையில் நின்றககரவுயிர்மெய்கெட்டது. —நன் - மெய - ரு, கக. இவ்வெசவினைசசகரத்தைமூன்கூறினமையால் என்க. ஆறன்றெதென்பதை வினைமுற்றென்றாயினும், வினைமுற்று வினையெசசமானதென்றாயினும், கொளக. வினைமுற்றுக்குததுவ விகுதியெனவும், வினையெசசத்துககு உகரவிகுதியெனவுங்கொள்க. ஒன்றி ஒன்றென்னும வரையறைபபண்புப பெயரினடியாகப் பிறநத இறநதகாலவினையெச்சம; ஒன்றுபகுதி, உகரத்தின்றிரியாகிய இ இறநத காலவினையெசச விகுதி, உகரககேடுசநதி. காற்றுகதென்னும் நான்கனுருபு பகைப்பொருளது. (௩௪)

செநதேனை மொழியாள் செறியளக பநதியின்கீழ்
இநது முறியென் றியமபுவார் - வநதென்றும்
பூவாளி வேநதன் பொருவெ[illegible] சிலைசார்த்தி
ஏவாளி தீட்டு மிடம.

(இ - ள்.) பூவாளி - பூவாகிய அம்புகளையுடைய, வேநதன் - மன்மதராசன், என்றும்வந்து - தினமும்வந்து, பொரு - போர்செயதற்குரிய, வெம்சிலை - கொடுமையாகியவில்லை, சார்த்தி - சாரவைத்து, ஏவாளி - ஏவாகியஅம்புகளை, தீட்டுமிடம் - கூர்செயயும் இடமாகிய நெற்றியை, செமதேன் - செநதேன்போன்ற, மொழியாள் - சொல்லையுடைய தமயந்தியினது, செறி - அடர்ந்த, அளகபந்தியினகீழ் - மயிர்க்குழற்சியினது வரிசையின்கீழ்நின்ற, இந்துமுறியென்று - சந்திரனது துண்டமென்று, இயம்புவார் - (புலவர்) சொல்லுவார்கள். எ-று.

மயிர்க்குழற்சி நெற்றியின் மேலிடத்துள்ள சுருண்டமயிர். தீட்டுமிடமென்றது தீட்டுங்கல்லை. சிலையென்றது புருவத்தையெனவும், தீட்டுமிடமென்றது நெற்றியையெனவுங்கொள்க. பந்தி வரிசை; அது பண்பாகுபெயராய்ப் பந்தியுள்ள பொருளை யுணர்த்திற்று. அளகபந்தி ஒன்றன்கூ[illegible]ளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொ

ணைநிலைத்தொடர்; முறி தொழிலடியாகப்பிறந்தபெயர்; முறிபகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்துகெட்டது. இந்துமுறி சினைத்தற்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; சினைமுதற்பொருளின் ஏகதேசமென்பதை உணராத ஒருவர்குற்றமென மயங்கிக்கூறுவர். பூவாளி, ஏவாளி இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர்; முதலிலுள்ளதொகைநிலைத்தொடரை மூன்றாம்வேற்றுமை யுருபும்பயனுமுடன் தொக்க தொகைநிலைத் தொடரெனினும் பொருந்தும். ஏ தொழிலாகுபெயர். வாளி பண்படியாகப்பிறந்தபெயர்; வாள்பகுதி, (பண்பு) இ ஒன்றன்படர்க்கைவிகுதி. (௩௫)

அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்றாவி
உன்னவே சோரு முனக்கவளோ - டென்ன
அடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்றா டன்பா னயந்து.

(இ - ள்.) அந்தஅன்னத்தை - தமயந்தியைப்பற்றிப் பேசுகின்ற அன்னத்தை, முன்னே - நடக்கத்தொடங்கியகாலத்தே, நடைவென்றாள்தன்பால் - நடையால்வென்ற தமயந்தியினிடத்து, நயந்து - விருப்பங்கொண்டு, அன்னமே நீஉரைத்த அன்னத்தை - அன்னமே நீசொல்லிய அன்னத்தையொத்தவளை, உன்னவே - நினைக்கவே, என்ஆவிசோரும் - என் உயிர்சோர்கின்றது, உனக்குஅவளோடு - உனக்குஅவளிடத்தில், என்ன அடைவுஎன்றான் - யாதுசம்பந்தமென்று வினாவினான், எ-று.

காண் என்பதினின்றும் உன்னஎன்பதைப் பிரித்தமையால் ஏபிரிநிலை, பின்னுள்ளதும்அது. ஓடுருபு ஏழாவதனிடப்பொருளது. என்ன எவனென்பதன் மரூஉ ஆகிய வினாவினைக்குறிப்புமுற்று; இவ்வாறன்றி என் என்னும் வினாப்பெயரினடியாகப் பிறந்தகுறிப்புப் பெயரெச்சமாகக் கொண்டு, இதுகொண்டுமுடிந்த அடைவென்னும் எழுவாய் கொண்டுமுடியும் உளதென்பது சொல்லெச்சமாய் நின்றதென

வைத்து, எப்படிப்பட்ட சம்பந்தமுள்ள தெனஉரைப்பினும் பொருந்தும். நடை தொழிற்பெயர்; நட பகுதி, ஐ புடைபெயர்சசிவிகுதி, பகுதியீற்று அகரக்கேடு சுண்டைக்குறை. என்றவி ஒற்றுமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத்தொகை நிலைததொடர். (௫௬)

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய வாழு மயிற்குலங்கள் - காமன்
படைகற்பான் வநதடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம்.

(இ - ள்.) காமன் - மன்மதன், (அவளுடையகண்ணினிடத்தில்) படை - அம்புகளையெய்யுந்தொழிலை, கற்பான் - கற்கும்படி, வந்துஅடைந்தான் - சென்றுசேர்ந்தான், பைந்தொடியாள் - அப்பசுமபொன்வளையணிந்தவளது, பாதம் - பாதத்தினிடத்தில், நடை-நடக்குந்தொழிலை, கற்பான்- கற்கும்படி, நாம்வந்துஅடைந்தேம் - நாங்கள்சென்று சேர்ந்தோம், பூமனைவாய் - தாமரைமலராகியவீட்டில், வாழ்கின்றபுள்குலங்கள்யாம் - வாழ்கின்றபறவைக் கூட்டங்களாகியநாங்கள், (அதுகாரணத்தால் இப்போது) அவள்தன் - அவளுடைய, மாமனைவாய் - பெருமையாகியமனையினிடத்து, வாழும் -வாழுகின்ற, மயில்குலங்கள் - மயிலின்கூட்டங்கள் போலாயினோம். எ - று.

எனவேஅவளுக்கு விளையாட்டுப்பொருள்களில் ஒருவகைப்பொருளாயிருப்பதே எமக்குண்டாகிய சம்பந்தமென்றதாயிற்று. தன்னினத்தைத் தன்னொடுயடுத்தியாம், அடைந்தேமென்றதாதலால் உயர்வுமுதலியகாரணம் பற்றிவந்தவவழுவமைதியன்று. பூதொழில்டியாகப்பிறந்த பெயர்ச்சொல்; பூபகுதி, இ வினைமுதற்பொருண்மை விகுதிபுணர்ந்துகெட்டது. இதுதலைமைபற்றி, மலர்களிற்சிறந்ததாமரையையுணர்த்திற்று. பூமனை பண்புத்தொகை நிலைத்தொடர், நடைக்குப்பாதத்தைக் கூறினமையால்படைக்குக் கண்

ணென்பதுவருவிக்கப்பட்டது. "காமற், கேவெலாங்காட்டு கின்ற வினைநெடுங்கண் ணேரேழை" எனக்கம்பநாடர் கூறலுங்காண்க. படைதன்தொழிலை யுணர்த்தலால் காரணவாகுபெயர். மயிற்குலங்கள் போலாகுதல் ஊட்டிவளர்த்தற்கும், விளையாடற்கும் உரியவையாகுதல். கற்பான் பான்விகுதி எதிர்காலவினையெச்சம். பசும்பொன்தொடி யென்பதைப் பைங்தொடியென்றது ஓர்குறிப்பு. தொடிதொழிலடியாகப் பிறந்தபெயர்; தொடுபகுதி, இ செயப்படுபொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி. (௧௭)

இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண் - மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து

(இ - ள்.) வெம்காமத்தீ உடைய-வெப்பமாகிய காமத்தீயையுடைய, நெஞ்சு உடையான் - மனமுடையவனான், தேர்ந்து - துணிந்து, நெஞ்சம்இற்றது - மனநிலைகெட்டது, இருகாதல் - மிக்கஆசை, எழுந்தது - உயர்ந்தது, மானம்அற்றது-மானம்ஒழிந்தது, நாண்அழிந்தது - நாணம்இலதாயிற்று, (ஆதலால்) என்னுடையவாழ்வு - எனதுயிர்வாழ்க்கை, இனி - மேல்வருங்காலத்தில், மற்றுஉன்வாய் உடையது - உனதுவாயையுடையதா யிருக்கின்றது, என்றான் - என்று (அன்னத்தைநோக்கி) சொல்லினான். எ - று.

தமயந்தியை அடைவதற்கு என் முயற்சியாலாவதொன்றில்லை, அவளைப்பெறாவிடின் உயிர் நீங்குவேன் என்பான் என்னுடைய வாழ்வு உன்வாயுடையதென்றான். இற்றது ஒன்றன்படர்க்கை யிறந்தகாலவினைமுற்று; இறுபகுதி, [illegible] சாரியை, து ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதி [illegible] மாதலால் அதன் மெய்யிரட்டல் விரித்தல் விகாரம், அதுவே காலங்காட்டியது, உகரக்கேடு சந்தி; இம்முதனிலை [illegible] தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் [illegible]; இதுமுதனிலை திரிந்த தொழிற்பெயர்; [illegible]

தல் பேறு, உறுதல் உறுவெனவும், விடுதல் வீடு, படுதல் பாடு எனவும் வரல் காண்க. ஈறென்பதினின்றும் இறு என்னும் முதனிலை பிறந்ததென்னில், பேறுமுதலியவற்றினின்றும் பெறுமுதலியன பிறந்தன வெனல்வேண்டும். ஆதலால் அது குற்றமென்க. மானம்.—உயர்குடியில் பிறந்தவன் தன்னிலையில் தாழாமையும், தாழ்வுவந்தபோது உயிர்வாழாமையுமாம். நாண் தனக்குத் தகாதகருமத்தில் மனம் கூசுதலுடையனாந் தன்மை; இதுமுதனிலைதொழிற்பெயர். எனனுடைய என்பதில் உடைய என்பது ஆறுருவதன் சொல்லுரு பிடைச்சொல; முதலிலுள்ள உடையதென்பதும், ஈற்றிலுள்ள உடைய என்பதும் முறையே குறிப்புவினைமுற்றும், அப்பெயரெச்சமுமாம. உடையான் அவ்வினைப்பெயரே; பண்படியாகப் பிறந்த பெயரன்று. மற்றுவினைமாற்றுப்பொருளது.()

*வீமன் றிருமடந்தை மென்முலையை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் - சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்னம்
ஒடுங்கிடையா டன்பா லுயர்ந்து.

(இ - ள்) சேமம் - (தனதுநிழலால் உயிர்களுக்கு) இன்பத்தைச் செய்கின்ற, நெடுங்குடையாய் - பெருங்குடையையுடைய அரசனே, வீமன் திருமடந்தை - வீமராசனுடைய செல்வப் புதல்வியினது, மென்முலையை - மென்மையாகிய முலைகளை, உன்னுடைய வாமம் நெடும்புயத்தே - உன்னுடைய அழகிய நீண்ட தோள்களினிடத்தே, வைகுவிப்பேன் - தங்குவிப்பேன், என்று உரைத்து - என்றுசொல்லி, அன்னம் - அன்னமானது, ஒடுங்கு இடையாள் தன்பால் - சுருங்கிய இடையையுடைய தமயந்தியினிடத்து, உயர்ந்து - உயரத்தில் பறந்து, நீங்கியது - சென்றது. எ - று.

மடந்தை மென்முலையையுன்னுடைய புயத்தே வைகுவிப்பேனென்பதற்கு அவள் உன்னையேமணஞ்செய்துகொள்ளும்படி செய்விப்பேனென்பது கருத்து. உயிர்களை முறைவழு

வாமல் இனிது காக்கும் நீதியையுடையாய் ஆதலால் நீ எண்ணியது எளிதில் கைகூடுமென்னும் கருத்தால் சேமநெடுங்குடையாயென்றது. வைகுவிப்பேன் பிறவினையாகிய தன்மை யொருமை எதிர்காலவினைமுற்று; வைகுபகுதி, வி பிறவினைப்படுத்தும் விகுதி, அனைத்து மொருபகுதி, ப் எதிர்கால இடைநிலை, என் தன்மை யொருமை விகுதி. (௩௯)

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதலியம்புங்கொல் - இவ்வளவில்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கொல் யானை யரசு.

(இ - ள்.) மும்மதம் உம் நின்று - மூன்று மதங்களும நிலைத்து, ஆளும் - ஆளுகின்ற, கொல்யானை - கொல்கின்ற யானைச் சேனையையுடைய, அரசு - நளன், (என்னினீங்கிய அன்னம்) இவ்வளவில் - இவ்வளவுக் காலத்தில், செல்லும் கொல் - (குண்டினபுரத்தில்) போயிருக்குமோ, இவ்வளவில் - இவ்வளவுக்காலத்தில், காணும்கொல் - (தமயந்தியை) காணுமோ, இவ்வளவில் - இவ்வளவுக்காலத்தில், காதல் - எனது ஆசையை, இயம்பும்கொல் - சொல்லுமோ, இவ்வளவில் - இவ்வளவுக்காலத்தில், மீளும்கொல் - திரும்புமோ, என்று உரையா - என்று சொல்லாநின்று, விம்மினான் - ஏங்கினான், எ - று.

மும்மதம் ஆளுதலாவது தம்வசப்படுத்திக்கொள்ளல். இவ்வளவென்றது தன்னால் குறித்துக் கொள்ளப்பட்டகாலம். அளவென்னும்பண்புப்பெயர் காலத்துக்கானமையால் பண்பாகுபெயர். கொல் என்பன ஐயப்பொருளன. உரையா உரையாநின்றென்னும் நிகழ்கால வினையெச்சத்தின் திரிபு. கொல்யானை முக்காலவினைத்தொகை நிலைத்தொடராகக் கொள்க. அரசு பண்பாகுபெயர். மும்மதமென்பதனீற்றில் முற்றும்மைவிகாரத்தால்தொக்கது. (௪0)

சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான் - புவி

னிடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து.

(இ - ள்.) பூவினிடை - செந்தாமரை மலரிலெழுந்தருளி ய, அன்னம் - அன்னம்போலும் திருமகளை யொத்தவளும், செ ங்கால் - சிவந்தகாலையுடைய, இளஅன்னம் - இளமையாகிய அன்னத்தினால், சொன்ன - சொல்லப்பட்ட, நடைஅன்னந் தன்பால் - நடையில்சிறந்த அன்னத்தை யொத்தவளுமாகிய தமயந்தியினிடத்து, நயந்து - விருப்பங்கொண்டதனால், சேவல் - ஆண்குயிலானது, குயில்பெடைக்கு - பெண்குயிலினிடத்தில், பேசும் - பேசுகின்ற, சிறுகுரல்கேட்டு - மெல்லிய ஓசையைக்கேட்டு, ஆவிஉருகி - உயிருருகி, அழிந்திட்டான் - அறிவழிந்தான். எ.று.

சேவற்குயில் பெடைக்குயிலினிடத்துப் பேசுமொழியைக் கேட்டமாத்திரையில் தான்தமயந்தியைமணந்து இவ்வாறு பேசுவதற் கில்லையேயென்று கலங்கினனென்பது கருத்து. ஆவியுருகுதலுக்கும், அழிதலுக்கும், நயந்து, கேட்டென்னும் இரண்டெச்சமும் காரணமாயின்றன. குரல் கருவியாகுபெ யர். முதலிலும், ஈற்றிலுமுள்ள அன்னம் உவமையாகுபெயர். உயிர்களைக்காக்குந் தொழில்பற்றிஅரசனை இறைவனெனக்கூ றல் மரபாதலால், நளனுக்குஇனித் தமயந்திமனைவியாதலைக் கருதி, அவளைத்திருமகளென்றார். இளஅன்னஞ்சொன்ன ந டை அன்னமென்றது "பைந்தொடியாள் பாதநடைகற்பான் வந்தடைந்தோம்" என்றதைக்குறிப்பித்தற்கு. அழிந்திட்டா ன் ஆண்பாற்படர்க்கை இறந்தகாலவினைமுற்று; அழிபகுதி, த் சந்தி, து சாரியை, இடு பகுதிப்பொருள்விகுதி, தகரம்நகர மாதல் மெலித்தல், உகரக்கேடு சந்தி அனைத்துமொருபகுதி, ஆன் ஆண்பால் படர்க்கைவிகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும் சந்தி, ஒற்றிரட்டலே காலங்காட்டியது. (௬௧)

அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிறன் றோகை விரித்தாட - முன்னதனைக்

ண்டாற்று முள்ளங் கலங்கினான் காமநோய்
கொண்டார்க்கி தன்றோ குணம்.

(இ-ள்.) அன்னம் - அன்னத்தினால், உரைத்த - சொல்லப்பட்ட, குயிலுக்கு - குயிலினால், அலசுவான் - தளரும்ஈ ளன், மெல்மயில் - மென்மையாகிய மயிலானது, தன்தோ றுக - தனதுகலாபத்தை, விரித்துஆட - பரப்பிஆடாநிற்க,

காமல், உள்ளம்கலங்கினான்-மனநிலைகலங்கினான், காமநோய் கொண்டார்க்கு - காமநோயைக் கொண்டவர்க்கு, குணம்- தன்மை, இதுஅன்றோ-இப்படிக்கலங்குதலேஆம். எ-று.

தன்பெடையைக் களிப்பிக்கும்பொருட்டு மயிற்சேவல் ஆடுவதைக்கண்டபோது, இவ்வாறுதான் தமயந்தியை மகிழ்விப்பதற்கில்லையேயென்று கலங்கினனென்பதுகருத்து. குயிலுக்கென்னும் நான்கனுருபு மூன்றுவதன் எதுப்பொருளில் வந்தது. கொண்டார்க்கென்பது சேர்ச்சிப்பொருளது; ஆறுவதன் தற்கிழமைப்பொருளில் வந்ததெனினும்பொருந்தும். உள்ளங்கலங்கினான் இணைவழுவமைதி. நன், பொது கூ, உ௯. விரித்து பிறவினையாகிய செய்தென்வாய்பாட்டிறந்த காலவினையெச்சம்; விரி தன்வினைபிறவினைகளுக்குப் பொதுவாகிய பகுதியாயினும் இங்குப்பிறவினைக்குரியதாய் நின்றது; த் சந்தி, த் இறந்தகாலஇடைநிலை, உ வினையெச்ச விகுதி. காமநோய் இருபெயரொட்டுப் பண்புத் தொகை நிலைத்தொடர். அன்று பண்புடியாகப்பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைமுற்று; அல்பகுதி, று ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமாதல்சந்தி, அதுனகரமாதல் மெலித்தல் விகாரம். ஓ எதிர்மறை. இரண்டெதிர்மறை இணைந்துவருதல் தேற்றப்பொருள் தருதற்கென்க. இதுவேற்றுப்பொருள் வைப்பென்னும்அணி. (௪௨)

* வாரணியுங் கொங்கை மடவா ளுடங்கிடைக்கு
பேருவமை யாகப் பிறந்துடையீர் - வாரிர்

கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சம்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

(இ-ள்) நெஞ்சம் - மனம், துடியா - துடித்து, நெடிது உயிரா - பெருமூச்சுவிட்டு, சோர்ந்து - தளர்ந்து, கொடியார் - பூங்கொடியாரே, வார்அணியும் - கச்சை அணிந்துள்ள, கொங்கை - ஸ்தனங்களையுடைய, மடவாள் - தமயந்தியினுடைய, நுடங்குஇடைக்கு - துவளுகின்றஇடைக்கு, பேர்உவமையாக - பெருமையாகியஉவமைப் பொருளாகும்படி, பிறந்துஉடையீர் - பிறந்து (அப்பிறப்பின்பயனை) உடையீர், வாரீர்என - வாருங்கோளென்று, செம்கைகூப்பினான் - அகங்கைகளைக்குவித்தான், எ-று.

உடையீரென்னும் பண்படியாகப்பிறந்த செயப்படுபொருள்குன்றாத முன்னிலைப்பன்மைக்குறிப்பு வினைமுற்றாதலால் பயனென்னும் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. கொடியாரென்பது மடவாள்நுடங்கிடைக்கு உவமையாதலாகிய உயர்வுபற்றி அஃறிணை உயர்திணையாகவந்த திணைவழுவமைதி. வாரீர் ஏவற்பன்மைவினை; வாபகுதி, குவிரித்தல் விகாரம், இர் ஏவற்பன்மை எதிர்காலவிகுதி, உகரக்கேடுசந்தி. கை என்பது செம்என்னும் விசேடணத்தால் அகங்கைக்காயிற்று. மடவாள்பண்படியாகப்பிறந்தபெயர்; மடமைபகுதி, (இளமை, அல்லதுகற்பு) ஆளென்னும் பெண்பாற்படர்க்கை விகுதிப்புணர்ச்சியில் மையீறுகெட்டு, வகரமெய் தோன்றிமுடிந்தது. உவமை பண்பாகுபெயர். கூப்பினான்பிறவினையாகிய ஆண்பாற்படர்க்கையிறந்தகால வினைமுற்று; கூம்புதன்வினைப்பகுதி, மெல்லொற்று வல்லொற்றாதலாகின்றகூப்புபகுதி, இன் இறந்தகாலஇடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கைவிகுதி, உகரக்கேடு சந்தி, நெடிது குறிப்புவினையெச்சம்; நெடுமைபகுதி, உகர வினையெச்ச விகுதிப்புணர்ச்சியில், மையீறுகெட்டு, உகரம்இரமாதல்சந்தி, த் எழுத்துப்பேறு. (௩௧)

* கொங்கை யிளநீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பால்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தில் - மங்கைநறுங்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனோ
வெய்தாமக் காம விடாய்.

(இ - ள்.) மங்கை - மங்கைப்பருவத்தையுடைய தமயந்தியினது, கொங்கை இளநீரால் - முலைகளாகிய இளநீரினாலும், குளிர்ந்த இளசொல்-குளிர்ச்சியாயுள்ள மெல்லியசொற்களாகிய, கரும்பால் - கருப்பஞ்சாற்றினாலும், பொங்கு- (அழகு) மிகுகின்ற, சுழிஎன்னும் - உந்தியென்று சொல்லப்படும், பூதடத்தில் - தாமரைமலர்த் தடாகத்திலும், நறு - நல்ல, கொய் - (அப்போது) பறித்த, தாமம் - மலர்மாலையணிந்த, வாசம் - மணமாகிய, குழல்நிழற்கீழ் - கூந்தலாகியசோலை நிழலிலும், வெய்துஆம் - வெப்பமுடையதாகிய, அக்காமவிடாய் - தமயந்தியாலடைந்த காமத்தினதுவிடாயை, ஆறேனோ - ஆற்றிக்கொள்ளேனோ. எ - று.

சுழி தொழிலடியாகப் பிறந்தபெயர்; சுழிபகுதி, இவ்வினைமுதறபொருண்மை விகுதிபுணர்ந்துகெட்டது; தொழிலாகுபெயரெனினும் பொருந்தும். நிழலென்பதனால் சோலையென்பது விளங்குதலால் குழனிழலெனவாளா கூறினர். இளநீர் பணபுத்தொகைபபுறத்துப் பிறந்தஅன்மொழித் தொகைககாரணப்பெயர்; பொருள்சுவைமுதிராத நீரையுடையகாயென்பது. ஓ இரககப்பொருளது. அஎன்னுஞ்சுட்டு காமத்தினகொடுமையைச சிறபபித்தற்கண்வந்தது. வெய்துபண்படியாகப்பிறநத ஒனறன்படர்க்கைபபெயர்; வெம்மைபகுதி, துஒனறன்படர்க்கை விகுதி, மையீறுகெட்டு, முன்னின்றமெய்யாகியமகரம் யகரமெய்யாகத்திரிந்து, முடிந்தது. விடாயாறுதற்குரிய இளநீரும், கரும்பும், பூந்தடமும், குழனிழலும்தம்முளியை புடையனவாயிருந்தலால் இதுஇயைபுருவகம். (சு)

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய - நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றா ளீங்கு.

(இ - ள்.) மன்னன்விடுத்த - அரசன்அனுப்பிய, வடிவின் திகழ்கின்ற - அழகினால்விளங்குகின்ற, அன்னம்போய் - அன்னம்சென்று, கன்னிஅருகு - தமயந்தியின் சமீபத்தில், அணைய - சேர, நன்னுதலும் - நல்லநெற்றியையுடைய தமயந்தியும், தன்ஆடல்விட்டு - தன்விளையாட்டைவிட்டு, தனிஇடஞ்சேர்ந்து - ஒருவருமில்லாத இடத்தில்போய், ஆங்கு - அவ்விடத்து, அதனை - அவ்வன்னத்தை, என் - எப்பொருளை, ஈங்குநாடல் - இங்கேதேடுதல், சொல்என்றாள் - சொல்லென்றுகேட்டாள். ' எ - று.

தமயந்தி தன் ஆடலை விடுதலுக்கும், தனியிடஞ்சேர்தலுக்கும் சிறந்த வடிவுகாரணமென்பது விளங்க வடிவிற்றிகழ்கின்ற அன்னமென்றார். உம்மை ஒருபுடை யிறந்தது தழீஇய எச்சவும்மை. நன்னுதல் பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். என்வினைப்பெயர். தனியிடம் ஒருவருமில்லாத இடம்; இது பண்புத் தொகை நிலைத்தொடர்; விரிந்தால் தனிமையான இடமெனவிரியும். விடுத்த தன் வினையாகிய இறந்த காலப் பெயரெச்சம்; விடுபகுதி, த் சந்தி, த் இறந்த கால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி; இடைநிலை பெறாமல், பகுதியொற்றிரட்டிவிட்ட எனவும்வரும். ஆங்கென்னும் சுட்டடியாகப் பிறந்த பெயர்ப்பகுபதம் என்றாளென்னும் வினைகொண்டது. ஈங்கென்னும் அப்பெயர்ப்பகுபதம் நாடலென்னும் தொழிற் பெயர்கொண்டது. சுட்டுப் பெயரிரண்டில் முன்னது கவிகூற்று; பின்னது இவள் கூற்று. நாடலென்பதனைத் தொழிலாகுபெயரெனக்கொண்டு நாடும் பொருளென உரைப்பினும்பொருந்தும். அவ்வாறுகொள்கையில் என்குறிப்புவினைமுற்று. என்னாடலென்பதற்கு என்னைக் குறிப்பாக நோக்குதலை என உரைப்பினும் பொருந்தும். (சரு)

செம்மனத்தான் றண்ணளியன் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் - மெய்ம்மை

நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு.

(இ - ள்.) உனக்கு வேந்தன் - உனக்குத் தலைவன், செம்மனத்தன் - நடுநிலைமையுள்ள மனமுடையானும், தண் அளியன் - குளிர்ச்சியாகிய கருணையுடையானும், செங்கோலான் - செங்கோலுடையானும், மங்கையர்கள் தம்மனத்தை - மங்கைப் பருவமுடைய மாதர்களது மனத்தை, வாங்கும் - தம் வசப்படுத்திக்கொள்ளும், தடவுத்தோளான் - பெருமையாகிய தோள்களையுடையானுமாகிய, மெய்ம்மை - சத்தியத்தையுடைய, நளன் என்பான் - நளனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவான், மேல் நிலத்தும் - சுவர்க்கலோகத்தாரினும், நானிலத்தும் - பூமியிலுள்ளார்களினும், மிக்கான் - சிறந்து, உளன் - இருக்கின்றனன். எ - று.

செம்மை ஒருபக்கத்தில் சாய்தலின்மை; அது இங்கு நடு நிலைமைக்காயிற்று. வேந்தனென்றது ஆளுந்தலைவனை. உனக்கென்னும் நான்கனுருபு தகுதிப்பொருளது; பொருட்பிறிதின் கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமையெனின், ஆறுவதன் எசசப் பெயர் முதலில் வாராதாதலால் உனக்கு வேந்தனெனக் கொண்டு கூட்டுக. செங்கோல் செம்மையாகிய கோல்போலக் குடிகளை ஆளும் முறைமை. நிலம் இடவாகுபெயர். என்பான் செயப்பாட்டு வினைமுற்று; என் பகுதி, ன் சந்தி, அ சாரியை, ப் சந்தி, படு செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, வ் எதிர் கால இடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கை விகுதி; இவ்வாறு முடிந்தசொல் படு விகுதி தொகுத்தலாகியது. இவ்வினைமுற்றும், மிக்கானென்னும் இறந்த காலவினை முற்றும் வினையெச்சமாயின. இரண்டாவது என்பான் அசைநிலை; "பற்றறப்படிப்பதன்றான், பேரென்பானவன் செய்மாயப் பெரும்பிணக்கொருங்குதேர்வான், ஆரென்பா[illegible] தி" எனக் கம்பநாடர்செய்யுளாலுங் காண்க. [illegible]

புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித், தொகைக்கா ரணப்பெயர்; விரிந்தால் நான்காகிய நிலங்களையுடையதென விரியும்; நிலம் ஐந்தனுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் இவற்றில் நன்மக்கள் வசித்தலின், மறவர்க்கிடமாகிய பாலை யை ஒழித்து, நிலநான்கையே சிறப்பாகக் கொண்டனரா தலின் பூமி நானிலமெனப்பட்டது. (௮௬)

அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும் - திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.

(இ-ள்.) அம்கண் - அழகிய இடமகன்ற, மாஞாலத்தவ ற்கு - பெரிய பூமியையுடைய நளனுக்கு, அறம் கிடந்த-அறம் தங்கிய, நெஞ்சும் - மனத்தினாலும், அருள் ஒழுகு - கருணை பெருகி வழிகின்ற, கண்ணும் - கண்களினாலும், மறம் கிட ந்த - வீரம் தங்கிய, திண்தோள் - வன்மையாகிய தோள்களி னது, வலியும் - வலியினாலும், திறம் கிடந்த - இவ்வகைத் தன்மைகளுள்ள, செம்கண்மால்-செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய திருமால் ஒப்பாவான், அல்லன் ஏல் - ஒப் பாகானாயின், தேர்வேந்தர் - தேரரசர்கள், ஒப்போ - ஒப் பாவார்களோ, எ - று.

நெஞ்சு, கண், வலி என்பவற்றினீற்றில் மூன்றனுருபு தொகுத்தல்; தொகையன்று. செங்கண் ஓர் குறிப்பு. நன்-பொது, சூ, ௫௭. மால் பண்பாகு பெயர்; அடியார் பக்கல் மிக்க ஆசையுடையான்; எல்லாப் பொருள்களிலும் பெரி யோன் என்பனபொருள். ஏல் எனிலென்பதன் மரூஉ; இது நாணேத்த வினைமுற்றை வினையெச்ச மாக்கும். ஒப்பர் உவ மையிடைச் சொலடியாகப் பிறந்த எதிர் காலவினைமுற்று; ஒ பகுதி, ப் சந்தி, ப் எதிர்கால இடைநிலை, அர் பல்லோர் படர்க்கை விகுதி. ஓ எதிர்மறை, ஞாலத்தவன் இடமடியா கப்பிறந்த பெயர்; ஞாலம் பகுதி, அத்து, அ சாரியை, அன்

ஆண்பாற்படர்க்கை விகுதி, பகுதியீற்று மகரமும், அத்துச சாரியையின் முதல் அகரமும், ஈற்றுகரமும் கெடுதலும், வகர மெய்தோன்றலும் சந்தி. நளன் சககரவாத்திகளிலொருவனாத லால், ஞாலத்தவனென்றார். குவ்வுருபு ஒப்புப பொருளது. நெஞ்சு இடவாகு பெயர். (சஎ)

புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளங் கவர வொளியிழந்த - வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாயந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

(இ - ள்.) வண்டின்பொதி - வண்டின கூட்டம், இருந்த - தங்கிய, மெல் ஓதி - மென்மையாகிய கூந்தலையுடைய, பொன் - பொன்னை யொத்த தமயந்தி, புள்ளின் - அன்னப் பறவையினது, மொழியினொடு - சொல்லோடு, பூவாளி - (மன்மதனுடைய) மலராகிய அம்பு, தன்னுடைய உள்ளம - தன் மனத்தை, கவர - கொள்ளை கொண்டதனால், ஒளி இழந்த - ஒளியை இழந்துவிட்ட, வெள்ளைமதி - வெண்மையாகிய சந்திரன், இருந்தது என்ன - (அசைவற்று) இருந்ததுபோல, வாயந்து (இளமை நிறம் இழத்தல்) அமைந்து, இருந்தாள - அசைவற்று நின்றனள். எ - று.

மனம் நளன்மேற்கொண்ட ஆசையின் வசப்படுதலும், உடல் வாடி, செயலற்றாளென்பது கருத்து. கவர காரணப பொருட்டாகிய இறந்தகாலசசெயவெனெச்சம். ஆம்அசைச சொல். வாளி பண்படியாகபபிறந்த ஒன்றன்படர்க்கைபபெயர்; வாள் பகுதி, இ ஒன்றன்படர்க்கைவிகுதி. தன்னுடைய உள்ளம் சினைத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்; உடையவென்பது ஆறும்வேற்றுமைச்சொல்லுருபு. அவனுடைய விறலியரென்பதை மூன்றுசொல், முன்னது எழுவாய்த்தொகாநிலைத் தொடரும், பின்னது குறிப்புபபெயரெசசத் தொகாநிலைத் தொடருமே இரண்டுசந்தியென்பாருமுளர்; அவர்க்குத்தன்னுடைய வுள்

ளமென்பதியையாமைகாண்க; இதில் தன்னையுடைய எனப்பொருள்கொண்டு இரண்டாம்வேற்றுமைச் சந்தியெனின் முதல் உடையதும், சினை உடைமையுமாகக் கொள்ளுதலே மரபாதலால் என்னலாகாதென்க. உள்ளத்தைக்கவர்வதில் புள்ளின்மொழி முற்பட்டதாதலால், அதற்கு ஐயுருபு தக் கூறினர். வெள்ளை பண்புப்பெயர்; வெள்பகுதி, ள் சந்தி, ஐ பகுதிப்பொருள்விகுதி; பச்சை, தொல்லை என்பனவும் அவ்விகுதியன. பொதிமுதனிலைத்தொழிற்பெயர்; (பொதிதல் நிறைதல்) அதுதொழிலாகுபெயராயின்றது. பொன் உவமையாகுபெயர். (சஅ)

* மன்னன் மனத்தெழுந்த மையனோ யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி - முன்னும்
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வாண் மற்று.

(இ - ள்.) மன்னன்மனத்து - (தமயந்தியைக்குறித்து) நளராசனது மனத்தில், எழுந்த - தோன்றிய, மையல்நோய் அத்தனையும் - ஆசைநோயவ்வளவையும், அன்னம்உரைக்க - அன்னம்சொல்லியதனால், அகம்உருகி - மனம்கரைந்து, முன்னும் - அன்னம்சொல்வதற்குமுன்னே, முயங்கினாள்போல - தழுவினவள்போல, தன்முலைமுகத்தைப்பாரா - தன்முலைகளினது முனையைப்பார்த்து, மயங்கினாள் - அறிவுகுலைந்தாள்; மற்றுஎன்செயவாள் - வேறுயாதுசெய்வாள். எ-று.

காதல்பெருகியதனால், இதற்குமுன் தழுவினவள்போல முலைமுகத்தைப்பார்த்து, அத்தழுவியக்குறி சிறிதுங்காணப் படாமையால், இதற்குக் காரணம்யாதோவென்று மயங்குவாளாயினாளென்க. உம்மைமுற்றும்பொருளதாதலால் அத்தனையெஞ்சாமைப்பொருளது. போலபோலென்னும் உவமையிடைச்சொலடியாகப் பிறந்தசெயவெனெச்சம்; இதில்அகரவிகுதிதொகுத்தலாயிற்று. என் எவனென்பதன்மரூஉ அன்று வினைப்பெயர். மற்று பிறிதென்னும் பொருளது. (சகூ)

வெண்பா.

வாவி யுறையு மடவன்னமே யென்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியால் - காவினிடைத் [ள்
தேர்வேந்தற்கென்னிலைமை சென்றுரைத்தியென்றுரைத்தா
பார்வேந்தன் பாவைபதைத்து.

(இ - ள்.) பார்வேந்தன் - குண்டினபுரத்து அரசனுடைய, பாவை - மகளாகியதமயந்தி, பதைத்து - பதறி, வாவிஉறையும் - தடாகத்தில் வசித்தலுள்ள, மடஅன்னமே - இளமையாகியஅன்னமே, சென்று - நீபோய், காவினிடை - சோலையினிடத்தில், தேர்வேந்தற்கு - தேரையுடைய அரசனாகிய நளராசனுக்கு, என்நிலைமை - எனதுஇயல்புகளை, உரைத்தி - சொல்லு, (சொல்லுவாயானால்) என்னுடையஆவி - எனதுயிரை, உவந்து - மகிழ்ந்து, அளிததாய்ஆதி - கொடுத்தாய் ஆகிறாய், என்றுஉரைத்தாள் - என்றுசொல்லினாள். எ - று.

எனவேஎன்னிலையை அரசனுக்குச சொல்லாவிடின்என்னுயிரை விடுவேனென்பது குறிப்பெச்சம். நீ வசிக்குமிடத்துக்கு அவனிருக்குமிடம் தூரமானதன்றென்பாள் வாவியுறையுமடவன்னமேயென்றாள். ஆதிமுன்னிலைமையொருமை நிகழ்காலவினைமுற்று; ஆ பகுதி, த் நிகழ்கால இடைநிலை, இ முன்னிலையொருமைவிகுதி; த்எழுத்துப்பேறு, இகரவிகுதியேநிகழ்காலத்தையுங் காட்டியதென்பாருமுளர். உரைத்தி ஏவலொருமைவினை; உரை பகுதி, த் சந்தி, த் எழுத்துப்பேறு, இ ஏவலொருமை எதிர்காலவிகுதி. பார்குண்டினபுரத்தையுணர்த்திற்று. சென்று இறந்தகால வினையெசசம்; செல் பகுதி, ற் இறந்தகாலஇடைநிலை, உவினையெச்சவிகுதி, லகரம்றகரமாதல்சந்தி, அதுனகரமாதல் மெலித்தல். (௫௦)

* மன்னன் புயநின் வனமுலைகருக் கச்சாகும்
என்ன முயஙகுவிப்பே னென்றன்னம் - பின்னும்
பொருந்தவன்பா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பாற் போன தெழுந்து.

(இ - ள்.) அன்னம் - அன்னமானது, மன்னன்புயம் - நள

ராசனுடைய தோள்கள், நின்வனமுலைக்கு - உன்னுடைய அழகியமுலைகளுக்கு, கச்சு ஆகும் என்ன - அணிந்த கச்சுமாகுமென்று சொல்லும்படி, முயங்குவிப்பேன் என்று - அணைவிப்பேனென்றுசொல்லி, பின்னும் - மேலும், பொருந்த - (அவள் மனத்தில்) பதியும்படி, அன்பால் ஓதி - அன்பினால் சொல்லி, மலர்ப்பூங்கணைகள்பாய - மலராகிய பொலிவுள்ள அம்புகள் பாய்வதினால், இருந்தவன்பால் - ஒரு முயற்சியுமில்லாமல் இருந்த நளராசனிடத்து, எழுந்துபோனது - பறந்துபோனது. எ - று.

புயம் கச்சாகுதல் நீங்காதிருத்தல். என்று இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம்; என் பகுதி, ற் இறந்த கால இடைநிலை, உ வினையெச்ச விகுதி. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. முயங்குவிப்பேன் தன்மையொருமைப் பிறவினையாகிய எதிர்காலவினைமுற்று; முயங்கென்னும் தன் வினைப் பகுதியைப் பிறவினைப்படுத்தவந்த விகாரம் புணர்ந்த முயங்குவி பகுதி, ப் சந்தி, ப் எதிர்கால இடைநிலை, என் தன்மையொருமை விகுதி. (ருக)

கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்கள்
உற்ற தறியா வுளநடுங்கிப் - பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

(இ - ள்.) கொற்றவன் தன்தேவிக்கு - வீமராசனுடைய மனைவிக்கு, கோமகள் தன் தோழியர்கள் - இராசபுத்திரியாகிய தமயந்தியினுடைய தோழிமார்கள், உற்றது அறியா - (அவளுக்கு) நேரிட்ட காமநோயைத் தெரிந்து, உளம் நடுங்கி, மனம்நடுங்கி, பொற்றொடிக்கு - பொன்வளையலணிந்த தமயந்திக்கு, வேறுபாடு உண்டு என்றார் - முன்னிலைமை மாறுதலுளதாயிற்றென்றார்கள், அதனை - அச்செய்தியை, பெற்றகொடி - தாயானவள், வேந்தனுக்குக் கூறினாள் - வீமராசனுக்குச் சொல்லினாள். எ - று.

தோழியர்கள் கன்னித்தன்மையழியாதபடி காவலிருப்பவராதலின் தமயந்தியினிடத்துண்டாகிய வேறுபாட்டைக் கண்டு உள்ளம் நடுங்குவாராயினார். கணவன்மேல் கொண்ட விருப்பமென்பதனை மறைத்து வேறுபாடென்றாராதலின் இது இடக்கரடக்கலாமென்க. முதலிலும், ஈற்றிலுமுள்ள நான்கனுருபுகள் கொடைப் பொருளன. இடையிலுள்ளது ஏழாவதனிடப்பொருளது. தேவிக்கென்னும் நான்காவது ஏன்றென்னும் இடைச்சொல்டியாகப் பிறந்த இறந்தகாலப்பல்லோர்படர்க்கை வினைமுற்றைக் கொண்டது. தோழியர்கள் பண்படியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப்பெயர்; தோழமை பகுதி, இ பெண்பாற் படர்க்கை விகுதி, மையீறும், இனையவுமென்பதனால் அகரமும் கெட்டது சந்தி, இவ்வாறு முடிந்து நின்ற தோழியென்னும் பெண்பாற்படர்க்கைப் பெயர், அர் என்னும் பல்லோர்படர்க்கை-விகுதிபெற்று, விகுதிமேல் விகுதியாய்க்கள் விகுதியேற்றது. உற்றது ஒன்றன்படர்க்கை யிறந்த காலவினையாலணையும் பெயர். பொற்றொடி மூன்றும் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்; பண்புத் தொகைப் புறத்துப் பிறந்ததெனினும் அமையும். வேறுபாடு முதனிலைதிரிந்ததொழிற்பெயர்; வேறென்னும் பண்புப்பெயரை வினைப்படுத்தப்படு என்னும் வினைமுதனிலை புணர்ந்த வேறுபடு பகுதி, தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் வேறுபாடெனமுதனீண்டது. கொடி பண்படியாகப் பிறந்த பெயர்; கொடுமை பகுதி, (வளைவு) இ ஒன்றன்படர்க்கை விகுதி, மகர ஐகாரககேடும், உகரக்கேடும் சந்தி; இது இங்குப் பூங்கொடி யென்க; இது உவமையாகு பெயராய்ப் பெண்ணையுணர்த்திற்று. (ருஉ)

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரச மார்ப்பு - நெருங்கு
புரிவளைநின் றேங்கப் போய்ப்புக்கான பெற்ற
பரிவளைக்கை நல்லாண் மனை.

(இ - ள்.) கருங்குழலார் - கருமையாகிய கூந்தலையுடைய மாதர்களது, செம் கையினால் - அகங்கையினால், வெள்கவரி - வெண்மையாகிய சாமரைகளினது, பைங்கால் - குளிர்காற்று, மருங்கு உலவ - இரு பக்கங்களிலும் உலாவவும், வார் - வாரால் இறுகக்கட்டிய, முரசம் ஆர்ப்ப - முரசவாத்தியம் ஒலிக்கவும், நெருங்கு - நெருங்கிய, புரிவளை - சுழிந்துள்ள சங்குகள், நின்று ஏங்க - இடைவிடாமலொலிக்கவும், போய் - நடந்து, பெற்ற - தன்னால் பெறப்பட்ட, வரிவளைக்கை - கீற்றமைந்த வளையலணிந்த கைகளையுடைய, நல்லாள்மனை - நற்குண நற்செயல்களையுடைய தமயந்தியினது மாளிகையில், புக்கான் - புகுந்தான். எ-று.

முதலடியின் நான்கு சீர்களின் முதலிலும் முறையே கருமை, செம்மை, வெண்மை, பசுமைவரத் தொடுத்தமையால் தொடையில் முற்று முரண்; அணியில் விரோதாலங்காரத்திலொருவகை. மூன்றனுருபு ஏதுப்பொருளது. உலவமுதலிய மூன்றுசெயவெனெச்சத்துக்குப் போதலைக் காரணமாகக் கொள்ளின் அவை காரியப்பொருளனவாகிய எதிர்கால எச்சங்களென்க; உலவுதல் முதலிய அம்மூன்றும் நடக்கையில் போதலும் நடந்ததெனக் கொள்ளின் நிகழ்காலத்தனவென்க. பெற்ற செயப் பாட்டுவினையாகிய இறந்த காலப் பெயரெச்சம். (௫௩)

கோதை சுமந்த கொடிபோ லிடை நுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள் - மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன்.

(இ - ள்.) களிவண்டு - (மதுவுண்டு) களிக்கின்ற வண்டுகள், மீது எல்லாம் - மேலிடமுழுதும், காந்தாரம்பாடி - காந்தாரமென்னும் இசையைப்பாடாநின்று, நின்று அரற்றும் - நீங்காமலொலிக்கின்ற, பூதார் - மலர்மாலையணிந்த, அம் மெல் ஓதி - அந்த மென்மையாகிய கூந்தலையுடைய, பொன் - பொன்னையொத்த தமயந்தி, கோதை சுமந்த - பூமாலையைச்

சுமந்த, கொடிபோல - பூங்கொடியைப்போல, இடை நுடங்க - இடைதுவளும்படி, தாதை திருவடிமேல் - தந்தையினுடைய திருவடிமேல், தான் வீழ்ந்தாள் - தான் விழுந்துதொழுதாள். எ-று.

தாதையென்னும் பொதுப் பெயர் இங்குப் பொதுமை நீங்கி உயர்திணையாய் நின்றது; தாதை திருவடி வருமொழித் தகரம் இயல்பானது, நன் - உயிர், ௬ - ௫. கோதை சுமந்த என்பதில் நிலைமொழி அஃறிணைப் பெயராதலாலும் இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலாலும், நன், உயிர், ௫, ௧௫. இன்படி மிகாமல், உருபு - ௫, ௧௩. இன்படி விகாரத்தியலபாயிற்று. மீது பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைப் பெயர்; மேலுள்ள இடமென்பதுபொருள். மீதெல்லாம் ஒருமையிற் பன்மை வந்த பால் வழுவமைதி; எல்லாம் தனித்தனியாக எண்ணப்படும் பொருள்களின் பன்மையையுணர்த்துஞ் சொல்லாதலால் பால் வழுவமைதியாயிற்று. இஃதுணராத ஒருவர் உரிச்சொலென்பர், உரிச்சொல் பால்பகாஅஃறிணைப் பெயராயிருத்தல்வேண்டுமாதலாலும், இருதிணைப்பொருளையுமுணர்த்தின் ஆகுபெயராகல் வேண்டுமாதலாலும், எல்லா ஆசிரியர்களும் இணையிடங்களுக்குப் பொதுவாகிய பன்மைப் பெயராகக் கொண்டதனாலும் உரிச்சொலெனல் குற்றமாம்,பாடி பாடா நின்றென்பதன் திரிபு. (௫௪.)

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப் - பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்மேய்ந்து கொள்ளு மணம்.

(இ - ள்.) குலவேந்தன் - சிறந்த வீமராசன், பேர் அழகு - மிகுதியாகிய அழகானது, சோர்கின்றது என்ன - பெருகி வழிகின்றதுபோல, பிறைநுதல்மேல் - பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியில், நீர் அரும்ப - வேர்வைநீர் தோன்றித் துளிக்கும்படி, நின்றாள் தன்பேதையை - நின்றவளாகிய

தன் குமாரத்தியை, பாரா - பார்த்து, கோவேந்தர் தம்மை - கோவாகிய அரசர்களில், மலர்வேய்ந்து - (ஒருவனுக்கு) பூமாலையைச் சூடி, கொள்ளும் மணம் - பெறுகின்ற மணத்தை, நளன். எ - று.

நெற்றியில் அரும்பிய வேர்வையினால் இவளுக்குக் கணவன் விருப்பமுளதாயிற்றென்பதை உணர்ந்து திருமணஞ் செய்தலைக்கருதினனென்பது கருத்து. நின்றாள் பெண்பாற் படர்க்கை இறந்த காலவினையாலணையும்பெயர். நின்றாள் பேதை இருபெயரொட்டுப் பண்புத் தொகை நிலைத்தொடர். கோவேந்தரென்பதும் அது. கோ உயர்திணை ஆண்பால் ஒருமை பன்மைகளுக்கு வழங்கும் பெயராயினும் இங்குப் பன்மையாய் நின்றது. வேந்தர் தம்மையென்னும் ஐயுருபை ஏழாவதாகத்திரித்துக் கொள்க. நுதல்மேல் அரும்ப என்றதனால் நீர் வேர்வைக்காயிற்று. பிறை தொழிலடியாகப்பிறந்த பெயர்; பிற பகுதி, ஐ வினைமுதற்பொருண் விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை; பொருள் காணப்படுதலுடையதென்பது. பேதை பண்பாகு பெயர; மலர்கருவியாகுபெயர்; சினையாகுபெயருமாம். (௫௫)

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கு மறைகென் றியம்பினான் - பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு.

(இ - ள்.) பைங்கமுகின் - பசுமையாகிய கமுகமரத்தினது, கூந்தல்மேல் - பாளைகளின்மேல், கங்கைக்கொழுந்து - கங்காநதியின் நீர்க்கொழுந்து, ஓடுநல் நாடன் - ஓடுகின்ற நல்ல விதர்ப்பநாட்டையுடையான், வேந்தர்மேல் - அரசர்களிடத்து, தூது - தூதுவர்கள், ஓடவிட்டு - விரைந்துசெல்லும்படி அனுப்பி, மங்கை - தமயந்தியினது, சுயம்வரநாள் - சுயம்வரத்தைக் குறித்தநாள், ஏழ் என்று - ஏழாநாளென்று, வார் முரசம் - வாரால்இறுக்கிய முரசத்தை, எங்கும் - நகரமுழுமை

யும், அறைக என்று - கொட்டுங்கோலென்று, இயம்பினன்- (வள்ளுவர்களுக்கு) சொல்லினன். எ - று.

சுயம்வரம் ஒரு பெண் ஒருவனைக் கணவனாகக் கோரிக் கொள்ளுதல். ஏழ் எண்ணலளவையாகுபெயர் ; ஏழென்றென்பதை ஏழு என்று என உகரவீற்றதாகப் பிரிப்பினும் பொருந்தும். கூந்தல், கொழுந்து உவமையாகு பெயர் ; கொழுந்து ஓடு கீரின்மூனே. தூது பண்பாகு பெயர். எங்குமென்பதில் உம்மை முற்றும்மையாதலால் ஈகரவினை எஞ்சாமைப் பொருளது. அறைக என்னும் வியங்கோளின் ஈறுதொகுத்தல். வேந்தர்களுக்குத் தூதுவரையனுப்பியது தன் பெண்ணின்மேல் விருப்பங்கொண்ட அரசர்கள் வரவும், எங்கும் முரசு அறைக என்றது நகரத்துள்ளார் நகரை அலங்கரிக்கவும் ஆம். (௫௬)

௬மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்கும்
வமைத் தரிச்சந் திரன்சுவர்க்கி - நாமத்தார்
பா, வேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோ, வேந்தர் செல்வக் குழாம்.

ண்டு

(இ - ள்.) மாமுத்தம் - பெருமுத்துகளாற் செய்யப்பட்ட, வெள்குடையான் - வெண்கொற்றக்குடையையுடையானும், மால்களிற்றான் - மதமயக்கத்தை யுடையயானைச் சேனையையுடையானுமாகிய, வண்டு இரைக்கும் - வண்டுகள் ஒலிக்கின்ற, தாமத்து - மலர்மாலையணிந்த, அரி - இந்திரனை ஒத்த, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கியினது, நாமத்து ஆர் - பெயரைப் பொருந்திய, பாவேய்ந்த - செய்யுள்களை அழகாகச்செய்த, செந்தமிழ் என்ன - செந்தமிழைப்போல, கோவேந்தர் - கோவரிய அரசர்களது, செல்வக்குழாம் - சிறப்பாகிய கூட்டம், பரந்தது - பரவி எழுந்தது. எ - று.

திருவேங்கடம், குமரியாறு, கீழ்கடல், குடகாடு என்னும் நான்கெல்லைக்குள் சந்திரன் சுவர்க்கிமேல் செய்த செய்யுள் வழங்கும் செந்தமிழ் பெருகி யெழுந்தாற்போலச் சுய

ம்வரத்தைக்குறித்து அரசர் கூட்டம் எழுந்ததென்க. இது எடுத்துக் காட்டுவமை. பா வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவை யுணர்த்தும் சிறப்புப் பெயராகாமல் செய்யுளென்னும் பொதுப்பெயராய்நின்றது; "காட்டியயாப்புத்தூக்குக் கவி செய்யுள் கவிதைபாவே, பாட்டெனப்படும்" என்னும் நிகண்டாலுமுணர்க; இது முதனிலைத்தொழிலாகு பெயர்; தொழிலடியாகப் பிறந்த பெயருமாம்; பா பகுதி, (பாவுதல்) இ வினைமுதற் பொருண்மை விகுதி புணர்ந்துகெட்டது; பாவுதலுடையதென்பது பொருள். ஆம் அசை. தமிழ் வடமொழிச் சிதைவு. குழாம் பண்பாகு பெயர். முத்தமென்பதில் அம்சாரியை. முத்தவெண்குடை என்பதற்கு முத்துக்குச்சுகளமைந்த வெண்குடையெனினும் பொருந்தும்; முத்தம் கருவியாகு பெயர். (நுஎ)

சேந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய் - வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து.

(இ - ள்.) சேந்துஅடையும் - புஷ்பத்தின் பராகம்படிகின்ற, வண்டுஉறை - வண்டுகள்வசிக்கின்ற, தார் - மலர்மாலையணிந்த, செய்யாள் - திருமகள், வளர்மார்பன் - தங்குகின்றமார்பையுடைய விதர்ப்பராசனது, கந்துஅடையும் - கட்டுதறியை அடைகின்ற, வேழம் - யானைகளையுடைய, கடைத்தலைவாய், தலைவாயிலில், கோவேந்தன் - கோவேந்தனாகிய அவ்வீமராசனது, மாதைகுறித்து - மகளைக்கருதி, வந்துஅடைந்த - வந்து சேர்ந்த, பூவேந்தர் தங்கள்கிளை - பூமியிலுள்ள அரசர்கூட்டம் (தலைவாயிலிடம்பெறாமல்) பொன்நகரில் - அழகியகுண்டினபுரத்தில், ஈண்டிற்று - நெருங்கியது. எ - று.

சேந்துஅணு; அந்துபூந்துகளின்மேலது. செய்யாள் பண்படியாகப் பிறந்தபெயர்; செம்மைபகுதி, ஆள்பெண்பால்விகுதி, "ஈறுபோதல்" என்பதனால்மைகெட்டு, "முன்னின்றமெய்திரிதல்" என்பதனால் பகுதியீற்றுமகரம் யகரமாகி, "தனிக்

குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும்" என்பதனால்யகரம் இரட்டிமுடிந்தது. செம்மை நடுநிலைமை; தீமையுள்ளஇடத்துச்சேராளென்பதுபொருள். கடைத்தலை இலக்கணப்போலி. தாரென்னும்விசேடணம் மார்புக்காக்குக. ஈண்டிற்று-ஒன்றன்படர்க்கை இறந்தகாலவினைமுற்று; ஈண்டுபகுதி, இன் இறந்தகால இடைநிலை, று ஒன்றன்படர்க்கை விகுதி, உகரக்கேடும், னகரத்திரிபும்சந்தி. (௫அ.)

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார் - தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பனறன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

(இ-ள்.) தெள் - குற்றமற்ற, அரி - செவ்வரிகளைப் பொருந்திய, கண் - கண்களையுடைய, பூமகளை - திருமகளை ஒத்தவளை, பொன்னை - பொன்னை ஒத்தவளை, பொரு-போர்செய்கின்ற, வேல் - வேலைத்தாங்கிய, விதர்ப்பன்தன - விதர்பபராசனுடைய, கோமகளை - சிறந்தபுத்திரியை, தம்மனத்துக்கொண்டே - தம்மனத்தில்அடையப்பெற்றே, புள்உறையும் - பறவைகள்வசிக்கின்ற, சோலைகளும் - சோலைகளிலும், பூங்கமலவாவிகளும் - தாமரைமலர்களையுடைய தடாகங்களிலும்; உள்ளும் - (சிலர்) உள்ளிடத்தும், புறமும் - (சிலா) புறத்திடத்தும், இனிது உறைந்தார் - சுகமாய்வசித்தார்கள். எ-று.

சோலைகளில் உள்ளும், வாவிகளில்புறமும் உறைந்தாரெனமுறை நிரனிறையாகக் கொள்க. புள்ளுறைதலை வாவிகளுங்கொள்க. முன்னுள்ளஉம்மைகளிரண்டும் எண்ணுப்பொருளோடு இழிவுசிறப்பில்வந்தன. பின்னுள்ளன எண்ணுப்பொருளன. பறவைகள்வசிப்பதற்குரிய அவ்விரண்டிடங்களும் இனியன ஆதற்குக்காரணம் விதர்ப்பன்தன்கோமகளைத் தம்மனத்துக் கொணடமை. பூமகளை,பொன்னை,கோமகளைஎன ஒருபொருண்மேல் வந்தபெயர்கள் கொண்டென்னும் ஒருமுடிக்குஞ்சொல்லைக் கொண்டன. மனத்தேயென்னுந்தேற்

றேகாரத்தைக் கொண்டென்பதனோடு கூட்டுக. நகரத்திடம் போதாமையால் இவ்விடங்களிலும் சிற்சிலர்வசித்தனரென்க. கொண்டு இறந்தகால வினையெச்சம்; கொள்பகுதி, ட் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, ளகரம்டகரமாதல்சந்தி, அது ணகரமாதல் மெலித்தல்விகாரம். இனிதுகுறிப்புவினையெச்சம்; இனிபகுதி, த்எழுத்துப்பேறு, உ வினையெச்சவிகுதி; இதுஇனிமையென்னும் பண்புப்பெயரடியாகப் பிறந்தது; தெரிநிலைவினையெச்சம் இனித்தெனவரும்.

வழிமேல் விழிவைத்து வாணுதலா ணாம
மொழிமேற் செவிவைத்து மோகச் - சுழிமேற்றன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானில்
மஞ்சோட வன்னம் வர.

(இ - ள்.) வழிமேல் - அன்னஞ்சென்ற வழியில், விழிவைத்து - பார்வையை வைத்து, வாள்நுதலாள் - ஒளிதங்கிய நெற்றியையுடைய தமயந்தியினது, நாமமொழிமேல் - பெயராகிய சொல்லில், செவிவைத்து - கேட்குந்தொழிலைவைத்து, மோகச்சுழிமேல் - மோகமாகிய நீர்ச்சுழியில், தன்னெஞ்சு ஓடவைத்து - தன்மனத்தை ஓடும்படிவைத்து, அயர்வான் - மயங்குகின்ற நளராசன், நெடுவானில் - பெரிய ஆகாயத்தில், மஞ்சு ஓட - (தன்சிறைக்காற்றால்) மேகங்கள் விலகிச் செல்லும்படி, அன்னம்வரக்கண்டான் - அன்னம்வரப்பார்த்தான், எ-று.

நாமமொழி பண்புத்தொகை நிலைத்தொடராம். அன்னம்வந்து அவளதுஇணக்கமாகிய சொல்லைச் சொல்லவேண்டுவோனாதலால், வழிமேல்விழிவைத்து, நாமமொழிமேல் செவிவைத்தெனக் காரணகாரியமுறையே வைத்தானென்க. நாமமொழியென்பதற்கு அச்சத்தைத் தருகின்ற சொல்லெனவுரைப்பினும் பொருந்தும். தன்னை மணப்பளோ? மணக்காளோ? என ஐயப்பட்டுக்கொண்டிருப்பவனாதலால், மணப்பேனென்னுஞ் சொல்தரும் களிப்பினும் மணக்கேனென்னு

ஞ்சொல்தரும் - துன்பம் பெரிதாகக்கொண்டவனுதல்பற்றி
நாமமொழியென்றார். இது ஈறு திரிந்த உரிச்சொற்றொகாநி
லைத்தொடர். விழியென்னுங் கண்ணின்பெயர் அதன்காரி
யமாகிய பார்வைத்தொழிலுககாதலால் காரணவாகுபெயர்.
செவியும்இது. தன்னியல் பிற்செல்லுமனத்தை ஓடவைத்
தென்றது இலக்கணை. (௬௰)

முகம்பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றோரைப்போல - மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன்.

- (இ - ள்.) கேளாரை - பகைவரை, வாளால் - தன்வாளி
னால், விருந்திட்ட - (பறவைகளுக்கு) விருந்துசெய்த, மன்-
னரராசன், செல்வர்முகம்பார்த்து - செல்வருடைய இனியமு
கத்தைப்பார்த்து, அருள்நோக்கி - அருள்காரணமாக உண்
டாகும் இன்சொல்லை ஆராய்ந்து, அகம்பார்த்து - உள்ளக்
கருத்தைத்தெரிந்து, முன் இரக்கும் - எதிர்நின்று யாசிக்கும்,
அற்றோரைப்போல - பொருளில்லாரைப் போல, அன்னத்
தை - அன்னத்தினிடத்து, மிகும்காதல் - (தன்மேல் தமயந்தி)
மிகுகின்ற ஆசையை, கேளா - கேட்காநின்று, இருந்திட்டான்
இருந்தனன். எ-று.

தூரத்தில் தம்மைக்கண்டபோது இனியமுகத்தையுடைய
ராதலைககண்டு நெருங்கியஅளவில், அருள்காரணமாக உண்
டாகும் இன்சொல் சொல்லலைஅறிந்து, இக்குறிகளால் உட்க
ருத்தைத்தெரிந்து இரக்கவுடன்படுதலால் முன்னிரந்து அகம்
பார்க்கும் என்பதில் தொடர்மொழிகளைப் பின்முன்னாகநிறு
த்தி, விகுதிபிரித்துக்கூட்டிஉரைக்க. உவமையில்கூறிய வி
சேடணத்தைப் பொருளுக்குங்கூட்டி, அன்னத்தினுடைய
இனியமுகத்தைப்பார்த்து, தனக்கு இனிமையாகத் தேறுதல்
சொல்லுதலை அறிந்து இவைகளால்அதனதுட்கருத்தை அறி
ந்து தனமேல் தமயந்திகொண்ட காதலைப்பலமுறை கேட்
டுக்கொண்டிருந்தனனென்க. அருள் தான்காரணமாகஉண்

டாகும் இன்சொல்லின்மேலது. அற்றேறென்றது பொருளில்லாரை; முன்னே செல்வறொன்றமையால். கேளா கேளாரின்றென்பதன் திரிபு. அன்னத்தை உருபுமயக்கம். கேளார் எதிர்மறைவினையாலணையும்பெயர்; இதில்கேட்டல் தன்காரணமாகிய மதித்தலின்மேலது. விருந்தைவேற்றுக கோடற்பொருள்ஈனுண்ணும் பறவைகளாதலால் அதுவருவித்துரைக்கப்பட்டது. இருந்திட்டான் ஆண்பாற்படர்க்கை இறந்தகாலவினைமுற்று; இரு பகுதி, த் சந்தி, து சாரியை, இடு பகுதிப்பொருள்விகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம், உகரக்கேடுசந்தி, அனைத்துமொருபகுதி, ஆன் ஆண்பாற்படர்க்கைவிகுதி, பகுதிஒற்றிரட்டியது சந்தி, அதுவே காலங்காட்டியது, உகரக்கேடுசந்தி. (௬௧)

அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
என்னுயிரை மீள வெனக்களித்தாய் - முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே யென்றான் றிருந்தாரை
எமொழிக்கும் வேலா னெடுத்து.

(இ - ள்.) திருந்தாரை - பகைவர்களை, எமஞ்ழிக்கும் - செருக்கைநீக்குகின்ற, வேலான் - வேலைத்தாங்கியவனான், அன்னக்குலத்தின் அரசே - அன்னக்குலத்தினதுஅரசே, அழிகின்ற என் உயிரை - (தமயந்தியை அடையப்பெறாமையால்) அழிகின்ற எனதுயிரை, மீள - அழியாதபடிபெறும்படி, எனக்குஅளித்தாய் - எனக்குத்தந்தாய், முன் உரைத்த - (மாதர்களுக்குள்) முதலில்சொல்லப்பட்ட, தேமொழிக்கு - தேன்போலுஞ் சொல்லையுடைய தமயந்திக்கு, தீது இலவே என்றான் எடுத்து - தீமைகள் இல்லனவாவென்று எடுத்துவினவினான். எ-று.

என்னுயிரை எனக்களித்தாயென்றது தன்மேல் தமயந்தியைக்காதல் கொள்ளும்படிச்செய்ததை. முன்னுரைத்தலாவது - அழகினாலும், நற்குண - நற்செய்கையாலும் அறிவுடையோரால மாதர்களுக்குள் முதன்மையாக எடுத்துச்சொல்லப்படுதல்; உரைத்த செயப்பாட்டு வினையாகிய இறந்தகாலப்

பெயரொச்சம். தமயந்தியைக் காணுமயினும் அவளுடைய சொல்லைக்கேட்டு உயிர்தரித்தானாதலால் தேமொழியென்றான். இது உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்காரணப்பெயர். மெல்லினமூர்தன்மொழி வந்தமையால் தேமொழியெனத் தேனென்னுஞ்சொல் ஈறுகெட்டது; தேன்மொழியென ஈறு கெடாதும்வரும். தீது பண்புப் பெயர்; து பகுதிப்பொருள்விகுதி; இவ்விகுதியைமுழுதென்பதிலுங் காண்க. இதுபால்பகா அஃறிணைப் பெயராதலாகிய பொதுமை இல என்னும் பன்மைவினையால் நீங்கினது. தீதிலவேயென்றது க்ஷேமமா என்றபடி. ஏமமென்பதில் அம்மென்பது தொகுத்தல்விகாரம். இருந்தார் எதிர்மறைவினையாலணையும்பெயர்; இருந்து பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, உகரக்கேடுசந்தி, அனைத்துமொருபகுதி, ஆர்பல்லோர் படர்க்கை விகுதி, விகுதிஆகாரக்கேடு முதற்குறை. இருந்தாரை உருபுமயக்கம்; பசுவைப் பால்கறந்தானென்பதிற்போல ஏமொழிக்குமென்பதை ஒருசொல்லாகக் கொள்ளின் இருந்தாரையென்பது உருபுமயக்கமன்று. (௬௨)

கொற்றவன்ற னேவலினாற் போயக் குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவடா னுற்றதுவும் - முற்றும்
மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு.

(இ - ள்) கொற்றவன்தன் - நளராசனுடைய, ஏவலினால் - கட்டளையால், போய் - சென்று, அகுலக்கொடிபால் - உயர்குடியிற்பிறந்த பூங்கொடியை ஒத்த அத்தமயந்தியினிடத்து, உற்றதுவும் - தான்சேர்ந்ததையும், ஆங்கு - (இவனுடைய அழகுமுதலியவற்றை) சொல்லியகாலத்தில், அவள்உற்றதுவும் - அவளடைந்தகாதற் றன்மைத்தையும், முற்றும் - முழுதும், அன்னம்மொழிந்தது - அன்னஞ்சொல்லியது, மொழிகேட்டு - அச்சொல்லைக்கேட்டு, அரசற்கு - நளராசனுக்கு, உள்ளஅறிவுஉம் - இருந்தஅறிவும், அழிந்தது-கெட்டது., எ-று.

௬௩ - ஆம் செய்யுளில்-தான்சென்றகாரியம் பயன்பட்டதென்பதற்குத் தமயந்திகொண்ட மிக்க காதலைக்கூறியது; இச

செய்யுளில் தான்போய்அவளைக்கண்டு பேசியதையும், இவன்மேற்கொண்ட காதலையும், அதனால்அவளடைந்த அவத்தையையும் கூறியதென்க. உள்ளஅறிவாவது.— தமயந்தியினுடைய அழகைக்கேள்விப்பட்ட காலத்தில் ஒழிந்துபோக மிகுதியாயுள்ளஅறிவு; அஃதுஐம்புலவுணர்வு. இதனீற்றில் இறந்தது தழீஇயதனோடு இழிவுசிறப்பில் வந்தஉம்மைதொகுத்தலாயிற்று. அன்னமொழிஎன்பதை அன்னம்மொழிஎனப் பிரித்துப்பொருளுரைத்தலேஅன்றி, அன்னமொழி எனப்பிரித்து, அப்படிப்பட்டசொல்லே என உரைத்தலுமாம்; இங்ஙனம்கொள்கையில் அன்னம்தோன்றா எழுவாயென்க. கொற்றவன் தொழில்அடியாகப்பிறந்தபெயர்; கொற்றம்பகுதி, அன்ஆண்பாற்படர்க்கை விகுதி, மகரக்கேடும், வகரத்தோற்றமுஞ்சந்தி; கொற்றம்தொழிற்பெயர்; கொல்பகுதி துசாரியை, அம்புடைபெயர்ச்சிவிகுதி, லகரதகரங்கள் றகரமாதலும், உகரங்கெடுதலும்சந்தி. உற்றதென்னும் இரண்டில்முன்னது இறந்தகாலத்தொழிற்பெயர்; பின்னது அக்காலவினையாலணையும் பெயர்; இவற்றினீற்றுக்குற்றியலுகரம், ஈன் - உயிர் கசு-ஆம்-சூ. இல்கேட்டே வருமென்னுமல், ஐடுமென்றமையால், கெடாமல் பொதுவிதியால் வகரஉடம்படுமெய்பெற்றன. தன்சாரியை. தான், ஏ அசை, (சுரு)

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஒட்டை மனத்தோ டுயிர்தாங்கி - மீட்டும்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

(இ - ள்.) கேட்ட - (தமயந்தியின்செய்தியை) கேள்விப்பட்ட, செவிவழியே - காதின்வழியே, உணர்வுகேளாது ஓட - அறிவு (தன்னை) கேளாமல் ஓடியதனால், கோமான்-நளராசன், ஒட்டைமனத்தோடு - உடைந்ததாகிய மனத்துடனே, உயிர்தாங்கி - உயிரைத்தாங்கி, மீட்டும் - மேலும், தழலில் - தீயில், படுதளிர்போல- விழுந்ததளிரைப்போல, சாய்ந்து - (படுக்கையிலே) சாய்ந்து, குழியில் - படுகுழியில், படுகரிபோல-

அகப்பட்டயானையைப் போல, கிடந்தான் (செயலற்று) கிடந்தனன், எ - று.

அன்னமொழிந்ததைக் கேட்டது செவியாதல்பற்றி மற்றபொறிகளினின்றும் பிரிக்கப்பட்ட தாதலால் ஏ பிரிநிலை. கோடென்பது இலக்கணை; தன் வசத்தில் நில்லாமல் ஐம்புலவுணர்வும் தாமே நீங்கவென்பது கருத்து. மீட்டென்பது சாய்ந்து, கிடந்தானென்பவற்றைச் சார்ந்து நின்றமையால் வினைமாற்றுப்பொருளது. உம்மை இறந்தது தழீஇயது. உயிர் தாங்கப்பட்டபோது மனமும் தாங்கப்பட்டதெனக் கொள்ளின் ஓருருபு உடனிகழ்ச்சிப்பொருளது; இவ்வாறு கொள்ளாக்கால் விசேடணப் பொருளதென்க. ஓட்டை பண்பாகு பெயர். ஓட்டை மனம் இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத் தொடர். உணர்வு சாதியொருமையாதலால், கோடென்பதை வினைமுற்று வினையெச்சமானதெனக் கொள்ளினும் அமையும்; வினையெச்சத்துக்கு உகரவிகுதி, த் எழுத்துப்பேறு; வினைமுற்றுக்குத் துவ்விகுதி என்க. கரி கரமுடையதென்பது. (சுச)

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார் - போதில்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம்.

(இ - ள்.) கோதை - தமயந்தியினது, சுயம்வரநாள்-சுயம்வரத்துக்குரியநாளை, கொற்றவனுக்கு - அரசனுக்கு, உற்று உரைப்ப - நெருங்கிச் சொல்வதற்கு, ஏதம் இல்லாக் காட்சியர் - குற்றமற்ற அறிவுடைய தூதர்கள், போதில் - தாமரை மலரில், பெடையோடுவண்டு உறங்கும் - பெடையுடனே ஆண்வண்டு உறங்குகின்ற, பேர் ஒலி நீர் - பேரோசையையுடைய நீர்வளமுள்ள, நாடன் - நிடதநாட்டையுடையானது, அடையாத - மூடப்படாத, வாயிலகம் - வாசலில், வந்து எய்தினார் - சென்று சேர்ந்தார்கள். எ - று.

பகைவரில்லான், குறையிரப்போர் காணலுக்கு எளியனென்பதைக் குறிப்பிக்க அடையாதவாயிலென்றார். கோ

தை சினையாகுபெயர். ஏதமில்லா எழுவாய்த் தொகாநிலைத் தொடர். இல்லாக் காட்சி பண்புத்தொகைநிலைத் தொடர்; இதில் ஆசாரியை; உரையாசிரியர்களிலொருவர் அத்தொகைநிலையென்றுகூறி, இல்லாமையாகிய காட்சியென விரிப்பர்; இல்லாத என்னும் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் இல்லா என ஈறுதொக்கதெனக்கொண்டு, இல்லாக் காட்சி குறிப்புப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெனினுமமையும். காட்சியர் தொழிலடியாகப் பிறந்த பெயர். பொழுதென்பதன் மரூஉவாகியபோது தமக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது தவறாமல் மலர்கின்ற மலர்களுக்குக் காலவாகுபெயராய் நின்றது; அது தலைமைபற்றித் தாமரைமலர்க்காயிற்று. நீர்க்குப்பேரொலி மதகுமுதலியவற்றினின்றும் ஒழுகுதலால் உளதாவது. (௬௫)

காவலன்றன் றூதர் கடைக்காவலர்க்கறிவித்
தேவலிற்போயீதென் றியம்புதலும் - மாவின்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து.

(இ - ள்.) காவலன்றன் தூதர் - வீமராசனுடைய தூதர்கள், கடைக்காவலர்க்கு - வாயில் காப்பவர்க்கு, அறிவித்து - (தாங்கள் வந்த செய்தியை) தெரிவித்து, ஏவலின் - (நளராசனுடைய) கட்டளையினால், போய் - உள்ளேசென்று, ஈது என்று - இன்னதென்று, இயம்புதலும் - சொல்லுதலும், பூவாளி - மலரம்புகள், பாய - பாய்ந்ததினால், மெலிந்த - இளைத்த, தோள்வேந்தன் விரைந்து - தோள்களையுடைய அவ்வரசன் விரைந்து, மாவின் - குதிரைகளினால், பொலிந்த - விளங்கிய, தேர் பூட்டு என்றான் - தேர்பூட்டென்று (சாரதிக்கு) கட்டளையிட்டான். எ-று.

விரைந்தென்பதற்கு நளன்வினைமுதலானால் அது என்றானென்னும் வினைகொண்டது; சாரதியானால் பூட்டென்னும் வினைகொண்டதென்க. கடைக்காவலர் செயப்படுபொருளில் வந்த ஆரும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் ஆதலால்

ககரமிக்கது. இயம்புதலும் இறந்தகாலவினையெச்சம்; இதில் உம்விகுதி காலத்தையும்,வினையெச்சப் பொருண்மையையும் உணர்த்தியது. ஏவலினென்னும் ஐந்தனுருபு ஏதுப்பொரு ளது. மாவினென்பது செயப்படுபொருளில்வந்தது. பூட்டுபிற வினையாகிய ஏவலொருமைவினை;- பூண் தன்வினைப்பகுதி, டு பிறவினைப்படுத்தும் விகுதி, ணகரம் டகரமாதல்சந்தி, இவ் வாறுமுடிந்து நின்றபூட்டுபகுதி, ஆய்ஏவலொருமை எதிர்கா லவிகுதி, உகரக்கேடுசந்தி, பூட்டாயென்பது விகுதிகெட்டு நின்றது. வாளி பண்படியாகப்பிறந்தபெயர்; வாள்பகுதி, (கூர்மை.) (௬௬)

கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை யேரடித்த - கட்டி
கரையத்தே னூறுங் கடனாட னூர்க்கு
விரையத்தே ரென்றான் வேந்து.

(இ - ள்.) கெட்ட - இளைத்த, சிறுமருங்குல் - சிறிய இடையையுடைய, கீழ்மகளிர் - இழிகுலப்பெண்களாகிய பள்ளப்பெண்கள், நீள்வரம்பில் - நீண்டவரப்புகளில், இட்ட - (களைபிடுங்கி) எறிந்த, பசுகுவளை - ஈரமாகிய குவளைமலர்கள், ஏர்அடித்த - (உழவர்) ஏரடித்ததனாலுண்டாகிய, கட்டி - மண்ணாங்கட்டிகள், கரைய - கரையும்படி, தேன்ஊறும் - தேன்சுரக்கின்ற, கடல் - கடலைச்சார்ந்த, நாடன் - விதர்ப்பதேசத்தரசனது, ஊர்க்கு - ஊருக்கு, விரைய - விரைவாக, தேர் ஊர் என்றான் - தேரை நடத்தென்று சொல்லினான், வேந்து - நளராசன். எ-று.

கீழ்பண்பாகுபெயர். கீழ்மகளிரென்றது கடைசியரை. வரம்பும் அவ்வாகுபெயர். மக் பகுதி, அள்பெண்பால் விகுதி, பகுதி அகரங் கெட்டதெனின் கடைக்குறை, விகுதி அகரங்கெட்டதெனின் மூதற்குறை, அல்லது ளகரமெய் பெண்பாற்படர்க்கைவிகுதி; இங்ஙனம் முடிந்து நின்ற மகள் இர் என்னும் பல்லோர்படர்க்கைவிகுதி பெற்று நின்றது. ஏரடித்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சம் சுட்ட புண் என்பதுபோலச் செய்வதாதிஅறுபொருட் பெயருள்டங்கா

தகட்டியென்றும் பிறபெயர்கொண்டது. குவளைமுதலாகு பெயர். (சு௭)

சடைச்செங்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான் — அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் றிருமகளாம்
நல்லுயிரும் வாழு நகர்.

(இ - ள்.) சடைச்செங்நெல் - சடைபோலத்தாள்களடர்ந்த செந்நெற்பயிர், பொன்விளைக்கும் - பொன்போன்ற கதிர்களை விளைக்கின்ற, தன்நாடுபின்ஆக - தனதுநிடதநாடு பின்னாகவும், கடல்தானை - கடலையொத்தசேனை, முன் ஆக - (தனக்கு) முன்னேசெல்லவும், அடற்கு அமைந்த - போருக்குத் தகுந்த, வில்லியரும் - வில்வீரரும், பொன்தாமம் - அழகியமலர்மாலையணிந்த, வீமன்திருமகள்ஆம்-வீமராசனுடையசெல்வப்புத்திரியாகிய, நல்உயிரும்-தன் உரிய உயிரும், வாழும்நகர் - வாழ்கின்ற நகரத்தை, கண்டான் - சென்றுகண்டனன். எ-று.

வீமன் திருமகளையே தனதுண்மையாகிய உயிராகக்கருதியிருக்கின்றமையால் அவள் நல்லுயிரென்னப்பட்டாள். நல்லுயிரென்பதில் நல் நற்றாயென்பதிற்போல உரிமையையுணர்த்திற்று. விளைக்கும் பிறவினையாகிய எதிர்காலப்பெயரெச்சம்; தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய விளையென்னும்பகுதி இங்குப் பிறவினைக்குரியது, க் சந்தி, கு சாரியை, உம் எதிர்காலப் பெயரெச்சவிகுதி, உகரக்கேடுசந்தி; தன்வினையில் விளையுமெனவரும். அடல்தொழிற்பெயர்; அடுபகுதி, அல்புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடுசந்தி. வில்லியர் பல்லோர் படர்க்கைப்பெயர்; வில்பகுதி, ல் சந்தி, இ ஆண்பாற்படர்க்கை விகுதி, இவ்வாறும்முடிந்த வில்லிதன் பன்மையையுணர்த்த அர்என்னும் பல்லோர்படர்க்கை விகுதியும், அதுபற்றிவந்த சந்தியும் பெற்றுநின்றது. (சு௮)

நெற்றித் தனிக்க ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன் - உற்றடைந்தான்

தேனாடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானாடுங் காத்தான் மருங்கு.

(இ - ள்.) நெற்றி - (சிவனது) நெற்றியிலுள்ள, தனிக்கண்ணெருப்பை - ஒப்பற்ற கண்ணினது நெருப்பை, குளிர்விக்கும் - (தன்னிசையால்) குளிரச்செய்யும், கொற்றம் - வெற்றியமைந்த, தனியாழ் - ஒப்பற்ற மகதியென்னும் யாழையுடைய, குலமுனிவன் - சிறந்த நாரதமுனிவன், தேனாடும் - வண்டுகள்நாடிச் செல்கின்ற, தெய்வத்தருவும் - தெய்வத்தன்மையுள்ள கற்பகத்தருக்களையும், திருவும் - சங்கநிதிபதுமநிதிகளையும், மணியும் - சிந்தாமணியையும், வானாடும் - சுவர்க்கலோகத்தையும், காத்தான்மருங்கு - ஆளுந் தொழிலமைந்த இந்திரன்பக்கத்து, உற்று - மனம்பொருந்தி, அடைந்தான் - சென்றனன். எ-று.

நெற்றிக்கண்ணி னெருப்பைக் குளிர்வித்தலாவது தனனிசையைக்கேட்டவளவில் உள்ள மகிழ்ச்சியால் அக்கண்ணிலும் நீரரும்பல். குளிர்விக்குமென்னும் பிறவினையாகிய பெயரெச்சம் நின்முகங்காணு மருந்தினேன் என்பதுபோலக் கொற்றமென்னும் செயற்பெயர்கொண்டது. திருவென்றது சங்கநிதி பதுமநிதிகளை; இதுகாரணத்தைக் காரியமாக வுபசரித்தது. திருமணியென்னும் உம்மைத் தொகைநிலைத் தொடர் ஒருமொழிபோல நின்று எண்ணும்மைபெற்றது. கற்பகத்தருக்களாவன.—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகமென்பன. (௬௯)

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரு மிலராலென் றையுற்று-நாரதனார்
நண்முகமே நோக்கினா னகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் வினாந்து.

(இ - ள்.) நாகம் - மலைகளை, சிறகுஅரிந்த - சிறகுவெட்டிய, மின் - பிரகாசிக்கின்ற, முகம் - கூர்மையையுடைய, வேல் - வச்சிராயுதத்தைத் தாங்கிய, கையான் - கையையுடைய இந்தி

ரன், வீரர்விறல்வேந்தர் - வீரர் வெற்றியையுடைய அரசர் இருவரிலும், விண்நாடு-சுவர்க்கத்தில், சேர்கின்றார் - சேர்கின்றவர், ஆரும் இலர் என்று - ஒருவருமில்லையென்று, ஐயுற்று - சந்தேகப்பட்டு, (வாயால்வினவாமல்) நாரதனார் - நாரதமுனிவருடைய, நல்முகமே - நல்லமுகத்தையே, விரைந்துநோக்கினன் - விரைவாகப் பார்த்தான். எ - று.

வீரர்விறல்வேந்தரென்பதனீற்றில் இருவருமென்னுஞ்செவ்வெண்ணின் தொகையோடு முற்றும்மை விகாரத்தால் தொக்கது. முகமேயென்னும் பிரிநிலையேகாரத்தால் வாயால்வினவாமை பெறப்பட்டது. ஐயுற்று ஒருசொல்லின் தன்மையது; இது இறந்தகாலவினையெச்சம்; ஐயமென்னும்பெயர்ச்சொல்லை வினைப்படுத்த உறு என்னும் உரியடியாகப் பிறந்த முதனிலை புணர்ந்தபோது, நிலைமொழி கடைக்குறைநடையாய் நின்ற ஐயுறுபகுதி, உ வினையெச்சவிகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும்சந்தி. ஆர் யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ; உம்மைமுற்றும்மையாதலால் யா எஞ்சாமைப் பொருளது. நாரதனாரென்றது உயர்வினால்வந்த பால்வழுவமைதி. இவ்வாறு உயர்திணைப்பெயரின் ஒருமை விகுதிமேல் பன்மை விகுதி வருதலையும், பன்மைவினையோடுமுடிதலையும், ஆசிரியர் தொல்காப்பியனார் "இயற்பெயர் முன்னர் ஆரைக்கிளவி பலர்க்குரியெழுத்தின் வினையொடுமுடிமே" என்னுஞ்சூத்திரத்தில் ஒன்றெனமுடித்த லென்னும் உத்தியால் கொள்ள வைத்தார். நாகஞ்சிறகரிந்த என்பதில் சிறகரிந்த என்பதை ஒருவினையாகக்கொண்டால்,நாகத்தையென விரித்து, இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சியென்க. சிறகையரிந்த என இரண்டாவதை விரிக்கின்நாகத்தின்கண் என ஏழாவதையும், சிறகின்கண் என ஏழாவதை விரிக்கின்நாகத்தை என இரண்டாவதையும் விரிக்க. நன் - பெயர் - ரு, ருஅ. வீரர்விறல்வேந்தர் விண்ணாடு சேர்தல்.—போர்முகத்தில் அஞ்சாது நின்று போர்செய்து உயிரைவிடின் சுவர்க்கம்பெறுதல். (எ0)

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து - மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன்.

(இ - ள்.) பொய்யாதவாயினான் - பொய்க்காத சொல்லையுடையானும், மாதவத்தோர்மன் - பெருந்தவத்தினரரசனுமாகிய நாரதமுனிவன், புரந்தரற்கு - இந்திரனுக்கு, வீமன் மடந்தை - வீமராசன் புத்திரியினுடைய, மணத்தின் - கலியாணத்தினது, விரைதொடுத்த - வாசனையைச்சேர்ந்த, தாமம்புனைவான் - மாலையை அணிந்துகொள்ளும்படி, சயம்வரத்து - சுயம்வரத்துக்கு, மாமன்னர் - பெருமையாகிய வெற்றியரசர், போயினார் என்றான் - போயினார்களென்று சொல்லினன். எ-று.

எனவே, தமயந்தியினுடைய சுயம்வரத்தின் மாலைபெறும் முயற்சியுடையாரன்றி, போரின்வெற்றிபெறும் முயற்சியிலரென்று குறிப்பாக விடைகூறினன். மன்னர்களைக்கூறவே அவர்களிடத்துள்ள வீரர்களைக் கூறவேண்டாதாயிற்று. வாய் கருவியாகுபெயர். அருளால்சொல்லினும், கோபத்தால்சொல்லினும், அவ்வப்பயனைத் தந்தேவிடுதலால் பொய்யாதவாயென்றார். பொய்யாதவாயினானென்பதைக் கருவிப்பொருளதாகிய மூன்றாம் வேற்றுமை விரியெனவைத்து, என்றானென்னும் வினைகொண்டதெனினும் பொருந்தும். புரந்தரன் பகைவருடலைச் சேதிப்பவன். சயம்வரம் வடமொழித் திரிபு. (எக)

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை - மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு.

(இ - ள்.) (வீமராசன் புத்திரி) அழகுசுமந்து - பேரழகைச் சுமப்பதினால், இளைத்த ஆகத்தாள் - இளைத்த உடலினள்; வண்டு - (மணத்தைவிரும்பி)வண்டுகள், பழகு - விட்டு

நீங்குத லில்லாத, கரு கூந்தல்பாவை-கருமையாகிய கூந்தலை யுடைய பிரதிமைபோன்றவள், மழகளிறு - இளமையாகிய யானைச் சேனையையுடைய, வீமன்குலத்துக்கு - வீமராசனுடைய குலத்துக்கு, ஓர் மெய்த்தீபம் - ஒப்பற்ற மெய்ம்மையாகிய தீபம்போன்றவள், அவளே - அப்பெண்ணே, காமன்திருவுக்கு - மன்மதனுடைய செல்வத்துக்கு, ஓர்காப்பு - அழியாமல் சிறந்தகாவலானவள் என்றனன். எ-று.

என்றனனென்பது சொல்லெச்சம். சுமந்தென்றதனால் அழகு பேரழகென்பதும், வண்டு பழுகென்றதனால் இயற்கை மணமுள்ள கூந்தலென்பதும், அவளே என்னும்பிரிநிலை ஏகாரத்தால் மங்கையர்களுக்கெல்லாம் சிறந்தவளென்பதும், விளங்குகின்றன. வீமராசன்குலத்தை இவளால் யாவரும் அறிதலால் தீபமென்றும், நெய்திரிகுறையினும், காற்றுவீசினும் இலதாகும் தீபம்போலாமையால் ஓர் மெய்யென அடைகொடுத்துத் தீபமென்றும், அவளது கட்டழகைக்கண்டு புருடர்கள் யாவரும் காமனது வசப்படுதலால் காமன்திருவுக்கோர் காப்பென்றுங் கூறினான். சுமந்துகாரணப் பொருட்டாகிய இறந்தகால வினையெச்சம், பாவை உவமையாகுபெயர். காப்புதொழிலாகுபெயர். (௭௨)

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார் - சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

(இ - ள்.) (நாரதமுனிவன்சொல்லியதைக்கேட்ட) மால்வரையை - பெரியமலைகளை, வச்சிரத்தால் - வச்சிராயுதத்தினால், ஈர்ந்தானும் - சிறகரிந்த இந்திரனும், வானவரும் - அக்கினி, யமன், வருணனாகியதேவர்களும், கோல்வளைதன் - அழகிய வளையலணிந்த தமயந்தியினது, மாலைகுறித்து - சுயம்வர மாலையைக்கருதி, சால்பு உடைய-(எல்லாசெல்வமும்)நிறைதலையுடைய, விண்ணாடுநீங்கி - சுவர்க்கத்தினின்றுநீங்கி, விதர்

ப்பன் திருநகர்க்கு - வீமராசனுடைய சிறப்பாகிய நகரத்திற் செல்லுதற்கு, மண்நாடு நோக்கி - மண்ணுலகத்தை நோக்கி, மகிழ்ந்து எழுந்தார் - களித்தெழுந்தார்கள். எ-று.

இந்திரன் அரசனாதலால் அவனைஎடுத்துக்கூறி, அக்கினிமுதலிய மூவரையும்அச்சிறப்பின்மை கருதிஅவரென்றார். கோலமென்பதில் அம் தொகுத்தல்; கோலெனத்தனித்துவழங்காமையால். வளை பண்பாகுபெயராய்க்கணுவை யுணர்த்திற்று; அதுமூங்கிலுக்குச் சினையாகுபெயர்; அதுமலைக்குத் தானியாகுபெயர். சால்பு உரிச்சொலடியாகப்பிறந்ததொழிற்பெயர். நாடு உலகத்தின்மேல் நின்றது. ஈர்ந்தான் ஆண்பாற்படர்க்கை யிறந்தகாலவினையாலணையும் பெயர்; வினைமுற்றுப் பெயரென்னலாகாதாலெனின், பெயரெச்சம்பெயராதலும், வினையெச்சம் பெயராதலும் உண்டாயின்என்னலாமென்க; இலக்கணக்கொத்தார் வினைமுற்றுப்பெயரென்றா ரெனின், அவர் கருத்தறியாமல் வினாவினாய்; வினை முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சமென ஐந்து வகைப்படுமென்றுகூறி, முதனிலை இன்ன ஆகும், தொழிற்பெயர் இன்ன ஆகும், வினைமுற்றுப்பெயர் இன்ன ஆகுமெனக் கூறியதே அன்றி, வினையாலணையும் பெயரென்னலாகாது, வினைமுற்றுப்பெயரென்னுங் குறியீடே கூறல் வேண்டுமென்றாமையாலும், இந்நாள்வரையும் வினைமுற்றுப் பெயரென்பது ஒருவரும் வழங்காமையாலும் என்னலாகாதென்க. நப்போலியர் கூறினாலென்னெனின், "கங்கையாடி, ஊருர்,தேரோட்டி என்பவற்றில் முறையேவினைமுதற் பொருண்மை, செயப்படுபொருண்மை, கருவிப்பொருண்மையாகிய பெயர்விகுதியென்றமைல் அவர்கூறியபடி வினைமுற்றுப்பெயரினீறு இகரமாயினவென்ன உடன்படின் என்னலாமெ அவர்கூறியதும் பிறர்மதமென்க. (௩௯)

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான் - முந்தி

வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது.

(இ - ள்.) பைந்தெரியல் - பசுமையாகியமலர்மாலை யணிந்த, வேல்வேந்தன் - வேலைத்தாங்கிய வீமசேனனுடைய, பாவைபால் - புத்திரியாகிய தமயந்தியினிடத்து, போயின - சென்ற, தன்சிந்தைகெடுத்து - தன்சிந்தையை யிழந்து, அதனைத் தேடுவான் - அதைத்தேடும்படி, முந்திவருவான்போல - முற்பட்டுவருபவனைப்போல, தேர்மேல்வருவானை - தேரின்மேலே வருகின்றானனை, பெருவானில் - பெருமையாகிய சுவர்க்கத்திலுள்ள, தேவர்பெரிதுகண்டார் - (இந்திரன்முதலிய) தேவர்கள் மிகுதியாகக்கண்டார்கள். எ - று.

மாலைக்குப் பசுமையாவது ஈரம்நீங்காமை. தேடுவான் - வான்விகுதிக் காரியப்பொருட்டாகிய எதிர்காலவினையெச்சம். வினைமுற்று வினையெச்சமானதெனக்கொண்டு, தேடுவானாகி என உரைத்தலுமாம். முந்தி பண்புப்பெயரடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம், முந்து பகுதி, உகரத்தின் திரிபாகிய இ விகுதி, உகரக்கேடு சந்தி; பிந்தியென வினையெச்சமுண்டோ எனின், இது கிராமியமாவதன்றி, உயர்ந்தோர்நூலுள் அருகியும் வராமையால் அதுகுற்றமென்க. பெரிது வினையெச்சக்குறிப்பு. (எச)

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவற் றொழிலுக் கிசையென்றான் - ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து.

(இ - ள்.) காவல் - (உயிர்களுக்கு) காவலாகுதலையுடை குடைவேந்தை - குடையையுடைய நளராசனை, விண்ணவர்கோன் - தேவர்களரசன், கண்ணுற்று - கண்டு, ஏவற்றொழிலுக்கு - (எங்களால்) ஏவப்படுதலாகிய தொழிலுக்கு, இசைய என்றான் - உடன்படென்று கேட்டுக்கொண்டனன், மன்னவனும் - அரசனும், அதனை - இந்திரன்சொல்லியதை, இன்

னது என - இப்படிப்பட்டதென்று, மனத்தினால் - தன்மனத்தில், ஓராது - ஆராய்ந்து துணியாமல், இசைந்து - (இசைவேனென்று) வாயாற்சொல்லி, ஏவற்கு - அத்தொழிலுக்கு நேர்ந்தான் - உடன்பட்டான். எ - று.

மனத்தினால் உருபுமயக்கம். ஏவற்றொழில் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர்; இங்ஙனமன்றி, ஏவப்படுந் தொழிலைச் செய்தற்கு என உரைப்பின், செயப்படுபொருளின்கண் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடரெனினுமொக்கும். உம்மை ஒருபுடையிறந்ததுதழீஇய எச்சவும்மை. இன்னது இடைச்சொலடியாகப் பிறந்த குறிப்புமுற்று; இன்பகுதி, ன் சந்தி, அசாரியை, து ஒன்றன்படர்க்கை வினைமுற்றுவிகுதி; இன்ன எனப்பெயரெச்சத்திலும் இன் என-னகரம் நித்தியமாய் வருதலால் இ என்பது பகுதியன்று. ஓராது எதிர்மறைவினையெச்சம்; ஓர் பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, அனைத்துமொருபகுதி, த் எழுத்துப்பேறு, உ வினையெச்சவிகுதி. கண்ணுற்று ஒரு சொல்லின் தன்மையதாகிய இறந்தகாலவினையெச்சம். (எ௫)

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன் - மங்கைபால்
தூதாக வென்றானத் தோகையைத்தன் னாகத்தால்
கோதாக வென்றானக் கோ.

(இ - ள்.) செம்கண் - சிவந்தகண்களையுடைய, மதயானை, மதயானையையும், தேர்வேந்தே - தேரையுமுடைய அரசனே, தேன்மாலை - மணமமைந்த மாலையை, எங்களில் சூட்ட - எங்களில் (ஒருவருக்கு) சூட்டும்படி, இயல்வீமன் மங்கைபால் - நற்குணமுள்ள வீமராசனது புத்திரியினிடத்து, தூது ... என்றான் - தூதுவனாகக்கடவை யென்று (இந்திரன்) ... சொல்லினான், அக்கோ - அச்சொல்லைக்கேட்ட நளராசன் ... த்தோகையை - தன்னுயிராகக் கருதியிருந்த தமயந்தியை, ... ன் ஆகத்தால் - தன்மனத்தால், கோதாக - கோதுபோல ... வன்றான் - வெற்றிகொண்டான். எ - று.

தமயந்தியைக் கோதாகவென்றதாவது.—அவளைத் தன் உயிர்போலக் கருதிசெய்த காதலை ஒழித்தல்; கோதாகவென்றானென்பதை கோதாக என்றானெனப்பிரித்து, கோது போல ஆகக்கடவளென்று கருதினானெனினுமமையும். ஆகம் இடவாகுபெயர். ஆக இரண்டனுள் முன்னது வியங்கோள்வினை; பின்னதுமுறையே உவமவுருபாகிய செயவெனெச்சமும், மேலைவினைமுற்றுமாம். தோகை கலாபம்; அது மயிலுக்குச் சினையாகுபெயர்; அது பெண்ணுக்கு உவமையாகுபெயர். கோது சாரம்நீக்கியபொருள்; அதுபோலக் கருதலாவது அவளுடைய அழகுமுதலியவற்றையும், தன்மேல் கொண்ட காதலையும் மதியாமை. (௭௬)

தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும் - பாவில்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவின்
நிழல்போலுந் தண்குடையா னெஞ்சு.

(இ - ள்.) பூவின் - பூமியிலுள்ளோர்க்கு, நிழல் - நிழலைத் தருகின்ற, தண்குடையான் நெஞ்சு - தண்மையாகிய குடையையுடைய நளனது மனம், தேவர்பணி - தேவர்களுடைய கட்டளையை, தலைமேல் - தலைமேல் தாங்கி, செல்லும் - போகும், ஒருகால் - ஒருமுறை, திரிந்து - மாறி, மேவும் - (தன்னால்) விரும்பப்படும், இளங்கன்னிபால் - இளங்கன்னியாகிய தமயந்தியினிடம், மீண்டு ஏகும் - மீளச்செல்லும், பாவில் - பாவினிடத்தில், குழல்போல - நெய்குழல்போல, நின்று - (அங்கங்கு) நின்று, உழலும் - திரிகின்ற, கொள்கைத்தே - செய்கையையுடையதே. எ - று.

தலைமேலென்பதனீற்றில் தாங்கியென்னுஞ்சொல் எஞ்சி நின்றது. பூ, நெஞ்சு இடவாகு பெயர். தலைமேல் தாங்குதலாவது சிறப்பாக ஏற்றல். மீண்டு இறந்தகால வினையெச்சம்; மீள் பகுதி, ட் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, ளகரம் டகரமாதல் சந்தி, அது ணகரமாதல் மெலித்தல்; இது மீள என்பதன் திரிபு. பணி முதனிலைத்தொ

ழிற் பெயர்; செயப்படுபொருண்மை விகுதியாகிய ஐகாரம் புணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயரெனினும் பொருந்தும். அங்கங்கென்றது தேவர்களுடைய கட்டளையையும், தமயந்தியையும். ஏ இரக்கப்பொருளது. போலும் அசைச்சொல். உடையானது தன்மையைக் குடையின்மே லேற்றிக் கூறியது ஓர்மரபு வழுவமைதி. (எஎ)

ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரில் - காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
அடக்குமா றுள்ளத் தவன்.

(இ - ள்.) காமநீர் ஆழி-ஆசையாகிய நீர்வளமுள்ள கடலை, அடக்கும் ஆறு - (பெருகாமல்) அடங்கச் செய்யும்படி, உள்ளத்தவன் - ஊக்கமுடைய நளன், தேவர்கோனே - தேவராசனே, ஆவது - (உங்களுக்கு) வேண்டியதை, உரைத்தாய் - சொல்லினாய், அதுவே - அவ்வேவலிலேயே, தலைநின்றேன் - சிறப்பாக நின்றேன், அத்திருநகரில் - அந்த அழகிய நகரத்திலுள்ள, காவல்-காவலாளர்களை, கடக்கும் ஆறு-கடந்து செல்லும் விதம், என் என்றான்-யாதென்று கேட்டான். எ-று.

ஆவது ஒன்றன்படர்க்கை எதிர்காலவினையாலணையும்பெயர். அதுவே யென்பதில் ஏழாம்வேற்றுமையுருபு தொக்குத் தல். ஏ பிரிநிலை; இதனால் அவளிடத்து விருப்பங்கொண்டு செல்லுதலொழிந்தே னென்னும் பொருள் போந்தது. தலைநின்றேனென்பது ஒருசொல்லின் தன்மையது. காவல் தன்னைச் செய்பவருக்காதலால் காரியவாகுபெயர்; தொழிலாகு பெயருமாம். உள்ளத்தவன் ஈறுதிரிந்த குறிப்பு வினையாலணையும் பெயர். (எஅ)

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான் - யாருமனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணைக் காரிளைப் பார்க்க

(இ - ள்.) வார் - நீண்ட, வெம்சிலை ஒழிய - கொடுமை யாகிய வில்லினாலல்லாமல், வச்சிரத்தால் - வச்சிராயுதத்தால், மால்வரையை - பெரியமலைகளை, போர் - போர்செய்தற்கு ரிய, வெம் சிறகு அறுத்த - கொடுமையாகிய சிறகறுத்த, பொ ன்தோளான் - அழகிய தோளையுடைய இந்திரன், கார்வண் டின் - கருமையாகிய வண்டுகளினது, பாண்நாறும் - இசை தோன்றுகின்ற, தாராளைப்பார்த்து - மாலையணிந்த நளனை ப்பார்த்து, உன்னையாரும் காணார் - உன்னை எவர்களும் கா ணார்கள், போய் அவளைக்காண் - நீபோய் அவளைக் காண், என்றான் - என்றுசொல்லினான். எ - று.

வார்வெஞ்சிலை என்பதில் சிலை முதனிலைத்தொழிற்பெய ரெனக்கொண்டு, நீண்ட கொடுமையாகிய ஓசை நீங்கும்படி எனவுரைப்பினும் பொருந்தும்; ஓசையாவது மலைகள் அசு ரருக்கும் அரக்கருக்கும் இடங்கொடுத்துப் பறந்துவிழுவதி னால் மக்கள் செய்யும் கூக்குரல்; இவ்வாறன்றிச் சிலையென் பதைக் கருவியாகுபெயரெனக்கொண்டு, நீண்ட கொடுமை யாகிய மைந்நாகமலையென உரைத்தலுமாம். போர்வெஞ்சிற கென்பதற்குப்போர்த்தவெஞ்சிறகென உரைத்தலுமாம். யா ர்யாவரென்பதன் மரூஉ. யாருமுனைக் காணாரென்றது எவ ர்களுக்கும்நீதோன்றாயென்பதை. மற்று அசை. (௭௬)

இசைமுகந்த வாயு மியல்தெரிந்த நாவும்
திசைமுகந்தா லன்ன தெருவும் - வசையிறந்த
பொன்னோடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னாடர் கோமா னகர்.

(இ - ள்.) போர் - போரில்சிறந்த, விதர்ப்ப நன்னாடர் - விதர்ப்பமாகிய நல்ல தேசத்தாருக்கு, கோமான் நகர் - அர சனுடைய குண்டினபுரம், (தன்னிலுள்ள) இசைமுகந்தவா யும் - கீர்த்தியைமுற்றும்பெற்ற வாயிலாலும், இயல்தெரி ந்த நாவும் - (சிற்பநூலில் சொல்லிய) இலக்கணந்தோன்றிய [illegible]த்திய பிரதேசத்தாலும், திசைமுகந்தால் அன்ன - திக்குகளை

த்தன்னுளடக்கினால் போன்ற, தெருவும் - பெருந்தெருக்களி னும், வசை இறந்த - நிந்தையில்லாத, பெரன்னாடு - சுவர் க்கம், போந்து இருந்தால் போன்றது - வந்து தங்கியதுபோல (நளனுக்கு) காணப்பட்டது. எ - று.

போந்து இறந்த காலவினையெச்சம்; புகு என்பதன் மரூஉ ஆகிய போ பகுதி, த் சந்தி, த் இறந்த கால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, சந்தித் தகரம் நகரமானது மெலித்தல்; இயற்கையாகிய போ என்பதுபோய் எனவும், குச்சாரியை பெற்றுப்போகி எனவும் வரும். முகந்த இறந்த காலவினை யெசசம்; முகபகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, சந்தித் தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம். அன்ன இடைச்சொலடியாகப் பிறந்த செயப்படு பொருள் குன்றாத குறிப்புப் பெயரெச்சம்; அன்பகுதி, ன் சந்தி, அ பெயரெசசவிகுதி; இதற்குச் செயப்படுபொருள் முகந்தாலென்னும் வினையெசசத்திலுள்ள முகத்தல். முகத்தல் மொள்ளல். (௮௰)

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மில்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது.

(இ - ள்.) ஆங்கு - அந்நகரத்துக் கன்னிகாமாடத்தில், மது நோக்கும் - (வண்டுகள்) தேனைக் கருதிச்செல்லுகின்ற, தா ரானும் - மலர்மாலையணிந்த நளனும், வாள்நுதலும் - ஒளித ங்கிய நெற்றியையுடைய தமயந்தியும், தம்மில் - தங்களில, பொதுநோக்கு - பொதுவாகிய பார்வையாக, எதிர் நோக் கும்போது - எதிரில் பார்த்தகாலத்தில், தேன்குவளை தன் னிலே - (தமயந்தியின் கண்களாகிய) மணமுள்ள குவளைமல ர்களிலே, செந்தாமரைமலர - (நளனது கண்களாகிய) செந் தாமரைமலர்கள் மலர்ந்ததனால், பூகுவளை - அவ்வழகிய குவ

ளைமலர்கள், தாமரைக்கே - (மேற்சொல்லிய) செந்தாமரை மலர்களிலே, பூத்தது - மலர்ந்தன, எ-று.

பொதுநோக்கு விருப்பத்தாலன்றி இயற்கையாய் நோக்கும்பார்வை. மூன்றுள்ள ஏ இரண்டும் பிரிநிலை. பின்னது ஈற்றசை. பூங்குவளை சாதியொருமையாதலால் பூத்ததென்னும் ஒருமை வினைகொண்டது; தன் என்சாரியை ஒருமைப்பெயர்க்குரியதாதலால் தேங்குவளையும் அது. தாமரைக்கென்னும் நான்கனுருபு ஏழாவதனிடப்பொருளது. வாளுதல் பண்புத்தொகைப புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணபபெயர். நோக்கு முதனிலைத்தொழிற்பெயர். (அக)

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற விறந்ததே - பூண்டதோர்
அறபின்றாழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்றாழ வீழ்த்த கதவு.

(இ - ள்.) தாழ்கூந்தலாள் - நீண்டகூந்தலையுடைய தமயந்தியானவள், வேட்கை - விருப்பத்தை, அகத்து - உள்ளமாகிய (அறையில்), அடக்கி - வெளிப்படாமல்வைத்து, கற்பின்றாழ் - கற்பாகிய தாழக்கோலை, வீழ்த்த - பூட்டிய, கதவு - (நிறையாகிய) கதவு, நீண்டகமலத்தை - (நளன் கண்களாகிய) நெடியதாமரை மலர்களை, நீலக்கடை - நீலோற்பல மலர்போன்ற (தன்கண்களினது) கடைப்பார்வையானது, சென்று - போய், தீண்டும்அளவில் - தீண்டும்போதே, பூண்டது - தான் முன்கொண்டதாகிய, ஓர் அன்பின் - ஒப்பற்ற அன்பினாலே, இறந்தது - திறந்துகொண்டது. எ-று.

நிறை புறத்தேசெல்லாமல் மனத்தை நிறுத்துங்குணம். அற்பினென்பதில் பெயரின்னகரம் றகரமானது வலித்தல், உருபின் றகரம் னகரமானதுமெலித்தல், இவ்விகாரங்கள் எதுகைத்தொடைநோக்கிவந்தன. கற்பின்றாழ் உருவகமாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகையென்க; இன்சாரியை. வீழ்த்தபிறவினையாகிய இறந்தகாலவினையெச்சம்; வீழ என்

ப்தன்மரூஉ ஆகிய வீழ்பகுதி; இது தன்வினை பிறவினைக ளுக்குப்பொதுவாயினும் இங்குப் பிறவினையாய் நின்றது; தீ ன்வினை வீழ்ந்தஎன்பது. வேட்கை தொழிற்பெயர்; வேள் ள்பகுதி, கை புடைபெயர்ச்சிவிகுதி, ளகரம் டகரமாதல்சந்தி; இம்முதனிலையடியாக, வேட்ட, வேட்டு, வேட்டானென னவினை விகற்பங்கள்பிறக்கும். நீலம் கண்ணுக்கு உருவகமாதலால் நீலக்கடை சினைத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். நீலம், கடை பண்பாகுபெயர். அஉ.

உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொடியாள்
நெஞ்சு தடவு நெடுங்கண்கள்-விஞ்சவே
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலராள்
ஆண்டதோண் மன்ன னழகு.

(இ - ள்.) நெஞ்சுதடவு-(நளனுடைய) மார்பைப்பரிசிக்கின்ற, ஒள்தொடியாள் - ஒளியுள்ளவளையலணிந்த தமயந்தியினது, நெடுகண்கள் - நெடியகண்கள், அங்ஙனே - அம்மார்பினிடத்தே, விஞ்சவே நீண்டதோ - மிகுதியாகவே பதிந்தனவோ, (அல்லதாஉல்) நீள்மலராள்-பெரியதாமரை மலரிலுள்ள திருமகள், ஆண்ட - இடமாகச்செய்து கொண்ட, தோள் - தோள்களையுடைய, மன்னன் அழகு-அரசனுடைய அழகாகிய கடல், இங்ஙன் - இங்கே, உய்ஞ்சு - தப்பி, கரைஏற ஒட்டுங்கொல்-கரையேறுதற்கு இசையுமோ. எ-று.

நளனுடையமார்பை இடைவிடாது பார்த்துக்கொண்டேயிருந்தன என்பதை உணர்த்துதற்கு, அவளுடையகண்கள் அவன்மார்பில பதிந்தனவோ? அவனுடையகட்டழகின் கடல் அவளுடைய கண்களைக்கரையேற விடுக்குமோஎனத்தாம் ஐயங்கொண்டன ராகக்கூறினர். நளனுடையபேரழகை வியந்துகூறுகினறமையால் இங்ஙனென்னுஞ் சுட்டுப்பெயர் நளன்மேலது. நீண்டதுபன்மையிலொருமைவந்தபால் வழுவமைதி. உய்ஞ்சு இறந்தகாலவினையெச்சம்; உய்பகுதி, த் சந்தி, ஞ்

இறந்தகால இடைநிலை, உவினையெச்சவிகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம்; நகரத்துக்கு ஞகாரமும், தகரத்துக்குச் சகரமும் போலியாகவந்தன; மஞ்சன், அஞ்சுஎன்பன வற்றிலுங்காண்க. அங்ஙன், இங்ஙன் என்பனகடைக்குறை. கொல், ஓ ஐயப்பொருளன. ஏ தேற்றம். (௪௩)

* மன்னாகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னாணும் புக்கொளிப்ப புல்லுவனென் றுன்னா
எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து
தடுத்ததே நாணந் தறி.

(இ - ள்.) வார்அணிந்த - கச்சைஅழகுபெறச்செய்த, மெல்முலையும் - இளமுலைகளும், பொன்நாணும் - (தரித்துள்ள) பொன்னூலும், மன் ஆகத்துள் - அரசனுடையமார்பில், புக்கு - புகுந்து, அழுந்தி ஒளிப்ப - அழுந்திமறையும்படி, புல்லுவன் என்று - அணைவேனென்று, உன்னா - நினைத்து, எடுத்த - தான் கொண்ட, பேர் அன்பை - பேராசையாகிய யானையை, நாணந்தறி - நாணமாகியதறி, இடையேபுகுந்து - நடுவேபுகுந்து, தடுத்தது - தடுத்துவிட்டது. எ - று.

தறியென்றது யானையைத்தடுக்குமரமாகிய கணையத்தை. தமயந்தி நளனை அணையும்படி கொண்ட ஆசைப்பெருக்கம் நாணத்தால்ஒழிந்த தென்பதுகருத்து. இஃதுஏகதேச வுருவகம். தறி தொழிலடியாகப்பிறந்தபெயர்; தறிபகுதி, ஐசெயப்படுபொருண்மை விகுதி, புணர்ந்துகெட்டது. மென்மைஇளமை. ஒளிப்ப காரியப பொருட்டாகிய எதிர்காலச்செயவெனெச்சம்; ஒளிபகுதி, ப்சந்தி, பவிரித்தல்விகாரம், அஎதிர்காலவினையெச்சவிகுதி. (௪௪)

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ-தேவனோ
உள்ளவா சொல்லென்றா ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு.

(இ - ள்.) ஊசல் - ஊஞ்சலைப்போல அசைகின்ற, குழைமீது - குண்டலத்தின்மேல், வெள்ள - கூர்மையாயுள்ள, வாள்

நீர் - வாள்போன்றகண்ணினது தன்மையாகியகருமை, சோரவிட்டு - விழும்படிவிட்டு, (அதாவதுகடைக்கண்ணாற்பார்த்து) காவல்கடந்து - காவலைத்தாண்டி, எங்கள்கன்னிமாடம் - எங்களுடைய கன்னிமாடத்தில், புகுந்தாய் - உள்நுழைந்தாய் யாவனோ - நீ எத்தன்மையனோ, விஞ்சைக்கு இறைவனோ - மந்திரங்களுக்குத் தலைவனோ, தேவனோ - தேவன்தானோ, உள்ள ஆறுசொல் என்றாள் - உள்ளபடி சொல்லென்று கேட்டனள். எ - று.

ஈாணத்தால் கடைக்கண்ணால்பார்த்து விளைவுவாளாகி, தன்தோழியர்களையும் தன்னோடுபடுத்தி எங்களென்றாள். ஓமுன்றனுள் முன்னது உயர்வு சிறப்பிலும், மற்றஇரண்டும் உயர்வு சிறப்போடு வினாவிலும்வந்தன. விஞ்சைவடமொழிச்சிதைவு. ஆறென்பதில் றுதொகுத்தல். வெள்ளபண்புப்பெயரடியாகப் பிறந்தகுறிப்புப்பெயரெச்சம்; வெண்மையென்னும் பண்புப்பெயர், அகரப்பெயரெச்ச விகுதிப்புணர்ச்சியில், "ஈறுபோதல்" என்பதனால் மையீறுகெட்டு, தனிக்குறில் முன் ஒற்றுஇரட்டி முடிந்தது; வெண்மை வெள்ளையென்பதிற்போலக் கூர்மையையுணர்த்திற்று. இறைவனென்பதில் வகரம்பெயரிடைநிலை. காவல்கடந்து நிலைமொழி அஃறிணைப்பெயராதலாலும், இரண்டாம்வேற்றுமைப் புணர்ச்சியாதலாலும், நன் - மெய், கூ, உச - இன்படி, லகரந்திரியாமல், உருபு - கூ, கஈ - இன்படி விகாரத்தியல்பாயிற்று. முன்பொதுமையாக யாவனென்றும், காவல்கடப்பதற்குச் சாதனம் விஞ்சையாதலால் விஞ்சைக்கிறைவனென்றும், அதனோடு பேரழகையும் உடைமைபற்றி, தேவனென்றும் முறையே றவப்பட்டான். (அரு)

தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று-வாராத
பொன்னாடா ரேவலுடன் போந்தவா சொல்லித்தன்
னன்னாடுஞ் சொன்னா னவன்.

(இ - ள்.) தீராத - தணியாத, காமத்தழலை - காமத்தீயை, தன்செம்மைஎன்றும் - தன்நடுநிலைமையென்று சொல்லப்படும், நீரால் அவித்துக்கொடுநின்று - நீரினாலவித்துக்கொண்டுநின்று, வாராத - வருதலருமையான, பொன்னாடர் - சுவர்க்கலோகத்தாருடைய, ஏவலுடன் - ஏவியசெய்தியையுடையனாகி, போந்தஆறுசொல்லி - வந்தவிதத்தைச்சொல்லி, தன்நல்நாடும் - தனதுநல்லநாட்டையும், சொன்னான் நளன் - சொல்லினன்நளராசன். எ - று.

செம்மை இங்கு நடுநிலைமைக் காயிற்று; அதாவது - தேவர்களுக்குத்தூதுவனாக அமைந்து, தூதுசொல்லவந்தகாலத்தில் இவளைவிரும்பிநிற்றல் முறைமையன்றென மனத்தைநிறுத்தல். "வாராவிருந்தான்" என்பதுபோலவாராத என்பதில் எதிர்மறைஆ அருமை குறித்துநின்றது. உடனென்னும் மூன்றுவதன் சொல்லுருபு விசேடணப்பொருளது. ஏவல் தொழிலாகுபெயர். உம்மை, இறந்ததுதழீஇயஎச்சவும்மை.

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை-மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து.

(இ - ள்.) தொடையில் - (தனதுதோளின்) பூமாலையிலுள்ள, தேன் - தேனை, தும்பிக்கே - வண்டுகளுக்கே, ஊட்டுவான் - உண்பிக்கின்ற நளராசன், எல்லாம் உரைத்து - (சொல்லவேண்டிய) யாவற்றையும் சொல்லி, என் உரையை - என்னுடையசொல்லை, யாதுஎன்று - எத்தன்மையதென்று, இகழாது - அவமதிக்காமல், இமையவர் - தேவர்கள், வாழ்பொன் உலகம் - வாழ்கின்ற சுவர்க்கத்தை, காக்கும்புரவலனை - ஆளுகின்ற அரசனாகிய இந்திரனை, மெல்மாலை சூட்டுவாய்என்றான் - மெல்லியமலர்மாலை சூட்டென்று சொல்லினான். எ - று.

யமன், அக்கினி, வருணன்மூவரையு மொழித்து, இந்திர
எடுத்துக்கூறியது, இவன் தன்னைத் தூதுக்கிசையும்படி

கேட்டுக் கொண்டவனாதலாலும், தேவர்களுக்கு அரசனாதலாலும், இவனை இவள் விரும்பல் செய்யினுஞ்செய்யுமென்றெண்ணினானாதலாலுமென்க. யாது வினாவடியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைமுற்று. மாலையை என இரண்டாவதை விரிக்கின், புரவலனை யென்னும் இரண்டாவதைநான்காவதாகத்திரிக்க. ஏ பிரிநிலை. சூட்டுவாய் பிறவினையாகிய ஏவலொருமைவினை; சூடென்னுந்தன்வினைப்பகுதி, தன்னொற்றிரட்டி நின்றசூட்டு பகுதி, வ் உயிர்வரின் உக்குறள்மெய்விட்டுக் கெடுமென்னாமல் ஓடுமென்றமையால் உகரங்கெடாமல், "இஈ ஐவழி" என்னும் பொதுவிதிப்படிவந்ததாகாமல், உடம்படுமெய்யல்லாததாயவந்த வ் சந்தி, ஆய் ஏவலொருமை எதிர்காலவிகுதி; சூட்டாயெனவும்வரும். ஊட்டுவான் பிறவினையாகிய வினையாலணையும்பெயர்; உண்பகுதி, டு பிறவினைப்படுத்தும் விகுதி, ஆதிநீளலும் ணகரம் டகரமாதலும் சந்தி; இது இலக்கணை இமையவா மங்கலவழக்கு. (௮௭)

இயமரநின் றார்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்னா வகுத்த - சுயம்வரந்தான்
நின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
தன்பொருட்டா னைவா டளர்ந்து.

(இ - ள்.) நீள்குடையான் தன்பொருட்டு - வளர்கின்ற குடையையுடைய நளனிமித்தம், நைவாள் - வருந்துமியல்பினளாகிய தமயந்தி, தளர்ந்து - மனந்தளர்ந்து, வயம்மரு - வெற்றியமைந்த, தோள்மன்னா - தோள்களையுடைய அரசனே இயம் - தோற்கருவிமுதலியவாத்தியங்களும், மரம் - ஊதுகொம்பும், நின்று ஆர்ப்ப - நிலைத்து ஆரவாரிக்கவும், வளை இனம் — சங்கின்கூட்டம், நின்று ஏங்க - நிலைத்தொலிக்கவும், வகுத்த சுயம்வரந்தான் - செய்துள்ள சுயம்வரமானது நின்பொருட்டேதான் என்று-உன்னிமித்தமேயென்று, நினைக என்றாள் - நினைக்கக் கடவாயென்று சொல்லினாள். எ - று.

ஆலிரண்டும் அசை. தேற்றப்பொருளதாகிய தானென்னும் இடைச்சொல்லை நின்பொருட்டென்பதனோடு கூட்

டுகெ. வளர்கின்ற குடையென்றது இவனதுவனரும் ஆளு கையை. மரம் கருவியாகுபெயர்; இத்தன்மைத் சாரமின்றமை யால் இது ஊதுகொம்புக்காயிற்று. வளையினமென்னும் ஒன்றன் கூட்டத்தற்கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற் றுமைத் தொகை நிலைத்தொடர் பின்முன்னாகமாறி நின் றது. மருதோள் வினைத்தொகைநிலைத்தொடர். (அஅ)

போதரிக்கண் மாதரான் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே - சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்றா ளெடுத்து.

(இ - ள்.) போது - தாமரைமலர்போன்ற, அரி - செவ் வரிபடர்ந்த, கண்மாதரான் - கண்களையுடைய தமயந்தி, சோதி - ஒளியமைந்த, செழுதரளம் - செழித்த முத்துகளா ல் சமைத்த, வெள்குடையாய் - வெண்குடையையுடையவ ரசனே, பொன்மாலை சூட்டத்தான் - அழகிய மாலையைச்சூ ட்டுதற்கே, ஆதரித்தார்தம்மோடு - விரும்பிய அரசர்களோடு, தேவர்களும் நீயும் - அந்நான்கு தேவர்களும் நீயும், அவை யகத்து - சபையினிடத்து, எழுந்தருள்க எடுத்து என்றாள் - எழுந்தருளக் கடவீரென்று எடுத்துசொல்லினாள். எ - று.

மாதரான் காரியவாகுபெயராய் நின்றமாது அர்போலிபெ ற்று, மாதவொன்றாகி, ஆளென்னும் பகுதிப்பொருள் விகுதி பெற்றது. மாதென்பதே பெண்ணொருமையை யுணர்த்த லால் ஆள் பகுதிப்பொருள் விகுதியாயிற்று. தான் தேற்ற ப்பொருளது. ஏ அசை. ஆதரித்தார் இறந்தகால வினையா லணையும் பெயர். (அகூ)

வானவர்கோ னேவல் வழிச்சென்று வானுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே - தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வசிரரயு தற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து

(இ - ள்.) தேன்முரலும் - பெண்வண்டுகள் ஒலிக்கின்ற வள்தார் - வளமாகிய மலர்மாலையணிந்த, நளன் - நளராசன்,

வானவர்கோன் - தேவராசனாகிய இந்திரனது, ஏவல்வழி - ஏவலின்படி, சென்று - போய், வாள்நுதலை, ஒளியாகியநெற்றியையுடைய தமயந்தியை, தான் அணுகி - தான்சேர்ந்து, மீண்டபடி - திரும்பினவிதத்தை, சாற்ற - சொல்லுதற்கு, போந்து - வந்து, கண்டார் - (தேவர்கள்) கண்டவர்களாகி, உவப்பக்களிக்கும்படி, கலந்து - சேர்ந்து, வசிராயுதன் தொழுதான் - வச்சிராயுதத்தையுடைய இந்திரனைப்பணிந்தான், எ-று.

தானணுகியென்பதைத் தான்நணுகியெனவும பிரிக்கலாம். கண்டாரென்னும் வினைமுற்று வினையெச்சமானது. இவ்வினைக்குத் தேவர்கள்தோன்றா எழுவாய். நளன்தமயந்தியினிடத்துப்பேசியதை இவன்சொல்லாமலே இன்னதென உணரவல்லவர்களாதலால் கண்டுவப்பவர்களாயினார்கள். வாணுதல் பண்புத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக்காரணப்பெயர். கோனென்பதில் னகரஞ்சாரியை. வசிராயுதற்றொழுதான் என்பது நிலைமொழி உயர்திணைப் பெயராதலாலும், இது இரண்டாம்வேற்றுமைத் தொகை நிலைத் தொடராதலாலும், நன் - உயிர் - ௬, அ - இன்படி, நிலைமொழியீற்று னகரம் இயல்பாகாமல், உருபு - ௬, ௯ - இன்படி இயல்பின் விகாரமாயிற்று; வருமொழித்தகரந் திரிந்ததற்கு, மெய் - ௬, ௩௪. இஙகுஇரண்டனுருபுதொகுதல் தகுதியாயிற்று. ஏ ஈற்றசை. (௯0)

விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த-பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு.

(இ - ள்.) வீமன் - வீமராசனுடைய, திருமகள்பால் - செல்வப்புத்திரியினிடத்தில், விண்ணவர்தம் - தேவர்களுடைய, ஏவலுடன் - ஏவலையுடையானாகி, நண்ணு - சேர்ந்த, புகழ்நளனும் - புகழையுடைய நளராசனும், நன்கு உரைத்த (தேவர் செய்தியைத்தான்) நன்றாகப்பேசிய, பெண்அணங்கின்

ன் - பெண்களுக்குள் தெய்வத்தை ஒத்ததமயந்தியினது, வல்மொழியும் - உறுதிசொல்லையும், தேவர்மனமகிழ - தேவர்கள் மனம் மகிழும்படி, தான்மீண்டும்மொழிந்த - தான்மீளவுஞ்சொல்லிய, மெல்மொழியும் - மெல்லியசொல்லையும், சென்று - நெருங்கி, உரைத்தான் - சொல்லினான். எ-று.

திருமகள்பால் நண்ணுபுகழாவது தன்னால்பிறர்க்குப் பேறு வருவதாயின தன் பேற்றையெண்ணுதாளென்னும்புகழ். நண்ணுமென்றவும்மை உயர்வுசிறப்பு. பெண் சாதியொருமை. உரைத்தனன்னும் பெயரெச்சம் அணங்கென்னும் நிலப்பெயர் கொண்டது; பேசியதுஅவளிடத்தாதலால், அவள்மனமினகுமபடி பேசியமொழியாதலால் அது மெனமொழியாயிற்று. மீண்டு மீளுஎன்பதன்திரிபு; இதனீற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தலாயிற்று. தேவர்மனமகிழ்தல இவனது மெய்ந்நிலைமையைக்கருதி.

அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே - சங்கையறப
பெறறு யெனவருண னாகண் டலன்றருமன
மறறோரு மீந்தார் வரம.

(இ - ள்.) வருணன் - வருணனும், ஆகண்டலன் - இந்திரனும், தருமன் - யமனும், மற்றோரும் - திக்கடவுளரும், அங்கி - நெருப்பையும், அமுதம் - அன்னத்தையும், நீர் - நீரையும், அம்பூ - அழகியமலர்மாலையையும், அணி ஆடை - அழகியவஸ்திரத்தையும், எங்கு - எவ்விடத்தில், நீவேண்டினை - நீவிரும்பினாய், அவ்விடத்தே - அவ்விடத்திலே, சங்கைஅற - சந்தேகமில்லாமல, பெற்றாய்என - பெற்றாயென்று, வரம்ஈந்தார் - வரத்தைக கொடுத்தார். எ-று,

ஸ்ரீமகாபாரதத்தில வருணன் நீரையும், நல்ல பூமாலையையும் பெறுவாயென்றும், இந்திரன் நீ செய்யும் யாகத்தில் என்னுக்குத் தோன்றும்படி வந்து, அவிபெறுவேனென்றும், உன் வாழ்நாள் முடிவில் உத்தமபதவியை அடைவாய்

யென்றும், யமன் மனம் தருமத்தில் நிலைத்திருப்பாயெ-
றும், வேண்டியவிடத்து அன்னரசம் பெறுவாயென்றும்
அக்கினிதேவன் விரும்பிய இடத்தில் நெருப்பைப் பெறுவா
யென்றும், சோதிலோகம் பெறுவாயென்றும் வரங்கொடு-
தனர்களென்று உள்ளதென உபயகவிகள் கூறுவர். தம்மு
டைய சொல் தவறாமல் பலித்தேவிடுமென்னும் துணிவினை
பெற்றாயென்றனர்; இது எதிர்காலம் இறந்தகாலமாகவும்,
காலவழுவமைதி. இந்திரன் முதலானோர்க்கும் யாகத்தில்
சொரிந்த அவியைச் சுத்தஞ்செய்துகொடுக்கும் உயர்வுகரு
தித் தீக்கடவுளை அவர்களோடு கூட்டாமல் மற்றோருமென்
றனர்; மற்றென்னும் பகுதி பிறிதென்னும் பொருளது.கூஉ

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடும் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்-மங்கை
வயமருவு கின்ற மணக்கா வலர்க்குச்
சயம்வரந்தான் கண்டதோர் சார்பு.

(இ-ள்.) அங்கு- அவ்விடத்தில்,அவர்கள் - அத்தேவர்கள்
வேண்டும்- தான் விரும்பத்தகும், வரம்கொடுக்கப்- பெற்று-
வரத்தைக் கொடுக்கப்பெற்று, மேல்- அதன்பின்பு, மங்கை
வயம்- தமயந்தியினது வசத்தில், மருவுகின்ற - தங்குகின்ற, ம
ணக்காவலர்க்கு - மனத்தையுடைய அரசர்கள் வந்துசேர்வத
ற்கு, சயம்வரம்தான் - சுயம்வரத்தை, கண்டது - தோற்றுவி
த்ததாகிய, ஓர்சார்பு - ஒப்பற்றஇடத்தில், அவர்கள் தங்க
ளொடும் - அத்தேவர்களோடு, தார்வேந்தன்- பூமாலையணி
ந்த நளன், சார்ந்தனன் - சேர்ந்தான். எ-று.

மேல்மங்கை மேன்மையாகிய மங்கை யெனப்பொருள்
கொண்டு, பண்புத் தொகைநிலைத்தொடராக்கினும் பொரு
ந்தும். கண்டது பிறவினையாகிய அஃறிணை ஒன்றன்படர்க்
கை இறந்தகாலவினையா லணையும்பெயர்; இதில் பிவ்விகுதி
தொகுத்தல்; இதனோடு சார்பென்னும்தொழிலாகுபெயர்
இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராகப் பு

ணர்ந்தது. தான் அசை. இங்குக்காணல் தோற்றல், காண்பித்தல் தோற்றுவித்தல். பெற்று செய்தென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்; பெறுபகுதி, உ வினையெச்சவிகுதி பகுதிமுற்றிய லுகரமாதலால் தன்னொற்றிரட்டல் விரித்தல், உகரக்கேடு சந்தி. (௩௬)

தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால் - யாதும்
அயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து.

(இ - ள்.) தூதுவந்த - (தன்னிடத்து) தூதுவனாகவந்த, காதலனை - (தன்னால்) விரும்பப்பட்ட நளராசனை, சொல்லி - (சொல்லுதற் குரியவற்றை) சொல்லி, செல்லவிடுத்த - போம்படி விடுத்த, மாது - மாதாகிய தமயந்தி, வந்துபின் போன - (அவனோடு) வந்து (அவன்) பின்னே சென்ற, வல் நெஞ்சால் - வன்மையாகிய மனத்தினால், யாதும் - எதையும், அயிர்த்தாள் - சந்தேகித்தாள், உயிர்த்தாள் - பெருமூச்சுவிட்டாள், அணிவதனம் எல்லாம் - அழகிய முகமுழுமையும், வியர்த்தாள் - வெயர்த்தாள், வீழ்ந்து - (மெய்ம்மறந்து) விழுந்து, உரை உம் மறந்தாள் - பேச்சையுமறந்தாள், எ-று.

நெஞ்சுக்கு வன்மையாவது.—அன்னம் நளனைக்குறித்துச் சொல்லியகாலத்தில் தன்னையுடையாளைவிட்டு, நளனிடஞ்சென்று, அவன் வந்தபோது இவளிடம் வந்து, அவன் போனபோது அவனுடன் சென்றமை. யாதும் அயிர்த்ததாவது.— நளன் தன்னிடம் வந்ததும், தாமிருவரும் ஒருவரையொருவர் கண்டதும், ஒருவரோடொருவர் பேசியதும், கனவோ நனவோவென எண்ணல். யாதுமென்னும் உம்மை இழிவுசிறப்போடு முற்றுப்பொருளது. உரையென்பதனீற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். வதனமெல்லாம் ஒருமையில் பன்மைவந்த பால்வழுவமைதி; எல்லாமென்பது தனித்தனியாக எண்ணப்படும்பொருட் பன்மை

யையுணர்த்தும் பெயராய்த் திணையிடங்களுக்குப் பொது வாய்வருவது; இஃதுணராது இதனை உரிச்சொலென்பாரு ளராயின், பால்பகா அஃறிணைப் பெயராய்வராமையாலும், உரிச்சொல் திணையிடப்பொருளையுணர்த்தின் ஆகுபெய ரென்னல்வேண்டும்; அங்ஙனங் கூறுவாரின்மையாலும் உ ரிச்சொலெனல் பெருங்குற்றமென்க. (கூச)

உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய வேகின்றமென் றளிர்போல் - பிள்ளைமீன்
புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி

(இ - ள்.) பிள்ளைமீன்—சிறுமீன்களை, புள் - கொக்குப்ப றவைகள், அரிக்கும்-உண்ணுந்தொழிக்கின்ற, நாடன் . விதர்ப பராசனுடைய, திருமடந்தை - செல்வப்புத்திரி, பூவாளி மலரம்புகள், உள் - தன்னுள் (பாய்ந்து) அரிக்க - வருத்துத லால், உள்ளம்போய் - எண்ணம்நீங்கி, நாண்போய் - நாணம நீங்கி, உரைபோய் - பேசுதல்நீங்கி, வரி - செவ்வரிபடர்ந்த, நெடுகண் வெள்ளம்போய்-நெடியகண்ணீரிழந்து, வேகின்ற- (தீயில்விழுந்து) வேகின்ற, மெல்தளிர்போல - மென்மை யாகிய தளிரைப்போல, உயிர்சோர்ந்தாள் - உயிர்சசோர்வை யடைந்தாள். எ - று.

நினைப் பென்பதில்லாமையால் உடைசோர்தலையறியாம ல், பேசுதலொழிந்து, நாண்மறைந்தமையால் அழுதுகொ ண்டிருந்த செயல்நீங்கி, மெய்ம்மறந்துகிடந்தா ளென்பதுக ருத்து. ஈறுதொகுக்கப்பட்ட செயவெனெசச மாகியபோ லென்பது சோர்ந்தாளென்னும் வினைகொண்டது. உள்ள மென்பதில் அம்சாரியை; இதுஇடவாகுபெயர். வெள்பகு தி, ள் சந்தி, அம் பகுதிப்பொருள்விகுதி, இவ்வாறுமுடிந்து நின்ற வெள்ளமென்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய் நீரை யுணர்த்திற்று. அரித்தலென்பது வேண்டாதவற்றை யொழி த்து வேண்டியவற்றைப் பெறுதற்குச்செய்யுந்தொழில்.(கூரு)

பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனாலு மவ்வழியே-பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து.

(இ - ள்.) அணி - அழகிய, யாழின் ஓசைபோல - யாழின் இசையைப்போல, சொல்லாள் - பேசுதலையை யுடையதமயந்தி, பூவின்வாய் - பூவாலமைந்த, வாளி - அம்பு, புகுந்தவழியே - நுழைந்தவழியாகவே, என் ஆவியார் - என்னுயிர், போனாலும் - சென்றாலும், அவ்வழியே - உயிர்சென்றவழியாகவே, பாவியேன் ஆசைபோகாது என்று - ஆசைசெல்லாதென்று சொல்லி, உயிர்த்து - பெருமூச்சுவிட்டு, அழிந்தாள் - (அறிவு) அழிந்தாள். எ - று.

நளனை அடையப்பெறுமைக் காரணததால் உயிர்நீங்கினும் நான் அவன்மேற்கொண்ட ஆசை யொழியே னென்பது கருத்து. உடலினும் சிறந்ததாயிருத்தலேயன்றி, நளன்மேல் விருப்பங்கொள்ளும் பாக்கியமுமுடைமைபற்றி ஆவியார் என்றது திணைவழுவமைதி. உம்மை உயர்வு சிறப்பு. ஈறுதொகுத்தலாய நின்ற போலவென்னும் செயவென்பாய்பாட்டெதிர்காலவினையெச்சம் சொல்லாளென்னும் தொழிலடியாகப பிறந்த பெண்பாற் படர்க்கைப் பெயரின் பகுதியாகிய சொலலென்னும் முதனிலைத் தொழிற்பெயர்கொண்டது. ஏ இரண்டும் பிரிநிலை; பாவியேன் தன்மை யொருமைப்பெயர்; பாவியென்னும இருதிணை மூகக்கூற்றொருமைப் படர்க்கைப்பெயராகிய பாவி பகுதி; திணைபாற் பொதுமையையும், படர்க்கை யிடச்சிறப்பையும் நீக்கும்படி ஏன் விகுதி புணர்ந்தது, ய் சந்தி. தொண்டனேன், பாணரேம் என்பவற்றில் ஏன், ஏம் விகுதிகள் படர்க்கையிடச் சிறப்பை ஒழித்தல் காண்க. என்று என்னென்னும் இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம். (௯௬)

வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்-பையவே

செவ்வாய வன்றி றுணை யிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

(இ - ள்.) வையம் - பூமி, பகல் இழப்ப - பகற்பொழுதை இழக்கவும், வானம் - ஆகாயம், ஒளி இழப்ப - ஒளியை இழக்கவும், பொய்கையும்-தடாகங்களும், நீள் கழியும்-நீண்ட கழிகளும், புள் இழப்ப - பறவைகளை யிழக்கவும் செம்வாய - சிவந்தவாயுள்ள, அன்றில் - அன்றிற் பறவை, பைய - மெள்ள, துணை இழப்ப - சேவலையிழக்கவும், வெம்வாய - வெப்பம அமைந்த, விரிகதிரோன் - விரிந்த கிரணங்களையுடைய சூரியன், வெறபு - அஸ்தமயமலையில, சென்று அடைந்தான் - போய்ச்சேர்ந்தான். எ - று.

வையம் இழப்ப, வானம் இழப்ப, பொய்கையும் கழியுமிழப்ப, அன்றிலிழபப என்பது வினைச்செவ்வெண் ஆதலால் தொகையொடு முற்றும்மைபெறவில்லை. பையபண்படியாகப் பிறந்த உடன்பாட்டுக் குறிபபுவினையெசசம்; இது துணையிழப்ப என்னும்வினைகொண்டது. புட்களாவன தாமரைவளையங்களையுண்டு அம்மலர்களில் வசிக்கின்ற அன்னமும், மசசஙகளையுண்ணும் கொககு முதலியனவும். வாய சினையடியாகப்பிறந்த குறிபபுப் பெயரெசசம். செவ்வாய் பண்புத்தொகைநிலைத்தொடர்; செம்மையென்னும் பண்புபபெயர்-வாயென்னும் வருமொழிப் புணர்சசியில் மையீறுகெட்டு, “முன்னின்ற மெயதிரிதல், என்பதனல் நிலைமொழியீற்று மகரம் வகரமாகத் திரிந்தது ; உயிர்முதன்மொழிப் புணர்ச்சியிலும் செவ்வடியென இவ்வாறுதிரியும்; வெவ்வாயென்பதும் இது ; செம், வெம் என்னும் முதனிலைகள் பெயர்களாதலால் “எகரம் மெய்யோடேலாது,, “எ.எனவருமுயிர் மெய்யீறுகாது” என்புனவற்றேடு மாறுபடசசெ, வெ என்பன முதனிலைகளென்னல் அறியாமைக் குற்றமே ஆம். பகல் தொழில்ாகுபெயர். (கூஎ)

மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
பாயிரு ளென்னும் படாம்வாங்கிச - செய்கின்

றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

(இ - ள்.) வெய்யோன் - வெப்பமுடைய சூரியன், மா இருஞாலத்து - மிகப்பெருமையாகிய பூமியில், உயிர்காண - உயிர்கள் காணும்படி, வான் அரங்கில் - ஆகாயமாகிய நாடகசாலையில், பாய் - பரவுகின்ற, இருள் என்னும் - இருளென்று சொல்லப்படும், படாம்வாங்கி - திரைசசீலையை நீக்கி, சேய்நின்று - தூரத்தில் நின்று, ஆரணம் - (அந்தணர்கள்) வேதங்களை, அறைந்துபாட - சொல்லிப்பாடா நிற்க, ஆடிப்போய் - ஆடிச்சென்று, குடபால்வரை - மேற்றிசைமலையில், மறைந்தான் - மறைந்தனன். எ-று.

மாயிரு ஒருபொருட்பன்மொழி; இடையே யகரமெய்த் தோற்றம், ஞன் - மெய், கு - ஈசு - ஆல் அமைபது. வெய்யோன் பண்படியாகப்பிறந்த ஆண்பாற் படர்க்கைப்பெயர் வெம்மை பகுதி, ஆன்விகுதிப் புணர்ச்சியில் மையீறுகெட்டதும், முன்னின்ற மகரம் யகரமானதும், யகரம் இரட்டியதும் சந்தி; ஆ ஓ வானது செய்யுள் வழக்கு. பாலென்பதை ஏழனுருபாகக் கொள்ளாமல், இடப்பெயராகக் கொள்ளின் குடபாலென்பதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராகக்கொள்க; விரிந்தால் குடக்காகிய பூரலெனவிரியும். வரை தானியாகுபெயர். படாமென்னும் ஆடையின பொதுப்பெயர் இங்குத் திரைச சீலையின் மேலது. இது தற்குறிப் பேற்றவணி. (௯௮)

மல்லிகையே வெண்சங்கா வண்டே வரன்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

(இ - ள்.) மல்லிகையே - மல்லிகைப்போதே, வெள்சங்கு ஆக - வெண்மையாகிய சங்காக, வண்டே ஊத - வண்டுகள் ஊதவும், வரன்கரும்பு - உயர்ந்தகரும்பாகிய, . வில்லி -

வில்லையுடைய மன்மதன், கணைதெரிந்து - அம்புகளை ஆராய்ந்தெடுத்து, மெய்காப்ப - (தன்) உடம்பைக் காத்துவரவும், முல்லை யென்னும் - முல்லைமல ரென்று சொல்லப்படும், மெல்மாலை - மென்மையாகிய மலர்மாலை, தோள் அசைய - (தன்) தோள்களில் அசையவும், புல்மாலை - சிறியமாலைக காலமாகிய — அந்திப்பொழுது - அந்திப்பொழுதென்னும் அரசு, மெல்லநடந்தது - மெள்ளநடந்தது. எ-று.

மல்லிகை, முல்லைபொருளாகுபெயர். ஏ இரண்டில் முன்னது பிரிநிலை; பின்னது ஈற்றசை. மெல்ல பண்படியாகப் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம். பகலிரவுகளைப்போல நீண்டதல்லாமையால் அந்தியைப் புன்மாலையென்றார். மாலை பகல் இரவென உணரப்படாத மயக்கத்தைத் தருவதாதலால் காரியவாகுபெயர்; பகலும் இரவும் தம்மில் கலத்தலெனக் கொள்ளின் தொழிலாகுபெயருமாம்; மால்பகுதி, ஐபுடைபெயர்ச்சி விகுதி; மான்றன், மான்று, மான்ற என வினைவிகற்பங்கள் வரும். அந்தி பகற்காலத்தின் முடிவானதென்பது; மாலையந்தி இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர்; இது ஒருமொழிபோல நிற்க, இதனோடு பொழுதென்பதும் அத்தொகைநிலையாகப் புணர்ந்தது. இடைச்சொற்கிளவியென்பதும் இது. கருப்புவில்லி கரும்பாகிய வில்லி எனின் பண்புத்தொகைநிலைத்தொடராகவும், கரும்பாற் சமைத்தவில்லி எனின் மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவுங் கொள்க. மென்றொடர் வன்றொடராதற்கு - நன் - உயி - ௬, ௯௪. இப்புணர்ச்சி வில்லியென்னும் பொருளடியாகப் பிறந்த பெயரின் வில்லென்னும் முதனிலையின் மாத்திரைக்கே கொள்க. (௬௬)

புற்கென்று ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான் - முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போ லின்று.

(இ - ள்.) நிலம் காப்பான் - உலகத்தைக் காக்கும்படி, முற்கொண்டு - முற்பட்டு, அடைகின்ற - வருகின்ற, வேந்தர்க்கும் - அரசர்களுக்கும், ஆண்டு - அவர்கள் வருகையில், அஞ்சினோர்க்கும் - அஞ்சின சிற்றரசர்களுக்கும், இடைநின்ற காலம்போல - இடையில் நின்ற காலத்தைப்போல இன்று - இத்தினத்தில, புற்கு என்று - புற்கென்னும் நிறமுடையதாய், ஆர் அந்தி - நிறைந்த அந்திப்பொழுதானது, புனை - அலங்கரிப்பதற்குரிய, மலர்க்கண் - மலர்களாகிய கண்களில, நீர் அரும்ப - (தேனாகிய) நீருண்டாக, நிற்கின்றது - நிற்கின்றது, அந்தோ - ஐயோ. எ - று.

போர்க்கு வருகின்ற பேரரசர் நாம் வெற்றிகொள்வோமென்னும துணிவாற் களிப்பும, அவர்களது வரவையறிந்த சிற்றரசர்கள் இனி நிலவுரிமை யிழப்போமென்னும் அவலத்தால் துன்பமும் கொள்ள இடமாய, வெற்றிக்கும் தோல்விக்கும இடையில் நின்ற காலத்தைப்போல ஒளியும இருளும கலந்ததாயிருந்தமையால் புற்கென்றாரந்தியென்றும், பகலுக்கும் இரவுக்கும் இடையில் சிறிதுபொழுது இருப்பதாதலால் மலர்க்கணீரரும்பவென்றும், அந்தோவென்றும் கூறினார். புற்கெனுநிறம் பொன்மையும கருமையுங் கலந்த நிறம். அந்தோ இரக்கக் குறிப்பிடைச்சொல். காப்பான் காரியப்பொருட்டாகிய பானீற்று எதிர்கால வினையெச்சம். நிலங்காப்பானென்றமையால் வேந்தர் பேரரசரெனவும், அஞ்சினோர் சிற்றரசரெனவுங்கொண்டாம். இன்றென்றது தமயந்தி விரகநோயடைகின்ற காலத்தை. (௧௦௦)

* பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன - வந்ததால்
மையார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழலைப்
பெய்வா னமைந்த பிறை.

(இ - ள்.) மை ஆர் - மைதங்கிய, வேல் கண்ணாள் - வேல்போலுங் கண்களையுடைய தமயந்தியினது, வனமுலைமேல்

அழகிய முலைகளின்மேல், ஆர் அழலை - நிறைந்த நிலவாகிய நெருப்பை, பெய்வான் - சொரிவதற்கு, அமைந்த பிறை- ஏற்பட்ட பிறைச்சந்திரன், பைந்தொடியாள் - பசும்பொன் வளையணிந்த தமயந்தியினது, ஆவிபருகுவான் - உயிரையுண் ணும்படி, நிற்கின்ற அந்தி - நிற்கின்ற அந்திப்பொழுது, முறுவலித்தது ஆம் என்ன - சிரித்ததாமென்று சொல்ல, 1 - உதித்தது. எ - று.

வேற்கண்ணாள் சுட்டுப்பொருளது. முறுவலித்தது இறந்த காலத்தொழிற்பெயர்; முறுவலென்னும் பெயரடியாகப் பிறந்த முறுவலி பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, அசாரியை, து புடைபெயர்ச்சி விகுதி. ஆல் சாரியை. பருகு வானென்பது, வானீற்றுக் காரியப்பொருட்டாகிய எதிர்கா ல வினையெச்சம். பெய்வானென்பதும் இது. பிறைதொழி லடியாகப் பிறந்த பெயர்; பிறபகுதி, ஐ வினைமுதற்பொரு ண்மை விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை. (௧0௧)

* கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள் - ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போரச் சொரிந்ததே,
நீணிலா வென்னு நெருப்பு.

(இ - ள்.) கூட்டு - கூட்டிய, மைபோல - மையைப்போ ல, சிறந்த - மிகக்கறுத்த, கூர் இருளை - பேரிருளை, கூன்கோ ட்டால் - வளைவாகியநுனியினால், கோட்டு - சாயச்செய்து, ம ண்கொண்ட - பூமியைவசப்படுத்திக்கொண்ட, குளிர்திங்க ள், குளிர்ச்சியாகிய பிறைச்சந்திரன், (தமயந்தியினது) ஈட்டு- தேடத்தகுந்த, மணிப்பூண் - இரத்தினாபரணங்கள், நிலாம்- விளங்குகின்ற, மென்முலைமேல் - மென்மையாகிய முலைகளி ன்மேல், நீள்நிலா என்னும் நெருப்பு - வளர்கின்ற சந்திரிகை யாகிய நெருப்பை, போரச்சொரிந்தது - மிகுதியாகச் சொ ரிந்தது. எ - று.

கோட்டுஎன்னும் வினைமுதனிலை வினையெச்சப்பொருள் படநின்றது. பிறைபூமியைக்கொள்ளல் நிலாவைஎங்கும் வீசு

தல். கூரிருளைக் கூன்கோட்டால் கோட்டு மண்கொண்ட குளிர் திங்களென்பதற்கு - மிகுந்தஇருளை கூனியதந்தத்தி னால் கிண்டிவிட்டகுளிர்ந்த பிறைசசந்திரனாகிய யானையெனவும் உரைக்கலாம். கோடுதந்தம். கோட்டுமண்கொள்ளல் ஒருசொல்லின் தன்மையது; பொருள்யானைமுதலியன மதத்துக்தரையைக் கிண்டல். கூட்டு, ஈட்டெனப்பன வினைத்தொகைவினைச்சொலாகக்கொள்ளலே அன்றி, கூட்டும், ஈட்டும் எனவைத்துப் பெயரெசச வினைசசொலாகவுங்கொள்க. நிலாம் இடையிலுள்ள உயிர்மெய்கெட்டது. பூண்தொழி லடியாகப் பிறந்தபெயர்; பூண்பகுதி, செயப்படுபொருண் மை விகுதியாகிய இகரம்புணர்ந்துகெட்டது; இவ்வாறு கொள்ளாமல் முதனிலைத்தொழிலாகுபெயராகவுங்கொள் ளலாம். பூணிலாமென்முலை என்பதைப் பூண் இலாதமென் முலையெனப்பதம் பிரித்து, பூண்கள் இல்லாத மென்முலை யென உரைத்தலுமாம். விரகவேதனைபடுகின்றவளாதலால் ஓராணியும் அணிந்திலளென்பது கருத்து. போரசெயவென் வாய் பாட்டெதிர்கால வினையெசசம். இச்சொல்போத எனவும் வழங்கும். (௧௦௨)

அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் றானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவின்-மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தாலவ் வந்தே னென்னும் பேர்.

(இ - ள்.) அன்னங்காள் - அன்னங்களே, நீங்களும் - நீங்களும், அவ்வாதித்தன்தானும் போய்-அசசூரியனும்போக, மன்னும்படி - தான் நிலைபெறும்படி, அகலாத - நீங்குதலில்லாத, வல்இரவில் - வன்மையாகிய இராவில், மின்னும் - மின்னுகின்ற, மழை - மேகங்களினது, தாரைக்கும் - துளியினின்றும், வல்இருட்கும் - வலியஇருளினின்றும், வாடைக்கும்- வாடையினின்றும், நாங்கள்பிழைத்தால் - நாங்கள்தப்பியிருந்தால், வந்தேன்என்னும் - பிறந்தேனென்று சொல்லப்படும், பேர் - கீர்த்தியுண்டு. எ - று.

தன்னைப்பற்றி வருந்துகின்ற உயிர்த்தோழியரைத் தன் னுடுபடுத்தி நாங்களென்றும், அவர்கள் தன்னைப்போல விர கங்கொண்டவர்களல்ல ராதலால் நான் பிழையேனென்னு ங்கருத்தால் வநதேனென்றும், பிழைத்தலினருமைகருதிப் பேரென்றுங் கூறினள். பேரென்னும்எழுவாய்க்கு உண் டென்னும் பயனிலைகுறைந்து நின்றது. ஆதித்தன் - அதிதி புத்திரன். அஎன்னுஞ்சுட்டு இருளைக்கடிகின்ற உயர்வைசசு ட்டி நின்றது. தாரைவல்லிருள் அஃறிணை யும்மைத்தொ கையாதலால் பன்மையீறுபெற்றிலது. இருட்குமென்றவும் மை வாடையென்பதைக் குறித்துவந்தஎண்ணும்மை. 'குவ வுருபிரண்டும் ஐந்தாவதனீக்கற் பொருளன. போய்போக என்பதன்திரிபு. அகலாதஎன்னும், எதிர்மறைப்பெய ரெச சம் ஈறு தொகுத்தலாய்நின்றது; இதனை "சாவவென்மொ ழியீற்றுயிர் மெய்சாதலும்விதி" என்னும் விதியை உபலக்க ணமாகக்கொண்டு, இப்பெயரெச்சத்திறு கெட்டதெனின், தொல் - "சாவவென்னுஞ் செயவெனெச்சத், திறுதிவகரங் கெடுதலுமுரித்தே" என்னுஞ்சூத்திரத்துககு உரையாசிரிய ரும், நசசினார்க்கினியாரும், நன் - "சாவவென்மொழியீற றுயிர் மெயசாதலும்விதி" என்பதற்கு உரைகாரரும், இவ் வாறு கொள்ளாமையாலும், நன்னூலுரைகாரர் இப்புணர் ச்சிசாவக்குத்தின னென்பதுபோலச்சிறந்த தல்லாமையால் சாதலும்விதியென்றூ ரென்றமையாலும், இதுசாவஎன்னும் சொல்லுக்கே கூறியசிறப்பு விதியாதலாலும், சுழற்றூததடி திரியாச்சக்கரம், உடையாச்சட்டி என எதிர்மறைப்பெயரெ ச்சம் யாவும்ஈறு கெட்டுவருமாதலாலும், சாவ வினையெச்சம் அகலாத பெயரெசசமாதலாலும், அது உடன்பாடு, இது எதிர்மறையாதலாலும், இதுபிரயோகவிவேக விதியெனின், இந்நூல் தொல்காப்பியவுரையினும், நன்னூலுரையினுஞ்சிற ந்ததன்றூதலாலும், இங்ஙனங்கொள்ளல் குற்றமென்க.(௪0௬)

* செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வாளை - இப்பொழுதும்

மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

(இ-ள்.) செப்பு - சிமிழ்போன்ற, இளகொங்கைமீர் - இளமையாகிய முலைகளையுடையமாதர்களே, திங்கள்சுடர் - சந்திரனுடையநிலா, பட்டு - பட்டதனால், கொப்புளங்கொண்ட - கொப்புளங்களைக்கொண்ட, குளிர்வானை - குளிர்ச்சியாகிய ஆகாயத்தை, இப்பொழுதும் - இப்போதும், தேன்பொதிந்தவாயால் - தேன்போலுஞ்சொற்கள் நிரம்பியவாயினால், தெரிந்து - துணிந்து, மீன் - விண்மீன்கள், பொதிந்து நின்ற - நிறைந்துநின்ற, விசும்புஎன்பது - ஆகாயமென்று சொல்லுதல், என்னோ - யாதுகாரணமோ. எ-று.

இப்போதுமென்றது உமதருகிலுள்ள நான் நிலாவால் உடல்வெதும்புவதைக் கண்கூடாகக் காணுங்காலத்துமென்பதை. உம்மை உயர்வு சிறப்போடு இறந்தது தழீஇயது. செப்பென்பதைப் பெயர்சசொலாகக் கொள்ளாமல், வினைத்தொகை வினைசசொலாகக் கொண்டு, புகழப்படுகின்ற என உரைப்பினும பொருந்தும். பட்டு செயவெனெச்சத்திரிபு கொப்புளமென்னும் பெயரினடியாகக் கொப்புளி, கொப்புளித்தல், கொப்புளித்த, கொப்புளித்து, கொபபுளித்தான் என வினைவிகற்பங்கள் பிறக்கும். குளிர்வானென்றது நிலாவின் வெப்பத்தைச சிறப்பித்தற்கு. கொல் அசை. ஓ இரக்கப்பொருளது. (௧௦௪)

கானுந் தடங்காவுங் காமன் படை வீடு
வானுந்தேர் வீதி மறிகடலும் - மீனக்
கொடியாடை வையமெல்லாங் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய்.

(இ-ள்.) கானும், காடும், தடம் - தடாகங்களும், காவும் - சோலையும், காமன் படைவீடு - மன்மதனுடைய ஆயுதங்களுள்ளவீடு, வானும் - ஆகாயமும், தேர்வீதி - தேர் ஓடுகின்ற வீதி, மறிகடலும் - அலைகள் மடங்குகின்ற கட

லும், மீனம் - மீனெழுதிய, கொடி ஆடை - கொடிச்சீலை, வையம் எல்லாம் - பூமிமுழுமையும், கோதண்டசாலை - வில்லெடுத்துப் பழகுமிடம், (ஆதலால்) பொடி ஆடி - மேனி முழுமையும் திருநீற்றையணிந்த சிவன், கொன்றது எல்லாம், கொன்ற சரித்திரமுழுமையும், பொய் - பொய்யாம். எ-று.

மன்மதனுடைய மலரம்புகளில் முல்லைமலர் காட்டிலும், தாமரைமலர், நீலோற்பலமலர் குளத்திலும், மாமலர், அசோகமலர் சோலையிலும் உள்ளன ஆதலால் அவை மூன்றையும் படைவீடாகவும், அவன் தேராகிய தென்காற்று உலாவுவதாகையால் ஆகாயத்தைத் தேரோடும் வீதியாகவும், மகரமீன் உலாவுகின்றதாகையால் கடலைக் கொடிச்சீலையாகவும், எல்லாவுயிர்களையும் எய்பவனாதலால், அவற்றுக்கிடமாகிய பூமியை வில்லெடுத்துத் திரியுமிடமாகவுங் குறித்தனள். தடம்பெரும்பாலும் காவைச் சார்ந்தேயிருத்தலால் காவோடெண்ணப்பட்டது; தடங்கா எனபதற்குப் பொருட் புணர்ச்சியிலக்கணம் - ௪0௫ - ஆம் செய்யுளில் தாவைவல்லிருளென்பதற்குரைத்தாங்குரைத்துக்கொள்க. வையம் "ஒருமொழியொழிதன், இனங்கொளற்குரித்தே" என்பதனால் மற்ற புவனங்களையுங்கொள்ள நின்றது; வையமெல்லாம், கொன்றதெல்லாம் என்பன ஒருமையில் பன்மைவந்த வழுவமைதி. பொடியாடி என்பதில் இகரவிகுதி வினைமுதற் பொருண்மை விகுதி. (௪0௬)

கொள்ளைபோ கின்ற துயிரொன்னுங் கோளரவின்
முள்ளெயிறே மூரி நிலாவென்னும் - உள்ளம்
கொடிதிரா வென்னுங் குழையுந் தழல்போல்
நெடிதிரா வாய்புலரா நின்று.

(இ - ள்.) நெடிது - நெடுநேரம், இரா - உட்கார்ந்து, வாய்புலரா நின்று - வாய் உலரா நின்று, உயிர் - என்னுயிர், கொள்ளைபோகின்றது - கொள்ளைபோகா நின்றது, என்னும் - என்கின்றாள், மூரி - வலியமைந்த, நிலா - பிறைச் சந்

திரன், கோள் அரவின் - இராகுக் கோளாகிய பாம்பினது, முள் எயிறோ - முள்போன்ற பல்லோ, என்னும் - என்கின்றாள், (என்பாலிரங்கிச் செல்லாமையால்) இரா - இராப்பொழுது, உள்ளம் கொடிது - மனம் கொடியது, என்னும் - என்கின்றாள், தழல்போல - தீயில் விழுந்தாற்போல, குழையும் - சோர்கின்றாள், எ - று.

தழல்போல் நெடிதிரா என்பதற்கு, தழல்போல் - தீயிலிருப்பதுபோல, நெடிது இரா - (பூவணையில்) நெடுநேரம் இருந்து, என உரைத்தலுமாம். கொள்ளைபோகின்ற தூயிதென்பதுமுதலியனவற்றைத் தனித்தனிப் பலமுறை கூறுகின்றனளென்பதுணர்த்தற்கு ஆங்காங்கு என்னுமென முடித்துக் கூறினர். என்னும், குழையுமென்னும் செய்யுமென்வாய்பாட்டு நிகழ்கால வினைமுற்றில் உம் விகுதி காலங்காட்டியது. நிலா பண்பாகுபெயர். இரா உள்ளங்கொடிது நன் - பொது-கு. ௨௬-இல், சொற்றொறுமிற்றிதன் பெற்றி என்பதனால் வந்த பால்வழுவமைதி. ஓ உயர்வு சிறப்போடு ஐயப்பொருளது. இரா என்னும் செய்யா என்னும் வாய்பாட்டிறந்த காலவினையெச்சத்தால் நெடிது காலத்தின்மேலது; இது பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைப் பெயர்; நெடுமை பகுதி, து ஒன்றன்படர்க்கை விகுதி, மையீறுகெட்டதும், பகுதியீற்றுகரம் இகரமாதலும் சந்தி. புலரா நின்றென்னும் நிகழ்கால வினையெச்சமாகிய சினைவினை என்னுமென்னும் முதல்வினைகளைக் கொண்டது. (௧0௬)

* வெங்கதிரோன் தன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ - திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னே யிரா.

(இ - ள்.) இரா - இராப்பொழுதானது, வெங்கதிரோன் தன்னை - வெப்பமாகிய கிரணங்களையுடைய சூரியனை; விழுங்கிப் புழுங்கியோ - விழுங்கி (அதனால்) கொதிப்பெடுத்தோ, கொங்கை அனலின் - என்முலைகளின் வெப

பத்தால், கொளுந்தியோ - எரிக்கப்பட்டோ, திங்கள் - சந்திரனது, விரிகின்ற - பரவுகின்ற, வெள்நிலவால் - வெண்மையாகிய நிலாவினால், வேகின்றதோ - வேகாநின்றதிலேலோ, எரிகின்றது - எரிகின்றதற்குக் காரணம், என்னோ-யாதோ. (அறியேன்) எ - று.

புழுங்கி, கொளுந்தியென்னும் காரணப்பொருளன ஆகியவினையெச்சம் இரண்டடுக்கி எரிகின்றதென்னும்வினைகொண்டன. ஏ ஈற்றசை. முதலிலுள்ள ஓ மூன்றும் ஐயப்பொருளன ; மற்றது இரக்கப் பொருளது. கொளுந்திசெயப் பாட்டிறந்தகாலவினை யெச்சம் ; கொளுந்துபகுதி, அ சாரியை, படுசெயப்பாட்டு வினைப்பொருண்மைவிகுதி, உகரக்கேடும், பகரத்தோற்றமுஞ்சந்தி, அனைத்துமொருபகுதி, உ வினையெச்சவிகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும்சந்தி, ஒற்றிரட்டலே காலங்காட்டியது, இதில் படு விகுதி தொகுத்தலாயிற்று. என்னவனென்னும் வினாவினைக்குறிப்பு முற்றின் மரூஉ. நிலவு நிலாஎன்பதன் விகாரமொழி ; இராஎன்பதும் இரவுஎனவரும். (கoஎ)

ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்-ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து..

(இ - ள்.) சுடர்மதி - ஒளியுள்ளசந்திரன், கான்ற - வீசிய, வெயிலால் - வெப்பமாகியநிலவால், உடல்உருகா - உடல் மெலிந்து, வீழ்ந்து - விழுந்து, பலஊழி - பலஊழிகாலத்தால், ஓர்இரவு - இவ்வோரிராத்திரிப்பொழுது, ஆயிற்றோ - சமைந்ததோ! என்னும் - என்கின்றாள், கோழி - (சாமமறிந்துகூவுகின்ற) சேவற்கோழி, குரல் அடைத்ததோ - குரல் அடைக்கப்பட்டதோ, என்னும் - என்கின்றாள், ஆழி - கடல், துயிலாதோ - நித்திரிக்காதோ, என்னும் - என்கின்றாள். எ - று.

மற்றநாள் நளனுக்குமாலைசூடு நாளாதலால் விடியலைநோக்கி யிருப்பவளுக்கு இராநீண்டதாகத்தோன்ற, பல வூழி இரவாயிற்றே வென்றும், எண்ணம் அவன்மேலிருத்தலால் கோழியின்குரல் கேளாதவளாய்க் கோழிகுரலடைத்ததோ வென்றும், கடல் இரவில் இடைவிடாது ஒலிக்கும் பேரொலியைத் தன் எண்ணம்பேர்த்த போதெல்லாம் கேட்கின்றவளாய், அது துயிலாதோவென்றும் கூறுகின்றாளாயினாள். பல ஊழியென்பது ஊழிபலவென்று பின்முன்னாக நிற்றலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடரில் தழாத் தொடரென்க. இதனீற்றில் மூன்றனுருபு தொகுத்தலாயிற்று. பல பண்படியாகப்பிறந்த பலவின் படர்க்கைப் பெயர். கோழிசாதியொருமை. ஆழி ஆழமுடைய தென்னும் பொருளில் ஆழ்பகுதி, இ வினைமுதற் பொருண்மைவிகுதி; வட்டமாயிருப்ப தென்னும்பொருளில் பண்பாகுபெயர். மதியமென்பதில் அம்சாரியை. கான்ற காரியப்பொருளதாகிய இறந்தகாலப் பெயரெச்சம். கால்பகுதி, ற் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, லகரம் றகரமாதல்சந்தி, அது னகரமாதல் மெலித்தல்; இது இலக்கணை. வெயில் பண்புப்பெயர்; வெம் பகுதி, இல் பகுதிபொருள் விகுதி, மகரம் யகரமாதல்சந்தி; இதுபண்பாகுபெயராய்ச் சூரியனொளியை உணர்த்திற்று; இவ்வில் விகுதியை குயில், நெடிலென்பவற்றிலுங் காண்க. நிலவு தூமையாதியின் உடலை வெதுப்புதலால் அதனைவெயிலென்றார். ஓ மூன்றும் வினாவோடு இரக்கப்பொருளன. (கoஅ)

* ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்-ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ காழ்த்
துறைவா யடங்காத துயர்.

(இ-ள்.) வரிவண்டு - கீற்றுகளமைந்த வண்டுகள், ஆடி - ஆடிக்கொண்டு, அருகு - தன்பக்கத்தில், பறக்கவே - பறத்தலினாலேயே, வாடி - ...ல்வாடி, மெலிவாள் - மெலிகின்

நவளும், வனமுலை - அழகியமுலைகள், மேலேஓடி - மேலே - பார்த்து, பொறைஆக, சுமையாகுதலால், சோர்வாள் - தளர்ச்சியடைபவளுமாகிய தமயந்தி, காமத்துறைவாய் - காமமாகியதுறையில், (உண்டாகிய) அடங்காததுயர் - தணியாததுன்பத்தை, பொறுக்குமோ - சகிக்கவல்லவளோ. எ - று.

பறக்கவே வாடிமெலிதல்ஆவது - பறத்தலாலுண்டாகும் காற்றுக்குப் பொறுக்காமல் வாடிமெலிதல். முதலிலுள்ள ஏ ஈற்றசை; மற்றது பிரிநிலை, பொறைதொழிலடியாகப் பிறந்தபெயர்; பொறுபகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடுசந்தி. பறக்க, ஆக என்னும் இரண்டெச்சமும் காரணப்பொருளனவாகிய இறந்தகாலச் செயவெனெச்சம். ஓ எதிர்மறை. (கoக)

ஈர மதியே யிளநிலவே யிங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதெவன் - மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனோ வின்று.

(இ - ள்.) ஈரமதியே - குளிர்ச்சியாகிய சந்திரனே, மாரன் - மன்மதன், இன்று - இத்தினம், பொர - போர்செய்யவே, கண்ணி - தும்பைமாலையை, உனக்கு அளித்தான் அல்லனோ - உனக்குக் கொடுத்தான்; புலராத - விடியாத, இரவு அளித்தான் அல்லனோ - இராவையே கொடுத்தான், (அவ்விரண்டும் பெற்று) இளநிலவே - மென்மையாகிய நிலாவையே, இங்ஙனே - என்னிடத்திலேயே, சோர்குழலின்மீது - அவிழ்ந்த கூந்தலின்மேலிடத்து, சொரிவது எவன் - பொழிவது யாது காரணம். எ - று.

சந்திரனே! போர்செய்தற்காகத் தும்பைமாலையையும், அப்போர்செய்யும்பொழுது செய்வதற்கு விடியாத இராவையும் மன்மதனால் கொடுக்கப்பெற்றுவந்த நீ வேறு கன்னிகளிடத்திலும் செல்லாமல் என்னொருத்தியினிடத்திலேயே நின்று பொராவதென்னவென்று என்பது கருத்து. அம்

மாலையையும், காலத்தையும் பெறுவிடின் என்றொருத்தியை யே பொருதல் தகுதியென்பது குறிப்பெச்சம். மூன்றுள்ள ஏ இரண்டும் பிரிநிலை. பின்னதொன்றும் ஈற்றசை. அல்ல ளோ என இரண்டெதிர்மறையாற்கூறல் தேற்றப் பொரு ள்படுதற்காதலால் அததேற்றததைப்பொர, இரவென்பவற் றோடு சேர்த்துப்பொருள் கூறினும். (ககo)

தாங்கு நிலவின் றழல்போய்த் தலைகொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப - லூங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று.

(இ - ள்.) தாங்கு - தான் ஏற்கின்ற, நிலவின்தழல் - நிலா வாகிய தீ, போய் - மேலெழுந்து, தலைகொள்ள - தலையைப் பற்றியதனால், தேன்குழல் - மணமமைந்த கூந்தலில், சேர் வண்டு - மொய்த்த வண்டுகள், சிறைவெதும்ப - சிறைகள் வேகவும், ஓங்கு உயிர்ப்பின் - நீளுகின்ற சுவாசத்தால், தாமம் கரியா - பூமாலைகள் கரிந்துபோகவும், இன்று - இத்தி னம், யாமம் கரிஆக - இராபபோது சாட்சியாக, தனியே தளர்கின்றாள் - ஒனறியாகவே தளர்கின்றாள். எ - று.

கரியா என்னும் செய்யாவென்னும் வாயபாட்டுவினையெ ச்சம் கரியவென்பதன்திரிபு. தாமம் புறத்துறுப்புளொன்றா தலால், அதன்வினையாகிய கரியாவென்னுஞ் சினைவினை தளர் கின்றாளென்னும் முதல்வினைகொண்டதெனினும் பொருந் தும். யாமங்கரியாகத்தனியே தளர்கின்றாளென்றமையால், தோழியர் துயின்றனர்களென்பது விளங்கிற்று. ஏ பிரிநிலை. தாங்கு நிலவு வினைத்தொகைநிலைத்தொடர்; தாங்கும் நில வெனப்பதம் பிரிகஇன் பெயரொச்சத் தொகாநிலைத் தொட ரென்க. (ககக)

மையுற்ற கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து - மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செயவா டவும்.

(இ-ள்.) தேன்மொழியாள் - தேனின்இனிமைபோலும் இனிமையாகிய சொல்லையுடையாள், மை உற்ற - மைதங்கிய, கண் அருவி - கண்களினது நீர்ப்பெருக்கு, வார - ஒழுகவும், வளைசோர - (உடல்மெலிந்ததனால்) வளையல்கள் கழலவும், கையில் - உள்ளங்கையில், கபோலத்தலம் வைத்து-கன்னத்தினது இடத்தைவைத்து, தேன் இருந்த - வண்டுகள் மொய்த்த, பூகணையே, புஷ்பபாணங்களே, தீயாக - தீயைப்போல, தான் இருந்து - தான் அதிலிருந்து, மெய்வருந்தி-உடல்வருந்தி, தவம்செய்வாள் - தவத்தைச்செய்வாள், எ-று.

மன்மதனுக்கு அம்புகள் மலராதலால் அணையிற் பரப்பிய மலர் பூங்கணை யென்னப்பட்டது. கருதிய ஒன்றை அடையும்படி தீயிலிருந்து, கண்களில் ஆநந்தக் கண்ணீர் வடிய உடல் மெலியா நின்று தவஞ்செய்வாரைப்போல, நளனை அடையுங் கருத்துடையாளாய்ப் பூவணையிலிருந்து கண்ணீர் வடிய, கையினின்றும் வளையல்கள் கழலும்படி உடல் இளைத்து வருந்துகின்றனளாதலால், அவளிருப்பைத் தவச்செயலாகக் குறித்தனர். கபோலத்தலம் ஒற்றுமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். பூங்கணை மூன்றும் வேற்றுமை யுருபும்பயனும் உடன் தொக்க மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவும், பண்புத் தொகைநிலைத் தொடராகவும் கொள்ளக் கிடந்தது; விரிந்தால் பூவாற் சமைத்தகணை, பூவாகிய கணை யெனமுறையேவிரியும். (கக௨)

அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்-உள்ளம்
புதைய்வே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா.

(இ-ள்.) இரா - இராக்காலமானது, அள்ளிக்கொளல் ஆய் - அள்ளிக்கொள்ளுதற்குத் தகுதியுடையதாகி, அடைய - உலகமுற்றும், ஒன்றாய்த்திரண்டு - ஒருதன்மையதாய்த்திர

ண்டு, கொள்ளிக்கும் - தீக்கொள்ளியினாலும், விள்ளாத - பே திக்கப்படாத, கூர் இருள்ராய்-மிக்கஇருளையுடையதாகி, பொது மகளிர் - வேசியர்கள், தங்கள்உள்ளம் - தங்கள் கருத்தை, புதையவேவைத்த - பிறருக்குத் தோன்றாமலேவைத்த, இத யமேபோன்றது - மனத்தையே ஒத்திருந்தது. எ - று.

பொதுமகளிர் இதயம்போலுதலாவது.— அவர்களுடைய மனம் இன்னதென யாவருக்கும் அறியக்கூடாததுபோல உலகப்பொருள்களில் ஒருபொருளுந்தோன்றாதபடி இருள டர்ந்ததா யிருந்ததென்பது. கொளலாய், ஒன்றாய், இருளா யென்பன குணியைக் குணமாகக்கூறுவதோர் மரபுவழுவ மைதி. அடையவென்பது செயவெனெச்சமாயினும் இங்கு எஞ்சானமப்பொருளது. கொள்ளிதொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; கொள்பகுதி, ள் சந்தி, இ செயப்படுபொரு ண்மைவிகுதி; பொருள்தீயால் கொள்ளப்பட்டதென்பது. கானகனுருப மூன்றாவதன்கருவிப் பொருளில்வந்தது. உள் ளம் இடவாகுபெயர். எ இரண்டில் முன்னதுதேற்றம்; பின் னது பிரிநிலை. (ககங)

ஊக்கிய சொல்ல் ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்-காக்க
இடையாமங் காவலர்கள் போந்தாரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று.

(இ - ள்.) இடையாமம் காவலர்கள் - நடுச்சாமத்தில் கா வல்செய்வோர், ஊக்கியசொல்லர்—உரத்த சொல்லையுடை யாராய, ஒலிக்கும் - ஒலிக்கின்ற, துடிக்குரலர்—பறையினது ஓசையையுடையாராய், வீக்கியகச்சையர் - இறுகக்கட்டியகச் சையுடையாராய், வேல்வாளர் - வேலையும்வாளையுமுடையா ராய், காக்க- (நகரத்தை) காவல்செய்யும்படி, இருளின்புடை- இருளில், வாய்-அமைந்த, இருள் புடைத்தால்போன்று. இருள் தடித்து உருக்கொண்டாற் போன்று, போந்தார் - வந் தார்கள். எ - று.

புடைத்தல் - பருத்தலாதலால், அதற்குத்தடித்து உருக்கோட்டலென்றும். இடையாமக்காவலர்கள் கறுப்புச்சட்டை அணிந்தவராதலால் இருள்புடைத்தாற் போன்றென்றார். இவ்வாறன்றி, இருளின்வாய்ப்புடை - வந்த இருளினதுதாடையில், இருள்புடைத்தால் போன்று - வேறு இருள் அறைந்தாற்போன்று என உரைப்பினும் பொருந்தும். அக்காவலர்கள் பறையடிக்குமொலி வந்தஇருள் தமயந்தியை வருத்துவதைச் சகிக்காமல் வேறிருளானது அவ்விருளின் தாடையில் அறையும் ஒலிபோல இருந்ததென்பது கருத்து. வாய்ப்புடையென்னும் பண்புத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடராகநின்றசொற்றொடர் புடைவாயென நிற்றலால், அவ்வேற்றுமைத் தொகையில் நழாத்தொடராய், இலக்கணப்போலியாயிற்று. புடை - பக்கம். சொல்லர்முதலிய நான்கு குறிப்புவினைமுற்றுக்களும் வினையெச்சமாய்ப் போந்தாரென்னும் வினைகொண்டன. (ககச)

ஸ்ரீ

சீராமஜயம்.

புகழேந்திப்புலவர் சரித்திரம்.

புலவர்திலகராகிய புகழேந்திப்புலவர் கம்பநாடர், ஒளவை ஒட்டக்கூத்தர் இவர்கள் காலத்தில் இருந்தனராகத் தமிழ்ப்புலவர்கள் சொல்லிவருகையால் அவருடையகாலம்சற்றேறக்குறையச் சாலிவாகன சகாப்தம் - அகச - ஆம் - (௵) - அதாவது - ககூச - வருடத்துக்கு முற்பட்டது. அவர் பிறந்த இடம், செங்கற்பட்டையடுத்த பொன்விளைந்தகளத்தூரென்பதும், குலம் தொண்டமண்டல வேளாளரென்பதும், படிக்காசுப் புலவர் பாடியதொண்டமண்டல சதகத்தால் விளங்குகின்றன. இவர் செய்த நூல்கள், நளவெண்பாவும், இரத்தினச்சுருக்கமுமாம்.

இப்புலவர்திலகர், தென்மதுரையை ஆண்டுவந்த சண்பக மாறனென்னும் பாண்டியனிடத்தில் தமிழ்ப்புலவராயிருந்தனர். வேறு கூறுவாருமுளர். இதன் உண்மைதெளிந்து கூறக்கூடாமையாயிருக்கின்றது. அந்தக்காலத்தில் உறையூரில் அரசுபுரிந்து கொண்டிருந்த குலோத்துங்கச்சோழராசனுக்குப் பெண்கேட்கும்படி, அவனுக்கு வித்தியாகுருவும், அவனுடைய சமத்தான வித்துவானும் ஆகிய ஒட்டக்கூத்தப்புலவர், சண்பகமாறனிடத்திற்சென்று அவனோடுபேசிக்கொண்டிருக்கையில், பாண்டியராசன் பரிகாசமாய்ச்சோழராசன் பாண்டியகுலத்துப் பெண்ணைக்கொள்ளத்தக்க பாத்திரனோ எங்களிலும் அவனுக்குள்ள ஏற்றமென்ன சொல்லுமென்றான். அதுகேட்டு ஒட்டக்கூத்தப்புலவர், 'சோழராசனுடைய பெருமை தோன்ற அவனுடைய குதிரை, நதி, மாலை, குலம், வீரம், கொடி, நகர், தேசம், இவைகளுக்குப் பாண்டியராசனுடைய குதிரைமுதலிய அவ்வெட்டும் ஒப்பாகமாட்டாவென்னும் பொருளை அமைத்து:—

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கோரத்துக்கொப்போகனவட்டமம்மானே
கூற்றுவதுங்காவிரிக்குவைவையோவம்மானே
ஆருகந்தவேம்புகிராகுமோவம்மானே
ஆதித்தனுக்குநிகரப்புலியோவம்மானே
வீரர்க்குள்வீரரொருமீனவனோவம்மானே
வெற்றிப்புலிக்கொடிக்குமீன்கொடியோவம்மானே
ஊருக்குறந்தைநிகர்கொற்கையோவம்மானே
ஒக்குமோசோணாட்டைப்பாண்டிநாடம்மானே.

என்னும் பாடலைச்சொல்லினர். அதுகேட்ட பாண்டியராசனுடைய சமத்தான வித்துவானாகிய புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தப்புலவரை நோக்கி அதற்குமாறாக.

ஒருமுனிவனேரியிலோவுரைதெளித்ததம்மானே
ஒப்பரியதிருவிளையாட்டுறந்தையிலோவம்மானே
இருநெடுமாலவதாரஞ்சிறுபுலியோவம்மானே
சிவன்முடியிலேறுவதுஞ்செங்கதிரோவம்மானே

கரையெதிரல்காவிரியோவையையோவம்மானே
கடிப்பகைக்குத்தாதகியங்கண்ணியோவம்மானே
பரவைபணிந்ததுஞ்சோழன்பதந்தனையோவம்மானே
பாண்டியனார்பராக்கிரமம்பகர்வரிதேயம்மானே.

என்ற பாடலைச்சொல்லினர். அதுகேட்டுப்பின்னர் ஒட்டக்கூத்தப்புலவர் சோழனைப்புகழவேண்டி.

வெண்பா.

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகுக் கிடான்கவசம் - துன்றும்

எனக்கூறிச் சற்று ஆலோசித்தனர்; இதற்குள் புகழேந்திப் புலவர்,

வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான புறங்கொடுக்கி னென்று.

எனக்கூறி முடித்தனர். தாம்சொல்லியவற்றிற்கெல்லாம் பிரதிகூலமாய்ப் பேசினனே யென்று அவர்மேல் ஒட்டக்கூத்தருக்கு வருத்த முண்டாயிற்று. பின்பு பாண்டியராசன் தன்புத்திரியைக் கொடுப்பதற்குச் சம்மதித்தான். ஒட்டக்கூத்தர் உடனே புறப்பட்டு வந்து குலோத்துங்கசோழனுக்கு இது செய்தியைத் தெரிவித்தனர். சோழராசன் தன் போதகாசிரியராகிய ஒட்டக்கூத்தரை நகரையாளும்படி வைத்துத் தான் தென்மதுரைக்குச்சென்று பாண்டியராசனுடைய மகளை மணம்புணர்ந்தனன். பாண்டியன், தன் குமாரத்திக்குச் சீதனமாகப் பொன்னணிமுதலியவற்றையும், புகழேந்திப் புலவரையும் கொடுத்தனன். சோழராசன சீதனப் பொருள்களையும் அப்பொருள்களி லொருவராகிய புகழேந்திப்புலவரையும் முன்னதாகத் தனது நகரத்துக்கு அனுப்பினன். உறையூரில் அரசு புரிகின்ற ஒட்டக்கூத்தப்புலவர், புகழேந்திப் புலவரைக்கண்டமாத்திரத்தில் முன்னே தம்மைக்கல்வியறிவால் அவமதித்தபுலவர் திலகரைச் சிறைச்சாலையில் அடைவித்துச்சற்றேனும் இரக்க மென்பதில்லாமல், நாளொன்றுக்கு ஆழாக்கு அரிசியும் உழக்கு உப்பும் கொடுக்கும்படி

உத்தரவு செய்தனர். புகழேந்தியாரும், அவ்வாறே சிறைச்சாலையி லிருந்துகொண்டு அந்தக்கார்ரா கிருகத்தின் பக்கத்துமார்க்கமாகத் தண்ணீர்க்குச்செல்கிற பெண்களைச் சர்ளரத்தின் வழியாகப் பார்த்து, அவர்கள் காதுக்கு இனிமையாய் எளிதிற் பொருள் விளங்கும்படி ஸ்ரீமகாபாரதத்தில் சிற்சிலசரித்திரங்களை எடுத்துச்சுருக்கி, இக்காலத்தில் தெருக்களில் சில எளிய சனங்கள் உடுக்கை தட்டிப் பாடிச் சீவனஞ்செய்துகொண்டுவருகிற அல்லியரசிமாலையீடு, பவளக்கொடிமாலையீடு, புரஞ்தரன் களவுமாலை யெனச் செம்பாகமான பாடல்களாகப்பாட, அவைகளைக்கேட்டு மகிழ்ந்த பெண்கள் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுக்கும் அரிசி காய்கறிமுதலியவற்றில் தமக்குப் போதுமாயினவற்றை எடுத்துக்கொண்டு சமைத்துண்டு மிகுதியைக்காவற்சேவகர்களுக்குக் கொடுத்துவருவர். இதுகாரணத்தால் அவர்களும் இவர்மேல் மிகுதியும் அன்புவைத்து மரியாதையாய் நடத்திவந்தார்கள்.

இப்படியிருக்கையில் சோழராசன் கலியாணகாரியம் யாவும் நிறைவேறினமாத்திரத்தில் தன்மனையாளோடு நகரமே வந்துசேர்ந்து, ஒருநாள் யானைமேல் பவனிவந்தான். சிறைச்சாலைத் தளத்தின்மேல் நின்று புகழேந்தியார், அச்சிறப்பைப்பார்த்துக்கொண்டிருக்க, சோழன் தன்னருகிலுள்ள ஒட்டக்கூத்தருக்குக்காட்டி இதோ மேன்மாடத்தில் நிற்கின்ற புகழேந்திப்புலவர் சிறந்த புலவரன்றோ வென்றான். அச்சொல்லுக்குப் பொறுக்காமல் ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவனையிகழ்ந்து.

கட்டளைக் கலித்துறை,

மானிற்குமோவந்த வாளரிவேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்குமோவவ் வெரியுந்தழன் முன்களைகடலின்
மீனிற்குமோவந்த வெங்கட்சுறாமுன் வீசுபனி
தானிற்குமோவக் கதிரோனுதயத்திற்றார் மன்னனே.

என்ற பாடலைச்சொல்லினர். அதுகேட்டுப் புகழேந்திப் புலவர், இவன் அவ்வளவுசமர்த்தனோவென்று புன்னகைசெய்து சோழனைப்பார்த்து இக்கவியை வெட்டிப் பாடவோ அல்லது ஒட்டிப்பாடவோவென்று கேட்க, அரசன் ஒட்டக்கூத்தரிடத்தில் வைத்த அன்பால் வெட்டிப்பாடவேண்டுவதில்லை ஒட்டியே பாடுமென்ன.

இதுவும் அது.

மானவனானந்த வாளரிவேங்கையும் வற்றிச்செத்த
கானவனனைவ் வெரியுந்தழலுங் கனைகடலின்
மீனவனனைந்த வெங்கட்சுறவமும் வீசுபனி
தானவனைக கதிரோனுதயமுந் தார்மன்னனே.

என்று அப்பாடலையே ஒட்டிப்பாடினர். பாடியும் அரசன் ஒட்டக்கூத்தரிடத்தில் வைத்த அன்பின் மிகுதியால் சிறைமீட்கக்கருதாமற் போயினன்.

இதுநிற்க, ஒட்டகூத்தப்புலவர் சோழராசனுடைய சமுகத்தில் பரிசுபெறவரும் தமிழ்ப்புலவர்களில் தாம்கேட்டவினாக்களுக்குத் தக்கவிடைதராதவர்களைச் சிறைச்சாலையை அடைவித்து நவராத்திரியுற்சவத்தில் இருவர் இருவராகக் குடுமியோடு குடுமிமுடிபோட்டு அங்குள்ள பிடாரிக்கு முன்பாக நிறுத்தி, அவர்களைப்பலிகொடுப்பதுவழக்கம். அவ்வழக்கப்படி புகழேந்திப்புலவர் சிறையிருந்தகாலத்திலும் பலபுலவர்கள் அடைபட்டிருந்தனர்கள். அஃதறிந்து புகழேந்திப்புலவர் இக்கொடிய வழக்கத்தை நிறுத்தவேண்டுமெனக் கருதிச் சிறையிலிருக்கும் புலவர்களில் குயவன், அம்பட்டன், கருமான், தச்சன், தட்டான், வண்ணான், வேளாளன், ஆகிய எழுவர்களைத் தெரிந்தெடுத்துச்சிறைச்சாலையிலேயே சம்பிரதாயத்தோடு இலக்கிய இலக்கணங்களைப் பயிற்றுவித்துச் சமர்த்தர்களாகச் செய்தனர். நவராத்திரி யுற்சவமுஞ் சமீபித்தது. அக்காலத்தில் வழக்கப்படி அடைபட்டுக்கிடந்த புலவர்களைச் சிறையிலிருந்து கொண்டு வரும்படி ஏ[illegible] அனுப்ப, புலவர்திலகராகிய

புகழேந்திப்புலவர், தம்மிடத்தில் கல்விபயின்று தேர்ந்த எழுவர்களையும் முன்னே செல்லவும், மற்றையோர்களை அவர்கள் பின்னே செல்லவும், உறுதிசொல்லி அனுப்பினர். அவர்களுள் முன்னே குசவன்போய் மிகுதியுமிடுக்காக நின்றான். ஒட்டக்கூத்தர் அவன் மிடுக்காக நிற்கிறதைக்கண்டு செய்யுள் செய்யுந்திறத்தை அறியும்படி.—

கலிவிருத்தம்.

மோனைமுத்தமிழ் மும்மதமும்பொழி
யானைமுன்வந் தெதிர்ந்தவனாரடா

என்றனர் - அதற்குக்குசவன்

கூனையுங்குடமுங் குண்டுசட்டியும்
பானையுஞ்செயு மங்குசப்பையல்யான்

என்றான். ஒட்டக்கூத்தர், தம்மை யானையெனச்சொன்னதற்கு, யானையை யடக்குவது அங்குசமாகையால் அங்குசம் போன்ற பையலெனவும், தான்குசவனாதலால், அழகிய குசப்பையலெனவும் சிலேடையாகப் பொருள்பட அங்குசப்பையலென்றனன். ஒட்டக்கூத்தப்புலவர் அஃதுகேட்டுச் சற்றுவாட்டமுற்று மற்றொருவனை அழைப்பிக்க, ஒருகண்பூப்பட்டு நின்ற அம்பட்டன் வந்துநின்றான். அவனைக்கண்டு:—

கட்டளைக்கலித்துறை.

விண்பட்டகொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கப்,
புண்பட்டநெஞ்சொடு மிங்குநின்றாய்பொட்டையாய்புலவாய்.

என - அதற்கு அம்பட்டன்.

கண்பொட்டையாயினு மம்பட்டனான் கவிவாணர்முன்னே
பண்பட்டசெந்தமிழ் நீயுந்திடுக்கிடப் பாடுவனே.

என்றான். அதைக்கேட்டுக் கலங்கி மற்றொருவனை அழைப்பிக்க, அவன்பின் கருமான் வந்து நின்றான். முன்னேக வியால் வினவினாற்போல் வினவாமல் நீயாரென்ன, அதற்கவன்.

இதுவும் அது.

செல்வன்புதல்வன் றிருவேங்கடவன் செகதகுரு
சொல்லுங்கவியைக் குறைசொன்னபேரைக் குறடுகொண்டே

பல்லைப்பிடுங்கிப் பருந்தாட்டமாட்டிப் பகைவர்முன்னே
அல்லும்பகலு மடிப்பேன்கவி யிருப்டாணிகொண்டே.

என்று சொல்லினன். இலேசங்கொண்டு அவனை அப்புறப் படுத்தி, வேறொருவனை அழைப்பிக்க, தச்சன் வந்து நிற்க அவனை நீயாரென்ன,

கட்டளைக்கலித்துறை.

சொன்னசந்தக்கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந்தக்கவி யேதென்றபோதி லெதிர்த்தவரை
வன்னசந்தங்கெட வாயைக்கிழித்திந்த வாடச்சியினால்
கன்னசந் தங்கங் களிற்கவி யாப்பைக்கடாவுவனே.

என்றனன். வருத்தமுற்று, அவனை அடுத்து நின்றவனை யழைக்க, வண்ணான் வந்து தைரியமாக நின்றான். நீ யாரடா என்று செருக்காகக்கேட்க,

சேலேய்விழிமடவாரிற் செங்காலன்னஞ்சேர்பழனப்
பாலேய்மணவயிற்கூத்த நின்போலியர்பாப்புனைந்த
நூலேய்துகளறத்தூய் தாக்குரோன்மைநுவல்வதல்லால்
மேலேய்தமிழ்ப்புலவோ ரென்னையென்னைவிளம்புவதே.

தான் வண்ணானும், ஒட்டக்கூத்தர் கைக்கோளருமாத லால் பாப்புனைந்த துகளற எனச்செய்யப்பட்ட நூல்களிலுள்ள குற்றங்களற எனவும், பாவோட்டி நெய்த வஸ்திரத்திலுள்ளமாசு நீங்க எனவும் சிலேடைபடக்கூறினன். இதுகேட்டு இவன் யாவரிலுங் கெட்டவனென்று அப்புறப்படுத்தி அவனுக் கயலில் நின்றவனை அழைக்க, வேளாளன் ஒழுக்க மாகவந்து எதிரே நின்றான். அது கண்டு ஒட்டக்கூத்தர் பெருங்கவிஞர்கள் முன் சிறுகவிஞர்கள் வந்து நிற்பது தகுதி யோவென்றனர். கேட்ட வேளாளன்.—

கோக்கண்டுமன்னர்குரை கடல்புக்கிலர்கோகநகப்
பூக்கண்டுகொட்டியும் பூவாதொழிந்திலபூதலமேழ்
காக்கின்றமன்னகவி யொட்டக்கூத்தநுங்கட்டுரையாம்
பாக்கண்டொளிப்பர்களோ தமிழ்பாடும்புலவரே.

என்றுகூறி, இவனை இம்மட்டிலே விடுதல் தகுதியன்றென் றுகருதி, நீர் சோழராசன்மேற்பாடிய அண்டத்துப்பரணி

யென்னும் நூலில், இவ்வண்டத்தையேநகரமாகவும், சக்கர வாளகிரியையே மதிலாகவும், அதற்குட்புறத்துள்ள கடல்களை யே அகழாகவும்; பூமி நடுவிலுள்ள மகமேருவையே கோட் டைக் கொடிக்கம்பமாகவும், உருவகப்படுத்தி வருணித்திருக் கிறீரோ அகழ் மதிலின்புறத்திலன்றோ இருக்கவேண்டும் அகத்திலிருப்பதாகக் கூறியது குற்றமன்றோ? பெரும்புறக் கடலையே அகழெனக்கூற மறந்தீர்போலும். கவிச் சக்கரவர் த்தியாகிய கம்பநாடர் அயோத்தியா நகரவருணனையில்,

கலிவிருத்தம்.

நேமிமால்வரைமதி லாகநீள்புறப்
பாமமாகடல் கிடங்காகப்பன்மணி
வாமமாளிகை மலையாகமன்னற்குப்
பூமியுமயோத்திமா நகரம்போலுமே.

என்றசெய்யுளைப் பார்த்ததும், கேட்டதும் இல்லையோ என்றான். அந்தமட்டிலே அக்கினிதேவனுக்கு அபிடேகஞ்செ ய்தாற்போல ஒட்டக்கூத்தர் முகங்கருகி வாளாவிருந்தனர்; அவரைப்பிடித்திருந்த அகங்காரத்துட்டப்பேயோ விட்டுத் தொலைந்தது. நமக்குச்சம்பவித்த இந்தமாணக்கேடெல்லாம் புகழேந்தியால் சம்பவித்ததென்று உணர்ந்துகொண்டு, மற்ற கவிஞர்களையும் வரவழைத்து அவர்கட்குத்தக்க பரிசுஅரசனை க்கொண்டு கொடுப்பித்து, அவர்கள் யாவரையும் தங்கள் தங் கள் இருப்பிடஞ்சேரும்படி செலவு கொடுத்தனர்.

இச்செய்திகளை யாவும் பரிசாரகப்பெண்களால் சோழன் மனைவிகேள்வியுற்றுப் புகழேந்திப்புலவரை இன்னும் அரசனை சிறையினின்றும் விடுதல் செய்யவில்லை என மனவருத்தமுற் றுப் பள்ளியறைக்குத் தன்னாயகனாகிய சோழராசன் வரும் போது வீட்டுவாயிற் கதவைச்சார்த்தித் தாழ் பூட்டிக்கொண் டாள். தான் பற்பல இனிய மொழிகளைக்கூறியுந் திறவா மையால், அரசர்கள் தங்களுக்கும் தங்கள் மனைவிமாருக்கும் ஊடல்முதலியன நிகழ்ந்தபோது தங்கள்பாலுள்ள புலவரைக்

கொண்டு தீர்த்துக்கொள்ளுதல் வழக்கமாதலால் இவளுடைய துனியைத்தீர்க்கும்படி ஒட்டக்கூத்தரை அனுப்பினன். அவர்போய்,

நானே யினியுன்னை வேண்டுவதில்லை நளினமலர்த்
தேனே கவாடந் திறந்திடுவாய் திறவாவிடிலோ
வானே றனைய விரவிகுலாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்கு நின்கைத்தலமாகிய தாமரையே.

என்ற கவியைக்கூறினர். அவர்பாடலைக்கேட்ட உடனே மிகுதியுஞ் சினங்கொண்டு ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாளென்று மற்றொரு தாழ்ப்பாளும் போட்டாள். ஒட்டக்கூத்தர் உடனேவந்து அரசனுக்கு அதைத்தெரிவித்தனர். நம்முடைய மனைவிக்குயாதொருவழுவுதலு மின்றி வேண்டியதை வேண்டியபடியே நடத்திவருகையில், இப்படிப்பட்ட துனியுண்டாவதற்கு என்னிமித்தமெனத் தனக்குள்ளே எண்ணிப் புகழேந்திப்புலவரைச சிறையில் வைத்திருக்கின்றோமே இதுவே யாமெனத்துணிந்து, சிறை நீக்கிததன்மனையாளுடைய துனியைத் தீர்க்கும்படி அனுப்பினன்; அவரும் அவ்வாறேசென்று:—

இழையொன் றிரண்டுவகிர்செய்தநுண்ணிடையேந்தியபொற்
குழையொன் றிரண்டுவிழியணங்கேகொண்டகோபமென்னோ
மழையொன் றிரண்டு கைம்மானபரணனின் வாசல்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறாரோகுடியிற் பிறந்தவரே.

என்ற கவியைக்கூறினர். இககவியைக் கேட்டவளவில் மனமகிழ்ந்து சோழன்மனைவி துனிதீர்ந்தனள். அதுமுதல் சோழராசன் புகழேந்திப்புலவரை மேம்பாடாகவே தன்னுடைய சமத்தானத்தில் வைத்துக்கொண்டு பரிபாலித்து வந்தனன். ஆயினும் ஒட்டக்கூத்தர் முன் தம்மைச் சிறையில் அடைவித்ததையும் இப்போதுந் தம்மேல் பொறாமையா யிருப்பதையுந் தெரிந்துகொண்டு, அக்கருத்தை அரசனுக்குத் தெரிவிக்காமற்சென்று உறையூரைச்சார்ந்த மள்ளுவமென்னும் ஒருசிறிய நாட்டில் முரணூரிலிருந்த சந்திரன் சுவர்க்கியென்னும் அரச

னிடஞ்சேர்ந்து, அவனுடைய வேண்டுகோளால் நளவெண்பா வாகிய நூலைச்செய்து தக்க பரிசுபெற்று வாழ்ந்திருந்தனர்.

சிலநாள் கழிந்த பின்னர்க் குலோத்துங்கச்சோழன் புகழேந்திப்புலவர் நளவெண்பா நூலைச்செய்து மூரணைநகரில் சந்திரன்சுவர்க்கி யென்பவனால் ஆதரிக்கப்பட்டிருக்குஞ் செய்தியைக் கேள்வியுற்று, அதிமரியாதையோடு அவரை வரவழைத்துத் தன்னுடைய சமூகத்தில் பிரசங்கிக்கும்படிக்கேட்டுக்கொண்டனன். அவரும் ஓமென ஒத்துக்கொண்டு, கம்பநாடர், ஔவையார், ஒட்டக்கூத்தர் முதலிய தமிழ்ப்புலவர்கள் முன்னிலையில் உபந்நியாசஞ் செய்கையில்,—

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லிகணை தெரிந்து மெய்காப்ப - முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்லநடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

இப்பாடலைச்சொல்லும்போது, ஒட்டக்கூத்தப்புலவர் மல்லிகையரும்பைச்சங்காகவும், வண்டைச் சங்காதஞ்செய்பவனாகவுங் கற்பித்தது உசிதமே. சங்கூதுவோன் அதன் அடியை யன்றோ வாயில்வைத்து ஊதுவான் அப்படி வண்டு அம்மலரின் அடிப்புறத்தி லூதுகிற தில்லையே ஆதலால் இந்தவருணனை குற்றமென்றார்.

உடனே கம்பநாடர் புகழேந்திப்புலவரை நோக்கிக் கண்சைகை செய்தனர். அதையுணர்ந்துகொண்டு புகழேந்தியார் கட்குடியனுக்குச் சூத்தென்றும் வாயென்றுந் தெரியுமாவென்றார். அப்புறம் மேலுள்ள பாடல்களைச சொல்லிப்பொருள் சொல்லுகையில்,—

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாய்சற் றெரிந்து.

இச்செய்யுளில் ஒட்டக்கூத்தர் நீர் விண்மீன்கள் அடர்ந்த வானத்தைத் திங்கட்சுடர்பட்டுக் கொப்புளங்கொண்ட

குளிர்வானென்றது வியக்கத்தக்கதே; அக்கொப்புளத்திலிருந்து சீயாவது சிலை நீராவது வடியுமே அது யாதோவெனக்குசோத்தியமாய்க் கேட்க, புகழேந்தியானவர் சீவடியவில்லை சிலைநீர் வடிவதுண்டு அது தான் பனியென்றார். இவ்வாறு அவர் செய்யும் துராட்சேபங்களுக்கெல்லாம் உத்தரஞ்சொல்லி அவர் நாவையடக்கினர். கம்பநாடரும் ஔவையாரும் புகழேந்திப்புலவர் சார்பாகவே சார்ந்து புகழ்ந்தனர்கள்; அரசனும் புகழேந்திப் புலவருக்குத் தக்க பரிசுகொடுத்தனன்.

ஔவையார் சோழனுடைய சபையினிடத்தில் தாம் இரண்டுகால்களையும் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பார். அக்காலையில் கம்பநாடர் அங்கு வருவாராயின் அவர் வரவைக் கண்டமாத்திரத்தில் இரண்டு கால்களையும் முடக்குகிறதும், புகழேந்திப்புலவர் வருவதைக்கண்டால், வலக்காலையும், சோழனைக்கண்டால் இடக்காலையும் முடக்குகிறதும், ஒட்டககூத்தனைக் கண்டால் இரண்டு காலையும் நீட்டுகிறதும் வழக்கம். இதைப் பலமுறை ஒட்டக்கூத்தர் கண்டு, இந்த ஔவையானவள், சிறந்தவராகிய கம்பநாடருக்கும், உனக்கும் செய்யும் மரியாதையைப்பற்றி யான் ஒன்றும் சொல்லவில்லை. புகழேந்திக்கு வலக்கால் முடக்குகைக்கும், எனக்கு இருகாலையும் நீட்டியபடியிருத்தலுக்கும் யாதுகாரணம்? இதை நீ ஔவையினிடத்தில் கேட்டறியென்று சோழராசனிடத்தில் ஒட்டக்கூத்தர் சொல்லிக்கொண்டனர். அவ்வாறு ஔவையார் செய்வதைச் சோழராசனுங்கண்டு எம்பெருமாட்டியே ஒட்டக்கூத்தரும், புகழேந்தியாரும் ஒத்த புலவர்களாயிருக்க ஒட்டக்கூத்தருக்கு இரண்டு காலையும் நீட்டியபடியிருத்தலும், புகழேந்தியாருக்கு வலக்காலை முடக்கலும் உமக்குத் தகுதியன்றேயென்றனன். நான் செய்வது தகுதிதானென்றுசொல்லி, இருவரையும் அழைத்துத் தமது கையால் சில குறிகளைக்காட்டி, இவற்றிற் கிணங்க ஒரு வெண்பாச்செய்யாயென்று ஒட்டக்கூத்தரைக் கேட்க, உடனே,—

இவ்வளவு கண்ணிணு மிவ்வளவு சிற்றிடையாள்
இவ்வளவே பேர்ந்ற விளமுலையாள் - இவ்வளவு
மைந்தவுடலா னலமேவு மன்மதன்கை
ஐந்துகணையால் வாடுவாள்.

என்று பாடினர். அப்புறம் புகழேந்திப் புலவனைப்பார்க்க, அவர் உடனே,—

ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே யாயினுநீ ரிட்டுண்மின—தெய்வம்
ஒருவனேயென் றுள்ளுணர வல்லீரேல்
அருவினைக ளோந்து மறும்.

என்று கூறினர். சோழனை நோக்கி இவ்விருவருடைய கருத்தும் இன்னதென்று தெரிந்துகொண்டாயாவென்று கூறி, மீண்டும் அவ்விருவரையும் நோக்கி, அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தத்தினிறுதியடியில் திங்களின்பெயரிலொன்றுபொருள் வேற்றுமையாய மூன்றுமுறைவரப்பாடுகவென ஒட்டக்கூத்தர்—

வெள்ளத்தடங்காச் சினவாளை வேலிக்கமுகின் மீதேறித்
துள்ளிமுகிலைக் கிழித்துமழைத் துளியோடிறங்குஞ் சோணாடா
கள்ளக்குறும்பர் குலமறுத்தகண்டா வண்டர்கோபாலா
பிள்ளைமதிகண் டெம்பேதை பெரியமதியு மிழந்தாளே.

என்றனர். கேட்டஔவையார் ஒட்டா ஒருமதிகெட்டா யென்றனர்.

உடனேபுகழேந்திப்புலவர்,

பங்கப்பழனத் துழுமுழவர் பலவின்கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண்டெறியுந் தமிழநா [டா
கொங்கைக்கமரா பதியளித்த கோவேராச குலதிலகா
வெங்கட்பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும்வே [ல்விழியே.

என்றனர். இக்கவிகளைக்கேட்டு இவ்விருவருக்குமுள்ள தாரதம்மியத்தை இன்னமும் நீ உணர்ந்திலையோ வென்று சோழராசனைக்கேட்டனர். அரசன் ஒன்றும்பேசாமலிருந்து விட்டனன். ஒட்டக்கூத்தர் [illegible]

ஈனத்தைப் பொறாதா எண்ணுமல், புகழேந்திப் புலவருடைய கல்வித்திறத்தைத் தமக்குள்ளே வியந்துகொண்டு, ஒருநாள் இராத்திரி படுத்திருக்கையில் அவர்மனைவி போசனகாலமாகிறதென்றாள். ஆயினும் நான்புசியேனென்றார். சர்க்கரை சேர்ந்தபால்கொண்டு வருகிறேனென்றாள். அதுகேட்டு, சர்க்கரையோடு சேர்ந்தபாலன்று புகழேந்திசெய்த நளவெண்பாவில் நாலைந்துபாடலை எடுத்துப் பிழிந்து அந்த இரசத்தைக் கொண்டுவந்தாலும். உண்ணேன்போவென்றார். தம்மையும், தம்முடையபாடலையும் வியக்காமையால் ஒட்டக்கூத்தரைக் கொல்ல வெண்ணித் தற்செயலாய் அன்றுவந்து ஒளித்திருந்த புகழேந்திப்புலவர், பொருக்கென வெளிப்பட்டு நின்று, அவர் பாற்கொண்ட பகைமையைவிட்டுச் சிநேகத்தைப்பாராட்ட, அவரும் மனமொத்து நட்புப்பாராட்டினர். குலோத்துங்கச் சோழனும் இச்செய்திகேட்டு மனமகிழ்ந்து அவ்விருவரையு நோக்கி, நெய்த்தானமென்னுந் தலத்தி லெழுந்தருளியிராநின்ற சிவமூர்த்திமேல், நெய்த்தானத்தானைச் சேவித்தே என்பது கடைசியாக எண்சீர்க்கழிநெடில் வண்ணவிருத்தம் பாடும்படிக்கேட்க, ஒட்டக்கூத்தர்.

விக்காவுக்கா வித்தாவிப்போய்
  விட்டானட்டார் சுட்டேர்புக்கார்
இக்காயத்தாசைப் பாடுற்றே
  யிற்றேடிப்போய் வைப்பீர்நிற்பீர்
அக்காடப்பேய் தொக்காடச்சூ
  ழப்பாடிட்டீ வெப்பாடப்பூண்
டெக்காடக்கா னத்தாடப்போ
  நெய்த்தானத்தானைச்சேவித்தே.

என்று பாடினர்.—புகழேந்திப்புலவர்.

கற்கோலிப் பூசற்பாசத்தே
  தப்பாமற் சாகைக்கேகிற்பீர்
முற்கோலிக் கோலிப்பாவித்தே
  முட்டாமற் பூரித்தேகிற்பீர்
வற்றுநெட்டோடைப் பாளைச்சேல்
  மைப்பூகத்தேறித் தாவிப்போய்
நெற்றூளூற்றாலைப் பாகிற்சேர்
  நெய்த்தானத்தானைச்சேவித்தே.

என்றுபாடினர், மற்றொருநாள திருக்குறுங்குடியென்னுந்தலத்தில் எழுந்தருளியிராநின்ற எம்பெருமான் மேல்வல்லோசையுள்ள கட்டளைக்கலித்துறை பாடும்படி அரசன்கேட்டுக்கொள்ள, ஒட்டக்கூத்தர்,

திக்குளெட்டுக் கயந்துக்கமுற்றுத் திடுக்கிட்டலற
மைக்கடற்குட் சரங்கைக்கவிட்டோடற் கிடமாமதூர
இக்குமுற்றிக் கணுச்சற்றுவிட்டுத் தெறித்திட்ட முத்தைக்
கொக்குமொக்கிக் கக்கிவிக்குமச் சோலைக்குறுங்குடியே.

என்றொருபாட்டும், புகழேந்திப்புலவர்,

எட்டெழுத்தைக் கருத்திற் குறித்திட்டு நித்தம்பரவும்
சிட்டர்கட்குத் திருப்பொற்பதத்தைச் சிறக்கத்தருமவ்
வட்டநெட்டைப் பணித்தற்பரித்தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத்துக் குலதைத்திமுத்தீனுங் குறுங்குடியே.

என்றொருபாட்டும் பாடினர்கள், குலோத்துங்கச்சோழன் உள்ளங்களித்து இருவருக்கும் சர்வோபசாரங்களையுஞ் சமமாகவே நடப்பித்துவந்தான். இவ்வாறு சோழநாட்டிலிருந்து காலங்கழித்தனர். இச்சரித்திரத்தைச் சென்னை இயற்றமிழாசிரியரும், எமக்குப் போதகாசிரியரும் ஆகிய, அ-வீராசாமிசெட்டியாரவர்கள் எழுதிய விநோதரசமஞ்சரியென்னும் நூலில் சுருக்கமொழியக்காண்க.

முற்றிற்று.

ஸ்ரீமத்பராங்குசாய

முதற்பாவியற் சுருக்கம்.

பா - நான்குவகைப்படும்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாஎன.

பாவிற்குரிய உறுப்புகள் அறுவகைப்படும்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைஎன.

எழுத்து இன்னதென்பதும், அதன்வகையும் எழுத்திலக்கணத்துள் கண்டுகொள்க.

முதற்பாவியற் சுருக்கம்.

அசை - எழுத்தால் ஆக்கப்படுவது.

அது இரண்டுவகைப்படும்; நேரசை, நிரையசை என.

நேரசை, ஒருகுறிலாவது ஒரு நெடிலாவது தனித்தும், ஒற்றடுத்தும் வருவது.

உதாரணம், உ, ஊ, உண், ஊண்.

தனிக்குறில் மொழிமுதலில் விட்டிசைத்துநின்றால் நேரசையாகக் கொள்ளப்படும். உ-ம்; வழங்கான் பொருள்காத்திருப்பானேல் அ ஆ.

நிரையசை, குறில் இணைந்தாவது குறில்இணைந்து ஒற்றடுத்தாவது, குறில் நெடில் இணைந்தாவது, குறில்நெடில் இணைந்து ஒற்று அடுத்தாவதுவருவது.

உ-ம். நில, நிலம், நிலா, நிலாம்.

சீர் - அசைகளால் ஆக்கப்படுவது.

அது நான்குவகைப்படும்.

ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர், என.

உ-ம். ஓரசைச்சீர் நேர் - நாள். நிரை - மலர். அசைச்சீரெனவும் பெயர்பெறும்.

ஈரசைச்சீர் நேர்-நேர், தேமா. நிரை - நேர், புளிமா. நிரை-நிரை, கருவிளம். நேர்-நிரை, கூவிளம். இயற்சீரெனவும், ஆசிரியவுரிச்சீரெனவும் கூறப்படும்.

மூவசைச்சீர் இருவகைப்படும். நேர் இறுதிச்சீர், நிரை இறுதிச்சீர் என.

நேர் இறுதிச்சீர்.

நேர்	நேர்	நேர்	தேமாங்காய்	காய்ச்சீரெனவும், வெண்பா வுரிச்சீரெனவும்படும்.
நிரை	நேர்	நேர்	புளிமாங்காய்	
நிரை	நிரை	நேர்	கருவிளங்காய்	
நேர்	நிரை	நேர்	கூவிளங்காய்	

நிரையிறுதிச்சீர் - நேர் நேர் நிரை, தேமாங்கனி முதலிய நான்கு. இவை வஞ்சியுரிச்சீ ரெனப்படும். இவ்வஞ்சியுரிச்சீ

ரும், நேர் நேர் நேர் நேர் தேமாந்தண் பூமுதலிய பதினறு நாலசைச்சீரும் வெண்பாவில்வரப்பெறு. ஆதலால் அவற்றை இங்கே காட்டினேமில்லை.

தளை, நின்ற சீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் தளையப்பட்டு நிற்பது.

அது எழுவகைப்படும்.

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என.

இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை இரண்டுமே வெண்பாவிற்குரியன.

இயற்சீர் வெண்டளை, மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது.

(உ - ம்.)

இனையலென்	னெஞ்சே	யெழுதியாற்	பூதார்
நிரைநிரை	நேர்நேர்	நிரைநிரை	நேர்நேர்
கருவிளம்	தேமா	கருவிளம்	தேமா.
முனைவன்	கழலை	முயங்கு	
நிரைநேர்	நிரைநேர்	நிரைநேர்	
புளிமா	புளிமா	பிறப்பு.	

வெண்சீர் வெண்டளை-காய்முன்நேர்வருவது.

(உ - ம்.)

நிதனி	னூங்கில்லைப்	பேதைநெஞ்சே	தண்பூதார்
நேர்நிரைநேர்	நேர்நேர்நேர்	நேர்நிரைநேர்	நேர்நேர்நேர்
கூவிளங்காய்	தேமாங்காய்	கூவிளங்காய்	தேமாங்காய்
வீறுமுனி	பூங்கழலை	வேண்டு	
நேர்நிரைநேர்	நேர்நிரைநேர்	நேர்நேர்	
கூவிளங்காய்	கூவிளங்காய்	காசு.	

அடி - தளை அடுத்து நிற்பது.

அது ஐந்துவகைப்படும்.

ளடி, சிந்தடி, அளவடி, அல்லது நேரடி, நெடிலடி, கழி நெடிலடி என.

வெண்பாவிற்கு உரியன-சிந்தடியும், அளவடியுமே ஆம். மூச்சீருடைத்தாய் வருவது சிந்தடி. நாற்சீருடைத்தாய்வருவது அளவடி என்க. இவ்விரண்டடியும் மேலைச் செய்யுள்களிற் காண்க.

தொடை தொடுக்கப்படுவது.

அத்தொடை இருவகைப்படும், எதுகைத் தொடையும் மோனைத்தொடையுமென.

எதுகைத்தொடை, அடிகள் தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாமெழுத்து ஒன்றி வருவதும், அதுவே அன்றி மூன்றாமெழுத்து முதலியன ஒன்றிவருவதும் ஆம்.

இரண்டாம் எழுத்தொன்றிவருவதற்கு, உ-ம். மாமறை நூல் வாழவரு சந்திரன் சுவர்க்கி, தாமரையாள் வைகும் தடந்தோளான். முதலெழுத்தளவொத்தலாவது, மாம என்பதற்கு ஏற்கத் தாம என வருதலன்றித் தம என வாராமை. ஐகார ஔகாரங்களாயின் அவ்வெழுத்துகளே அல்லாமல் குறிலும் வரலாம். உ-ம். பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து, தங்கோவின்முன்வைத்தார் தாழ்ந்து. ஔகாரத்திற்கு வந்த விடத்திற்காண்க.

மூன்றாமெழுத்து முதலியன ஒன்றிவருவதற்கு. உ-ம்.

கந்திற்பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர, மந்திரத்தினாற் பிணிப்பர்மாநாகம். எனவும், போகின்றேனென்றுரைத்தான் பூதலத்துமீதலத்தும், வாக்கினேரில்லாதமன். எனவும், தாவிரண்டு நோவத் தனித்தனியே யோடியகான், தோவிரண்டு மன்றேறுதுணை எனவும் வரும்.

காட்டாதவற்றிற்கு இந்நூலில் வந்தவிடத்தில் கண்டுணர்க.

நான்கடியும் ஓரெதுகையாய்வரின் அச்செய்யுளை ஒருவிகற்பத்தால் வந்ததெனவும், முதலிரண்டடியும் ஓரெதுகையாயும், ஈற்றிரண்டடியும் ஓரெதுகையாயும்வரின் இருவிகற்பத்தால் வந்ததெனவும் வழங்குவர். இவற்றிற்குச் செய்யுள் நான்மணிக் கடிகையில் முறையே இருபத்தாறாவதும், அதை அடுத்ததும் ஆம.

இஃது அல்லாமல் இனவெதுகையெனவும், ஆசெதுகை எனவும் இரண்டுவழங்குவர். இவற்றிற்கு முறையே, உ-ம். பொற்புள்ளதனைப் பிடிப்பானளன்புகுதக், கைக்குள்வருமா மபாற் கழன்றோடி. இது வல்லின எதுகை. இநகர்க்கீதென்பொருட்டா வந்ததென வுரைத்தான், மன்னகற்றுங்கூரிலவேனமன். இதுமெல்லினவெதுகை. இனி ஆசெதுகையாவது ஒன்றிவரும் இரண்டாமெழுத்தின்முன் யரலழ இவ்வெழுத்துகளில் ஒன்று வந்திசைவது. உ-ம். மெய்த்திருவந்துறறாலும் வெந்துயர்வநதுற்றாலும், ஒத்திருக்குமுள்ளத்துரவோனே என யகரவொற்றும், சேர்நதருளி நின்றதனிச் செங்கோலாயிங்கொழியப், போந்தருளுகென்றான் புலர்ந்து, என ரகரவொற்றும் வந்தமைகாண்க. இடையின வெதுககருட, லகரழகரங்கள் ஆசாய்வருமெதுகைக்கும் இந்நூலுள வநத இடத்திற்காண்க.

மோனைத்தொடை.

ஓரடியின்கணுள்ள முதற்சீரின் முதலெழுத்தோடு அவ்வடியின்மற்ற இரண்டு, மூன்று, நான்காஞ்சீர்களின் முதலெழுத்து ஒன்றிவருவது.

இரண்டாஞ்சீரின் முதலெழுத்து ஒன்றிவருவதற்கு, உ-ம். கொள்ளற்ககோள்ளார் கைம்மேலவா. இது இணைமோனைத் தொடை எனபபடும்.

மூன்முஞ்சீரின் முதலெழுத்து ஒன்றிவருவதற்கு. உ - ம். மூக்காற்கடந்தான் மூழ்கிலமக்காலத்து பொழிப்பு மோனைத்தொடை.

நான்காஞ் சீரின் முதலெழுத்தொன்றி வருவதறகு, உ-ம். கள்வமென்பார்க்கும் துயிலில்லை காதலிமாடு. ஒரூஉ மோனைத்தொடை.

முதல் முச்சீர்களின் முதலெழுத்தொன்றி வருவதற்கு- உ - ம். வெந்தறுகண் வேழத்தை வேரிக்கமலத்தின். கூழை மோனைத்தொடை.

முதலிரண்டாஞ்சீரின முதலெழுத்தொழிய மற்ற மூன்று சீரின் முதலெழுத்தொன்றி வருவதற்கு-உ - ம். இனறுமை வேண்டினிரவெழுக விங்கிலத்து. மேற்கதுவாய் மோனைத் தொடை.

ஈற்றிரண்டாஞ் சீரின் முதலெழுத்தொழிய மற்ற மூன்று சீரின் முதலெழுத்தோன்றி வருவதற்கு-(உ-ம்.) நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைசசா. கீழ்க்கதுவாய் மோனைத் தொடை.

நான்குசீரின் முதலெழுத்துகளும் ஒன்றி வருவதற்கு-உ-ம் எள்ளற்கவென்று மெளியவொன்றென்பெறினும். முற்று மோனைதொடை.

மோனை இரண்டாவது முதலிய சீர்களின் இடையே ஓரிடத்தும் பலவிடத்தும் வருதல் உண்டு. இது சிறுபான்மை உ-ம். அறையும்பறையரவங் கேட்டழிந்துளையும். பலவிடத்து வந்தன, ஓரிடத்து வருதலுககு இந்நூலுள் வந்த இடததிற காண்க.

மோனைககுரிய எழுத்துகள்.

அ, ஆ, ஐ, ஔ. } இம்மூவகையில் ஒவ்வோரெழுத்தும்- தன்
இ, ஈ, எ, ஏ. } முன்றான் வருதலேயன்றி அவ்வவ்வகையி
உ, ஊ, ஒ, ஓ. } ல் ஒன்றுக்கு மற்றொன்று ஒன்றியும்வரும

முதற்பாவியற் சுருக்கம்.

ச, த	}	இவையும் அவ்வாறும்.
ஞ, ந		
ம, வ		

க, ப, ய — இம்மூன்றுக்கும் மோனையில் இனமாகக்கூடும் மெய்யெழுத்தில்லாமையால், ஒவ்வொன்றும்தனமூன் தானேவரும். யகரமொன்றுக்கும் உயிரில் இரண்டாவது வருக்கவெழுத்துகளில் ஒன்று ஒன்றிவரும்.

வெண்பா-மேற்கூறிய தளை தவறாமல் முதலடி அளவடியாயும், ஈற்றடி சிந்தடியாயும் வந்து காசு, பிறப்பு என்னுங் குற்றியலுகரமும், நாள், மலரென்னும் அசைச்சீரும், ஆகிய வாய்பாடு நான்கனுள் ஒன்றை ஈற்றடியின் இறுதிச்சீராகப்பெற்று முடிவது.

உ - ம். உடனுறையுங் காலமுமில்,நாளெனனும் வாய்பாடு. புதுமலரொக்கு நிறம் - மலரென்னும்வாய்பாடு. மற்ற இரண்டு வாய்பாடும் பேறிதனி, இனையலென் என்னும் இரண்டு செய்யுளிலும் முறையே காண்க. சிறுபான்மை முற்றியலுகரவாய்பாட்டாலும் முடியும். உ - ம். போற்றுதார் முன்னர்ச்செலவு. இது பிறப்பினுளடங்கும்.

வெண்பா அறுவகைப்படும்.

குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, கலிவெண்பா என.

நளவெண்பாவில் வருவன நேரிசைவெண்பாவும், நான்மணிக்கடிகையில் நேரிசை வெண்பாவும், இன்னிசைவெண்பாவும், பஃறொடைவெண்பாவுமாதலால் அவை இவையுமெனக்காட்டுகின்றாம்.

நேரிசைவெண்பா இருவகைப்படும்.

இருகுறணேரிசைவெண்பா, ஆசிடைநேரிசைவெண்பா என.

இருகுறணேரிசைவெண்பா, இரண்டுகுறள்வெண்பாவா ற்கு இடையில் முதற்குறள்வெண்பாவின் எதுகைக்கேற்ற தனிச்சொல்லால் இரண்டாம் அடி நிரம்பிச் செப்பலோசை வழுவாமல் வருவது.

(உ-ம்.)

புல்ப்புகையின் வீடிப் பொருமுகிற்கு நெஞ்சே
நலத்துணை மற் றியாதுளதோ நாடு-பலப்பலநீ
கொள்ளற்க வண்பூதூர்க் கோதிலெதி ராசன்றாள்
விள்ளற்க செந்தமிழால் வேய்.

ஆசிடைநேரிசைவெண்பா முதற்குறட்பாவும், தனிச்சொல்லும் இடையில் வேறுபட்டுவிட்டிசைத்தால், அக்குறட்பாவி னிறுதியில் ஓரசையையாவது, இரண்டசையையாவது கூட்டி உச்சரிக்கப்படுவது.

ஓரசைகூட்டி உச்சரிக்கப்பட்ட ஆசிடை நேரிசைவெண் பா-கல்லிறபிறக்குங் கதிர்மணிகாதலி, சொல்லிற் பிறக்கு முயர் மதம் - மெல்லென். இது இரண்டாம் அடியினீற்றில் மதம் என்னும் ஓரசை கூட்டபபட்டது.

இரண்டசைகூட்டி உச்சரிக்கப்பட்ட ஆசிடைநேரிசைவெ ண்பா - நளவெண்பாவில் முதற்காப்புச் செய்யுள். இதுமுதற் குறட்பாவினிறுதியில், துணையா என இரண்டசைகூட்டி உச சரிககப்பட்டது. இவ்வாசிடைநேரிசை வெண்பாவை நேரி சைவெண்பாவெனப் பொதுப பெயராற் கூறுதலே பெரு வழக்கு.

இன்னிசை வெண்பா ஒரு விகற்பத்தாலும், இரண்டு முதலிய பல விகற்பத்தாலும், முதல் மூன்றடியும் அளவடியா யும், ஈற்றடி சிந்தடியாயும் தனிச்சொலில்லாமல் வருவதும், முதலடி தனிசசொல் பெற்றும், இரண்டாமடி தனிச்சொல் பெற்றும், மூன்றாமடி தனிச்சொல்பெற்றும், நான்கடியும் ஒரு உத்தொடைபெற்றும், வருவதும், நேரிசை வெண்பா வில் இறுதி வேறுபட்டு வருவதும் ஆம்.

முதற்பாவியற் சுருக்கம்.

தனிசசொலின்றி ஒரு விகறபததரல வந்த செய்யுள்-நான் மணி-உக-வது. தனிச்சொலின்றி இருவிகற்பத்தால்வந்த செயயுள ச-ஆவது. மூன்று விகறபத்தால் வந்தது. எ. முதலடி தனிசசொல பெறறது—கஉ. இரண்டாமடி தனிச சொல பெறறது-ரு. மூனருமடி தனிசசொல பெறறது உச- இரணடடி தனிசசொல பெறறது—காபபில உ. மூன்றடி தனிசசொல பெறறது—கரு. நானகடியும ஒருஉதசொடை பெறறது—சஎ.

பஃறொடைவெணபா நானகினமிகக அடியால் வருவது, காபபில - முதலாவதும, நூலில இருபததெட்டாவதுமாம.

செபபலோசை மூன்றுவகைபபடும்.

தூஙகிசைசசெபபல, ஏந்திசைசசெபபல, ஒழுகிசைச செபபல என.

இயறசீர் வெணடளையால வருவது தூஙகிசைசசெபபல (உ-ம.) இனையலென என்னுமபாட்டு.

வெண்சீர வெண்டளையால வருவது ஏநதிசைசசெபபல் (உ-ம.) பேறிதனி என்னுமபாடடு.

இவவிரண்டு தளையுமவிரவிவருவது ஒழுகிசைச்செப்பல் (உ-ம.) புலபபகையின வீடு என்னும்பாட்டு.

சீருநதளையுங கெடவருமானல குற்றிய லிகரமும், குற்றிய லுகரமும, உயிரளபெடையும அலகுபெறா. ஐகாரககுறுக்கம் மொழிமுதலில ஒனறரைமாததிரையாயும, இடையிலும, கடையிலும ஒருமாததிரையாயும, ஔகாரககுறுககம் மொழி முதலில ஒனறரை மாத்திரையாயும வரும. இவ்வாறு கொள்ளாவிட்டால சீருந்தளையுஞ் சிதையுமெனக.

வெணபாவினுள் மூவகைசசீரினிடையேனுமொரறுததோனறிக் கனியீறுநிச்சீராவதாயின் அவவொற்றை நீக்கிக காயீறுநிச் சீராகக்கொள்க. உ-ம. [illegible]செயத்தான் விளககதரா பால

ரின் மறுத்தான் கண்டு” இவ்வடியில் மூன்றாஞ் சீரினிடையி லும், “தாயின்முலை தானுகர்ந்து தண்பாற் கடலிடையே” இதில் முதற்சீரினிடையிலும், “அடியார்க்கெளியன்” என்னு ம்பாட்டில் “படியின்மிசை” என்னுந் தனிச்சொல்லி னிடை யிலும் னகரவொற்றும், “ஈதல்றந் தீவினைவிட்டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்” “திருந்துமதளிர் காட்டித் தென்றல்வரத தேமா” இவற்றில் மூன்றாஞ்சீரி னிடையில் லகரவொற்றும தன்றுண்டு முறையே கூவிளங்காய், கருவிளங்காய, கூவிள ங்காய் என நிற்றல்காண்க. இப்பெற்றி அறியாது “புன்கல வி கொண்டு பெரியோரைப் பொருள்செயாமல், வன்கண் மை பேசுமனமாசசரமாககள்” ஆகிய ஏழைமதிகள் வெண் பாவில் கனிசசீர்வர்தமெனக் குழறித்தம் புல்லறிவை வெளி ப்படுப்பர்.

முதற்பாவியற் சுருக்கம்.

முற்றிற்று.

வெண்பாப்பாடுவதில் புகழேந்திப்புலவா சிறநதவ
ரென்பது அடியில் குறிக்கும் அறுசீர்ககழிநெ
டிலாசிரிய விருத்தத்தாலுணர்க.

வெண்பாவிற்புகழேந்தி பரணிககோசெயஙகொண்டான
விருத்தமென்னும்
ஒண்பாவிற்குயர்கம்பன் கோவையுலாவந்தாதிக
கொட்டக்கூத்தன்
கண்பாயகலம்ப கத்திற்கிரட்டையர்கள்வசைபாடக்
காளமேகம்
பண்பாயபகர்சந்தம்படிக்கா கலாலொருவர்
பாடொணுதே.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

நான்மணிக்கடிகையுரைப்பாடம்.

நான்கென்னும் வரையறைப்பண்புப்பெயரோடு, வினைத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்து, ஒருசொல்லின் தன்மைப்பட்டுநின்ற மணிக்கடிகை என்னும் பெயர் பண்புத்தொகை நிலைத்தொடராகப் புணர, நிலைமொழியீற்றுயிர்மெய் கெட்டுப் பலசொற்கள் தொக்குநின்ற நான்மணிக்கடிகை என்பது அடியளந்தான், அரவணைச்செல்வன் என்பனபோல ஒருசொல்லின் தன்மைப்பட்டு, இரத்தினத்துண்டம் நான்கினலமைந்ததோ ரணி எனப் பொருள்படுகிறதலால் ஆறும்வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர்; இவ்வணி தன்னை அறிந்து உயர்பொருளாகக் கொண்டணிந்தாருடலை அழகுபெறச் செய்தல்போலச் செய்வனவும் தவிர்வனவுமாகக் கூறப்படும் பொருள் நான்கினலமைந்த செய்யுள் தன்னையறிந்து உறுதிப்பொருளாக மேற்கொண்டாருயிரை அழகுபெறச்செய்தலால் அச்செய்யுளுக்கு உவமையாகுபெயராய், அச்செய்யுளின்பெயர் அது பலதொக்க தொகையாகிய நூலுக்குச் சினையாகுபெயராய் நின்றது. அச்செய்யுள் பலவற்றால் அமைக்கப்பட்டது நூலாதலால் கருவியாகுபெயரெனினும் ஒக்கும்.

அடியளந்தான், அரவணைச்செல்வன் என்பன அடியளந்தானை, அரவணைச்செல்வனை என உருபேற்றலும், அடியளந்தான் பெரியோன், அரவணைச்செல்வன் உயர்ந்தோன் எனப்பயனிலை கொள்ளலும்போல இந்நான்மணிக்கடிகை

என்பது அவ்வாறு உருபேற்றலும், பயனிலைகொள்ளலுமி ல்லாமையால் அப்பெயர்களை உவமையாகக் கொள்ளல் குற்றமன்றோ எனின்; தன்பெயர் நான்மணிக்கடிகைஎன இப பெயர் பயனிலையாக நின்றாற்போல இறைவன் அடியளநதான், தனிமுதல்வன் அரவணைச்செல்வன் என அப்பெயர்கள் பயனிலையாகநின்றால் உருபேற்றலும், பயனிலைகொள்ளலும் இல்லையாதலும், இப்பெயர் பயனிலையாகாமல் நின்றபோது, நான்மணிக்கடிகையை முடித்தேன், நான்மணிக்கடிகை முடிந்தது என உருபேற்றலும், பயனிலைகொள்ளலுங் காண்க. நான்மணிக்கடிகை என்பதுபோல அவை பலசொற்கள் தொக்கு ஒருசொல்லின் தன்மைப்பட்டுநின்ற பெயாகளாதலால் உவமையாகக்கொள்ளப்பட்டன என்பதுமறிக. இப்பெற்றியறியாதார் குற்றமெனல் குற்றமென்க. மணிக்குக்கடிகை சினையாவது எவ்வாறெனின், சினைப்பொருளென்பது முதற்பொருளின் ஏகதேசமாதலால் கடிகைமணிக்கு ஏகதேசமா யமைதலின் சினையாமென்க. மரத்தில் கவடு, கோடு, கொம்பு முதலியனபோல மணியில்கடிகை அவ்வாறு தோன்றாமையால் சினையென்றல் பொருந்தாதெனின், அற்றன்று; நையாயிகர் அகண்டகாலம், திக்கு, ஆத்துமா, ஆகாயம், மனம், பரமாணு, அபாவம்இவையே நிரவயவப்பொருளெனவும், வேதாந்திகள் ஆத்மா, அபாவமென்பனவே நிரவயப்பொருளெனவும் கொண்டிருக்க, அவற்றின்வேறாய் அவயவியாயுள்ள மணிக்குக்கடிகை அவயவமன்றெனல் பருப்பொருளாராய்ச்சியுடையாரது கூற்றென்க. மணிக்கடிகையென்பதை மணியாகிய கடிகையென உரைத்துப்பண்புத் தொகைநிலைத்தொடரென்ன லாகாதோ வெனின், மணியினின்றும் வேறுபடுத்திய கடிகைபோலக் குப்பையினின்றும் வேறுபடுத்திய நெல்லைக் குப்பைநெல்லென்றால் இதனை உறுப்புத்தற்கிழமை யென்னுமல் பண்புத்தொகை நிலைத்தொட ரென்பதுபோலுங் குற்றமாம். இதன்றிறம் இன்னும்விரிக்கின் விரியுமாதலால் விடுத்தனம்.

நான்மணிக்கடிகை யுரைபாடம்.

கடவுள்வாழ்த்து - வெண்பா.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

(இதன்பதப்பொருள்) மதி - சந்திரனை, மன்னும்-அழியாத, மாயவன் - விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள்முகம் ஒக்கும்-விளக்கமாகிய முகம் ஒத்திருக்கும், கதிர் சேர்ந்த ஞாயிறு - கிரணங்கள் நிரம்பிய சூரியனை, சக்கரம் ஒக்கும்- அவனது சுதரிசனமென்னும் சக்கரம் ஒத்திருக்கும், முதுநீர் - நிலையாயுள்ள நீரையுடைய, பழனத்து - வயலில் முளைத்த, தாளின் - தாளிலிருந்து, எதிர் - மேலெழுந்த, தாமரைமலர்- தாமரைப்பூவை, அவன்கண் ஒக்கும் - அவனது கண்களொத்திருக்கும்-பூவைப் புதுமலர், காயாவினது புதிய மலரை, நிறம் - ஒக்கும் - அவனது திருமேனி ஒத்திருக்கும் என்றவாறு.

எல்லாநூலுள்ளும் மங்கலமொழி முதல்வகுத்துக் கூறவேண்டுதலால் மதி என்றும், நூற்பெயர்க்கொப்ப, இதனுள் வரும் செய்யுளொவ்வொன்றும் நந்நான்குபொருளையே கூறுகின்றமைதோன்ற எடுத்துக்கொண்டநூல் இனிது முடிதற்பொருட்டுச் செய்யும் இக்கடவுள் வாழ்த்திலும் இறைவனுடைய திருமுகமுதலிய நான்கும் மதிமுதலிய நான்கையும் ஒக்குமென்றுங்கூறினர். விரோதவுவமை யணியாகக்கொண்டு சந்திரன் இறைவனுடைய முகத்தை ஒக்கும், சூரியன் சக்கரத்தை ஒக்கும், தாமரைமலர் கண்களைஒக்கும், காயாம்பூ நிறத்தை ஒக்குமென உரைப்பினும் பொருந்தும். நீரென்பதற்கு முது என விசேடணந்தந்தமையால் அதற்கு நிலை நீரெனப் பொருள் சொல்லப்பட்டது. தாளின் என்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. எதிர் என்னும் வினைத்தொகை மலரொன்னும் செய்வதன்பெயரைக் கொண்டது. (க.)

நான்மணிக்கடிகை. புணைபாடம்.

படையை மடியகத் திட்டா னடி
முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்
தாபனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(இ-ள்.) படையை - (அவ்விறைவன் தனதுசுதரிசனமென்னும்) ஆயுதத்தை, மடியகத்து - (பாரதப்போரில்) ஒளியின்சிறுமையில், இட்டான் - வைத்தான், அடியினால் - தனது சீர்பாதங்களினால், முழுநிலம் - எல்லாவுலகங்களையும், முக்கால் - மூன்றுமுறை, கடந்தான் - தாவியளந்தான், அக்காலத்து - இந்திரன் மழைபெய்வித்தகாலத்தில், ஆப்பனி - பசுக்களினது நடுக்கத்தை, தாங்கிய - ஏற்றுக்கொள்ள, குன்று எடுத்தான் - கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்தான், சோவின் அருமை - (பாணாசுரனுடைய) நெருப்புமதிலினது அருமையை, அழித்தமகான் - அழியச்செய்த பெரியான். எ - று.

சுதரிசனத்தை ஒளியின் சிறுமையில்வைத்தது அருச்சுனன் சயிந்தவனைக் கொல்லும்படிச் சூரியனைமறைக்க அப்படையின் ஒளியைநீக்கி ஏவினது. முழுநிலத்தை முக்காற்கடந்தது மாபலியினிடத்து மூன்றடிமண் இரந்து பூமியையும், சுவர்க்கத்தையும் தனதிரண்டு சீர்பாதங்களாலும் அளந்து மற்றோரடிக்கு அவனைப் பாதாளத்தி லழுத்தியது. குன்றெடுத்தது ஆயர்பாடியிலுள்ளார் மகரசங்கிராந்தியில் இந்திரனைக் குறித்து இட்டபொங்கலைத் தானேற்றுக்கொண்டமையால், அவன் கோபங்கொண்டு பெய்வித்தமழையைக் கோவர்த்தனத்தால்தடுத்தது. சோவினருமையழித்தது உஷாகன்னிகையினிடத்திருந்த அநிருத்தனை மீட்கும்படி சென்றபோது அவள் தந்தையாகிய பாணாசுரன் உருத்திரமூர்த்திமுதலிய பரிவாரங்களோடு எதிர்க்கையில் அவர்கள் யாவரையும் முறியடித்து அவனது அக்கினிக்கோட்டையைஅழித்தது. சோவினருமையழித்த மகனெனப் பாடமாயின், பொருள் நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு ரிஷபங்களின் அருமையையழி

த்தீ பெரியானென்பது. மகான் என்பது மகனெனக்குறு க்கலாயிற்று. ஆப்பணி ஆ பணி எனத்தொடைநோக்கிப் பக ரந்தொகுத்தலாயிற்று. பணிமுதனிலைத் தொழிற்பெயர். ப டியை மடியகத்திட்டான், ஆனிரைதாங்கிய எனவும் பாடமு ண்டு. முறையே பூமியைவயிற்றினுள் வைத்தானெனவும், பகக்கூட்டத்தைத் தாங்கும்படி எனவும் உரைக்க. படியெ ன்றூராயினும் ஒருமொழியொழிதன் இனங்கொளற் குரித் தே என்பதனால் மற்றவுலகங்களையுங்கொள்க. மடிதொழில டியாகப் பிறந்தபெயர்; மடிபகுதி, இவினை முதற்பொருண் மைவிகுதி, உகரக்கேடுசந்தி; மடுத்தல்-உண்ணல்; அதாவது தன்னிலடக்கலென்பது. (உ.)

நூல்.

எள்ளற்க வென்று மெளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா-உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(இ-ள்.) என்றும்-நட்பாகவருங் காலத்திலும், எளியார் என்று - (வலிமுதலியன) குறைந்தவரென்று, எள்ளற்க - (ப கைவனை ஒருவன்) இகழாதிருக்கக்கடவுன், என்பெறினும்- சிறந்தபொருளைப் பெறுவதாயிருந்தாலும், கொள்ளார்கை- கொள்ளத்தகாதவருடைய கைகள், மேல ஆ-(தன்கைகளுக் கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க - (அப்பொருளை) இரவாதிருக்கக்கடவன், உள்சுடினும் - (வறிய குடியிற்பிறந் தார் செய்கை) மனத்தைவருத்தினும், சிறுஇல் பிறந்தாரை- அவ்வறிய குடியிற்பிறந்தவரை, சீறற்க - சீறாதிருக்கக்கடவ ன், கூறுஅல்லவற்றை - சொல்லத்தகாத சொற்களை, விரை ந்துகூறற்க-(சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கட வன். எ-று.

பகைவனை இகழ்தலாவது தீங்குசெய்யானெனத் தேறி மகிழ்தல். என்று வினைவடியாகப்பிறந்த காலப்பெயர்; எ பகுதி, று காலப்பொருண்மைவிகுதி, றகரம் சந்தி, அது ன்கர

மானது ,மெலித்தல்விகாரம். உம்மை முற்றுப்பொருண்மைத் தால் எச்சவினை எஞ்சாமைப்பொருளது. என் என்பது எவ னென்பதன்மரூஉ அன்று; இஃதோர் வினைப்பெயர். இத னொடு பெறினென்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடராகப் புணர்ந்தது. "என்னுனும்" "என்னுக்கு" என மூன்றாவதனுருபும், நான்காவதனுருபும் ஏற்றுவருதலுங் காணக. பெறினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. சிற்றில் எ ன்பதில் சிறுமை வறுமைக்காயிற்று. சொல்லத்தகாத சொ ற்கள்பொய், குறளை, வன்சொல், பயனிலாச்சொல். எள்ள ற்க எதிர்மறை வியங்கோள்வினை; எள் பகுதி, ல் சந்தி, அல் எதிர்மறைவிகுதி, அனைத்துமொருபகுதி, க வியங்கோள்வி குதி, லகரம் றகரமானது சந்தி. (க.)

பறைபட வாழா வசுணமா வுள்ளம்
குறைபட வாழார் பெரியோர் - நிறைவனத்து
நெறபட்டக் கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு.

(இ - ள்.) அசுணமா - கேகயப்பறவைகள், பறைபட- பறையினொலி (செவியில்) பட்டால், வாழா - உயிர்வாழா, பெரியோர்-மிக்க மானமுடையோர், உள்ளம்குறைபட-(மா னக்கேட்டால்) தமதுஉளககம் சுருங்கும்படி, வாழார் - உயிர் வாழார், நிறைவனத்து - (மரங்கள) அடர்ந்தவனத்தில், வெ திர் - மூங்கில்கள், நெற்பட்டக்கண்ணே - நெல்லுண்டான போதே, சாம் - அழியும், சால்பு - (பலநற்குணங்களாலும்) நிறைந்தவன், தனக்குஒவ்வாத-தன்னிறைவுக்குத்தகாத, சொ ல்படவாழாது - சொல்லுண்டாக உயிர்வாழான். எ-று.

அசுணமாவையும், வெதிரையும் பெரியாரோடும், சால்பு டையானோடும் வைத்து உடனெண்ணியபடியால் இது புக ழொப்புமைக் கூட்டமென்னும் அணி. முதல்வாக்கியத்தினி றுதியினும், மூன்றும் வாக்கியத்தி னிறுதியிலும் அதுபோல வருஞ் சொற்களை இசை யெச்சமாகக்கொண்டு பொருளு ரைக்கின் அவ்விரண்டும் முக்கிய வாக்கியங்களாகாமல் உவ

மைமிலாக்கியங்களாகல் வேண்டும் ; ஆகவேஇச்செய்யுள் நான்
குபொருளைக்கூற வந்ததாகாமல் நூறபெயரோடு மூரண இர
ண்டுபொருளைக்கூறியதாகுமாதலால் குற்றமென்க. உளம்
வக்கம். பட்டக்கண இறந்தகாலவினையெச்சம் ; படு பகுதி,
கண் இறந்தகாலவினையெச்சவிகுதி ; அ சாரியை, பகுதி மூ
ற்றியலுகரமாதலால் டகரம் இரட்டியது விரித்தல் விகாரம்,
உகரக்கேடும், ககரத் தோற்றமுஞ் சந்தி. வாழாதென்னும்
பொருளின் தொழில் சால்பென்னும் அப்பொருளின் பண்
பின் மேலேற்றப்பட்டது. ஏ தேற்றம். ஒவ்வாத என்பது
ஒவ்வா என ஈறு தொகுத்தலாய் நின்றது. ஒ பகுதி, (இடை
சசொல்) ஆ எதிர்மறைவிகுதி, உடம்படு மெய்யாகிய வக
ரமும், தனிக்குறின் முன்னொற்றாகிய வகரம் இரட்டிய வ
கரமும்சந்தி, அனைத்துமொரு டகுதி, த்விரித்தல் விகாரம்,
அ பெயரெச்சவிகுதி. குறைபட வாழாருரவோரெனவும்,
சொற்பட்டாற்சாவதாஞ் சால்பெனவும் பாடமுண்டு. உர
வோா-அறிவுடையோர். (௨.)

மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா லாய பயன்.

(இ - ள்.) மணிநலம் காண்பார் - இரத்தினத்தினது கு
ணத்தை அறியுமியல்பினர், மண்ணிஅறிப - கழுவிஅறிவார்
கள், மாநலம் காண்பார் - குதிரையினது குணத்தை அறியு
மியல்பினர், பண் அமைத்து-சேணத்தை (அதன்மேல்)பொ
ருந்தவைத்து, ஏறியபின் - ஏறினபின், அறிப - அறிவார்கள்,
பொன்னின் நலம்காண்பார் - பொன்னினது குணத்தை
அறியுமியல்பினர், மாசு அற - குற்றம் நீங்கும்படி, சுட்டு அறி
ப - தீயிற்சுட்டு அறிவார்கள், கேளிரால் - உறவினரால், ஆய
பயன்காண்பார் - உண்டாகும்பயனை அறியும் இயல்பினர்,
கெட்டு அறிப- (தமதுசெல்வம்) கெட அறிவார்கள். எ - று.
காண்பாரென்னும் வினையாலணையும் பெயரை மூன்
னும் பின்னுங்கூட்டுக. இது இடைநிலைப்பொருட்டீவகவணி.

இச்சொல்லில் பகரம் தன்மையையுணர்த்தியது. இவ்வாற ன்றி நிகழ்காலம் இயல்பினால் எதிர்காலமாகவந்த காலவழு வமைதி யெனினும் ஒக்கும். அறிய பல்லோர் படர்க்கை எதி ர்கால வினைமுற்று; இதில் பல்லோர்படர்க்கை எதிர்காலத் தை உணர்த்தியது விகுதியாகிய பகரமாம். ஆய என்பது செ ல்வங்கெட்டகாலத்துக்கேளிரால் ஆகும்பயன் தோன்றியே விடுமென்னுந் துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகவந்த காலவழுவமைதி. பண்ணமைத் தென்றதனால் மா குதிரைக் காயிற்று. பொன்னுக்குமாசாவது வெள்ளிமுதலிய உலோக த்தோடு கலந்தகுற்றம். கேளிர் பண்படியாகப்பிறந்த பல் லோர்படர்க்கைப்பெயர்; கேள் பகுதி, இர் பல்லோர்படர் க்கை விகுதி. கெட்டு கெட என்பதன் திரிபு. பயன்குறிவினை மகரவீற்றுமொழியாதலால் மகரத்துக்கு னகரம் போலியாக வந்தது. (ரு.)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

(இ - ள்.) அகில் - அகிற்கட்டை, கள்ளிவயிற்றின் பிற க்கும் - கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும், ஒள் அரிதாரம் - ஒ ண்மையாகிய அரிதாரம், மான் வயிற்றின் பிறக்கும் - மான் வயிற்றிற் பிறக்கும், பல் விலையமுத்தம் - மிக்க விலையுள்ளமு த்துகள், பெருங்கடலுள் பிறக்கும் - பெருமையாகிய கடலி ற்பிறக்கும், நல் ஆள்-நற்குண நற்செய்கைகளை ஆளுதலுடை யான், பிறக்கும் குடி - பிறக்குங் குடியை, அறிவார்யார்- முன் அறியவல்லவர் யாவர் ஒருவருமிலர். எ - று.

அகில்பிறக்கும், நல்லாள்பிறக்கும் என்பன எழுவாய் த்தொகா நிலைத்தொடர்களாதலால் நிலை மொழியீற்று மெ ய்கள் இயல்பாயின. அகில் வேறுமரமாயினும் முதிர்ந்த கள்ளியினுள்ளீடு அகிற்கட்டை போல மணமுடையதாத லால் அதனை அகிலென்றார். இதனை "பேய்பிளந்தொக்க

நின்றவர் பெருங்கள்ளியின், தாய்பிளர்ந்துக்க காரகில்கு
ளும்" னுங் கம்பநாடர் செய்யுளானுமுணர்க. கள்ளி என்ற
து சதுரக்கள்ளியை. அதனுள்ளிடத்தை வயிறென்றது இல
க்கணை. பல்விலைய என்பதில் பல்என்பது குடத்துள்ள நீரை
ச்சிறிதென்னுமல் சிலவென்பதுபோல மிக்கதென்னும் பொ
ருள்பட வந்ததாதலால் வழக்கெனக. விலைய பொருளடியா
கப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; வில் பகுதி, ஐ தொழிற்
பெயர்விகுதி; இது பொருளுக்குத் தொழிலாகுபெயராய் நி
ன்றது; இதுவே பகுதி, ய் சந்தி, அ பெயரெச்சவிகுதி. ஆள்
தொழிலாகுபெயர். நற்குண நற்செய்கையுடையானை நல்
லாளென்றது ஓர்குறிப்பு. யார் யாவரென்பதன் மரூஉ,
"யாஅருலகத்தோர் சொல்லில்லார்" என்பதுபோல இது
இலரென்னும் பொருளில் வந்தது. (௪.)

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம் - மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

(இ - ள்.) கதிர்மணி - கிரணங்களையுடைய இரத்தினம்,
கல்லில்பிறக்கும் - மலையில் பிறக்கும், உயர்மதம் - மிக்க காம
மயக்கம், காதலி - விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில்
பிறக்கும், இன் சொல்லிலேபிறக்கும், அறநெறி - அறம் நட
க்கும் வழி, மெல் என்ற - மென்மையான, அருளில் பிறக்
கும் - கருணையில் பிறக்கும், எல்லாம் - (அறமுதலிய) எல்
லாம், பொருளில் பிறந்துவிடும் - செல்வப்பொருளில் பிற
ந்துவிடும். எ-று.

அறமுதலிய ஆவன அறமும், இன்பமும், கருதியது முடி
த்தலும், மதிப்பும், புகழுமென்பன. கல் கருவியாகுபெயர்.
மெல்லென்ற இடைச்சொ லடியாகப்பிறந்த இறந்தகாலப்
பெயரெச்சம்; மெல்லென் பகுதி, ற் இறந்தகால இடைநிலை,
அபெயரெச்சவிகுதி. இது ஈறுதொகுத்தலாயிற்று. இது
உயர்முதலிய சொற்களை அடுத்தேவரும்: பிறந்துவிடும் எ

திர்காலச் செய்யுமென்முற்று; ஈ பிறபகுதி, த் சந்தி, து சா-யை, விடுதுணிவுப் பொருண்மைவிகுதி, அனைத்துமொரு குதி, உம் எதிர்கால முற்றுப்பொருண்மைவிகுதி, உகரக்கே-சந்தி. (ரு.)

திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
அறனொக்கு மாற்றி னொழுகல் - பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல்புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

(இ-ள்.) தீது இல் ஒழுக்கம்-(ஒருவர்தம்வருணத்துக்கு) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும்-செல்வத்தை ஒக்கும், ஆற்றின் - இல்லறவழியில், ஒழுகல் - (தவறாமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த துறவறத்தை ஒக்கும், பிறனைக்கொண்டு-(ஆராயாமல்) பிறனொருவனை நட்புக்கொண்டு, கண்மாறல் - புறங்கூறல், கொலைஒக்கும் - கொலையை ஒக்கும், போற்றாதார் முன்னர்செலவு-(ஒரு பயன்பெறவேண்டி) பகைவரிடத்துச் செல்லுதல், புலை ஒக்கும் - (கீழோரது) இழிதன்மையை ஒக்கும். எ-று.

துறவறம் உடம்பினிடத்தும் செல்வத்தினிடத்து முள்ளபற்றை விடுவதாதலால் அதனருமைநோக்கி அதனைப் பெரிய அறனென்றார். கண்மாறல் நான்காம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்; விரிந்தால் கண்ணுக்கு மாறலென விரியும், பொருள் ஒருவனுக்கு எதிரில் இன்சொற்கூறிப்புறத்தில் அதற்கு மாறாகக் குற்றங்கூறல். புலை பண்புப்பெயர், புல்பகுதி, ஐ பகுதிப்பொருள் விகுதி. இவ்விகுதியை வெள்ளை, தொல்லை என்பவற்றிலுங்காண்க. முன்னர் பண்புப்பெயர்; முன்பகுதி, நர் பகுதிப்பொருள் விகுதி, நகரம் னகரமானது சந்தி. ஐ விகுதி ஏற்றுமுன்னை எனவும், அம் விகுதி ஏற்று முன்னம் எனவும், பு விகுதி ஏற்று முன்பு எனவும் வரும். பின்னென்பதும் ஐ விகுதி ஒழிந்த மற்றவிகுதிகளை ஏற்றுவரும். இம்முன்னரென்பது பண்புப் பொருளொழிந்து ஏழாவதனிடப் பொருளாகவந்தது. போற்றாதார் பல்வேறு

படர்க்கை எதிர்மறை வினையாலணையும்பெயர்; போற்று ருதி, (பொருள்வணங்கல்) ஆ எதிர்மறை விகுதி, உகரக் -டு சந்தி, அனைத்துமொருபகுதி, த் எழுத்துப்பேறு, ஆர் ப லோர் படர்க்கைவிகுதி. தகர எழுத்துப்பேறு அச்சொல் ருபேலாதபோதும் வினையாலணையும் பெயரொன்பதற்குச் றந்தகுறி என்க. பிறனைக் கொலையொக்கும் கொன்றுண் -ாற்றல் எனவும் பாடமுண்டு. பிறனைக்கொன்று - அய ைன வருத்தி, உண்ணும் ஆற்றல் - (அவனிடத்தில் பறித்த பொருளால்) சீவனம் பண்ணுகின்ற வல்லமை, கொலைஒக் கும் - (அவனை) கொல்லுதலை ஒக்கும். எ-று. உண்ணுமெ ன்னும் பெயரொச்சம் ஆற்றலென்னும் கருவிப்பெயர் கொ ண்டது. (சு.)

> கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
> டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
> செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
> காப்பார்க்கு மில்லை துயில்.

(இ-ள்.) கள்வம் என்பார்க்கும் - (பிறர்பொருளை) கள செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல் லை - நித்திரையில்லை, காதலிமாட்டு - விரும்பப்பட்ட நாயகி யினிடத்து, உள்ளம்வைப்பார்க்கும்-உள்ளத்தை (இடைவி ாது) வைப்பவருக்கும், துயில் இல்லை - நித்திரையில்லை, ஒ -பொருள் - ஒள்ளியபொருளை, செய்வம் என்பார்க்கும்- தேடுவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை-நித்திரை யில்லை, அப்பொருள் காப்பார்க்கும்-தேடியபொருளை (கள் -ர்கொள்ளாமல்) காப்பவர்க்கும், துயில் இல்லை-நித்திரையி ல்லை. எ-று.

இந்நால்வருக்குந் துயிலில்லை எனவே அருத்தாபத்தியால் கள்ளே மென்பார்க்குந் துயிலுளது காதலிமாட், டுள்ளம் வையார்க்குந் துயிலுள தொண்பொருள், செய்யேமென்பார் -க்குந் துயிலுண்டுறுபொருள், காவார்க்குமுண்டு துயில். என் ன்க. கள்வம் தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்

று. இதன் முதனிலையடியாகக்கட்டல், கட்ட, கட்டு, கட்டான் என வினைவிகற்பம்பிறக்கும். துயில் முதனிலைத்தொழிற்பெயர். விகுதிபெறின்துயிலல், துயில்கை, துயில்வு, துயிறல் எனவரும். ஒருவனைப் பலருள்ளும் ஒளியுடையவனுக்குதலால் ஒண்பொருளென்றார். இது பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் ஒண்மையாகிய பொருளென விரியும். இல்லை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாயினும் இங்கு ஒன்றன்பாற் படர்க்கைக் குரியதாய்நின்றது. உம்மை நான்கனுள் முதலிலுள்ளது எதிரதுதழீஇய எச்சவும்மை, ஈற்றிலுள்ளது இறந்ததுதழீஇய எச்சவும்மை, இடையேநின்ற இரண்டில் ஒவ்வொன்றும் முன்னின்றதைநோக்க இறந்ததுதழீஇய எச்சவும்மையும், பின்னின்றதை நோக்க எதிரதுதழீஇய எச்சவும்மையுமாம். (எ.)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங்
காதலிக்க
றற்றார்முற் றோன்றா வுறாமுதல் - தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

(இ-ள்.) கற்றார்முன் - (நூல்களை) கற்றறிந்தவரிடத்து, கழிவு இரக்கம்-கழிந்தபொருளுக்கு இரங்குதல், தோன்றா-உண்டாகா, காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றார்முன் - தேடத்தொடங்கினாரிடத்து, உறாமுதல்-(அப்பொருள்) கிடையாதகாரணங்கள், தோன்றா-உண்டாகமாட்டா, தெற்றென - தெளிய, அல்லபுரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச்செய்தவர்க்கு, அறம்தோன்றா - அறசெய்கைகள் தோன்றமாட்டா, வெகுண்டார்முன் - கோபித்தவரிடத்து, எல்லாம் - (பிறர்கூறும்) நன்மைகளெல்லாம், தோன்றாகெடும்-தோன்றாதனவாகிக் கெடும். எ-று.

காதலித்த என்னும் பெயரடியாகப்பிறந்த பெயரெச்சம் ஈறுதொகுத்தலாய் நின்றது. கழிவு தொழிலாகுபெயர். காரணம் காரியத்தின் முன்புள்ளதாதலால் அதனைப் பண்பாகுபெயரால் முதலென்றார். ஒன்று எண்ணலளவை யா

குபெயர். பின்னே அறமென்றமையால் அல்லவென்னும் பண்படியாகப் பிறந்தபெயர் தீவினைக்காயிற்று ; இது குறிப்பு வினைப்பெயருமாம், பொருள் கழியுமுன் பலவகையாலும் உபகார முடைமைபற்றி அப்பலவகையுங் கருதி யிரங்குதலால் இரக்கத்தையும், காதலித்த ஒன்றை அடையாமைக்கு இடையூறுகளாகிய ஏதுக்கள் பலவுண்டாதலால் மூதலையும் பலவின்பாலாற் கூறினார். முதல் தோன்றாமையாவது அடைய வேண்டுமென்னும் அவாவால் அவ்வேதுக்களை நினையாமை. அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தனசெய்தலும், விலக்கிய ஒழிதலுமேயாயினும் விலக்கியவற்றை அல்ல என முற்கூறினமையின் 'பின்னே அறமென்றது விதித்தனவற்றை எனக்கொள்க. தெற்றெனஅல்லபுரிதல் அறிந்தும் அல்லவற்றைச்செய்தல். ஈற்றில்உள்ள தோன்றா வினைமுற்று வினையெச்சமானது. தோன்றாக்கெடுமெனப்பாடமாயின் தோன்றாதென்னும் வினையெச்சத்திறு தொகுத்தலெனக்கொள்க. உற்றார் முற்றோன்றாவுறுமதுவெனவும், உராவுதல்எனவும் பாடமுண்டு. அவற்றிற்கு முறையே துன்பங்களும், கோபித்து உரத்துப்பேசுதலும் எனப் பொருளுரைக்க. அவை தோன்றாமையாவது விரும்பினபொரு ளொன்றைத்தேடத் தொடங்கினவர் துன்பங்களை இன்பங்களாகக் கொள்வாரென்பதும், பிறர்செய்யும் அவமதிப்புக்குக் கோபங்கொள்ளா ரென்பதும் கருத்தாகக் கொள்க. (அ.)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணிதான்
செல்லு முலகத்த தாம்.

(இ-ள்.) நிலத்துக்கு- மருதநிலத்துக்கு, நெல்லும் கரும்பும்- நெற்பயிரையும் கரும்பின்பயிரையும், அணி என்ப-அழ்கென்றுசொல்லுவர், குளத்துக்குத்தாமரை - குளத்தினுக்குத் தாமரைமலரை, அணிஎன்ப-அழகென்று சொல்லுவர், பெ

ன்மை நலத்துக்கு-பெண்தன்மைக்குரிய கற்பாகிய நன்மைக்கு, நாணம்-நாணமுடைமை, அணியென்ப-அழகென்றுசொல்லுவர், தனக்கு அணி- (அக்கற்புடையாளோடுகூடிய) ஒருவனுக்கு அழகாவது, செல்லும் உலகத்தது என்ப - இனிச் செல்லும் உலகத்துக்குத் துணையாகிய அறமென்று சொல்லுவார். எ - று.

நெல்லுங்கரும்பும் அணியென்றமையால் நிலம் மருதநிலத்துக்காயிற்று. நெல்கரும்பு இரண்டும் காரணவாகுபெயர். தாமரை சாதியொருமை; அது முதலாகுபெயர். பெண்மை கட்புலனாகியதோர் அமைதித்தன்மை என்பர் நச்சினார்க்கினியார். பெண்மையை முற்கூறியபடியால் தனக்கென்பது ஆண்மகனுக்காயிற்று. உலகத்தது இடமடியாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயர்; உலகம் பகுதி, அத்து, அ சாரியை, து ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதியீற்று மகரக்கேடும், சாரியை முதலீறுகளிலுள்ள அகர உகரக்கேடும் சந்தி. இது செல்லுமென்ற குறிப்பால் அறத்துக்காயிற்று. அழகைத்தருவனவற்றை அழகென்றது காரணத்தைக் காரியமாகக் கூறுவதோருபசாரவழக்கு. தாமரைப்பன்மை எனவும், நலத்துக கணியென்ப நாணந்தனக்கணி, தான்செல்லுலகத்தறம் எனவும் பாடமுண்டு. (௬.)

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம் - கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

(இ - ள்.) களிற்றை-யானையை, கந்தின் பிணிப்பர்-(பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம் வசப்படுத்துவார், மாநாகம்-சிறந்த சர்ப்பத்தை, கதம்தவிர - அதன்கோபம் நீங்கும்படி, மந்திரத்தால் பிணிப்பர் - (மாந்திரியர்) மந்திரத்தினால் தம் வசப்படுத்துவார், கயத்தை-கீழ்மக்களை, கொந்தி- (அரசர் ஆயுதங்களால் அவருடலை) கொத்தி, இரும்பின் பிணிப்பர் - இருப்புவிலங்கால் தம் வசப்படுத்துவார், சான்றோரை - (கல்வி

யறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்துவி டல் - (அறிவுடையோர்) இன்சொற்களால் தம் வசப்படுத் திவிடக்கடவர். எ-று.

பிணித்தல் கட்டுதல். இரும்பு காரணவாகு பெயர். கொ ந்தி இறந்தகால வினையெச்சம்; இச்சொல்லைப் பெயர்ச்சொ லாகக்கொண்டு கொந்தி யிரும்பென்பதனைக் கொந்தியாகிய இருப்பாயுதமெனப் பொருள்பட இருபெயரொட்டுப் பண்பு த்தொகைநிலைப் புணர்ச்சியெனக் சொள்ளலுமாம். கொந்து பகுதி, இ கருவிப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. நயம் பண்பாகுபெயர்; நயம் பெருமை, இது சீழ்மக்களுக் கானது வழக்கெனல் நச்சினார்க் கினியார் மதம். நன்னூ லார் மங்கல வழக்கென்பர். ஐந்தனுருபு மூன்றும், மூன்றனு ருபொன்றும் கருவிப் பொருளில்வந்தன. இரும்பிற்பிணி ப்பர் கயவர்ச் சான்றோரை எனவும் பாடமுண்டு. (கo.)

> கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
> நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டு மென்றும்
> விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்
> ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(இ - ள்.) பிறர்செய்தகடிய - (ஒருவர் தமக்கு) மற்ற வர்செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்றாமை வே ண்டும் - வயிரங்கொள்ளாதிருத்தலே தகுதி, பிறர்செய்த நன் றியை - (தமக்கு) பிறர்செய்த உபகாரத்தை, சொல்லாது - நினைக்காமல், கொளல்வேண்டும் - மறவாதிருத்தலே தகுதி, என்றும் - (பிறர்) பொறுக்கக்கூடாத தீங்கு செய்த காலத் தும், தங்கண் வெகுளி - தம்மிடத்துண்டாகும் கோபத்தை, விடல்வேண்டும் - ஒழிதலே தகுதி, ஆக்கம் - (தமது) செல்வ த்தை, சிதைக்கும் வினை - கெடுக்குந் தொழிலை, அடல்வே ண்டும் - கெடுத்தலே தகுதி. எ - று.

கடிய உரிச்சொலடியாகப்பிறந்தபெயர்; கடி பகுதி, ய் சந்தி, அ பலவின்பாற்கை விகுதி. பண்படியாகப்பிறந்த

பெயரெனின், அ என்னும் பலவின்படர்க்கை விகுதிப்புண ர்ச்சியில் கடுமை என்னும் பகுதி, மை விகுதிகெட்டு, இடை உகரம் இகரமாகி, யகரமாகிய உடம்படு மெய்ச்சந்திபெற்ற தென்க. கொல்லாதென்னும் எதிர்மறைவினையெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. உம்மை உயர்வுசிறப்போடு முற்று ப்பொருளது. வெகுளி தொழிற்பெயர்; வெகுள் பகுதி, இ புடைபெயர்ச்சிவிகுதி. ஆகுதற்குக் காரணமாகிய செல்வத் தை ஆக்கமென்றது காரியவாகுபெயர். தொழிலாகு பெயரு மாம். இயல்பாகிய ஆ என்னும்பகுதி குச்சாரியை பெற்று நின்றமையால் அம் விகுதிப்புணர்ச்சியில் ஆக்கமென விகா ரப்பட்டது. வினை முதனிலைபெறுதொழிற்பெயர். வேண் டும் தேற்றப்பொருள் பட்டேவரும் தொழிற்பெயர். நன்றி யை நன்றுக்கொளல் வேண்டுமெனப் பாடமாயின், ஒருவர் செய்த உபகாரத்தை உறுதியாக மனத்தில்கொள்ளுதல்வே ண்டுமென உரைக்க. (௧௧.)

*பல்லினு னோய்செய்யும் பாம்பெலாங் கொல்லேறு
கோட்டானோய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய்.

(இ-ள்.) பாம்பு எல்லாம் - எல்லாச்சாதிப்பாம்புகளும், பல்லினால் நோய்செய்யும்-(தீங்குசெய்த பிறரை) விஷப்பல் லால் துன்பஞ்செய்யும், கொல்ஏறு-கொல்லுமியல்புடைய எருதுகள், குறித்தாரை - (நோய்செய்ய) குறிக்கப்பட்டவ ரை, கோட்டால் நோய்செய்யும்-தம் கொம்புகளால் துன் பஞ்செய்யும், மகளிர் - பெண்கள், ஊடி - பிணங்கி, முகத் தால் நோய்செய்வர்-(தம் கணவரை) முகக்குறியால் துன்ப ஞ்செய்வர், முனிவர் - முனிவர்கள், தவத்தால் - தவத்தின் வல்லமையால், நோய்தருகுவர்-(தம்மை அவமதித்தவருக்கு) துன்பத்தைக்கொடுப்பார். எ-று.

பாம்பு, எருது, மகளிர்செய்யும் நோய்க்கும், முனிவர் செய்யும் நோய்க்கும் வேற்றுமையுள தென்பதும், எல்லா

வுயிர்களையும் தம்மோடொக்க நோக்குபவரென்பதுந் தோன்றத் தவத்திறைச்செய்குவர் நோயென்றது தவத்தாற்றருகுவர் நோயென்றார். அந்நோய்களோடு இந்நோயிடை வேறுபாடுமையாவது பாம்புசெய்நோய் மந்திரமருந்துகளாலும், எருதுசெய்நோய் மருந்தினாலும், மகளிர்செய்நோய் இன்சொற்கூறியிரத்தல், வணங்கல்களினாலும், பரிகாரமுண்மையும், முனிவர்செய்நோய்க்கு அவர்களருளன்றி அவ்வாறு வேறுபரிகாரமின்மையுமாம். மகளிர் பொருளடியாகப்பிறந்தபெயர்; மகபகுதி, ள் விகுதி, இரண்டுறுப்பால் முடிந்துநின்ற பெண்பாற்படர்க்கைப்பெயர் பகுதி, இர்பல்லோர்படர்க்கைவிகுதி; ளகரவிகுதி எனக்கொள்ளாமல் அள்விகுதி எனக்கொள்ளின் விகுதிமுதல் அகரக்கேடு பெற்றதென்றுவது, பகுதியீற்று அகரக்கேடு பெற்றதென்றுவதுகூறலுமாம்; அக்கேட்டைமுறையே முதற்குறை, கடைக்குறையென்க. நோய்செய்யுமென்பதை ஒருசொல்போலக் கொள்ளாது நோனைச் செய்யுமென இரண்டாவதை விரிக்கின் குறித்தானை என்னும் இரண்டாவதைக் குறித்தாருக்கு என நான்காவதாகவாவது குறித்தாரிடத்து என ஏழாவதாகவாவது திரித்துக்கொள்க. தருகுவரென்பது இடவழுவமைதி. நன்- பொ- சூ- "தரல்வரல்கொடை செலல்சாரும்படர்க்கை, எழுவாயிரண்டும் எஞ்சியஏற்கும்" கொல்களிறு கோட்டானுஞ்செய்யும் எனவும் பாடமுண்டு. (கஉ,)

> பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
> பெண்ணன்று பீடிலா மாந்தரின் - பண்ணழிந்
> தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரின்
> தீர்தலிற் றீப்புகுத னன்று.

(இ-ள்.) பண் அமையா-நரம்பினுல்கட்டுத லமையாத, யாழின் - யாழிசையினும், பறைநன்று - பறையோசைநன்மையுடையது, பீடு இல்லாதமாந்தரின்-பெருங்குணமில்லாத ஆடவர் தன்மையினும், நிறை நின்ற - மனத்தைக்கற்புவழியில் நிறுத்தலமைந்த, பெண்நன்று-பெண்தன்மை நன்மை

யுடையது, பண்அழிந்த-பதனழிந்த உணவுகளை, ஆர்தலின்-உண்ணுதலினும், பசித்தல்-பசியால்வருந்துதல், நன்று-நன்றுடையது, பசைந்தாரின் - உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின்-நீங்கி உயிர்வாழ்வதினும், தீப்புகுதல் நன்று-தீயில் நுழைதல் நன்மையுடையது. எ-று.

பறை, யாழ்கருவியாகுபெயர். பெண், நித்தியபருவசனமாகியமாந்தர் பொருளாகுபெயர்கள். சுற்றிலுள்ள பண் என்னும் முதனிலைத்தொழிற்பெயர் சமைத்தலால் ஆகும் பதத்துக்கு ஆதலால் காரணவாகுபெயர். தொழிலாகு பெயருமாம். ஐந்தனுருபுநான்கும் எல்லைப்பொருளன. பசைந்தாரினென்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. பெருங்குணம் செய்தற்கரியவற்றைச் செய்தல், கருவமில்லாமை, பிறர் குற்றங்கூறாமை முதலியாற்குணம். நன்று நான்கும்பண்பாகப் பிறந்தகுறிப்புவினைமுற்று, மை யீறுகெட்டுநின்ற நல்பகுதி, று ஒன்றன்பட்ர்கைவிகுதி, பகுதியீற்று லகரம் னகரமாகத் திரிந்தது சந்தி, அது னகரமானது மெலித்தல்விகாரம். இங்கு நன்மை இன்பமெனக்கொள்க. நிறைதொழிற்பெயர்; நிறுபகுதி, ஐ புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடு சந்தி. நில் என்னுந் தன்வினைப்பகுதியை பிறவினைப்பகுதியாக்கியது றுவ் விகுதிஎன்க. நிறைநின்ற எழுவாய்த்தொகாநிலைத் தொடராகக் கொள்ளுதலே அன்றி, நிறையில்நின்ற எனப்பொருள்கொண்டு ஏழாம் வேற்றுமைத்தொகை நிலைத் தொடராகக் கொள்ளினும் பொருந்தும். (௯௯.)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியு ளினிதெழூஉம் வன்சொலாம்
காடெழூஉங் கண்ணில் குழியு ளிரவெழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

(இ-ள்.) வண்மை - ஈகையாகியபயிர், வளபபாத்தியுள் வளரும் - (நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில் வளரும், கிளைக்குழாம்-சுற்றத்தின் கூட்டமாகியபயிர், இன்சொற்குழியுள்-இன்சொல்லாகிய பாத்தியில், இனிது எழும் - இ

டையூறில்லாமல்வளரும், வன்சொல் ஆம்கா - கடுஞ்சொல் லாகியசோலை, கண்இல் குழியுள் - கண்ணோட்டமின்மையா கிய விளைநிலத்தில், எழும்-வளரும், இரவு-இரத்தலாகியபயிர், இன்மைக்குழியுள் - வறுமையாகியபாத்தியில், விரைந்து எழும்-விரைவாகவளரும். எ-று.

மூன்றாவது வாக்கியந்தவிர மற்றமூன்றுவாக்கியமும் ஏகதேச வுருவகவணி. உணவுமுதலியனபெற்றே உயிர்வாழ வேண்டுதலால் இரவு விரைந்தெழுமென்றார். பொருளுடையனல்லோரிடத்து ஈகையும், இன்சொல் கூறுவானிடத்துப் பலருமுறவாதலும், தாட்சிணியமில்லாதவனிடத்துக் கடுஞ்சொற்பிறத்தலும், வறியானிடத்து இரத்தற்றொழிலும் உள்ளன ஆமென்பது கருத்தாகக்கொள்க. கிளை உவமையாகு பெயர். கிளைக்குழாம் ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத்தொகை நிலைத்தொடர். கண்ணது தொழிலாகிய ஓடுதலுக்கானது காரணவாகுபெயர்; அதுதான் சென்றபோது அவனோடுபழகினவர் சொல்லியவற்றை மறுக்கமாட்டாத தன்மைக்கானதும் அவ்வாகுபெயரோ ஆம். கண் இல் எழுவாய்த்தொகாநிலைத் தொடராயினும் ஒருசொல்போலநிற்க, இதனோடு குழிஎன்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராகப்புணர்ந்தது. உருவகமாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடரென்றாம். வன்சொற், கரவெழுங்கண்ணில் குழியினெனவும்பாடமுண்டு. பொருள்.—வல்சொல்-கடுஞ்சொல்லால், கரவு- (உடையானுயிருந்தும்) இல்லையெனமறுக்குமபயிர், கண் இல்-தாட்சிணியமின்மையாகிய, குழியின் - பாத்தியில், எழும்-வளரும் என உரைக்க. (௯௪.)

இன்றுமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(இ - ள்.) இன்றுமைவேண்டின் - (ஒருவன்) இழிவை விரும்புவானுனால், இரவு எழுக - (மானங்கெடவரும்) இரத்

தலுண்டாகக்கடவன், இந்நிலத்து - இவ்வுலகில், மன்னுதல் வேண்டின், தான் நிலைபெறுதலை விரும்புவானானால், இசை நடுக-புகழை நாட்டக்கடவன், தன்னொடுசெல்வது வேண்டின் - (மறுமைக்கு) தன்னுடனேசெல்லுந் துணையாகுவதனை விரும்புவானானால், அறம்செய்க-அறத்தைச்செய்யக்கடவன், வெல்வதுவேண்டின் - (தீயசிந்தைகளை) வெல்லுங்கருவியை விரும்புவானானால், வெகுளிவிடல்-சினத்தை விடக்கடவன். எ-று.

இன்னாமை இங்கு இழிவுக்காயிற்று. எழுக என்பது ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவினையாயினும், தன்னொடு என்றமையால் பொதுமைநீங்கி ஆண்பாற்படர்க்கைக் குரியதாய் நிற்கின்றமையால் இரவெழுக என்பதனைத் திணைவழுவமைதிஎன்க. நிலம் தொழிலடியாகப் பிறந்தபெயர்; நில் பகுதி, அம் வினைமுதற் பொருண்மைவிகுதி; அசலை என்னும் வடமொழிக்கும் இதுவேபொருள். மன்னுதல் இடைச்சொலடியாகப்பிறந்த தொழிற்பெயர்; மன்பகுதி. செல்வது, வெல்வது வினையாலணையும் பெயர்; வெல்வதொன்றும் வினைமுதல் வினையைக் கருவியின் மேலேற்றிக்கூறும் வினையாலணையும்பெயர். விடல் வியங்கோள் வினை; விகுதி அல். (௫.)

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.

(இ-ள்.) கலவர் - மரக்கலமுடையார், கடல் - கடலினது, குட்டம் - ஆழமாகிய நீரை, போழ்வர் - ஊடறுத்துச் செல்வர், பாய்மா உடையான்-(போர்முகத்தில் அஞ்சாமல்) பாயுமியல்புள்ள குதிரையையுடையவீரன், படைக்குட்டம்-(பகைவரது) சேனையாகிய கடற்களையை, உடைக்கிற்கும்-உடைக்கமாட்டுவான், தன் உடையான் - (ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம்

- குற்றமில்லாத, தவக்குட்டம் - தவமாகியகடலை, நீந்
- நீந்துவான், கற்றான்-(நூல்களை ஐயமற) கற்றுணர்ந்த
ன், அவைக்குட்டம்-(கற்றவர்கூடிய) சபையாகிய கடலை,
-ந்துவிடும்- தாண்டிவிடுவான். எ-று.

குட்டம பணபுப்பெயர்; குண்டு பகுதி, அம்பகுதிப்பொ
ள் விகுதி, ணகரம் டகரமானது மெலித்தல்விகாரம், உக
ர்க்கேடுசந்தி. இவ்வாறு முடிந்துநின்ற பண்புப்பெயர்கடற்
குட்டம் என்றவிடத்துப் போழ்வர்கலவர் என்றகுறிப்பால்
ஆழநீருக்கும், தவக்குட்டம், அவைக்குட்டம் என்றவிடத்து
நீந்தும், கடந்துவிடும் என்றகுறிப்பால் கடலுக்கும் ஆனது ப
ண்பாகுபெயர். படைக்குட்டம் என்றவிடத்துக் கடலுக்குப்
பண்பாகுபெயராகி, உடைக்கிற்கும் என்றகுறிப்பால் கரைக்
கானது முதலாகுபெயர். மரக்கலம் நீரை ஊடறுத்துச்செல்
வதாதலால் இடத்தின்தொழிலை இடத்துநிகழ்பொருளின் மே
லேற்றிக்கலவர் போழ்வர் என்றார். படைக்குட்டத்தை உ
டைக்கிற்றலாவது தம்சேனை ஊக்கத்தோடு நின்றுபோர் செ
ய்யும்படி ஏவிக் காத்து நின்ற பகைச்சேனைத்தலைவரை அச்
சேனைகளை உடைந்த கடலினீர்போலப் புறங்கொடுத்தோ
டும்படி வெற்றிகொள்ளல். தவக்குட்டம் நீந்துதலாவது ம
னம் புலன்களிற்செல்லாமல் அடக்கவல்லான் கருதியதவம்
முற்றுப்பெறக்காணல். அவைகுட்டம் கடந்துவிடுதலாவது
தான் குற்றமில்லாமலும், சுருக்கமாயும், பொருள் விளங்கு
வதாயும், செவிக்கினியதாயும், சிறந்தபயன் தருவதாயுமுள்
ள சொல்லைச்சொல்லி அவையிலுள்ளோரை மகிழ்வித்தல்.
கலவர் பொருளடியாகப்பிறந்தபெயர்; கலம் பகுதி, அர் ப
ல்லோர் படர்க்கைவிகுதி, மகரக்கேடும், வகரத்தோற்றமுஞ்
சந்தி. இது அறுமுகவ னென்பதுபோலவந்தது. உடைக்கி
ற்கும் செய்யுமென்முற்று; உடை பகுதி, க் சந்தி, இல்.ஆற்
றற் பொருண்மைவிகுதி, அனைத்துமொருபகுதி, கு சாரியை,
உம் ஆண்பாற்படர்க்கை எதிர்காலமுற்றுப் பொருண்மைவி

குதி, உகரக்கேடு சந்தி. இவ்வினை பலர்பாலல்லாத மற்ற ல்களுக்குப் பொதுவாயினும் உடையானென்னும் சிறப்பு பெயரால் பொதுமைநீங்கி அப்பாலுக்குரியதாயிற்று. கட துவிடும் அவ்வினைமுற்று; கட் பகுதி, த் சந்தி, து சாரியை விடுதுணிவுப் பொருண்மைவிகுதி, சந்தித்தகரம் நகரமான மெலித்தல் விகாரம், அனைத்துமொருபகுதி, உம் விகுதியு அப்பொருளது, உகரக்கேடு சந்தி. (கரு.)

பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளைநலந் தூக்கில்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தம்
தகுதி யிறுவாய்த் துயிர்.

(இ-ள்.) நட்பு - நட்புகள், பொய்த்தல் - பொய்யாக ஒழுகுதலாகிய, இறுவாய - இறுதியுடையன, இளைநலம்-இளமைப்பருவத்தினழகு - கணமெய்த்து ஆக-(காண்போர்) கண்களுக்கு மெய்ம்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து-மூப்பாகிய இறுதியையுடையது, செல்வங்கள்-செல்வங்கள், தூக்கு இல்-(இம்மை மறுமைப்பயன்களை) ஆராய்தலில்லாத, மிகுதி இறுவாய-வேண்டாத செய்கையாகிய இறுதியை யுடையன, தத்தம்-தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து உயிர் - தகுந்தவாழ்நாளாகிய இறுதியையுடையதுயிர். எ-று.

நட்புக்கொண்ட இருவருள் ஒருவனிடத்துப் 'பொய்யொழுக்க முண்டானவளவில் அந்நட்புக் கெடுமென்பதும், இளமைப் பருவத்திலுண்டாகிய அழகு மூப்புவந்த வளவில் பிரத்தியட்சமாகக் கெடுமென்பதும், பழியையும் பாவத்தையுந் தருவதாகியசெய்கை ஒருவனிடத்துணடானவளவில் அவன் செல்வங்கெடுமென்பதும், இருவினைப்பயன்களையும்,அநுபவிக்கும்படி நியமித்த நாள்முடிவில் உயிர் உடலைவிட்டு நீங்குமென்பதும் கருத்தாகக்கொள்க. இறுவாய இடமடியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்புவினைமுற்று. வினைத்தொகைநிலைத் தொடராகிய இறுவாய் என்பது ஒருசொல

-- தன்மைப்பட்டுப் பகுதியாய்நின்றது. வாயென்பதை டைச்சொலென்பாருமுளர். இச்சொல் பொய்த்தலென் தனோடு பண்புத் தொகைநிலைத் தொடராகப் புணர்ந்தது. ற்றவைகளையும் இவ்வாறேகொள்க. இனை பண்புப்பெயர்; பகுதி, ஐ பகுதிப்பொருள் விகுதி, பகுதி யீற்று அகரக் கடு கடைக்குறை. தூக்கு முதனிலைத்தொழிற்பெயர். தத் ம் பன்மைப்பொருட்டாகிய அடுக்கு. அது காரணவாகு பெயர். (கஎ)

> மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
> வினைக்காக்கஞ் செவ்விய னாதல் சினச்செவ்வேல்
> நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கம்
> கேளி ரொரீஇ விடல்.

(இ-ள்.) மாண்டமகளிர் - நற்குண நற்செய்கையுடைய பெண்டிரிருத்தல், மனைக்கு ஆக்கம் - (கொண்டவனுடைய) மனைக்கு உயர் வைத்தருவதாகும், சினம் - கோபமமைந்த, செம்வேல் - (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிற மாகிய படைத்தொழிலில், ஒருவன் செவ்வியன் ஆதல் - ஒருவன் தேர்ச்சியுடையவனாகுதல், வினைக்கு ஆக்கம் - போரு க்கு உயர்வைத்தருவதாகும், இவ்வேந்து - இவ்வரசன், நல் லன் என்றல்-நல்லவனென்று (குடிகளால்) சொல்லப்படு தல், நாடு ஆக்கம் - (அவனாளும்) நாட்டுக்கு உயர்வைத்தரு வதாகும், கேளிர் - சுற்றத்தாரை, ஒரீஇ விடல் - (ஒருவன்) நீங்கிவிடுதல், கேடு ஆக்கம் - (அவனுக்குவரும்) கேட்டுக்கு உயர்வைத்தரும் (மிக்ககேட்டை விளைக்கும்) எ-று.

ஆக்கம் ஆகுதல்; அது உயர்தலுக்காயிற்று. பெரியன் நாடு என்பதுபோல நின்றசெவ்வியன் செவ்வேல் என்பத னைச் 'செவ்வேல் செவ்வியனெனக்கூட்டுக; பொருள்விளங் கும்படி ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவை த்து உரைத்தாலும், செவ்வேல் செவ்வியன் என்பது திணை வழுவமைதியாகக்கொண்டு எழுவாய்த்தொகாநிலைத் தொட ரென்க. செவ்வியன் பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமு

ற்று; செவ்வி திருத்தம். 'அது தேர்ச்சிக்காயிற்று' என்றல் செயப்பாட்டு வினைத்தொழிற்பெயர்: இது படுவிகுதி முதலியன தொகுத்தலாய்நின்றது. கேடு முதனிலைதிரிந்ததொழிற்பெயர். கேளிர் பண்படியாகப்பிறந்தபெயர்; கேண்மை என்னும் பகுதி, இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப்புணர்ச்சியில், மை விகுதிகெட்டது. ஓரீஇவிடல் ஒரு பகுதி, இ சாரியை, உகரக்கேடு சந்தி, சாரியை இகரம் ஈகாரமானதும், அதுசொல்லிசை நிறைக்க அளபெழுந்ததும் நீட்டல்விகாரம், விடுதுணிவுப் பொருண்மை விகுதி, அனைத்துபொருபகுதி, அல் புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. (கஅ.)

பெற்றா னதிர்ப்பிற் பிணையன்ளு டானதிர்க்கும்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும் பாரிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பின்
பாட லதிர்ந்து விடும்.

(இ-ள்.) பெற்றான் - கொண்டகணவன், அதிர்ப்பின்-(இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானாயின், பிணைஅன்னாள்- பெண்மானை ஒத்த அவன்மனையாளும், அதிர்க்கும் - (அவ்வொழுக்கத்தினின்று) கலங்குவாள், கற்றான் அதிர்ப்பின் - (நூல்களை) கற்றுணர்ந்தவன் (அறிவு) கலங்குவானாயின், பொருள்அதிர்க்கும்-(அந்நூலாலுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும், பாரியமண் அதிர்ப்பின் - தன்பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமையாமல்) கலங்குவாராளுல், மன்னவன்கோல் அதிர்க்கும்-அரசனுடைய ஆளுமுறையுங்கலங்கும், பண் அதிர்ப்பின்-யாழின் கட்டு நிலைகலங்குமாளுல், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும். எ-று.

அதிர்ப்பு நடுக்கமாதலால் கலக்கமெனப்பொருள் உரைக்கப்பட்டது. பொருளதிர்த்தலாவது கற்றவன் அறிவின் கலக்கத்தால் தான் நூற்பொருளை முன்னோடு பின்முணரக் கூறல். அரசன் கொடுமைசெய்வானாயின், அவனாட்டுக்குடி

கல்கலக்கத்தை யடைவார்கள்; அடையவே இவனது ஆணை யைக்கடந்து நடப்பார்களாதலால் கோலதிர்ப்ப தாயிற்று. அதிர்ப்பின் என்பது காரணப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது: அதிர் பகுதி, ப் சந்தி, ப் விரித்தல்விகாரம், இன் வினையெச்சவிகுதி, இதுவே காலங்காட்டியது. பிணை மான், புல்வாய், நாய், பன்றி இவற்றின்பெண்ணுக்கு மரபுபற்றிய பெயராயினும் மாதருடைய கண்களுக்கு மான் கணகளையே தொழிலுவமமாகக்கூறுதல் மரபாதலால் அதற்குப் பெண்மானெனப்பொருள் கூறப்பட்டது. மரபுபற்றிய பெயரென்பது "வடிவுள வுழைபுலவாய்நாய்வராகமே பிணையின்வைக்கும்" என்னும் நிகண்டாலும் காண்க. பாரிய பண்படியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; அ என்னும் பெயரெச்சவிகுதிப் புணர்ச்சியில் பருமை என்பது மை யீறு கெட்டு, பாருஎன ஆதிநீண்டு, பாரிஎன இடைஉகரம இகரமாகி, யகர உடம்படு மெய்பெற்றது. மண் நாட்டுக்குக்கருவியாகுபெயராய், அது தன்னிலுள்ளாருக்கு இடவாகுபெயராய்நின்றது. மன்னவன் இடைச்சொலடியாகப் பிறந்தபெயர்; மன்பகுதி. கோல் உவமையாகுபெயர். அன்னுள் என்பதனீற்றில் எதிரது தழீஇயதும், பாடல் என்பதனீற்றில் இறந்தது தழீஇயதும், பொருள், கோல்என்பவற்றினீற்றில எதிரது தழீஇயதனோடு இறந்தது தழீஇய எச்சஉம்மையும் தொகுககப்பட்டன. பற்றிய, மன்னனிர்ப் பினெனவும் பாடமுண்டு. பறறிய-கைக்கொண்ட எனவுரைக்க. (௧௬.)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(இ-ள்.) மனைக்குப்பாழ் - வீட்டுக்குப்பொலி வின்மையாவது, வாணுதல் இன்மை - (நற்குணநற்செய்கையுடைய) மனையாளையுடைய தாயிராமை, தான்செல்லும் திசைக்குப் பாழ்-(ஒருவன்) தான்சென்ற இடத்துக்குப்பொலி வின்மை

யாவது, நட்டோரை இன்மை - (தன்னுடன்) நட்புக்கொண்டவரை உடையனுயிராமை, இருந்த அவைக்குப்பாழ்-(பலர்) கூடினசபைக்குப் பொலிவின்மையாவது, மூத்தோரை இன்மை-(கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்தவரை உடையதாயிராமை, தனக்குப்பாழ் - தனக்குப்பொலி வின்மையாவது, கற்று அறிவு இல்லாஉடம்பு - (பலநூல்களையும்) கற்று அறிதலில்லாத உடம்பினனுயிருத்தல். எ-று.

கற்றறிவில்லாமை உடலொடுகூடிய வுயிர்க்கே ஆதலால் அவ்வுயிர்க்கும் உடம்புக்கும் உளதாகிய ஒற்றுமையைக்கருதி உடலின்மேலேற்றிக் கற்றறிவில்லா வுடம்பென்றார். வாணுதல் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர்; விரிந்தால் வாளாகிய நுதலையுடையாளெனவிரியும். இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயருமாம்; பொருள் ஒளியைப்பெற்ற நெற்றியையுடையாள் என்பது. இன்மை குறிப்புத்தொழிற்பெயர். இது செயப்படுபொருள் குன்றியும், குன்றுதும்வரும். இங்குச்செயப்படுபொருள் குன்றுமல்வந்தது. இதற்குஎழுவாய் பாழ். மூத்தோர் இறந்தகால வினையாலணையும்பெயர்; பகுதி முதிரொன்பதன் மரூஉ-ஆகி மூ. விகுதி ஆ ஓ ஆனது செய்யுள்வழக்கம். (உ௦.)

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப் பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்
கூடார்கட் கூடி விடின். [கும்

(இ-ள்.) ஒற்றுமைஇன்மை- (தகுந்தவரோடு) ஒருமைப்பாடில்லாமை, மொய்சிதைக்கும் - தன்வலியை அழிக்கும், பொய் - பொய்யானது, ஒருவனைப் பொன்போலும் மேனியை-(தன்னைக்கூறிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, சிதைக்கும்-அழிக்கும், பெய்தகலம் - (பாலை) வார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின்சுவையைச்சிதைக்கும்-அப்பாலினது மதுரத்தை அழிக்கும், கூடார்கண்-

நட்புச்செய்த் தகாதவரிடத்து, கூடிவிடின்-நட்புச்செய்து விட்டால், குலம் சிதைக்கும்-(அந்நட்பானது) தன்குலத்தின து பெருமையை அழிக்கும். எ-று.

ஒருமைப்பாடு தான் அவனென்னும் வேறுபாடில்லாமை ஒருமைப்பாடிலராயின், இஃதறிந்துபகைவர் அவனை எளிதி ல்வெல்வராதலால் ஒற்றுமையின்மை மெய்சிதைக்குமென வும், பொய் மறைக்கப்படாதாதலால் பிறராலறியப்பட்ட போது அதற்குநாணும் நாணத்தால் கூறினவன்மேனிவாடும் அவ்வாட்டம் பொய்காரணமாக உண்டாவதாதலால் பொய் மேனியைச் சிதைக்குமெனவுங்கூறினர். ஒற்றுமை பண்புப் பெயர்; பொருள் ஒன்றுந்தன்மை. ஒன்றுவலித்துநின்ற ஒற் றுபகுதி, மை பகுதிப்பொருள் விகுதி. இதனடியாக ஒற்றி னுன், ஒற்றி, ஒற்றின, ஒற்றுதல் எனவினைகள் பிறக்குமாறு காண்க. கண்ணுட்குத்திஞன் என்பதுபோலக் கூடார்கட் கூடிவிடின் என்பது செயப்படுபொருள் இடப்பொருளாய்நி ன்றது. பாலின்சுவையை என்பதற்குப்பாலினது இனிய சுவையை எனஉரைத்தலுமாம். (௨௧.)

புகழ்செய்யும் பொய்யா விளக்க மிகந்தொருவர்ப்
பேணுது செய்வது பேதைமை காணுக்
குருடனுச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

(இ-ள்.) பொய்யாவிளக்கம் - பொய் சொல்லாமையா கிய விளக்கம், புகழ்செய்யும்- புகழைஉண்டாக்கும், பேதை மை - யாதும் அறியாமை, ஒருவர்பேணுது - பெரியாரொ ருவரை (துணையாக) விரும்பாமல், இகந்து - (அறத்தினெல் லை) கடந்து, செய்வது - (தீங்கினை) செய்யவல்லது, மம்மர்- (கல்லாமையால்வரும்) மயக்கம், காணுத - (செல்லும்வழியி னியல்பை) அறியாத, குருடன் ஆக செய்வது-(ஒருவனை) கு ருடனுகச் செய்யவல்லது, கற்பு - கல்வியறிவு, இருள் தீர்ந்த- மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணர் ஆக செய்வது - கண்களு ...ராகச்செய்யவல்லது. எ-று.

தொழிலும் பண்பினுமடங்குமாதலால் பொய்யாவிளக்கமென்பதனைப் பண்புத்தொகை நிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றிப்பொய்யாத என்பது ஈறுதொகுத்தலாய்நின்றபெயரெச்சத் தொடராகவுங் கொள்ளலாம். விளக்கமென்றது பொய்யாமையாகிய செயலை ஆதலால் பொய்யாத என்னும் பெயரெச்சம்செயற்பெயர்கொண்டதென்க. பொய்யாமையுடையானை அது யாவரும் அறிந்து நன்குமதிக்கச் செயதலால் விளக்கமென்றார். விளக்கம் தொழிலடியாகப் பிறந்த பெயர்; விளங்குபகுதி, அம் வினைமுதற் பொருண்மைவிகுதி, மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி. அதனைத் தொழிற்பெயராகக்கொண்டு விளக்கந்தருஞ்சுடரை விளக்கமென்றதனால் காரியவாகுபெயரெனவும், தொழிலாகுபெயரெனவும் கொள்ளலுமாம். விளக்கமென்பதில் அம் புடைபெயர்ச்சி விகுதி, மற்றவுறுப்புகளை வினைமுதற்பொருண்மை விகுதிப்புணர்ச்சிக்குச் சொல்லியதுபோலவேசொல்லுக. கற்பு காரணவாகுபெயர்; தொழிலாகுபெயரெனினும் ஆம். குருடனாக, கண்ணராக என்பவற்றில் அகரவிகுதியும், அது பற்றிவந்தசாரியையும், சந்தியும்தொகுக்கப்பட்டன. (உஉ.)

மலைப்பினும் வாரணந் தாங்கு மலைப்பினும
அன்னையென் றோடுங் குழவி சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டார்
உடனுறையுங் காலமு மில்.

(இ-ள்.) மலைப்பினும் - (தன்றலைவன்) போர்செய்தாலும், வாரணம் தாங்கும் - யானை (அவனை) தாங்காநிற்கும், அலைப்பினும் - (தன்னைத்தாய்) அடித்து வருத்தினாலும், குழவி - பிள்ளை, அன்னையென்று ஓடும் - தாயேஎன்று சொல்லிக்கொண்டு (அவள்பின்னே) ஓடும், நட்டார் - நட்புக்கொண்டவர், சிலைப்பினும் - (ஒருபொருளைப்பற்றித் தம்மில்கோபங்கொண்டு) உரத்துப்பேசினும், நடுங்கும் வினைசெய்யார் - (ஒருவருக்கு ஒருவர்) நடுங்குதற்கேதுவாகிய தொழிலைச்செய்

யர், ஒட்டாரும் - பகைவரும், உடன்உறையும் - (ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும், காலம் இல்- காலமில்லை. எ-று.

தாங்குமென்ற குறிப்பால் வாரணமென்னும் பலபொருளொருசொல் யானைக்காயிற்று. மூன்றனுள் உம்மைகள் மூன்றும் உயர்வுசிறப்பு. பின்னுள்ளவும்மையை ஒட்டாரென்பதனோடு கூட்டுக. இது ஒருபுடையிறந்தது தழீஇய எச்சவும்மை. உடன் நீங்காமைப்பொருளதாகிய இடைச்சொல் அன்னை என்னும் பொதுப்பெயர் விளியுருபேற்றபோது ஈற்றைகாரங்கெட்டு ஏ யிருந்தது. குழவி பண்படியாகப்பிறந்தபெயர்; குழவு பகுதி, (பண்புப்பெயர்) இ ஒன்றன்படர்க்கைவிகுதி, உகரக்கேடு சந்தி. இவ்வாறன்றிக்குழ பகுதி, வ் உடம்படு மெய்யாகிய சந்தி, இ அவ்விகுதி எனினுமொக்கும் சிலைத்தல் ஒலித்தல். நட்டார் இறந்தகால வினையாலணையும் பெயர்; நள்பகுதி, ட் இறந்தகால இடைநிலை, ஆர் பல்லோர் படர்க்கைவிகுதி, ளகரம் டகரமானது சந்தி. ஒட்டார் எதிர்மறை வினையாலணையும்பெயர்; ஒட்டு பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, ஆர் பல்லோர்படர்க்கைவிகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறை விகாரம். ஒட்டுதல் மனம்பொருந்துதல். குழவி அலைப்பினுமன்னையென்றோடு மென்னும்பாடமுமுளது. (உக.)

நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்து மூர்நலம்
உள்ளானு லுள்ளப் படும்.

(இ-ள்.) நகைநலம் - முகமலர்ச்சியினது நன்மை, நட்டார்கண் - நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும் - சிறக்கும், சிறந்த அவைநலம்-(கற்றறிந்தவர் கூடியதனால்) சிறந்தசபையினது நன்மை, அன்பின்விளங்கும் - (அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர்வைத்த) அன்பினாலே விளங்கும், விசைமா

ண்ட - விளாங்தோடுதல்மிருந்த, தேர்நலம் - தேரினது நன்மை, பாகனால் - (நடத்துந்தேர்ச்சியுள்ள) சாரதியினால், பாடு எய்தும் - பெருமையடையும், ஊர்நலம் - நாட்டினது நன்மை - உள்ளானால் - உடைய அரசனால், உள்ளப்படும்-நன்கு மதிக்கப்படும். எ-று.

உள்ளானென வொருமையாற் கூறியதனாலும், நாடுள்ளவன் அவனேயாதலாலும் அச்சொல்லுக்கு அரசனெனப் பொருளுரைக்கப்பட்டது. அவன் தண்ணளிசெய்து காப்பானால் குடிகள்பெருகி நாடுசிறக்குமாதலால் நாட்டினது நன்மையை அறிவுடையோர் நன்குமதித்தற்கு அவனைக்கருவியாக்கிக் கூறினார். உள்ளுதற்குக்கருத்தா அறிவுடையோரெனக்கொள்க. படும் தேற்றப்பொருள்தரும் தொழிற்பெயரென்று கொள்ளற்க. உள்ளப்படும் செய்யுமென்வாய்பாட்டுச்செயப்பாட்டு வினைமுற்று ; உள்பகுதி, ள் சந்தி, அ சாரியை, ப்ச ந்தி, படு செயப்பாட்டு வினைப்பொருண்மைவிகுதி, அனைத்துமொருபகுதி, உம் எதிர்கால ஒன்றன்படர்க்கை வினைமுற்றுப் பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி. நகை தொழிற்பெயர் ; நகு பகுதி, ஐ புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடு சந்தி. இவ்வாறன்றிமுதனிலைத் தொழிற்பெயராகக் கொள்ளலுமாம். விகுதிபெறின் நகைத்தல், நகைப்புஎனப் பெறும். அது முகமலர்ச்சியையுணர்த்தவந்த குறிப்புச்சொல். நசை நலமென்றும் பாடமுண்டு, பொருள்-விருப்பத்தினது நன்மையென்பது. விசைமாண்டதேர் பால்வழுவமைதி ; முன்னது எழுவாய்த்தொகாநிலைத்தொடர். (உச.)

அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனக்கொத்த
எஞ்சாமை யெஞ்ச லளவெல்லா நெஞ்சறியக்
கோடாமை கோடிப் பொருள்பெறினு நாடாதி
நட்டார்கண் விட்ட வினை.

(இ-ள்.) அஞ்சாமை - (பழிபாவங்களை) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி - அஞ்சுவாய், அளவெல்லாம் - (தேகத்தோடுகூடிவாழ) அளவுசெய்த நாளெல்லாம், ஒன்றின் - கூடுமா

யின்; தனக்கு ஒத்த - வருணத்துக்குத்தகுந்த ஒழுக்கங்களினி ன்று, எஞ்சாமை - சுருங்காமை, எஞ்சல் - சுருங்காதை, நெஞ்சு அறிய - மனமறிய, கோடாமை - (யாவரிடத்தும்) நடுவாகநிற்றலை, கோடி - கொள்ளாய், பொருள்பெறினும் - மிக்கபொருள் பெறுவதாயிருப்பினும், நட்டார்கண் - (தேறிச் சிநேகித்த) நட்பினரிடத்து, விட்டவினை - செய்யவிட்டதொழிலை, நாடாதி-ஆராயாமலிரு. எ-று.

பட்க்கை ஒருமைப்பெயராயிருத்தலாலும், ஒத்த என்றதனாலும் தனக்கென்பதற்கு வருணத்துக்கெனப் பொருள் கொண்டாம். ஒருவன் நட்டார்கண் விட்டவினையை நாடினால் ஐயப்பட்டானென அவரது நட்பின்உறுதிகெடும்; கெடவே அவ்வினை சோரவிடப்பட்டு முற்றுப்பெறாதாம். அஞ்சாமை, எஞ்சாமை, கோடாமை எதிர்மறைத்தொழிற்பெயர்கள்; அஞ்சு பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, உகரக்கெடுசந்தி, அனைத்துமொருபகுதி, மை பகுதிப்பொருள்விகுதி. மற்றவைகளுக்கும் இவ்வாறேபகுபத இலக்கணங்கூறுக. கோடுதல்-கோணுதல். அது இங்குப் பக்ஷபாதத்துக்காயிற்று. அஞ்சுதி, கோடி என்பன ஏவலொருமைவினை. கொள்பகுதி, இ ஏவலொருமை எதிர்காலவிகுதி, த் எழுத்துப்பேறு, பகுதி முதல்நீண்டது நீட்டல்விகாரம், தகரம் டகரமானதும், ளகரங்கெட்டதும் சந்தி. எஞ்சல், நாடாதி ஏவலொருமை எதிர்மறைவினை; எஞ்சு பகுதி, அல் ஏவலொருமை எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி. நாடுபகுதி, ஆ எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, த் எழுத்துப்பேறு, இ ஏவலொருமை எதிர்காலவிகுதி. உம்மை உயர்வுசிறப்பு. அஞ்சுதி என்பது அஞ்சலதெனவும், எஞ்சலள வெல்லாமென்பது எஞ்சுமளவெல்லாமெனவும், கோடியென்பது கோடாமையெனவும், கோடிப்பொன்னெனவும், நாடாதியென்பது நாடாமையெனவும் பாடபேதமுண்டு; அஞ்சுவது - அஞ்சுதல், எஞ்சும் அளவுஎல்லாம் - சுருங்குதற்குரிய் காலமெல்லாம், எஞ்சாமை - சுருங்காதிருத்தல், கோடா

மை-நலோகநிற்றல், கோடிப்பொன்பெறினும் - அளவற்ற பொருள் பெறுவதாயிருப்பினும், நாடாமை - ஆராயாதிருத்தல், ஆகியநான்கும் ஒருவனது கடமையாயிருத்தல் வேண்டும். இதுஇசையெச்சம். அஞ்சுவது ஐம்பால் மூவிடங்களிலும் ஏவற்பொருள்கண்ணி வராமையால் வியங்கோளெனல்குற்றம். (உரு.)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(இ-ள்.) பிறிது உயிரை-வேறொன்றினதுயிரை, அலைப்பான்-கொலைசெய்யும்படி, ஆக்கலும் - (தீன்முதலியவற்றால் அதனை) வளர்த்தலும், குற்றம் ஏ ஆம் - குற்றமேயாகும், விலைப்பாலில் - விலையின்வகையில், கொண்டு - வாங்கி, ஊன் மிசைதலும்- மாமிசந்தின்னுதலும், குற்றம் ஏ ஆம்-குற்றமேயாகும், சொலற்பால அல்லாத - சொல்லுதலாகிய வகையுடையன அல்லாதசொற்களை, சொல்லுதலும் குற்றம் ஏ ஆம்-சொல்லுதலுங் குற்றமேயாகும், கொலைப்பாலும்-கொல்லுதலாகியவகையும், குற்றமே ஆம்-குற்றமேயாகும். எ-று.

சொலற்பால அல்லாதவை பொய், கோள், கடுஞ்சொல், பயனிலாச்சொல். கடைநிலைத்தீவகமாகநின்ற தேற்றேகாரத்தையும், ஆமென்னும் வினைமுற்றையும் மேலுங்கூட்டுக. பிறிது இடைச்சொல்லடியாகப் பிறந்தபெயர்; பிற பகுதி, து ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை, இசாரியை. அலைப்பான்காரியப் பொருட்டாகவந்த எதிர்காலவினையெச்சம்; அலைபகுதி, ப் சந்தி, பான் எதிர்காலவினை யெச்சப்பொருள் விகுதி. விலைதொழிற்பெயர் பொருளுக்காதலால், தொழிலாகுபெயர். விலை என்பது விற்கப்படும் ஊனுக்காகாமையால் ஐ, செயப்படுபொருள் விகுதியன்று. இச்செய்யுளின் பொருள்கோள் பொருள்வேறுபடா அடிமறிமாற்றுப்பொருள்கோள். நன்

பொது-சூ-கஅ. "எற்புழியெடுத்துடன் கூட்டினும் அடியு யும்; யாப்பீறிடைமுதல் ஆக்கினும்பொருளிசை, மாட்சியும் மாறா அடியவும் அடிமறி", (உசு.)

> கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்
> பானோக்கி வாழுங் குழவிகள் வானத்
> துளிநோக்கி வாழு முலக முலக
> விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(இ-ள்.) குடிஎல்லாம்-குடிகளெல்லாம், கோல்நோக்கி வாழும் - (தம்மரசனது) செங்கோலைநோக்கி வாழாநிற்கும், குழவிகள் (எல்லாம்) இளம்பிள்ளைகளெல்லாம், தாய் - தங்கள் தாயினுடைய, முலைப்பால்நோக்கி - முலைப்பாலைநோக்கி, வாழும்-வாழாநிற்கும், உலகம்- (எல்லாம்) உலகத்துயிர்களெல்லாம், வானத்துளிநோக்கி- மேகத்தினதுபெயலைநோக்கி, வாழும் - வாழாநிற்கும், கூற்று-யமன், உலகவிளிநோக்கி - உலகத்துயிர்களினது சாதலைநோக்கி, இன்புறூஉம்-மகிழாநிற்பன், எ-று.

கோலினுலாகிய காவலைக்கோலென்றதும், வானத்துளியினுலாகிய உணவை வானத்துளியென்றதும் கருவியாகுபெயர். குடிகளுக்குச் செங்கோலினதுகாவலும், இளம்பிள்ளைகளுக்குத்தாய்முலைப்பாலும், உலகத்துயிர்களுக்குமழையினுலாகிய வுணவும் இன்றியமையாப்பொருள்களென்பதுகருத்து. உடலோடுகூடி வாழ்ந்தகாலத்து உயிர்கள்செய்த நல்வினை தீவினைகளை நடுநிலைமையாக ஆய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தல் தனக்குத் தொழிலாகக்கொண்டியமனுக்கு உலகத்துயிர்களிறத்தலிலவாயின் தன்தொழில் செல்லாதாதலால் உலகவிளிநோக்கி யின்புறுவானயினன். குடியெல்லாம் சொல்வால் அஃறிணையாதலால் வாழுமென்னும் செய்யுமென் முற்றைக்கொண்டது. வான்; உலகம் இடவாகுபெயர்; உலகம் அன்று; உலோகமென்பது வடமொழியாதலால் அது ஆகுபெயரோ ஆம். துளி, விளி முதனிலைத்தொழிற்பெயர்கள். அளபெடை இன்னிசையளபெடை; இன்னிசை அளபெ

டைக்குங் குறினெடிலாயளபெடுப்பது இலக்கணமெனின் "கடாஅயினுஞ் சான்றவர்சொல்லார்" நெடிலளபு இன்னி சை நிறைக்கவந்ததாதலால் அது குற்றமென்க. இது செய் யுளிசை, சொல்லிசைநிறைக்கவரும் அளபெடைபோலாது செவிக்கினிமையாகிய இசைநிறைக்க வருவதென்க. இன்பு பண்புப்பெயர்; இதில்புவ் விகுதி; விகுதிமேல் விகுதியாய் அம் விகுதிபெற்று இன்பமெனவும்வரும். (உ.எ.)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி [தான்
இப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

(இ-ள்.) கற்ப - (ஒருவன்நூல்களை) கற்பதினால், கழிமடம் - மிகுதியாகியபேதைமை, அஃகும்-குறைவான், மடம் அஃக - அறியாமை நீங்குவதினால், புற்பம்தீர்ந்து - புல்லறிவுநீங்கி, இவ்வுலகின்கோள் - இவ்வுலகத்தினது இயல்பினை, உணரும் - அறிவான், கோள் உணர்ந்தான் - அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆனநெறி - உண்மையாகியவழியில், படரும் - செல்லுவான், அந்நெறி - சென்ற அவ்வழியினால், இப்பால்-இம்மையில், உலகின்-உலகத்தில், இசைநிறீஇ-புகழை நிலைபெறச்செய்து, உப்பால்-மறுமையில், உயர்ந்தஉலகம் - (எல்லாவுலகங்களினும்) உயர்ந்தமுத்தியுலகத்தில், புகும்-புகுவான். எ-று.

புற்கந்தீர்ந்தெனவும் பாடமுண்டு. புற்கமென்னுஞ்சொல்லும் புற்பமென்பதன்பொருளதே. புற்பம் பண்புப்பெயர்; புல் பகுதி, பம் பகுதிப்பொருள் விகுதி, லகரம் றகரமானது சந்தி. புற்கம் அப்பண்புப்பெயரே யாம்; புல் பகுதி, கு பகுதிப்பொருள் விகுதி, லகரம் றகரமானது சந்தி, மாட்சிமை என்பதிற்போலப் பகுதிப்பொருள் விகுதியாகிய அம் விகுதிமேல் விகுதி. இச்சொல்லை ஒற்கமென்பதுபோலத் தொழிற் பெயராகக்கொள்ளின் புல்கு பகுதி, அம் புடைபெ

யர்ச்சிப்பொருள்விகுதி, இவ்விகுதிப்புணர்ச்சியில் லகரம் றக ரமானதும், உகரக்கேடும் சந்தி எனக்கூறல்வேண்டும். தொழிற்பெய்ராகக் கொள்ளின் உலகத்தோடு சம்பந்தப்படுதலை எனப்பொருள்படும். பொருள்படின் உலகின்கோளுணர்ந்த பின்புறகம்திருமே அன்றிப்புறகந்தீர்ந்து உலகின்கோளுணர்தலென்பது பொருளன்மையால் தொழிற்பெயராகக் கொள்ளலாகாதென்க. உகரச்சுட்டு இங்கு "உப்பக்கங்காண்பர்" என்பதுபோல அகரச்சுட்டுக்குரிய சேய்மைப்பொருளது. இது காரணமாலையணி. (உஅ.)

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம் - அழித்துச்
செறிவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(இ-ள்.) நீர் - நீரானது, குழித்தஉழி - குழிசெய்யப்பட்டஇடத்திலே, நிற்பது - நிற்கும் இயல்புடையது, பாவம் - பாவமானது, பல்லோர் - (அறிவுடையோர்) பலராலும், பழித்தஉழி - பழிக்கப்பட்டவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது, காமம் - காமமானது, அழித்து - (ஒருவன்தவவொழுக்கத்தை) கெடுத்து, செறிவுழி - (இயதொழுக்கத்தில்) சேர்ந்தவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது, அறிவு-கல்வியறிவானது, தனக்கு ஒன்று - கற்றதனக்கொருதுன்பம், உறுவுழி-வந்தகாலத்தில், நிற்பது-உதவிநிற்கும் இயல்புடையது. எ-று.

குழித்த, பழித்த என்னும் இறந்தகாலச் செயப்பாட்டுவினைப்பெயரெச்சங்கள் ஈறும், பகுவிகுதிமுதலியவும் தொகுக்கப்பட்டன. செறிவுழி, உறுவுழி என்பன இறந்தகாலவினையெச்சமாகவைத்துப் பொருள்கூறினும் அமையும்; செறிபகுதி, வ் உடம்படு மெய்யல்லாத மெய்யாகிய சந்தி, உழி இறந்தகாலவினை யெச்சவிகுதி. உறுவுழி என்பதிலும் வகரம் சந்தி. ஒன்று எண்ணலளவையாகுபெயர். (உகூ.)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை-எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட தில்.

(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின் - செல்வப்பொருள்போல, திறல் உடையது இல்லை - வலியுடையது(பிறிது) இல்லை, கற்றலின் - கல்வியறிவுபோல, வாய்த்த - நீங்காததுணைகள், பிற இல்லை - வேறில்லை, எற்றுள்ளும்- (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மையின் - வறுமைபோல, இன்னாதது இல்லை - துன்பந்தருவது வேறு இல்லை, இல் என்னாத - (அவ்வறியவர்க்கு) இல்லை என்று சொல்லாத, வன்மையின்-வல்லமைபோல, வன்பாடது இல்-வேறு வல்லமையானது இல்லை. எ-று.

இல்லென்னாத வன்மையென்றது ஈகைத்தன்மையை. இல்லையில்லென்னாத என்பதை வறியார்மேலேற்றி (எமக்கு இப்பொருள்) இல்லையென்று இரவாத என உரைத்தலுமாம். இலதென்னும் வன்மையின் எனவும் பாடமுண்டு. பொருள் இல்லையென்றுசொல்லும் கடுமைபோலக் கடுமைவேறுஇல்லை என்றவாறு. அங்ஙனமன்றி இல்லையென்று சொல்லும் வலியின்மையினும் வேறுவலியின்மை இலதெனவும் உரைக்கலாம். இங்கு வன்மைவன்பாடதென்னும் இரண்டும் இலதென்னும் என்றகுறிப்பால் வலியில்லாமையை உணர்த்தின. ஐந்தனுருபுகள் ஒப்புப்பொருளன. எல்லைப்பொருளனஆகக்கொண்டால் திருவிற்றிறலுடையதில்லை என்பதற்குச் செல்வத்தைப்பார்க்கினும் வலியுடையதில்லை என்க. மற்றவற்றிற்கும் இவ்வாறேஉரைக்க. கற்றல் தொழிலாகுபெயர். காரணவாகு பெயராகவுங் கொள்ளலாம். வாய்த்த பலவின்பாற்கை இறந்தகாலவினையாலணையும்பெயர். பிற இடைச்சொலடியாகப்பிறந்த பலவின்படர்க்கைப்பெயர்; பிற பகுதி, அ பலவின்படர்க்கைவிகுதி, பகுதி அகரக்கேடு கடைக்குறை. எற்று இடைச்சொலடியாகப்பிறந்த ஒன்றன்படர்

க்கைக்குறிப்புவினைப்பெயர், என் பகுதி, று ஒன்றன்படர்க் கைவிகுதி, ணகரம் றகரமானது சந்தி; என்ன என்னுங்குறி ப்புப்பெயரெச்சத்திலும் ணகரம் நித்தியமாய்வருதலால் என் என்பதே பகுதி, எகரமன்று. உம்மை முற்றும்மை யாதலா ல் என் என்பது வினைப்பொருளைவிட்டு எஞ்சாமைப்பொரு ள்தந்தது. இச்சொல்தொகுதியொருமை. இல்லை என்பது குறிப்புவினையாதலால் அது இல் என்றானது தொகுத்தல்; கடைக்குறைவிகாரமெனக் கூறுவாருமுளர். வன்பாடது எ ன்பதில் து பகுதிப்பொருள்விகுதி, அ சாரியை. இலம்பா டென்பது போன்றவன்பாடென்பதற்கு வலியுண்மை என் பதுபொருள். இது முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வன் பாட்டது எனப்பாடங்கூறின் அதைக்குறிப்பு வினைப்பெய ராகக் கொள்ளல்வேண்டும். வன்மைகுணமன்றே? அதைக குணியாகக்கூறுதல் குற்றமாமாதலால் கூறலாகாதென்க.

> புகைவித்தாப் பொங்கழ ரேன்றுஞ் சிறந்த
> நகைவித்தாத் தோன்று முவகை-பகையொருவன்
> முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்
> இன்னாவித் தாகி விடும்.

(இ-ள்.) பொங்குஅழல் - (அடுக்களையில்) எரிகின்ற தீ யினதுஇருப்பு, புகைவித்து ஆக - (புறத்தில்) புகைகாரணமா க, தோன்றும் - விளங்கும், உவகை - (உள்ளத்தில்) மகிழ்வி னது இருப்பு, சிறந்தநகை - (புறத்தில்) மிக்கமுகமலர்ச்சி, வி த்து ஆக-காரணமாக, தோன்றும்-விளங்கும், பகை-(உள்ளத் திலுள்ள) பகைமைக்குணம், ஒருவன்முன்னம் - ஒருவனது குறிப்புச்செய்கை, வித்துஆக, காரணமாக, முளைக்கும் - (பு றத்தில்) தோன்றும், முளைத்தபின் - தோன்றினபிற்காலத்து, இன்னாவித்து ஆகிவிடும் - (செய்யப்படும்) துன்பந்தருஞ்செ ய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும். எ-று.

அழலுக்குப்புகையும், உவகைக்கு நகையும், பகைக்கு மு ன்னமும் காரியங்களாயினும், கண்ணுக்குப் புலப் படாமல் நின்ற அழல் முதலியவற்றினிருப்பை ஒருவன் உணர்தற்குப்

புண்கழுதலியன கருவியாயிருத்தலால் அவற்றை வித்தென் றூா. வித்துக்காரணத்தை உணர்த்துவதோர்குறிப்புச்சொல். புனை தொழிலடியாகப் பிறந்தபெயர்; புகுபகுதி, ஐ வினை முதற் பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி. பகை தொழிற்பெயர்; பகு பகுதி, ஐ புடை பெயர்ச்சிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி; மனம் வேறுபடுத லென்பதுபொருள். முன்னம் தொழிலடியாகப் பிறந்தபெயர்; முன் பகுதி, (குறி) ன் சந்தி, அம் செயப்படுபொருண்மைவிகுதி. பொருள் குறிக்கப் படுவதென்பது. தொழி லாகுபெயருமாம். மூளைத்தபின் வினையெச்சமாகிய ஒருசொல் லன்று, தொடர் மொழியாகக்கொண்டு பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெனக் கூறுக. ஆகளென்பதில் குச்சாரியையும், அதுபற்றிவந்த சாரியை முதலியவும் தொகுக்கப்பட்டன. ஆகிவிடு மென்பதில் விடு துணிவுப்பொருண்மை விகுதி. (௯க.)

> பிணியன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
> கணியன்ன ரன்புடை மாக்கள் - பிணிபயிரின்
> புலலன்னர் புல்லறிவி னுடைவர் கல்லன்னர்
> வல்லென்ற நெஞ்சத் தவர்.

(இ - ள்.) பின்னோக்காதபெண்டிர் - மேலவிளைவை ஆராயாத பெண்டிர்கள், பிணிஅன்னர் - (கொண்ட கணவருக்கு) நோயை ஒப்பாவர், அன்பு உடையமாக்கள்-(சம்பந்தமுடையாரிடத்து) அன்புடையமனிதர், உலகிற்கு - உலகத்துயிர்களுக்கு, அணி அன்னர் - ஆபரணத்தை ஒப்பாவர், புல் அறிவின் ஆடவர் - சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணிபயிரின் - (நீரை) கட்டுகின்ற பயிரிலுள்ள, புல் அன்னர் - புல்லையொப்பாவர், வல்என்ற - இளகுதலில்லாத, நெஞ்சத்தவர் மனமுடையார், கல்அன்னர் - கல்லை ஒப்பாவர். எ-று.

மேல்விளைவை ஆராயாமையாவது கொண்ட கணவரு க்குப் வருவாய்ப் பொருளுக்கு மிகுதியாக உண்டிமுதலிய வற்றிற்குச் செலவிட்டுப் பின்பலும் இடுக்கணை உணராமை; பின் பண்பாகுபெயர். நோய் ஒருவினை வேறுகாரியத்திற் செ

லயவொட்டாமல் கட்டுதலால் அதனைப் பிணியென்றது. தொ
ழிலாகுபெயர்; வினைமுதற் பொருண்மையதாகிய இகரவிகு
தி புணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயரெனினும்
ஒக்கும். புணர்ந்துகெட்ட இகரவிகுதி கருவிப்பொருண்மைய
தெனின், அக்கருவியைக்கொண்ட வினைமுதல் எப்பொரு
ளென வினவிமறுக்க. அணி என்பதையும் இவ்வாறுகொள்
க. இதில் புணர்ந்துகெட்ட ஐ செயப்படுபொருண்மைவிகுதி.
பெண்டிர் பண்படியாகப் பிறந்தபெயர்; பெண்டு பகுதி, இர்
பல்லோர் படர்க்கைவிகுதி, உகரக்கேடு சந்தி. பெண்டு ப
ண்புப்பெயர்; பெண் பகுதி, து பகுதிப்பொருள் விகுதி, தக
ரம் டகரமானது சந்தி. உலகு இடவாகுபெயர்; இது தமிழ
மொழி. உடைய என்னும் குறிப்புப்பெயரெச்சம் ஈறு தொ
குத்தலாய் நின்றது. அன்புடைமாக்களை உலகிற்கு அணியன்
னவென்றது, மனைவி, புத்திரர் முதலிய சம்பந்த முடையாரி
டத்துவைத்த அன்புமுற்றியபின் மற்றஉயிர்களிடத்து அருள்
பிறத்தலால் அவ்வுயிர்கள் இவரைச் சிறப்பாகக் கொள்ளு
தலை. வல்லென்ற என்பது இடைச்சொ லடியாகப்பிறந்த
இறந்தகாலப் பெயரெச்சம். என் என்னும் பகுதிக்குப்பொ
ருள் தானடுத்தவல் என்னும் பண்பின் பொருளே ஆம். பி
ணிபேணும் புல்லன்னரெனப் பாடங்கொள்ளின், நோயை
நீக்காமல் வளர்க்கின்ற விஷப்புல்லை ஒப்பாவரென வுரைக்க.

அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

(இ - ள்.) அந்தணரின் - பார்ப்பாரைப்போல, நல்லபி
றப்பு - உயர்ந்த பிறப்பினர், இல்லை - இலர், என்செயினும் -
(தனக்கு) என்னதீங்கைச் செய்தாலும், தாயின் - தாயைப்
போல, சிறந்ததமர் இல்லை - சிறந்த உறவினரிலர், யாதும் - இ
ஒன்றும், வளமையோடு - செல்வத்தோடு, ஒக்கும் - ஒப்பாகும்,
வனப்பு இல்லை - அழகு இல்லது, எண்ணின் - ஆராய்ந்தால், இ

ன்மையோடு - (எல்லா இன்பங்களையும் அநுபவித்தற் குரிய தாகிய) இளமைப் பருவத்தோடு, ஒப்பதும் - ஒத்த பருவமும்].எ - று.

அந்தணரினென்ற குறிப்பால் பிறப்புத்தொழிலாகுபெய ராய் மற்றவரையுணர்த்திற்று. அந்தணர் அழகிய தண்மையு டையாரெனவும்; அந்தம்அணரெனப் பதம்பிரித்துவேதமுடி வின்பொருளை அறிந்து சேர்தலுடையாரெனவும் பொருள் கொள்க. இது இடுகுறிமாத்திரத்தால் பார்ப்பார்க்கும், கார ணங் கருதியபோது அக்குணமுடையபிறர்க்கும் ஆதலால் காரண விடுகுறிப்பெயரென்க. என் வினாப்பெயர். செயி னுமென்ற உம்மை உயர்வுசிறப்பினோடு எதிர்மறைக்கண் வந்தது. உயர்வு சிறப்பொன்றேகொண்டு, தமர்மேலேற் றி என் செயினுமென்பதற்கு என்ன நன்மைசெய்தாலும் எ னவும் உரைக்கலாம். அழகில்லாரையும் யாவரும் விரும்ப ச்செய்யவல்லது செல்வமாதலால் அதனோடொக்கும் அழ கிலதாயிற்று. சுகங்களை அநுபவிப்பதற்குரியதும், கல்விமு தலியவற்றைப் பெறுதற்கும், உடல்வலி உடைமைக்கும் உரி யதுமாதலால் இளமையோடொத்த பருவமிலதாயிற்று. ஓடு ருபிரண்டும் ஒப்புப்பொருளன, ஒப்பது எதிர்காலவினையால ணையும் பெயர்; பகுதி ஒ. உம்மை இறந்தது தழீஇய எச்ச வும்மை. யாதுமென்பதில் உம்மை முற்றும்மையாதலால் யாவென்னும்வினா சிறுமையை யுணர்த்தியது. வளமைஎன் னும் பண்புப்பெயரினிடையே அகரம்சாரியை. (௯௩.)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப - தேரின்
அரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

(இ-ள்.) இரும்பு-இரும்பினை, இரும்பின்-இரும்பாற்செ ய்த கருவியால், இடைபோழ்ப - (கொல்லர்) நடுவில் துண் டிப்பர், பெருஞ்சிறப்பின் - மிக்கசிறப்பினையுடைய, நீர் - சோ ற்றோடுகூடிய நீரை, உண்டார் - உண்டவர், நீரான் - நீரினு

லே, வாய்பூசப-உண்டவாயினைக் கழுவுவர், தேரின் - ஆரா யுமிடத்து, அரிய - (பிறரால் அடைதற்கு) அரியபொருள்களை, அரியவற்றான்-அருமையாகிய முயற்சிகளால், கொள்ப-(அறிவுடையோர்) செய்துகொள்வர், பெரிய- பெரும்பேறுகள், பெரியராள் எய்தப்படும்-பேரறிவுடையோரால் அடையப்படும். எ-று.

நீர்மிகுதியும், சோறுசிறிதுமாதலால் மிகுதிபற்றி நீரொன்றனர். அந்நீரைப்பெற்ற காலத்தினருமைநோக்கிப் பெருஞ்சிறப்பினீரென்றனர். வெறுநீருண்டார் நீரால் வாய்கழுவாராதலால்சோற்றோடு கூடியநீரென்றும். நீருண்டானென்பதற்கு முக்குடிநீருண்டவனென உரைத்தலும் பொருந்தும். இதனை ஆசமனமென்பர்; பொருள் உள்ளங்கையினடியில் உழுந்துமுழுகத்தக்க நீரைவார்த்து உட்கொள்ளலென்பது. வாய்பூசப இடக்கரடக்கல். முதலிலுள்ள இரும்பு கருவியாகு பெயர். அரிய பெரிய பண்படியாகப்பிறந்த பலவின்பாற்கைப்பெயா, இரும்பினென்னும் ஐந்தனுருபும், நீரான், அரியவற்றான் என்னும் மூன்றனுருபுகளும் கருவிப்பொருளன. பெரியராலென்பது கருத்தாப்பொருளது. (௯௪.)

மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யல்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
யூரிற் பிளிற்றி விடும்.

(இ-ள்.) மறக்களி- (வீரர்களுக்கு) வீரத்தால்வரும் களிப்பு, மன்னர்முன்-(தம்மையுடைய) அரசர்க்குமுன்னே, தோன்றும் - உண்டாம், சிறந்தஅறக்களி - (ஒருவன்மனத்தில்) மிக்க அறத்தால்வருங்களிப்பு, அல்லாதார்க்கு- (மாறாய) வலில்லாதவர்க்கு, ஈயுமுன் - ஈயுமிடத்து, தோன்றும்- உண்டாம், வியக்களி - (பொருளுடையானுக்கு) வியத்தலால்வருங் களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம் - (அவ்வியத்தல்) வறியார்மேலதாதலால் தோன்றும், கயக்களி - கீழ்மைக் குணத்தால்

வருங்களிப்பு, ஊரில் - (அக்குணமுடையோன்வாழும்) ஊரில், பிளிற்றிவிடும் - பலரும் அறியத்தோன்றும். எ-று.

இங்கு அறமென்றது அறச்செய்கை பலவற்றுள்ளும் சிறந்தஈகையை. உயர்ந்தோரையும், ஒப்போரையும் பொருளுடையானொருவன் ஒன்றினைச்செய்ய ஏவான், ஏவின் அவ்வேவல் பயனைத்தராமல் அவமதிப்பைத் தருமாதலால் ஏவறகளிப்பு நல்கூர்ந்தார் மேற்றுமென்றார். கீழ்மைக்குணத்தால் வருங்களிப்பு ஊரில்பலருமறியத் தோன்றுதலாவது கீழ்மகன் சிறுகாரியத்தைச்செய்து அதனைப் பெருங்காரியமாகக் கருதிப்பலரிடத்துஞ் சென்று இளையாநின்று சொல்லி மகிழ்தல். பிளிற்றிவிடல் பேரொலிசெய்துவிடல்; அது இங்குப்பலரறியச் செய்தலுக்காயிற்று. இவ்வாறுவருதல் "முகிலின் ,விம்மி முழங்கின எங்கணும்" "புன்கணீர் பூசறரும்" என்பவற்றுள்ளுங் காண்க. கீழ்மகன் பலரும் அறியச் சொல்லாமலிரானாதலால் பிளிற்றிவிடுமென்றார்; விடுதுணிவுப் பொருண்மை விகுதி. ஏவலென்னும் பொருள்படநின்ற வியம்முதனிலைபெறாத தொழிற்பெயர். வியக்களிநல்கூர்ந்தார் மேற்றென்பதற்கு வியக்களி - (யாதேனுமொரு பொருளைப்பெற்றால் அதைக்கண்டு) அதிசயிக்குங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்றுஆம்-வறியாரிடத்துத் தோன்றும் எனவும் உரைக்கலாம். அவ்வாறுரைக்கின் வியஎன்னும் உரியாகிய முதனிலைத்தனிவினை பெயரெச்சப் பொருளில் வந்ததென்க. களி முதனிலைத்தொழிற்பெயர், ஈயுமுன் இறந்தகால வினையெச்சம்; ஈ பகுதி, ய் சந்தி, உம் சாரியை, இதன் மகரக்கேடு சந்தி, முன் இறந்தகால வினையெச்சவிகுதி. நல்கூர்ந்தார் மேற்றும் ஏழாம்வேற்றுமைத் தொகாநிலைத் தொடர். மேல் 'ஏழாம்வேற்றுமை உருபு; அதற்குத் து பகுதிப்பொருள் விகுதி, லகரமுந்தகரமும் றகரமானதுசந்தி. கீழ்மகனைக்கயவனென்னும் வழக்குநோக்கி அவனது குணமும் கயவு எனப்பட்டது. (௧௫.)

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாலிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்-பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(இ-ள்.) மலர்க்கண்கள்-(மாதர்களுடைய நீலோற்பலத்தின்) மலர்போலுங்கண்கள், மையால் தளிர்க்கும்-மையினால் நன்குவிளங்கும், மால் இருள்-பேரிருளில், நிமிர்சுடர் - ஒளிமிகுகின்றவிளக்கம், நெய்யால்தளிர்க்கும் - நெய்யினால் நன்குவிளங்கும்; குருகு-குருக்கத்தி, பெய்யல்முழங்க- (மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலைதளிர்க்கும் - இலைகள்தளிர்க்கும், மேல் - மேன்மைக்குணமுடையோர், நட்டார்வழங்க - உறவாயினார்க்கு வழங்கும் பொருட்டு, தளிர்க்கும் - பொருள் சிறப்பர். எ - று.

மேகமுழக்கம் மின்னலில்லாமல் உண்டாகாமையால் முழங்கத்தளிர்க்கு மென்பதற்கு மின்னலால் தளிர்க்குமென்பது கருத்தாகக்கொள்க. பிறர்க்கு உதவுதற்பொருட்டன்றி [illegible]வைதற்கும், வைத்திழப்பதற்கும் பொருள்தேடுங் கீழாய [illegible]த்தினர்போலன்றி மேலாய குணத்தினர் நட்டார்முதலிய பிறர்க்குதவுதற்பொருட்டே பொருள் மிகுதியாகத் தேடுவரென்பது. மாலிருளென்பதனைப் பண்புத் தொகைநிலைத் தொடராகக்கொள்ளுதலே அன்றி வினைத்தொகைநிலைத் தொடராகவுங் கொள்ளலாம். பொருள் யாவரும் மயங்குகின்ற இருள்என்பது. மேல் பண்பாகுபெயர். ஆம் அசைநிலை. முழங்க என்பது காரணப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்த செயவென் வினையெச்சம். வழங்க என்பது காரியபொருட்டாதலால் எதிர்காலத்தில் வந்த அவ்வினையெச்சம். (௯௬.)

நகையினிது நட்டார் நவெட் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின் வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(இ - ள்.) நகை - முகமலர்ச்சி, நட்டார்நடுவண் - நட்பாயினோர்க்குள், இனிது - (அவர்க்கு) இன்பந் தருவதாகும், பொருளின்தொகை - பொருளின்திரள், தொட்டு - (வெறுப்பிலலாமல்) எடுத்து, வழங்கின் - (உடையோரால் அறத்தின்பொருட்டு) கொடுக்கப்பட்டால், இனிது - இன்பந்தருவதாகும், வகைஉடைய-(குணத்தின்)வகையையுடைய,பெண் - பெண்ணினது தன்மை, பேணி - (கணவனை உண்டி முதலியவற்றால்) காத்து, வழிபடின் - (அவனை தெய்வமாகக்கருதி) வழிபாடுசெய்தால், இனிது - (அவனுக்கு) நன்மைதருவது, பண் - பாலையாழ் முதலியவை, பாடல் உணர்வாரகத்து - பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது - இன்பந்தருவன வாகும். எ - று.

இனிது பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று, இதில் பகுதி இனிமை. இதனடியாக இனித்தது, இனிகின்றது, இனிப்பதெனத் தெரிநிலைவினை பிறக்கும். பொருளின் தொகையினிதாதல் இம்மையில் புகழையும், மறுமையில் துறக்கநாட்டுச் சுகத்தையுந்தருதல். இன்பெனகொள்ளின் புவ் விகுதிகெட்டு, மெலிது, வெளிது என்பனபோல், இகரச்சாரியை பெற்றதெனினும் பொருந்தும். நகை என்பது போலத் தொகைதொழிற்பெயர்; தொகு பகுதி, ஐ புடைபெயர்ச்சிப் பொருள்விகுதி, உகரக்கேடு சந்தி. தொட்டு இறந்தகாலவினையெச்சம்; தொடு பகுதி, உ வினையெச்சவிகுதி, முற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி. குணவகை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனநான்கு. பெண் பொருளாகுபெயர். பண் சாதியொருமை. (௩௭.)

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவார் பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

(இ-ள்.) எஞ்ஞான்றும் - எந்நாளினும், கரப்பவர்க்கு - (இரந்தவர்க்கு ஒன்றுமீயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடை

யார்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் - (அவனைக்கண்டவளவில்) முகங்கவிழ்தலாம், இரப்பார்க்கு - யாசிக்கு மியல்புடையரர்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஒன்று ஈவார் - (அவர்வேண்டியதாகிய) ஒருபொருளைக்கொடுக்கு மியல்புடையார், பரப்பு அமைந்த - (போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்குச்செசார் - சேனைக்குச்செல்லுதற்குரிய பற்றுக்கோடு, தறுகண்மை-(போர்முகத்தில்) இரக்கமின்மை, உயிர்க்குச்செல்சார்-(ஒருவனது) உயிர்க்குச்செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஊன் உண்டல்செய்யாமை - (மற்றவுயிர்களினது) தசையை உண்ணாமை, எ-று.

கரப்பவர், இரப்பவர், ஈவார் இவ்வினையாலணையும்பெயர்களில் பகரவகரங்கள் இயல்பினை யுணர்த்தின. [illegible] லங்காட்டுவன ஆகக்கொண்டு, இயல்பினால் நிகழ்கா[illegible] காலமாகவந்த காலவழுவமைதி எனினும் ஒக்கும். [illegible] பொது, கு-ஈ. சார் முதனிலைத்தொழிற் பெயர், சார்த[illegible] லையாகிய கோலினை உணர்த்தலால் தொழிலாகுபெய[illegible] இது இல[illegible]னையாகத் துணையாயமைந்தபொருளை யுணர்[illegible] று. சாரென்னும் முதனிலையோடு செயப்படு பொருண்மையாகிய ஐ விகுதி புணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயரெனினும் ஒக்கும். கரப்பவர்க்கும், இரப்பவர்க்கும் செல்லுவனவாவன கரத்தலும், இரத்தலுமாம்; தானைக்குச் செல்லுவதாவதுவெற்றி. உயிர்க்குச் செல்லுவதாவது மறுமைக்குரிய அறம். செல்சாரென்பதில் செல்லென்று வினைத்தொகைக் குறிப்பாயினும் புணர்ச்சியிலக்கணம் வினைத்தொகை நிலைத்தொடரென்று கூறுக. (௬அ.)

கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார் வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னியவே செய்யுந் திரு.

(இ-ள்.) கம்மியர்-கம்மாளர், கண்டதே - (தாம்) கண்டபொருள்போல்வதனையே, செய்ப - செய்யவல்லார், புல

ன் ஆள்வார் - அறிவினை ,யாளுதலுடையார், உண்டெனை (பெரும்பயன்) உள்ளதென்று, கேட்டதே (ஆசிரியர்பால்) கேட்ட அறத்தையே, செய்ப-செய்யவல்லார், அமைந்தார்-(நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட-(தாம்) விரும்பின வற்றுள், இனியவே - (பிறர்க்கு) இனிமையாயின வற்றையே, செய்ப - செய்யவல்லார், திரு - திருமகள், முனியு-தார் - (தம்மின் எளியாரிடத்தும்) கோபஞ்செய்யாதவர், மு்ன்னியவே-கருதினவற்றையே, செய்யும்-செய்வள். எ-று.

கேட்டதே என்பதைப் பாடங்கேட்ட பொருளையே எனப் பொருள்கொள்ளின் அது இடைமாணுக்கரது தொழி [illegible]லால் புலனுள்வார்க்கு இயையாமைகாண்க. தேற்றே [illegible]தால் இந்நால்வரும் கண்டது முதலிய நான்கிற்கும்மா [illegible]வற்றைச் செய்யாரென்க. கண்டது, கேட்டது, [illegible] [illegible]வேட்டஇந்நான்கு சொற்களும் வினைமுதல் வினையை [illegible]படு பொருளின்மேலேற்றிக் கூறும் வினையாலணை [illegible]கள். இங்ஙனங்கொள்ளாமல் செயப்பாட்டு வினை [illegible]மைப் படுவிகுதி புணர்ந்துகெட்டு நின்றவினையா [illegible]பெயர்களெனினும் ஒக்கும். வேட்டஎன்பதற்கு [illegible]பாட்டு வினைப்பெயர் வேட்கப்பட்டன என்பது. [illegible]னியவேசெய்யுமென்றது கோபமில்லாதார்க்கு அ[illegible]வர்கள் நினைத்தநற்கருமங்களையே இடையூறி[illegible]மென்பது. இவ்வேகாரத்தை பிரிநிலையாக [illegible]ிற்குமாறுக இடையூறுகள் செய்யாதெனவு

[illegible]ணவகையா னில்லா பெருவலிக்
[illegible]றுவ செய்துண்ணு-தாற்ற
[illegible]றையாதாங் காம முறையும்
[illegible] னின்று விடும்.

[illegible] - செல்வுங்களும், திணைவகையால்- [illegible]ில்லா - (தக்கபடி) நிலைபெறு, பெ ரு[illegible]டைய, கூற்றமும் - யமனும், கூறு